
மிதவை
நாஞ்சில் நாடன்
விஜயா பதிப்பகம்

# ஆசிரியரின் பிறநூல்கள்

**நாவல்**

| | |
|---|---|
| தலைகீழ் விகிதங்கள் | 1977,1983,1996,2001 |
| என்பிலதனை வெயில் காயும் | 1979, 1995 |
| மாமிசப்படைப்பு | 1981, 1999 |
| சதுரங்கக் குதிரை | 1993, 1995, 1996 |
| எட்டுத்திக்கும் மதயானை | 1998, 1999 |

**சிறுகதைகள்**

https://telegram.me/aedahamlibrary

| | |
|---|---|
| தெய்வங்கள் ஓநாய்கள் ஆடுகள் | 1981 |
| வாக்குப் பொறுக்கிகள் | 1985 |
| உப்பு | 1990 |
| பேய்க்கொட்டு | 1994, 1996 |
| பிராந்து | 2002 |

**கவிதைகள்**

| | |
|---|---|
| மண்ணுள்ளிப் பாம்பு | 2001 |

## ஒன்று

பெருவயிற்றைப் பிள்ளை என்று எண்ணியது போல்தான் சண்முகம், பெரியப்பா மீது வைத்திருந்த நம்பிக்கையும். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகவே எதிர்பார்ப்பும் ஏமாற்றமும். கயிற்றின் அறாத ஒரு பிரியாய் நம்பிக்கை மட்டும் இருந்தது. போஸ்ட்மேன் தங்கப்ப அண்ணன் அவனைக் கண்டு சற்று நிதானித்து, கையிலிருக்கும் தபால் கட்டைத் தப்பரவும் போது, உள்ள இருட் கிடங்கில் பிரகாசமான ஒளி. அது கடைசியில் இரண்டு ரூபாய் சந்தா கட்டிய 'ஜெர்மன் நியூஸ்' ஆகவோ, பூனாவில் இருந்துவரும் 'வாய்ஸ் ஆஃப் பிராஃபசி' யாகவோ இருக்கையில் பாதாளச் சிறையில் மறு படியும் பேரிருள். உலகம் அன்றோடு அஸ்தமித்துப் போவது போல நம்பிக்கை இழப்பு.

அதற்காக தங்கப்பண்ணன் வரும் நேரம், காலை பத்தரை மணி சுமாருக்கு பாலக்கலுங்கில் சென்று அமர்வது தவறாது. தூரத்தில் பூவத்தான் கோயில் திருப்பத்தில் பெரிய குடையும் தோளில் தொங்க விட்ட தபால் பையும் காக்கி யூனிபார்முமாக தங்கப்பண்ணன் தெரிவது ஏதோ தேவதை தென்பட்டது போல் இருக்கும். காலையில் ஏற்பட்ட பரபரப்பு துடிப்படிக்கும். கைகளின் இடுக்குகளில் வழியும் வியர் வையைத் தோளில் கிடக்கும் துண்டால் துடைத்த பிறகே அங்கிருந்து எழுந்து நகருவது. பாலத்துக்குக் கீழே ஆறு நிறைந்து தண்ணீர் பாய்ந் தாலும், பாலத்தின் இரு கரைகளிலும் வளர்ந்து அடர்ந்து கவிந்திருக்கும் புன்னையும் ஆலும் புளியும் நிழல் சொரிந்தாலும், வியர்வையும் படபடப்பும் ஒவ்வொரு நாளும் எழுந்தே தணிந்தன.

பிறகு அன்று மீதிப் பொழுதை எப்படி ஓட்டுவது என்பது பெரிய பிரச்னை.

பகல் பொழுதில் அந்த ஊரில் பொழுது போக்க மூன்று

மையங்களே உண்டு.

ஒன்று திருஞானத்தின் சுக்குக்காப்பிக்கடை. கையில் பத்து பைசா இருந்தால் ஒரு பருப்பு வடையும் தின்று சுக்குக் காப்பியும் குடித்த பின்பு ஒன்றரை இரண்டு மணிநேரம் உட்கார்ந்து இருக்கலாம். அப்படி நெரிபிரியான வியாபாரம் இல்லையாதலால் அங்கே உட்கார்ந்து கிடப்பதைத் திருஞானம் பொருட்படுத்துவது கிடையாது. மேலும் கடைக்காரரும் எம்ஜியார் ரசிகர். எனவே பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. இருவருக்கும் ஒத்த சினிமாக் கொள்கையும் அது சார்ந்த அரசியல் கொள்கையும் இருந்ததால் சுமார் மூன்று நான்கு ரூபாய் வரையிலும் கடன் வைக்கலாம். இந்தச் சலுகை சிவாஜிரசிகர் களுக்குக் கிடையாது. அவர்களில் பலருக்கும் திருஞானத்தின் மீது சுமையான கோபம் உண்டு. ஆனால் தேயிலையோ சுக்குக் காப்பியோ குடிக்க வேறு போக்குக் கிடையாது. ஆகையால், குடித்துவிட்டு காசை நாய்க்கு விட்டெறிவது போல் எறிந்து விட்டுப் போவார்கள். சிலர் கொள்கை வேறுபாடு காரணமாய் கடைக்குள் நுழைவது கிடையாது. சப்பாற்றுப் படிக்கட்டில் இருந்தே யாரையாவது ஏவிவிட்டு வாங்கிக் குடித்துக் கொள்வார்கள்.

திருஞானத்துக்கு ஒரு மாதிரியான சிடுமூஞ்சி சுபாவம். முகத்திலே பெரும்பாலான சமயத்தில் இஞ்சி தான் இருக்கும். எனவே கூடுதலும் யாரும் கடன் சொல்வதில்லை. மாதம் ஒரு முறை எம்ஜியார் படம் ரிலீஸ்ஆகும் அன்று மத்தியானத்துக்கு மேல் கடையை அடைத்து விட்டு மஞ்சள் டெரிலின் சட்டையும் கறுப்பு சிவப்பு கரைபோட்ட கோடிக்கலர் இரட்டை வேட்டியும் காலருக்கும் கழுத்துக்கும் இடையில் செருகிய கர்ச்சீப் மடிப்புமாக திருஞானம் 'விசுக்விசுக்' கென்று பஸ்ஸுக்கு நடக்கையில் பல கண்கள் பாய்ந்து பாய்ந்து கொத்திப் பிடுங்கும்.

"தாயளி ஒரு நாளைக்கு இவன் கடையைத் தீயை வச்சுக் கொளுத்தணும்லே... சினிமாவுக்குப் போற போக்கைப்பாரு.." என்று கறுவல்களுக்கு குறை கிடையாது.

திருஞானத்தின் கடையை விட்டால் சண்முகத்துக்கு அடுத்த இலக்கு தமிழர் நூல் நிலையம். அங்கு மாலை ஐந்துமுதல் ஒன்பது வரைதான் குமுதம், விகடன், கதிர், ராணி எல்லாம் படிக்க வெளியே எடுத்துப் போடுவார்கள். பகல் பொழுதெல்லாம் தினமலர், தினத்தந்தி, தினமணி, அமெரிக்கன் ரிப்போர்ட்டர், வஞ்சிநாடு, கன்னியாகுமரி,

சோவியத்நாடு ஆகியவை கிடைக்கும். அன்றைய பேப்பர் பன்னிரண்டரை மணிக்குத்தான் வருமாகையால் பத்தரை பதினொன்றுக்கு எல்லாம் கூடுதல் ஆட்கள் இருக்க மாட்டார்கள். ரொம்பக் கசங்கி கூழாக தினத்தந்தி, ஒரு மாதிரி கசங்கலோடு தினமலர், புதுக்கருக்கு அழியாத பெண்போல தினமணி.

நேற்றுப் படித்த கணக்கன் கட்டுரையை மறு முறை படித்துப் பார்க்கலாம். சோவியத் நாட்டில் வெளியாகும் அதிகாலையின் அமைதியில் தொடர்கதையை படிக்கலாம். அல்லது தினத்தந்தியை எடுத்து முன்னால் விரித்து வைத்துக் கொண்டு அதில் வெளியாகி இருக்கும் சினிமா நடிகையின் முலைதடவிக் கிளர்ச்சியுறலாம்.

பேப்பர் வந்துவிட்டால் நூல் நிலையத்துக்குள் எட்டுப் பத்துப் பேர் கூடி விடுவார்கள். கன்னித்தீவு படிப்பவர்கள், மணவாளக் குறிச்சி இரட்டைக் கொலையின் மேல் விபரம் படிப்பவர்கள், நெல்லையில் பெருந்தலைவர் காமராஜின் பேச்சைப் படிப்பவர்கள் என –

மாடசாமி அண்ணன் மட்டுமே தினமணியை எடுத்துப் பிரிப்பார். அவர் கையில் அது கிடைத்து விட்டால் மத்தியானம் இரண்டரை மணிவரை அது வேறு யாருக்கும் கிடைக்காது. தலையில் புரட்டிய எண்ணெயும் அரையில் உடுத்துக் குளிக்கும் துவர்த்தும் இடுப்பில் பொடி டப்பியுமாக இருக்கும் அவரைப் பார்த்தால் பேப்பரை இப்போது போட்டு விட்டுப் போய்விடுவது போல்தான் இருக்கும். ஆனால் அவர் வீட்டு அடுக்களையில் குழம்பு கொதிக்கும் மணம் அவர் புலன்களுக்கு எட்டிய பிறகுதான் எழுந்திருப்பார். இது சண்முகத்துக்குத் தெரியும். எனவே அவர் வருமுன்னால் தினமணியை அபேஸ் செய்துவிட வேண்டும். அவன் கையில் பேப்பர் இருப்பதைப் பார்த்தால், "காலறுவான் வந்திட்டியா" என்று திட்டியபடியே உட்கார்ந்திருப்பதைப் பார்த்து இரக்கப்பட்டாவது நடுப்பக்கங்களைக் கொடுக்க வேண்டியதிருக்கும்.

அந்த ஊரில் இருக்கும் விபரம் உள்ள நாலைந்து பேரில் மாடசாமி அண்ணனும் ஒருவர். சாப்பாட்டுக்கு நெல்லும் தேங்காயும் கிடைக்கும் வயலும் வயல் சார்ந்த தோப்பும் குறும வயிற்று வலியும் அவருக்குக் குடும்பச் சொத்து. பெரிய சூனா மானா. அந்தக் காலத்து ஸ்கூல் ஃபைனல். நனையப் போட்ட கொண்டைக் கடலை தின்று பார் விளையாடி கர்லா சுழற்றிய தடயங்களை உடம்பில் இந்த அறுபது வயதிலும் காணலாம். வெண்கல வார்ப்பைக் கம்பால் தட்டியது போல்

'கண்'ணென்ற குரல். தீவிரமான பெரியார் தொண்டர். பொங்கல் விழாக்களில் தலைமை தாங்கினால் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழெனன்று சங்கே முழங்கு' என்று பாட்டொலி கேட்கும். இப்போதும் பெரியார் கூட்டம் நாகர்கோயிலில் இருந்தால் கறுப்புச் சட்டையோடுதான் மாடாசாமி அண்ணன் போவது.

தமிழில் அவருக்கு ஆழ்ந்த அறிவு உண்டு. 'புறக்காழெனவே புல் என மொழிப,' 'அகக் காழெனவே மரம் என மொழிப', 'துள்ளல் ஓசை கலி என மொழிப,' 'தூங்கல் ஓசை வஞ்சி ஆகும்' என்பது போன்ற தொல்காப்பியச் சூத்திரங்களை சண்முகத்துக்கு அறிமுகப் படுத்தியது அவர்தான். படிக்கும் காலத்தில் வினைத்தொகை, பண்புத்தொகை எல்லாம் சண்முகம் கண்டுபிடித்து விடுவான். ஆனால் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை போன்ற வித்தைகளை அவனுக்குக் கற்றுக் கொடுத்தது அவர்தான். நன்னூலும் காரிகையும் அலங்காரமும் தலைகீழாகப் படித்தவர். ஆனால் ஆசானுக்குக் கணக்கு வராது. எல்லாப் பாடத்திலும் வகுப்பில் முதல். கணக்கில் மட்டும் பதினாலு, பத்தொன்பது. அதனாலேயே ஸ்கூல் ஃபைனலில் அவர் குடை சாய்ந்து போனார்.

மாடசாமி அண்ணனிடம் பேப்பர் மாட்டிக் கொண்டு விட்டால் அடுத்த போக்கிடம் சாத்தாங்கோயில் திண்ணை. அது ஒரு மாதிரி சர்வகலாசாலை.

தெற்குத் திண்ணையில் நாயும் புலியும். வடக்குத் திண்ணையில் சோம்பல் தூக்கம். சந்நிதானத்தின் முன்னால் இருக்கும் திண்ணைக்கு கைப்பிடிச் சுவர்கள் உண்டு. நடுவில் முற்றம் மாதிரி காற்றுமழைக்கு வெயிலுக்கு ஒதுக்கமாய் இருக்கும். ஒருவர் கதைப் புத்தகம் படிப்பார். ஆறுபேர் குலாம்களி களிப்பர். பக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆலோசகர் உண்டு.

சேக்கு ஒன்பதாம் பந்தைப் போடலாமா வேண்டாமா?

ஒரு துருப்பைத் தட்டினால் என்ன?

கிளாவரைத் தழையலாமா அல்லது துருப்புக் கேட்டு வெட்டலாமா?

இந்தக் கவலை எல்லாம் இல்லாமல் இருவர் சூலைக்கூறுக்கு மருந்து பற்றியோ மீன்கறிவைத்தால் மறுகறி வேண்டுமா என்பது பற்றியோ விவாதித்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த இரண்டு திண்ணைகளுக்கும் கோயில் முகப்பு முற்றத்துக்கும் சூத்ரதாரி போல் இருப்பார் ஆண்டிப்பாட்டா.

அவருக்கும் மாடசாமி அண்ணனுக்கும் ஒரேயொரு வகையில் தான் உடன்பாடு. அவருக்கு குறும வயிற்றுவலி என்றால் இவருக்கு மூலப்பவுந்திரம். மற்றபடி ஆண்டிப்பாட்டா பெரிய பக்தர். அதிகாலையில் எழுந்து குளித்து நெற்றியில் மார்பில் நீறணிந்து ரொம்ப ஐசுவரியமாக இருப்பார். மனநிலை அமைந்து விட்டால் பாட்டும் தாளமும் உல்லாசமாக வரும்.

"மீசையுள்ளாண் பிள்ளைச் சிங்கங்கள் என்கூட
வெளியினில் வாருங்கள் காணும்
நாசி நிரம்பவும் மயிர்தான் இரண்டுகால் நடுவிலும்
ஒரு கூடை மயிர்தான்
ரோசங்கெடுவார்கள் என் கடை மயிர்தான்
குணங்குடி கொண்டாலும் என்னுயிர்க் குயிர்தான்
மீசையுள்ளாண் பிள்ளைச் சிங்கங்கள் என்கூட
வெளியினில் வாருங்கள் காணும்..."

என்று பெரிய குரலில் ஆங்காரத்தோடு எடுப்பார். அல்லது –

"ஏதேது செய்திடுமோ பாவி விதி
ஏதேது செய்திடுமோ
தேவடியாள் வீட்டு நாயாகச் செய்யுமோ
தேவடியாளை என் தாயாகச் செய்யுமோ
ஏதேது செய்திடுமோ பாவி விதி
ஏதேது செய்திடுமோ"

என்று நைந்து குழைவார்.

ஆனால் மாடசாமி அண்ணனும் ஆண்டிப்பாட்டாவும் சந்தித்துக் கொண்டால் வெட்டுப்பழி, குத்துப்பழி. இரண்டு பேரும் அப்பன் மகன் முறைக்காரர்கள். என்றாலும் பேச்சு வகுதரவு இல்லாமல் இருக்கும்.

"தாயோளி உருப்படுவானா இவன்..? பிள்ளையாரு செலையை உடைக்கணும்ங்கானே... செறுக்கி விள்ளைக்கு குறும வயத்துவலி வராம என்ன செய்யும்?"

"லேலேய்... தலை தெறிச்சிராம... அப்பனைப் பேசுகபேச்சா... பெரீய சித்தரு மயிரு மாரி பாட்டுப் படிக்கான். சித்தருண்ணா செவுரு முட்டி அரிஷ்டம்தான் குடிக்கணுமாலே..."

"யோகிகள் எல்லாம் அப்படித்தாண்டா இருப்பா..."

"ஆமா... யோகி எல்லாம் புத்து வச்சுதான் சாவான்... உனக்கு மூலத்திலே புத்து..."

"தாயோளி நாக்கு அழுகீராமே..." என்ற ரீதியில் பேச்சு போகும்.

இந்த மூன்று இடங்களில் ஒன்றில்தான் உட்கார்ந்து, படுத்து, வம்பு பேசி, சண்முகத்துக்கு பொழுதை ஓட்ட வேண்டும். வீட்டில் இருந்தால் ஒரே வெக்கை. வெளி வெக்கை போதாது என்று உள்வெக்கை.

அப்பா எப்போதும் முறைத்த பார்வை. அம்மாவுக்கானால் எந்த நேரமும் புறுபுறுப்பு. சோப்பு வாங்க நாலணா கேட்டுவிடப்பிடாது. போச்சு. "இங்க என்ன கெட்டியா வச்சிருக்கு? இல்ல பாட்டனாரு சேத்து வச்ச சொத்து கெடக்கா? தடிமாடு கெணக்க வளந்திருக்கான். ஒரு வேலையைப் பாத்துக்கிட்டுப் போகத் துப்பில்லே... தெருவை அளந்துகிட்டு நடக்கான்."

எல்லாரும் சாப்பிட்ட பிறகுதான் சாப்பிடப் போவது. கொஞ்சம் முந்திப் போனால் –

"வந்திட்டாரு... இப்பம் சாப்பிட்டுக்கிட்டு ஆபீசுக்கு போகாண்டாமா?"

கொஞ்சம் பிந்தி விட்டால் –

"இங்க என்ன சம்பள ஆளா வச்சிருக்கு? தொரை வாற நேரத்துக்கு ஆசரா நிண்ணு ஊத்தி வெளம்பதுக்கு? போட்டு சாப்பிட்டுக்கிட்டுப் போ..."

சில நாளில் புளிக்கறி மட்டும் இருக்கும். சில நாளில் யாரும் தின்னாத கொடுப்பைக் கீரைத் துவரன் இருக்கும். மோர் ஒரு நாளும் இருக்காது. காலைக் காப்பியும் இந்த மேளம்தான். வழித்துவிட்ட மாவில் நாலு இட்டிலியோ பிய்ந்து சுருண்ட இரண்டு மூன்று தோசைகளோ! சில சமயம் அதற்கு சட்டினியும் இல்லாமல் மிளகாய்ப் பொடியும் இல்லாமல் பச்சை மிளகாயும் உப்புப்பரலும் புளிச்சுளையும்

பூண்டுப் பரலும் வைத்து நுணுக்கி இரண்டு சொட்டு எண்ணெய் விட்டு வாயெரிய, நாவெரியத் தின்ன வேண்டும்.

ஒரு காலத்தில் எல்லாம் சரியாக இருந்தது. யாருக்கு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுக்கு எல்லாம் கிடைத்தன.

கல்லூரிக்குக் கொண்டு போகும் கட்டுச் சோற்றின் நடுவே வேக வைத்த முட்டை இருந்தது.

தேர்வு சமயத்தில் இரவு ஒரு தம்ளர் பால் இருந்தது. கேட்ட கைக்கு பணம் கிடைத்தது.

எந்த சினிமாவும் முடங்கியதில்லை.

அப்பாவிடம் பணம் இல்லாவிட்டால் கூட பால், மோர், வெண்ணெய் விற்ற பணம் அம்மாவிடம் இருந்தது.

அதெல்லாம் போச்சு.

சமயங்களில் ஒரு சார்மினாருக்கோ அல்லது சுக்குக்காப்பிக்கோ கூட கையில் காசு இருப்பதில்லை. எத்தனை நாள் இனியும் தொண்ணாந்து கொண்டு திரிய வேண்டும் என்று தெரியவில்லை.

இருக்கின்ற ஒரே நம்பிக்கை பெரியப்பாதான். எப்படியாவது ஒரு வேலை வாங்கித் தருவார் என்ற நம்பிக்கையில் இன்று செத்து நாளை பிழைத்தது. அந்த நம்பிக்கைகூட சாயம்போக ஆரம்பித்தது.

O

குறுங்குளத்தில் ஒரு சம்சாரிக்கு சொந்தமாக இரண்டு ஏக்கர் நஞ்சை நிலமும் கறிக்குத் தேங்காயும் இருந்தால் ஒரு சிறிய குடும்பம் விழுந்து எழுந்து நடக்கும். சண்முகத்தின் தகப்பனாருக்கு இரண்டு ஏக்கர் பாட்ட நிலமும் இரண்டு பால் மாடுகளும் இரண்டிரண்டுவயது வித்தியாசத்தில் ஏழு பிள்ளைகளும். குடும்பம் கொண்டுபோவது என்பது புரந்தரனார் பெருந்தவம்.

இந்த இலட்சணத்தில் மூத்த மகன் பி.ஏ., படித்து விட்டு வேலையும் கிடைக்காமல் சுற்றித்திரிந்தால் எப்படி இருக்கும்? சண்முகத்தின் சம்பளவரவு கொண்டு தூர்க்கப்படக் காத்திருந்த பள்ளங்கள் ஏராளம். பள்ளங்களைப் பார்க்கப் பார்க்க அப்பாவுக்கு அடிவயிற்றில் திகில் பரவியது. எரியும் கூரையின் சில தெறிப்புகள் சண்முகத்தின் மீது எப்போதும் விழுந்தவாறிருந்தன.

ஆனால் விடியலுக்கான கிழக்கு வெளுத்தலை, கீசுகீசென்ற

புள்ளரவத்தினைக் காணோம்.

மூன்று முறை எஸ்.எஸ்.எல்.சி. நிலையில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எழுதிப் பார்த்தாயிற்று.

இரண்டு முறை ரயில்வே சர்வீஸ் கமிஷன்.

எலக்ட்ரிசிடி போர்டு கிளர்க் - கேஷியர் வேலைக்கு ஒரு முறை.

தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளின் தேர்வில் இரண்டு தரம். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக வந்த போக்குவரத்துக் கழக கண்டக்டர், தேவஸ்வம் போர்டு குமாஸ்தா எனச் சில...

ஒரு பி.ஏ., படித்தவன் வேறு என்னதான் செய்ய முடியும்?

அப்பா சொல்கிறார்– "பால்மாட்டுக்கு ஒரு கட்டு புல் அறுத்துக்கொண்டு வந்து போடு," "மாடுகளைக் குளிப்பாட்டிக் கட்டு," "தெக்கு மடையிலே தெவக்கம் கெடக்காண்ணு பாத்துக்கிட்டு வந்திரு."

அவன் புறுபுறுத்துக் கொண்டேயானாலும் செய்யத்தான் செய்கிறான்.

இப்போதெல்லாம் விண்ணப்பம் அனுப்ப பணம் பெயருவதே பெரிய பாடாக இருக்கிறது. அப்பா சாப்பிடும்போது வேறெங்கோ திசையில் பார்த்துக் கொண்டு, கதவு நிலையைப் பற்றிக்கொண்டு–

"ஸ்டேட் பேங்குக்கு அப்ளிகேஷன் போடணும், நாப்பதுரூவா வேணும்"

"சவத்தை ஒரு முளு நோட்டாக் கேளேன்..."

"நான் என்னா சினிமா பாக்கதுக்கா கேக்கேன். முப்பது ரூவா போஸ்டல் ஆடர். அதுக்கு கமிஷன். ரெண்டு மூணு சர்ட்டிபிகேட் டைப் அடிச்சு அட்டெஸ்ட் செய்யணும். எல்லாம் ரெசிஸ்தர் பண்ணி அனுப்பணும்"

"எல்லாம் இதுவரைக்கும் அனுப்பினது போரும்... வேலை வச்சுக்கிட்டு காத்துக்கிட்டு இருக்கான்..."

பிறகு அம்மாவிடம் அதட்டலாகவும் மிரட்டலாகவும் இரங்கியும் இறங்கியும் நாலைந்து தடவை பேசினால் முப்பத்தஞ்சு ரூபாய் கிடைக்கும்.

சர்டிபிகேட் அட்டெஸ்ட் பண்ணித்தர ஜுனியர் என்ஜினியருக்கு

ஐந்து ரூபாய் என்று ரேட் ஆகிவிட்டது. சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போனாலும் போஸ்டாபீஸுக்குப் போனாலும் இதுதான் கதை.

வருமான சர்டிபிகேட்டுக்கோ, கம்யூனிடி சர்டிபிகேட்டுக்கோ வில்லேஜ் ஆபீசுக்குப் போனால் அங்கே வேறு கதை—

"தம்பி எந்தூரு?"

"குறுங்குளம்"

"அப்பா பேரு என்னா?"

"ராமசாமி"

"என்னவாம் தந்து விட்டாரா?"

"…………"

"சரி… போயி கடுப்பங்கூட்டி ரெண்டு சாயா… நாலு ஓமப் பொடி வாங்கீட்டுவா … எளுதி வச்சிருக்கேன்… வரச்சிலே அங்கு விலாஸ் போயிலை வச்சு ரெண்டு தரத்துக்கு வெத்திலை வாங்கிக்கோ…"

எல்லாம் கூட ஒரு ரூவா எண்பது பைசா. யாருக்கு அப்பன் கணக்கிலே?

'ஓய் பார்வத்திக்காரரே! நீரு பாக்கது சர்க்கார் ஜோலி. சர்டிபிகேட் தாறது உம்ம உத்தியோகம்' என்று கேட்டுவிட முடியுமா பி.ஏ. படித்திருந்தாலும்? எல்லாம் விண்ணப்பத்துடனும் ரெண்டு எம்.எல்.ஏ. சர்டிபிகேட் வேண்டும். சொந்தத் தொகுதி எம்.எல்.ஏ-க்கு மெட்ராஸ்லே வீடு. அங்கே போய்க் கேக்க முடியுமா? பக்கத்துத் தொகுதிக்குப் போனால் அங்கே ஆயிரத்தெட்டு கார்வாரு…

நாகர்கோயில்லே ஒரு சௌகரியம். அந்த ஜில்லாவிலுள்ள ஏழு எம்.எல்.ஏக்களில் ஐந்து பேர் அங்கேதான் கோர்ட்டிலே வக்கீல். எவனும் இரண்டுபேர் - திறப்புவிழா, புதைப்புவிழா இல்லாவிட்டால் - கிடைப்பான். இந்த உபத்திரவம் கூடிப் போனதுனாலே சர்டிபிகேட்டை நூற்றுக் கணக்கில் அச்சிட்டு கையெழுத்தும் போட்டு வைத்திருந்தார்கள். குமஸ்தாவிடம் சொன்னால் தேதி, அப்பாபேரு, சொந்தப்பேரு, ஊரு எல்லாம் எழுதிக் கொடுப்பார். ஆளில்லாவிட்டால் அவர்கூட காப்பிச் செலவுக்கு இரண்டு ரூபாய் கேட்பார். இரண்டு ரூபாய் கொடுத்தால் பிறக்காதவன், செத்துப் போனவன் பெயரில் கூட அவனை எனக்கு கொஞ்ச காலமாகத் தெரியும், ரொம்ப நல்லவனாக்கும், என்று சான்றிதழ்

வாங்கிவிடலாம். ஆனால் இந்தச் சான்றிதழ் மட்டும் இல்லாவிட்டால் விண்ணப்பத்தை நிராகரித்து விடுவார்களாம்.

இந்தப் பாடு பட்டு விண்ணப்பம் போட்டாலும் எவன் நம்மை வேலைக்குக் கூப்பிடுகிறான்? மிஞ்சி மிஞ்சிப் போனால் தேர்வு எழுத ஒரு கார்டு வரும். அது பணம் கட்டிய பாவத்துக்காக எல்லோருக்கும் வரும். அதிலும் தேர்வு பாளையங்கோட்டையில் போய் எழுத வேண்டும். பாளையங்கோட்டை என்ன புறவாசலிலா கிடக்கிறது? இங்கிருந்து நாற்பத்தஞ்சு மைல். பதினோராம் கிளாஸ் பரீட்சை எழுதியது போல ஆறுபேப்பர்கள். மூன்று நாள் தேர்வு. ஒரு நாள் முன்னாலேயே போக வேண்டும். நான்கு நாட்கள் லாட்ஜில் தங்கி ஓட்டலில் சாப்பிட்டு, கார்க்காரனுக்கு பணம் கொடுத்து – இதற்கெல்லாம் பணம் யார் தருவது? வந்தது வந்தாச்சு. தாமிரபரணியில் குளிக்கவாவது செய்யலாம் என்றால் முங்கி எழுகையில் தோளைத் தொட்டுக் கொண்டு மலம் தடித்தடியாய் மிதந்து போகும்.

ஏழு பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் சம்சாரிக்கு இந்தச் செலவுகள் எத்தனை நாட்கள் கட்டுபடியாகும்? முப்பது ரூவா உண்டுமானல் அரை மூடை புண்ணாக்கு என்றல்லவா அவனது கணக்கு?

மக்கள் தலைவர்களுக்கெல்லாம் பணம் குவிக்கும் ஆசை வந்து ரொம்பக் காலமாச்சு.

உள்ளூர் எம்.எல்.ஏ ஒண்ணுக்கும் பிரயோசனமில்லை. பணமும் வாங்க மாட்டார். எதுவும் செய்யவும் மாட்டார். வெறும் கட்டை மண்ணினாலே யாருக்கு பிரயோசனம்?

கொழுந்தியாள் மகனுக்கும் அண்ணன் மகளுக்கும் வேண்டுமானால் மெடிகல் அட்மிஷன் வாங்கிக் கொடுப்பார்.

பக்கத்தூர் எம்.எல்.ஏ. ஒருத்தர் உண்டு. அவரைப் பார்க்க உள்ளூர் கட்சிப் பிரமுகர் தயவு தேவை. அவரானால் அண்ணாச்சி திருச்சிக்குப் போயிருக்கா, மெட்ராசுக்குப் போயிருக்காண்ணு கண்ட இடம் கடத்துபவர். உள்ளூர் பிரமுகரை ஒருவாறு சரிகட்டினால் எம்.எல்.ஏ.யோடு பிரமுகர் பேசுவார்.

வெறும் பேச்சினால் என்ன ஆகும்?

மூணாயிரம் ரூபாய் கொடுத்தால் ஜூனியர் அஸிஸ்டென்டுக்கு முயன்று பார்ப்பாராம். ஒன்றும் நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்ல

முடியாதாம். கிடைக்காமற் போனால் பணம் திரும்பக் கிடைக்காது. கேஸா போட முடியும்? அவருக்கு என்று இரண்டு சீட் கோட்டா உண்டு என்பது ஊரறிந்த விஷயம். இந்த இரண்டு சீட்டைக் காட்டி எத்தனை மூவாயிரமோ? ஆனால் ஒரு முறை பணம் கொடுத்துக் கிடைக்கா விட்டால் மறுமுறை கிடைத்துவிடுமாம். அப்படி தோவாளைப் பண்ணை யாரின் மகனுக்கு கிடைத்திருக்கிறது. தெற்குத் தெரு பரமசிவம் இன்று கடலூரில் வேலை பார்ப்பது அவரால் தான். இப்போது பரமசிவத்துக்கு அம்பது பவுன் உருப்படியும் ரெண்டுகோட்டை விதைப்பாடும் வீடும் என பொண்ணுத்தரம் வந்திருக்கிறது.

அப்பாவுக்கு அதுதான் மனப்பாயாசம்; பயலுக்கு ஒரு வேலை கிடைத்தால் பெண்ணைப் பெற்று வைத்திருப்பவனிடம் ஒட்டக் கறந்து விடலாம் என்று. ஆறாயிரம் ரூபாய் விளையாடிப்பார்க்க வேண்டும். வக்கில்லாவிட்டால் என்ன செய்வது? மயிரைக்கட்டி மலையை இழுக்கும் சமாச்சாரம்.

ஆனால் பெரியப்பா மீது இன்னும் நம்பிக்கை இருந்தது.

"நாலு நாளைக்கு ஒருக்க லெட்டர் போட்டுக்கிட்டே இருக்கணும். பதிலு போடுகானோ இல்லையோ... நாம எளுதுகதிலே சுணங்கப் பிடாது. அவன் பல ஜோலிக்காரன்... ஞாபகப்படுத்திக்கிட்டே இருந்தாத்தான் ஏதாம் செய்வான்."

இரண்டு வருடமாக சண்முகம் எழுதிக் கொண்டுதான் இருந்தான்.

***

## இரண்டு

பெரியப்பா சண்முகத்துக்கு பெரிய ஆதர்சமாக இருந்தார். அவனுக்கு மாத்திரம் என்றில்லை. அந்தக் கிராமத்தில் பலருக்கும்.

அவர் ஊளமூக்கு வடித்துக் கொண்டு எலிவால் சடையும் கைகாலிலெல்லாம் சிரங்குமாய் அலைந்ததைப் பார்த்தவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களில் யாரும் அவரை என்.கே. ராஜப்பா என்ற சினிமாப் பெயரில் அறிய மாட்டார்கள். மூக்காண்டி என்று சொன்னால் தான் தெரியும்.

நூற்றிருபதாம் நம்பர் ராஜாங்கம் வேட்டியும் சந்தனக் கலர் சில்க் முழுக்கை சட்டையும் தோளில் புரளும் ஜரிகை அங்க வஸ்திரமும் விரல்களில் மோதிரமும் அலைமடிப்பாய் சிகையும் தங்க பிரேமிட்ட கண்ணாடியும் கையில் சிகரெட் பெட்டியும் தீப்பெட்டியுமாக என்.கே.ஆர். வருவது கண்டாலும் அவர்கள் விசாரிப்பது – "என்னடே மூக்காண்டி? எப்பம் வந்தே?" என்றுதான்.

பதின்மூன்று வயதில் வீட்டைவிட்டு ஓடிப்போனவர்கள் எல்லோருக்கும் இந்த யோகம் சித்தித்து விடுவதில்லைதான்.

ஏதோ ஒரு சுக்கிரதிசை. எத்தனை முறை பெரியப்பா அதை வர்ணித்தாலும் அலுக்காத கதை.

வீட்டிலிருந்து ஓடி மதுரை, சேலம் என்று அலைந்தது; சாரதாம்பாள் நாடகக்கம்பனியில் எடுபிடியாய்ச் சேர்ந்தது; சாரதாம் பாளுக்கு பிராந்தி ஊற்றிக் கொடுக்கும் அந்தரங்கச் செயலாளனாக மாறியது; ஒரு நாள் சாராதாம்பாளுக்குக் கொடுக்கு முன் தானும் ஒரு கிளாஸ் குடித்துவிட்டு கண்கள் சிவக்கப் போய் நின்றது; பிறகு 'பால சண்முகா' வில் சேர்ந்து பினாங்கு, சிங்கப்பூர், யாழ்ப்பாணம், கொழும்பு என்று சுற்றியது...

சினிமாவில் நுழைந்தது....

சினிமாவில் என்றால் முக்கிய கதாநாயக வேடங்களில் அல்ல. கதாநாயகியின் நோயாளித் தந்தையாக இருமிச் சாகும்படி, ஏதாவது பேர் தெரியாத தேசத்து அரசனாக, கதாநாயகியை இரண்டாதராமாக மணக்க வரும் ஜமீன்தாராக, அவ்வளவாக விஷமில்லாதவில்லனாக....

அப்படியும் இப்படியுமாக சுமார் எழுபது எண்பது படங்களில் நடித்துவிட்டார்.

மொத்த மிச்சம் சென்னையில் ஒரு வீடு, வெளிநாட்டுத் தூதரகத்தில் வேலைபார்க்கும் ஒரு மகன், டாக்டருக்குப் படித்து முடித்த ஒரு மகள், ஊரில் பத்துக் கோட்டை விதைப்பாடு...

வேடங்கள் சில்லறையானதுதான் என்றாலும், இன்னும் ஈசல் என ரசிகப்பட்டாளம் வைத்துக் கொண்டிருக்கும் நடிகருக்கு நம்பிக் கைக்குப் பாத்திரமானவராக இருந்ததால் அரசியல் கட்சியொன்றில் ஓரளவு அறியப்பட்ட முகம், நடிகர் சங்கத்தின் தலைவராகச் சிலகாலம், செயலாளராகச் சிலகாலம்–

பிறகு அந்த நடிகர் எடுத்த முதல் சொந்தக் கலர்ப் படத்தில் இவருக்குக் கொடுக்கத் தோதானதாக இருந்த ஒரு பாத்திரத்தை – கதாநாயகனுக்கு வீரம் ஊட்டி சபதம் எடுப்பதற்கான தோதில் தூக்கிலிடப்படுவார் படத்தின் கால்வாசிக்கும் முன்னதாக – நடிகரின் அண்ணனே எடுத்துக் கொண்டதால் இவருக்கு வேடமற்றுப் போயிற்று. நடிகர் எவ்வளவு சொல்லியும் சமாதானப் படாததால் நடிப்புத் தொழில் அன்றோடு போயிற்று. அன்று முதல் யார் படத்திலும் எந்த வேடத்திலும் போவதில்லை.

பிறகுதான் எல்.ஐ.சி ஏஜன்சி எடுத்ததும் மாகாணத்தில் முதல் ஏஜண்டாக ஆனதும்.

இன்றும் பெரியப்பாவுக்கு அரசியல் களத்திலும் சினிமா களத்திலும் செல்வாக்கு உண்டு. செல்வாக்கு இல்லை என்றால் வெளிநாட்டுத் தூதரக வேலையும் எம்.பி.பி.எஸ். அட்மிஷனும் சாத்தியப்பட்டிருக்குமா?

அந்த செல்வாக்குப் பன்னீரின் சில துளிகள் தன் மகன் தலை மீதும் விழாதா என்பது அப்பாவின் நைப்பாசை. அந்த ஆசீர்வாதத்துக்காக சண்முகம் தலையைக் குனிந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகவே ஆயிற்று. இன்னும் குனிந்து கொடுத்துக் கொண்டேதான் இருந்தான்.

ஆண்டுக்கு ஒரு முறை பெரியப்பா குடும்பத்துடன் ஊருக்கு வரும்போது அமோகமாக இருக்கும். தெருப்படிப்புரையில் பவானி ஜமுக்காளம் விரிக்கப் பட்டிருக்கும்.கைக்கெட்டும் இடத்தில் கோல்டு பிளேக் சிகரெட்டும் தீப்பெட்டியும். கோல்டு பிளேக் வாசனை நன்றாக இருக்கும். அந்த மணத்தைப் பிடிக்க என்றே சின்ன வயதில் அவர் பக்கத்தில் போய் நின்று கொள்வான் சண்முகம். "போடா... போய்ப் பிள்ளைகளோடு விளையாடு..." என்று பெரியப்பா அடிக்கடி சொல் வார். இப்போது தான் புரிகிறது – குண்டிப்பக்கம் கிழிந்த நிக்கரும் அழுக்கு மேலும், வாரப்படாத தலைமயிரும், ஒழுகும் மூக்குமாக ஒரு பிரதிநிதி தன்னருகே ஒட்டி நிற்பதை விரும்பாததாலேயே அந்தக் கரிசனம் என்பது.

அடுக்கிய இரண்டு தலையணைகள் மீது சாய்ந்துகொண்டு தமாஷாக பல விஷயங்கள் பேசுவார் பெரியப்பா. அதற்காக என்றே அவரைச் சுற்றி ஒரு கூட்டம் நின்று கிடக்கும்.

"நீங்க செமினி கெணேசனை பார்த்திருக்கேளா?"

"எம்ஜியாரு தினசரி ஒரு பவுனை உரைச்சு உரைச்சுக் குடிக்காராமே! அப்பிடியா?"

"மங்கையர் நீதியிலே லலிதா உங்க கையைப் பிடிக்காளே உங்களுக்கு கூச்சமா இருக்காதா?" என்பதுபோல் கேள்விகள் வரும். அதற்கெல்லாம் விஸ்தாராமாகப் பதில் சொல்லிக் கொண்டிருப்பார். கச்சேரி சிலசமயம் இரவு பன்னிரெண்டு ஒரு மணி வரை கூட நீளும். சாப்பிடும் நேரம் கூட வாய்க்கு ஓய்வு கிடையாது.

வீட்டில் சீனிபோட்டு காப்பி போடுவது பெரியப்பாவுக்கு மட்டும்தான். பாலும் சீனியும் தீர்ந்து போனால் கருப்பட்டிக் காப்பி குடிப்பார்.

சின்ன வயதிலேயே அவர் பேச்சில் ஒரு லயிப்பு ஏற்பட்டு விட்டது. சண்முகத்துக்கு ஊருக்கு வரும்போது அவர் துணி மணிகள் வாங்கித் தந்தது கிடையாது. தின்பண்டங்கள் வாங்கித் தந்தது இல்லை. புறப்பட்டுப் போகும்போது கூட நாலணாவோ, எட்டணாவோ தருவது கிடையாது. ஆனாலும் பெரியப்பா வருவது ஒரு திருவிழா போல்தான்.

சிகரெட் பெட்டிக்கு உள்ளிருக்கும் உலோகத்தாளில் ஈரச் சுண்ணாம்பு வைத்துப் பொதிந்து "நெருபிரு நெருபிரு" என்று ஒலியுண்டாக்கி காட்டுவார். சிகரெட் பெட்டியை நேர் பாதியில்

வளையம் போலக் கிழித்து தரையில் நிறுத்தி ஓங்கி மிதித்து டப் பென்று சத்தம் உண்டாக்குவார். உரசிய தீக்குச்சியை உடனே உள்ளங்காலில் வைத்து நிறுத்துவார்.

சண்முகம் பத்து, பதினொன்று படிக்கையில், வேறு பேசயாரும் ஆளில்லை என்றால், அவனிடம் ஏதாவது கேட்பார். சிலசமயம் தமிழ்ப் பாடப்புத்தகத்தைக் கொண்டு வரச்சொல்லி அதிலுள்ள பாடல்களை பாடிக் காட்டுவார். தாயுமானவர், இராமலிங்க அடிகள் பாடல்களை அவர் பாடக் கேட்பது சண்முகத்துக்கு ரொம்பப் பிடிக்கும். இப்படித்தான் பெரியப்பாவோடு அவன் நட்பு பூண ஆரம்பித்தான்.

ஆண்டுகளின் கனம் கூட, சினிமாவில் அவர் தலையும் காணாமற்போக, கிராமத்தில் அவர் வாய் நோக்கும் கூட்டம் குறைந்தது.

யாரும் இல்லாத மாலை அல்லது முன்னிரவு நேரங்களில் சண்முகத்தை அழைத்துக் கொண்டு நடப்பார். கிருஷிப்பாலக்கலுங்கில், பாறையாற்றுப்பால மேடையில், பிராமணந்தோப்பு மணலில், தொண்டிப்பாலச் சுவரில் என இளங்காற்றும் மென்னிலவும் முன்னிரவின் தண்மையுமாய் பாடங்கேட்பது போல்பல விஷயங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறான் அவன்.

பொருளாதாரமும் இந்திய வரலாறும் பட்டப்படிப்பில் படித்துக் கொண்டிருந்த காலம். பிரஞ்சுப்புரட்சி, முதல் இரண்டு உலகப் போர்கள், ஜஸ்டிஸ் கட்சி, பெரியார் இயக்கம், தி.மு.க....

புற நானூற்றின் சில நுட்பமான காட்சிகள் "முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே! –"

பெண்களின் மாதவிலக்கின் மர்மம்–

எத்தனையோ விஷயங்கள் ....

சுவாரசியமான பல சினிமாத் தகவல்கள்...

அரசியல் பேச்சாளர்களின் சாமர்த்தியங்கள்...

சத்தியமூர்த்தி,

ஜீவா,

அண்ணா –

நேரம் போவது தெரியாது.

அவர் வந்துவிட்டால் அவருக்குப் பிடித்தமானவற்றைத் தேடி அலைவான் சண்முகம்.

தாழக்குடி இன்னாசிமுத்து வீட்டில் நெத்திலிக்கருவாடு, வடசேரிச் சந்தையில் கட்டாத் துண்டம், செண்பகராமன்புதூர் அரைக்கீரை, முளைத்தண்டு, சந்தைவிளை மாலைப்பதனீர்...

சண்முகத்துக்கு வேலைவாங்கிக் கொடுப்பது பெரியப்பா வின் தார்மீக கடமைகளில் ஒன்று என்பதும் தீர்மானமாகி வெகு நாட்களாகிவிட்டன.

ஆனால் படிப்பு முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகியிருந்தும் பெரியப்பாவால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒரு வேளை செய்ய மனமில்லையோ என்று தோன்றியது. மனமில்லாமற் போனால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும்.

அண்ணனுக்கும் அவனுக்கும் மனமுறிவுக்கு காரணம் இருந்தது. முதல் முறையாக அப்போதுதான் சென்னைக்குப் புறப்பட்டான் சண்முகம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து எட்டில் பி.ஏ இறுதியாண்டு தேர்வு எழுதி முடிந்த பிறகு, தேர்வு முடிவுகள் வருவதற்கு முன்னால்– இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்கான தேர்வு எழுத அழைப்பு வந்திருந்தது.

அழைப்பு வந்ததே ஆர்டர் வந்தது போல் அவன் குடும்ப வட்டாரத்தில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. மெட்ராசுக்குப் புறப்படுகிறோம் என்பதில் சண்முகத்துக்கு ஒரு விதமான தன்னிலை மறப்பு.

வேலை, காதல், சுகபோகங்கள் எனும் ரீதியில் கனவுகள் குமிழியிட்ட காலம்.

நாகர்கோயில் பஸ்டான்டில் பெரிய கூட்டம், வழியனுப்ப. ஆயிரத்தெட்டுத் தடவைகள் கவனமாகப் பார்த்துப்போ, வழியிலே எதற்கும் இறங்காதே, என...

எல்லாம் புத்தம் புதிசாய் இருந்தது. திருநெல்வேலிக்கு எங்கும் நிறுத்தாமல் பஸ் பயணம். ரயில்வே ஸ்டேஷனில் பஸ் நின்றபோது மணி பன்னிரண்டரை. மூன்றரை மணிக்கே சென்னைக்கு ரயில் என்றாலும் அடித்துப் பிடித்து இறங்கி, பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடி பிளாட்பாரம் கேட்டு...

நல்ல மேமாத வெயில் காய்ச்சியது. தாகம், பசி. பத்தரை மணிக்கு நாகர்கோயிலில் இருந்து பஸ் பிடிக்க ஒன்பது மணிக்கே வீட்டில் இருந்து கிளம்பியது. டிரங்குப் பெட்டிக்குத் துணையாகக் கொண்டுவந்

துணிப்பையில் மத்தியானம் சாப்பிட சோறும் ராத்திரி தின்ன இட்லியும் இருந்தது. தூணைச்சுற்றி இருந்த சிமின்ட் மேடை ஒன்றில் அமர்ந்து சோற்றை தின்ன ஆரம்பித்தான். புளித்தண்ணி தாளித்துக் கட்டிய சோறு. நடுவில் தேங்காய்த்துவையலும் நாரத்தங்காய் ஊறுகாயும். சோறு இரண்டு ஆளுக்குக் காணும். அவன் கைச்சோற்றில் ஒரு கண்ணும் மற்ற உலக நடப்புகளில் மறு கண்ணுமாய்த் தென்பாண்டிச் சீமையின் பையன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். சற்றுத்தூரத்தில் கண்ணில் பகைக்குறியோடு தொங்கும் நாவோடு உதிரிநாய் ஒன்று. சாப்பிட முடியாததைப் பையன் கையில் கொடுத்துவிட்டு கொஞ்சம் தொலைவில் இருந்த பைப்பில் சென்று தண்ணீர் குடித்தான். அதற்குள் இரண்டு தடவை டிரங்குப் பெட்டியைத் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

இரண்டே முக்காலுக்கு வண்டி வந்தது. பெட்டிகளுக்குள் நுழைய பெரிய அடிபிடி. ஏன் இந்தப் பறத்தம் என்று தெரியவில்லை. சண்முகத்துக்கு டூ டயர் சீட் தான் கிடைத்திருந்தது. டிக்கட்டிலேயே பெயரும் சீட் நம்பரும் இருந்தது. கோச்சுகளில் வரிசையாய்ப் பெயர்கள் எழுதி ஒட்டி இருந்தது. பார்த்து ஏறி உட்கார்ந்தான். நல்ல காலமாய் சன்னலோர இருக்கை. பக்கத்தில் கணவன், மனைவி ஏழுவயதுக் குழந்தையுமாய் ஒரு குடும்பம். எதிர்த்த வரிசையில் தாடி, தொப்பி, லுங்கியுடன் இரண்டு சாகிபுகள். ஏதோ போதாத காலத்துக்கு மூன்றாம் வகுப்பில் வந்ததுபோல் முகபாவத்தில் பேண்ட் சட்டையோடு இரு நடுவயதுக்காரர்கள்.

குடும்பத்துடன் இருந்தவர் கேட்டார்– “தம்பி இந்தப்பக்கம் வந்திரேன்... லேடீஸ் அந்தப்பக்கம் இருக்கட்டும்.” சன்னல் இருக்கையைவிட மனமில்லாமல் சண்முகம் பேசாமல் இருந்தான்.

வண்டி ஓட்டம் எடுத்தபோது நல்ல காற்று வந்தது. வழி நெடுகப்பொட்டல் வெளி. செம்மண்பாலை. தூசி சிலசமயமும் நிலக்கரிப் பொடி சிலசமயமும் கண்ணில் விழுந்தாலும் வெளியே வேடிக்கை பார்ப்பது ஒரு சுகம்.

பெரியப்பா பேச்சில் அடிபடும் ஊர்கள் ஒவ்வொன்றாய்க் கடந்தவாறு இருந்தன. தாழையூத்து, மணியாச்சி, சாத்தூர், விருதுநகர், விளக்கு வைக்கும் நேரத்தில் மதுரை.

திருப்பரங்குன்றம், மாசிவீதிக் கோபுரங்கள், வைகை.

பெரிய அதிர்ச்சியாய் இருந்தது வைகையைப் பார்க்க. கிழட்டுத் தேவடியாளைப் பார்ப்பது போல். கால்களில் நீர், வெடிப்பு, முகத்தில்

வீக்கம், காய்ந்து அடார்ந்த உதடுகள், பூழை திரண்ட கண்கள், சரும ரோகம், தோல் பாய்ந்த முலைகள், ஒருவித வீச்சமுடன் இருக்கும் கிழட்டுத் தேவடியாளைப் பார்ப்பது போல் பெரிய அதிர்ச்சியாய் இருந்தது வைகையைப் பார்க்க. கரையோரம் முட்புதர்கள், வடியும் சாக்கடைகள், குந்தி இருந்து மலம் கழிப்பவர்கள், குட்டையாகிப் போன தேங்கல் தண்ணீர்...

இதைப் பார்த்திருக்கக் கூடாதோ என்று தோன்றியது. சண்முகத்தின் மனதில் இருந்தது எல்லாம் சிலப்பதிகார வைகை, சில வரலாற்று நாவல்களின் வைகை–

திருச்சி பன்னிரண்டு மணிக்கு வரும் என்றார்கள். கையோடு காவிரியையும் பார்த்துவிட்டால் நல்லது என்ற ஆசை. ஆனால் வைகையின் அதிர்ச்சி இன்னும் மனதில் மிச்சம் இருந்தது.

எப்படியும் உட்கார்ந்தபடிதான் உறங்க வேண்டும். 'லேடீஸை' கீழே விட்டுவிட்டுப் பக்கத்து சீட்டுக்காரர் மேலே ஏறிப்படுத்துவிட்டார். எதிர்த்த சீட் ஜென்டில்மெனுக்கும் பெர்த் இருந்தன. இரண்டு முஸ்லிம்களும் கால்மாடு தலைமாடாகப் படுத்தாகிவிட்டது. பக்கத்து சீட்டு அம்மாள் மகளை சீட்டில் கிடத்திவிட்டு இருக்கையின் நடுவில் இருந்த ரயிலின் தரையில் சமுக்காளம் விரித்துப் படுத்துக் கொண்டாள்.

சண்முகத்தின் கால்பக்கம் கால் நீட்டி உறக்கத்தில் கிடந்தாள். அவள் கால்கள் அவன் கால்களை நெருக்கிக் கொண்டிருந்தன. இடதுகையைத் தலைக்கு வைத்து, மகள் பக்கம் பார்த்து ஒருக்களித்துப் படுத்திருந்தாள் அம்மாள். கூச்சத்துடன் கால்களை உள்ளுக்கு இழுத்துக்கொண்டு அந்த அம்மாளைப் பார்க்க ஆரம்பித்தான்.

நீல விடிவிளக்கின் வெளிச்சத்தில் சிறிது மங்கலாகத் தெரிந்தாள். இருபத்தாறு இருபத்தேழு வயதிருக்கும். பிள்ளை பெற்றபின் ஸ்தூலித்த உடம்பு. இரண்டு மூக்கையும் குத்தி ஏழுகல் மூக்குத்தி போட்டிருந்தாள். உறக்கத்தில் மார்ச்சேலை ஒதுங்கி, பிதுக்கம் தெரிந்தது. வெளியே தாலி தவழ்ந்தது. கால்களின் ஆடுசதைக்கு மேலே சேலை விலகிக்கிடந்தது.

மிக அருகாமையில் பெண்ணுடம்பு. கணகள் மீண்டும் மீண்டும் எச்சிற்கலை நாய்போல் நக்கிப் பெயர்ந்தன. சீட்டில் நிமிர்ந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தான். இரண்டு மூன்று கொட்டாவி விட்டான்.

உடலின் சூட்டை உதட்டில், தொண்டையில், மூக்குமுகப்பில்

காது மடல்களில் உணர்ந்தான். மடக்கி வைத்திருந்த கால்களை நிமிர்த்தி அந்த அம்மாளின் முழங்காலை, யதேச்சையாய் படுவதுபோல், பெருவிரலால் தொட்டான்.

வண்டியுள் எந்த அரவமும் இல்லை. இன்றொரு நாள் உறங்கா விட்டால் இனியொரு நாள் கிடைக்காது என்பது போல் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர். பெருவிரலால் முழங்காலின் குதிரை முகத்தை மெதுவாகத் தடவத் துவங்கினான். கால் விரலிடுக்கில் பற்றி சாரியை இன்னும் கொஞ்சம் தூக்கலாமா என்று தோன்றியது. மனதைப் பயம் தின்றது. அம்மாள் திரும்பிப்படுத்தாள். பச்சைச் சுரைக்காய் போல் வழுவழுப்பாய் ஆடுசதை. பெருவிரலின் முரட்டுத்தோல்கூட மென்மையை உணர்ந்தது. காய்ச்சல் பலமாக அடித்தது. கொஞ்ச நேரத்தில் இந்த விளையாட்டு அலுத்துப் போனது. இன்னும் வேறேதும் வேண்டும். பயம் மூச்சு முட்டச் செய்தது.

சடக்கென்று எழுந்தான் சண்முகம். வேட்டியைப் பொதிந்தாற்போல் மடித்துக் கட்டிக் கொண்டு சீட்டைத் தாண்டி வழிப்பாதைக்கு வந்தான். முலை முகடுகளை ஒரு கணம் வெறித்தான். விரைவில் நடந்து கக்கூசை அடைந்தான்.

சற்று நேரத்தில் நெஞ்சப் படபடப்பு தணிந்தது. கதவில் சிறிது கண்மூடிச் சாய்ந்து நின்று பின்பு வெளியே வந்தான். சீட்டில் உட்கார்ந்து கொண்டு கண்களை மூடினான். தலை முடியைக் காற்று அள்ளிக் கொண்டு போயிற்று. கணவிழித்தபோது மதுராந்தகம். கண்கள் காத்தின. பல் தேய்க்க ஒரே கூட்டம். பிரஷ்ஷும் பேஸ்ட்டும் நாவழிப்பானும் சோப்பும் துண்டுமாய்...

சென்னையை நெருங்க நெருங்க மனதில் ஒரு கிளர்ச்சி. தூரத்தில் தெரியத் துவங்கிய வீடுகள். சில தொழிற்சாலைகள். தாம்பரம், மாம்பலம், எழும்பூர்.

ஸ்டேஷனுக்கு பெரியப்பாவும் பெரியம்மாவும் வந்திருந்தார்கள். இருபத்தோரு பீரங்கி வெடி மரியாதை போல் தோன்றியது சண்முகத்துக்கு.

அங்கே மனிதர்கள் வேறு தினுசாய் இருந்தார்கள். எல்லோரும் சட்டை போட்டிருந்தனர். செருப்புப் போட்டிருந்தனர். நறுக்கு மீசை, சுருள் கிராப்பு வைத்திருந்தனர். ஏதோ அன்னிய தேசத்துக்கு வந்தது போல் இருந்தது. அவர்கள் பேசிய மொழி, தகர டப்பாவில் பால்

கறவை, காய்கறிக்காரியின் நீளமான வாய், கரிப்பளபளப்பில் மஞ்சள் அப்பி பெரிதாய் வைத்த குங்குமப் பொட்டு, பெரிய கொண்டைகள், கதம்பச் சூடல்கள்...

குலைகளுக்குப் பதிலாக வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் கயிற்றில் தொங்கியது.

விசில் இல்லாமல் கண்டக்டர்கள் "ரீரீய்" என்றார்கள். வசவுகள் ஒன்றுக்கும் பொருள் புரியவில்லை—கஸ்மாலம், பேஜாரு, சோமாரி, சாவுக்கிராக்கி... எந்த மொழி என்றும் தெரியவில்லை.

எல்லோரும் "மார்க்கெட்டுக்குப்" போனார்கள். "டிபன்" சாப்பிட்டார்கள். "நாஸ்டா" செய்தார்கள்.

திட்டுகள் உச்சஸ்தாயியில் வந்தன. கொடூரமான வசவுகளை யாரும் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. இருபது வயசுக்காரன் அறுபது வயசுக்காரனை 'போப்பா, வாப்பா' என்றான்.

சினிமாபோஸ்டர்கள் எல்லாம் பெரியனவாய். பக்கத்தில் போய்ப்பார்த்தால் நடிகர்கள் முகங்கள் அசிங்கமாகத் தெரிந்தன—முன்வரிசை மூலைசீட்டில் இருந்து சினிமா பார்ப்பது போல். கரடிபோல் பிளந்த வாய்கள்... கத்தியை நாட்டிக் கொண்டு, துப்பாக்கியை நீட்டிக் கொண்டு கதாநாயகர் நின்றனர். உடலுக்குப் பொருத்தமில்லாத முலைகளுடன் கதாநாயகியர் படுத்துக்கிடந்தனர்; சாய்ந்து, மல்லாந்து கதாநாயகனைப் பிடித்துக்கொண்டு தொங்கினர்—முலைமார்பிலோ முதுகிலோ அழுந்த.

ஊரில் எல்லாம் ஊர்ப்பெயரை வைத்துதான் பஸ்ஸில் ஏறுவது. இங்கு பதினொன்று ஏ, இருபத்திநாலு சி, நாப்பத்தஞ்சு பி என்றார்கள்.

பஸ் ஸ்டான்டுக்குப் பக்கத்தில் குப்பைத்தொட்டிகள் நிரம்பி அழுகி நாறின. பக்கத்தில் கோரோசனை வாசம் வீசும் கொழுப்புள்ள மாடுகள் படுத்துக் கிடந்தன.

கோயில்களும் வேறு விதமாய் இருந்தன. கேட்டறியாத தெய்வங்கள், அங்காளம்மன், மாரியம்மன், மகமாயி...

எக்கச்சக்கமான முனியாண்டி விலாஸ். எந்த நேரத்திலும் பிரியாணி ரெடி. நல்ல வேலை கிடைத்து நிறைய சம்பளம் வாங்கும்போது ஒரு நாள் கோழிப் பிரியாணி சாப்பிட வேண்டும்....

சென்னைக்கு வந்து நான்கு நாட்கள் ஆகியும் கிழக்கு மேற்கு

பிடிகிடைக்கவில்லை. திசைகள் திரும்பி இருப்பது போல... கௌடில்யா மடம் முன்னால் நின்று பஸ் பிடித்து திருவல்லிக்கேணி கடைசி ஸ்டாப்பில் இறங்கி அங்கிருந்து பொடி நடையாகப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபம். அங்கு தான் தேர்வு. பி.ஏ. தேர்வை மறுமுறை எழுதுவது போல் இருந்தது. இதென்ன விசித்திரம் என்று தெரியவில்லை.

கடைசித் தேர்வு எழுதிய அன்று பி.ஏ. தேர்வுமுடிவுகள் வந்தன. போர்டுகளில் ஒட்டப்பட்டு கட்டிடத்தைச் சுற்றிவைக்கப்பட்டிருந்தன. பி.ஏ.(பொருளாதாரம்) என்பதை இடம்கண்டு பிடிக்கவே வெகு நேரமாயிற்று. தனது கல்லூரியில் படித்த குமாரவேலு (மேத்ஸ்) தனக்கு முதல் வகுப்புவந்திருப்பதாகச் சொன்னான். மனம் தண்ணீரில் சிறகு முக்கிப் படபடத்தது. குமாரவேலுவும் சண்முகமும் தேடி பி.ஏ. (பொருளாதாரம்) கண்டு பிடித்தனர். முதல் வகுப்பை ஒரு சீவு சீவி விட்டு இரண்டாம் வகுப்பில் பார்க்கும்போது ஆர் சண்முகம் 4756 என்று பெயரும் நம்பரும் இருந்தன.

ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அதுவும் சென்னையில் நிற்கும்போது பெரியப்பா குடும்பத்தின் முன்னால் தன் மதிப்பு ஏகமாக உயர்ந்து விடும் என்ற நினைப்பில் பூரிப்பு.

குமாரவேலு வீட்டுக்கு தந்தி அடிக்கப் போவதாகச் சொன்னான். மிகுந்த கௌரவத்தோடு சண்முகம் ஒரு தந்தி கொடுத்தான். முதலில் இந்த தந்தி தரப்போகும் அதிர்ச்சியும் பிறகு மகிழ்ச்சியும் மனதில் கூத்தாய் நிகழ்ந்தன. ஓட்டலில் ஸ்வீட் வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்றான் குமாரவேலு.

குறுங்குளத்தில் ராமசாமி மகன் சண்முகத்துக்கு ஸ்வீட் என்றால் தீபாவளிக்கு வீட்டில் சுடும் அப்பம், முந்திரிக்கொத்து; அம்மன் கோயிலில் பௌர்ணமிக்கு விளம்பும் புட்டமுது. திருஞானத்தின் கடையில் எப்போதாவது போடும் உண்ணியப்பம்; நம்பிரான் விளையாட்டன்று கஞ்சித்தண்ணீரில் கலர்பொடியும் சாக்ரீனும் போட்டுக் கலக்கி உறையவைத்து துண்டு துண்டாக நறுக்கி காலணாவுக்கு ஒரு துண்டு என விற்கப்படும் அல்வா. ஸ்கூல்டே அல்லது காலேஜ்டே அன்றுதான் ஸ்வீட் என்று பேசப்படுகிற லட்டு அல்லது மைசூர்ப்பாகு பார்ப்பது. கடுக்கரை ஆச்சியின் மூத்தமகன் மறுவீட்டுக்கு வந்த போளியை திறக்காமல் சில நாட்கள் வைத்திருந்து அது பூசணம் பூத்தபின் அண்டை அசலாருக்கு இரண்டு கையாலும் வாரிவாரி வழங்கியபோது தின்றது போளி.

கல்லூரியில் படித்தகாலத்திலும் ஓட்டலில் ஸ்வீட் வாங்கித் தின்ன ஆசை ஏற்பட்டாலும் முடிவெடுக்கும்போது பெரும்பாலும் இரண்டு சாதா தோசையாகவே இருந்திருக்கிறது. மனசு கொஞ்சும் திடமாக இருந்தால் பூரிகிழங்கு அல்லது சப்பாத்தி குருமா.

மற்றபடி ஜாங்கிரி, பாஸந்தி, பாதம்கீர், குலோப் ஜாமுன், ரஸகுல்லா என்பவை குமுதம், ஆனந்தவிகடன் கதைகளிலோ தொடர்களிலோ படிப்பதுதான்.

குமாரவேலுவோடு ஓட்டலுக்குப் போகும்போது இதுவரை தின்றிராத ஸ்வீட் தின்னவேண்டும் என்று தோன்றியது. குமார வேலுவுக்கு எல்லாம் தெரியும். ஸ்கூட்டரில் கல்லூரிக்கு வருபவனுக்கு இதெல்லாம் தெரியாமல் இருக்குமா?

அந்த ஓட்டல் பிரமாண்டமாக இருந்தது. சர்வர்கள் எல்லோரும் சூட் போட்டிருந்தார்கள். தொப்பி வைத்திருந்தார்கள். சுத்தமாக இருந்தார்கள்.

தம்ளருக்குள் விரல்களை விட்டு எண்ணெய் மிதக்க தண்ணீர் கொண்டு வரவில்லை. "ரெண்டு ஸ்ஸாதா ரெண்டு" என்று ஆளைக் கேவலப்படுத்துவது போல் சத்தம் போடவில்லை.

நிறமற்ற கண்ணாடித் தம்ளர்களில் 'சுரீல்' என ஐஸ்வாட்டர். தலையை மறைக்கும் உயரமும் நல்ல அகலமும் கொண்டு குஷன் சீட்டுக்களில் இருந்து ஐஸ்வாட்டர் குடிப்பது கூட சுகம்தான். சர்வர் வந்து நின்று குமாரவேலுவிடம்தான் என்ன என்று கேட்டான். அந்தக் களை இவர்களுக்குத் தெரியும் போல. தன்னுடைய உடையும் தோற்றமும் தலை சீவலும் இந்த மாதிரி ஓட்டலில் வந்து ஆர்டர் கொடுக்க லாயக்கற்றது என எண்ணினான் போல.

சண்முகம் குமாரவேலுவையே பார்க்க, குமாரவேலு "இரண்டு மைசூர் பாக்" என்றான்.

பீங்கான் தட்டத்தின் மீது நல்ல வேகாத செங்கல் நிறத்தில் மைசூர்ப்பாகு வந்தது. இரண்டு எவர்சில்வர் கரண்டிகள். குமாரவேலு மிகுந்த சாமர்த்தியத்துடன் ஸ்பூனைப் பிடித்து மைசூர்ப்பாகை வெட்டி வாயில் போட்டான். சண்முகத்துக்கு ஒரு வினாடி யோசனையாக இருந்தது. சும்மா கையில் எடுத்து கடித்தே தின்னலாமா என. பின்னே இவ்வளவு பெரிய ஓட்டலுக்குச் செய்யும் அவமானமாக இருக்கும் என்றெண்ணி மிகுந்த கண்ணியத்துடன் ஸ்பூனை எடுத்து மைசூர் பாகின்

நடு முதுகில் வைத்து ஒரு அழுத்து அழுத்தினான். "ணங்" என்று ஸ்பூன் பீங்கான் தட்டத்தில் மோதிய சத்தமும் விசுக்கென்று பக்கத்துக்கொன்றாய் துண்டுகள் பறந்த ஓசையும்–

வெட்கமாக இருந்தது.

நல்ல வேளையாக ஓட்டலில் அதிகக் கூட்டமில்லை. குமாரவேலு ஒரு மாதிரியாகப் பார்த்தான். தன் சாதிபற்றிய வசவை மனதில் சொல்லிக் கூடப் பார்த்திருப்பான். ஊருக்குப் போனதும் முதல் வேளையாக நண்பர்கள் எல்லோரிடமும் சொல்லித் திரிவான்.

சண்முகத்தின் முழியைப் பார்த்தே தெரிந்து கொண்டு சர்வர் ஒரு குறுஞ்சிரிப்புடன் வேறொன்றை எடுத்து வந்தான்.

குமாரவேலுதான் பில் கொடுத்தானானதால் எத்தனை மைசூர்பாகுக்குப் பில் போட்டான் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

குமாரவேலுவுக்கு பஸ் வந்து, அவன் ஏறிப்போன பின்பு கொஞ்சம் சுரத்து வந்தது. மெயிலில் பி.ஏ.ரிசல்ட் போட்டிருந்தார்கள். பெரியப்பா வீட்டில் காட்டலாம் என்று ஒரு காப்பி வாங்கி நம்பரை சரிபார்த்துக் கொண்டான். கொஞ்சம் உற்சாகம் திரும்பி வந்தது. பெரியப்பா வீட்டில் ஸ்வீட் கேட்பார்கள் என்று தோன்றியது. எனவே குறைந்த விலையுள்ள சாக்லேட் டப்பா ஒன்று வாங்கிக்கொண்டு பதிமூன்றாம் நம்பர் பஸ்ஸுக்கு காத்து நின்றான்.

தலையாணி உறைபோல் சட்டையும் லாங்சும் அந்த நகரில் வழக்கத்தில் இல்லாத தலைமுடிச் சீவலுமாக காட்டான் போலத் தோற்ற மளித்தாலும் தானொரு பி.ஏ.க்காரன் அல்லவா என்று சிறிதாய் ஒரு பெருமிதம் தலைதூக்கியது. பஸ்ஸில் இருந்த மாணவிகள் எவரையும் சட்டை செய்யவில்லை என்பதுபோல் தீவிரமாய் மெயில் பேப்பரை மடித்து வைத்து படித்துக் கொண்டிருந்தான்.

ஊருக்கு, போன வருடம் அண்ணன் வந்திருந்தபோது இந்துப்பேப்பரைக் கையில் தந்து ஒரு பாராவைப் படிக்கச் சொன்னது ஞாபகம் வந்தது. அது ஒரு அவமதிப்பு என்பது அப்போது உறைக்கவில்லை. ரொம்பத் தோரணையோடு– ஆங்கிலப் பேராசிரியர் இந்திரன் உச்சரிப்பதுபோல்–படித்தான். அண்ணனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. ஒரு வேளை குறுங்குளத்தான் பி.ஏ. மெட்ராஸ்காரன் பத்தாம் கிளாஸைவிடக் கேவலமானது என்று

நினைத்தான் போலிருக்கிறது. அதன்பிறகு அண்ணனிடம் பேசுவது கூடுதலும் ஆங்கிலம் கலந்துதான்.

"நாகர்கோயிலுக்கு பஸ் எப்ப?"

"மார்னிங் நைன் தர்டி. டென்னோ கிளாக் ரீச்சாகும்...."

– என்ற பாணியில்.

சென்னை வந்திருந்த இந்த நாட்களிலும் அப்படித்தான். இதற்காக சில விசேட வார்த்தைகள் பயின்று வைத்திருந்தான் சண்முகம்.

சிங்ரனைஸ், இடியோஸிங்ரஸி, என் தூஸியாஸம் என மினர்வா கைடில் கண்ட சில பிரயோகங்கள். ஹார்ட் நட் டு கிராக், கீப் யுவர் ஃபிங்கர்ஸ் கிராஸ்டு என...

ஆனால் அண்ணன் அதற்கும் மேலே ஒரு படி எட்டி விடுகிறான்.

"சண்முகம், பஸ்டாண்ட் அண்ட போய் ஒன் பாக்கெட் வில்ஸ் வாங்கினுவாப்பா...."

சிகரெட் வாங்கிக்கொண்டு கொடுப்பதில் கௌரவக் குறைச்சல் ஒன்றும் இல்லை. 'ஆப்டர் ஆல் பிரதர்' ஆனால் ஆபீஸுக்குப் போக ஷூ கட்டிக் கொண்டிருக்கும்போது, பெண்டாட்டியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தன்னை விரட்டுவது ஒரு மாதிரி இருந்தது. போகும் வழியில் அவரே வாங்கிக் கொள்ளலாம். இது மனைவியிடம் ஒரு பி.ஏ.க் காரனை விரட்டும் கம்பீரம் காட்டுவதற்காக இருக்கலாம். இந்தப் பந்தயத்தில் தான் வெல்ல முடியாது என்று சண்முகத்துக்குத் தோன்றியது.

என்னவோ குடும்பத்தில் 'கசமுசா' இருந்தது.

அன்று டாக்ஸியில் வரும்போது பெரியம்மா பெரியப்பாவிடம் பேசிய பேச்சில் சில தடயங்கள் கிடைத்தன. மருமகள் மாமியார் உரையாடலில், பெரியப்பா மருமகள் முதுகுக்குப் பின்னால் நாடக பாணியில் சில அபிநயங்கள் செய்ததில், மகன் யாரிடமும் அதிகம் பேசாமல் உர்ரென்று வந்து போனதில், மீதித் தடயங்கள் கிடைத்தன.

மாடியில் அண்ணன், அண்ணி தங்க தனியாக அறை இருந்தது. இருவரும் வேலைக்குப்போனார்கள். அவர்கள் சென்றபின் பெரியப்பா பெரியம்மா அன்றைய நடந்த சங்கதிகள் பற்றி விரிவான திறனாய்வு செய்தனர்.

முந்தின நாள் இரவு வீட்டில் சமைத்து வைத்ததைச் சாப்பிடாமல் இரண்டு பேரும் இரவுக் காட்சிக்கு கிளம்பிப் போனது...

போனவாரம் மாடி அறையைப் பெருக்கப் போனபோது அல்வா வாங்கித்தின்ற ஆயில் பேப்பர் கிடந்தது.... நூறு ரூபாய் மாற்றி மீதி வைத்த சில்லறையில் இருபது ரூபாய் குறைந்தது...

இதெல்லாம் எல்லோர் வீட்டிலும் நடப்பதுதான். இரண்டு தினங்கள் முன்பு மாடிக்குத் தன்னை அழைத்து "வீட்டிலே என்னைப் பத்தி என்னா பேசிக்கிறாங்கோ?" என்று கேட்ட போது 'சீ' என்றிருந்தது.

அதென்னவோ சண்முகம் பெரியப்பா பக்கம் 'சைடு' எடுத்திருந்தான். ஏற்கனவே ஊரில் பேசிப் பழகி அவர்மீது தனி மரியாதை இருந்தது. அது இங்கு வந்தபிறகு வெகுவாகப் படர்ந் திருந்தது. தோழன்போல அவர் பாவிப்பது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பெரியப்பாவுக்கு திட்டமிட்ட அலுவலக நேரங்கள் கிடையாது. எல்.ஐ.சி. பாலிஸி விவகாரங்கள் பெரும்பாலும் நடிக நடிகையரோடு, தயாரிப்பாளரோடு, சில டெக்னீஷியன்களோடு என்பதால்-பாலிஸிக்கு கான்வாஸ் செய்ய, பிரிமியம் வசூலிக்க, ரசீது கொடுக்க என்று பதினோரு மணிக்குமேல் புறப்பட்டுப் போனார். ஊரில் இருந்து வந்த அன்றும், சனி ஞாயிறிலும் அவனையும் கூட அழைத்துப் போனார்.

சகஸ்ரநாமம், எம்.என்.ராஜம், டி.எஸ்.பாலையா என்று பார்த்த உடன் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களோடு பெரியப்பா பேசிக்கொண்டிருக்கையில் அவன் வாயைப் பிளந்து கொண்டு பார்த்து நின்றான்.

விஜயாவோ வாஹினியோ – ஒரு ஸ்டுடியோவுக்குப் போனார்கள்.

"அண்ணே வாங்கோ... பாத்து ரொம்ப நாளாச்சு!"

"உள்ளே என்னா தர்பார் சீனா?"

"அண்ணே இன்னும் அந்தக் காலத்திலேயே இருக்கிறாரு... அதெல்லாம் இப்ப மாறிப்போச்சு..."

"சின்னவரு இருக்காரா?"

"இன்னிக்கு ஜெமினியிலே ஷூட்டிங்...."

தம்பியாரு என்று கேட்டவர்களுக்கு தம்பி மகன் என்றும், பி.ஏ.என்றும், இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர் தேர்வு எழுத

வந்திருப்பவன் என்றும் சொன்னது சண்முகத்துக்கு மிகவும் பிடித்திருந்தது. இன்கம்டாக்ஸ் என்றதும் சிலர் பயந்தது போல் நடித்தது பெரிய கௌரவமாகப்பட்டது.

மறுநாள் தேர்வு இருந்தாலும் கூட இரவு சாப்பிட்ட பிறகு எல்லோரும் தூங்கும்போது வாசல் திண்ணையில் அமர்ந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார் பெரியப்பா.

சினிமா உலகின் சிறுமைகள், கலிங்கத்துப்பரணி... மிக இயல்புடன் சண்முகம் கேட்டான்—

"பெரியப்பா சின்ன வயசிலே யாரையாவது காதலிச்சிருக் கேளா?"

சற்று நேரம் பொறுத்து சொன்னார்—

"ஆமாண்டா... கிருஷ்ணன் கோயில்லே நம்ம வீட்டுக்கு எதுத்த வீட்டிலே ஒரு பொண்ணு இருந்திச்சு... செவினிப் பிள்ளை செவினிப்பிள்ளைண்ணு.. கறுப்புண்ணாலும் நல்ல லட்சணம்... நல்ல சொடி... பின்னால அதுக்கு கல்யாணம் ஆயிப்போச்சு... பொறவுதான் இவளை லவ் பண்ணது...."

"நல்லாருக்கு... அப்பாவும் மகனும் பேச்சு" — பெரியம்மாவின் குரல், எப்போது வந்தாள் என்று தெரியவில்லை.

ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் ஸ்டாப்பில் இறங்கிய சண்முகம் நேரே பெரியப்பா வீடிருந்த தெருவில் நடந்தான். சூரியன் நன்றாகத் தாழ்ந்து இருந்தான். இருள்வதற்கு முன்பான மஞ்சள் பூப்பு. காம்பவுண்டில் இருந்த மாங்கன்றின் மூட்டில் இருள் இறங்கி இருந்தது. மொட்டை மாடியில் அண்ணனும் மதனியும் நின்றிருந்தார்கள்.

அவனைப் பார்த்து அண்ணன் சிரித்தார். அதில் இளக்காரமோ கேலியோ இருந்தது.

"என்ன சண்முகம்? இன்னிக்கு லேட்டாயிடுச்சா?"

"ஆமா... ரிசல்ட் போட்டிருந்தா...."

"நம்பர் இருக்குதா?"

"செகின்ட் கிளாஸ்"

"கன்கிராஜுலேஷன்ஸ்... அதென்ன மெயிலா? மேல கொண்டு வா..."

வீட்டினுள் எல்லோரும் இருந்தார்கள். பெரியப்பா, பெரியம்மா, கல்லூரியில் இருந்து ஏற்கெனவே வந்திருந்த அக்கா, தங்கச்சி....

பெரியப்பாவிடம் சேதியைச் சொன்னான். எல்லோரும் சந்தோஷம் கொண்டனர். "நீ தாம்பா நம்ம குடும்பத்திலே முதல் பட்டதாரி" என்றார் பெரியப்பா. மிட்டாய் டப்பாவைத் திறந்து சாக்லேட் கொடுத்தான். பெரியம்மா கொண்டு தந்த காப்பியைக் குடித்துக் கொண்டு இருக்கையில் ஏதோ வேலையாக மதனி கீழே இறங்கி வந்தாள்.

பேச்சு நல்ல சுவாரசியத்தில் இருந்தது.

"அப்பிடி கேட்ட உடனே ஒண்ணும் பாலிசி எடுத்திர மாட்டாங்க.... ஆடிக் கறக்கணும்... பாடிக் கறக்கணும்... அடித்துக் கறக்கணும்... பெரிய செட்டியாரு ரொம்ப நாளா ஒரு லட்சம் ஒரு லட்சம்ணு சொல்லீட்டிருந்தார். மூணு வருஷம் போக்குக் காட்டினார்.

ஒன்றே செய்க அதை நன்றே செய்க

நன்றே செய்க அதை இன்றே செய்க

இன்றே செய்க அது இன்ஷ்யூர் செய்க

இன்ஷ்யூர் செய்க அதை என்னிடம் செய்க

என்று நம்ம பாட்டு கொஞ்சமெல்லாம் கேட்டிருக்கார்... வித்தை ஒண்ணும் பலிக்கல்லே... கடைசியிலே திருமந்திரம் ஒண்ணு அவுத்துவுட்டேன்–

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்

மடப்பிணை யாளொடு மந்தனம் கொண்டார்

இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்

கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே

என்று. விளக்கமெல்லாம் கேட்டார். நீங்க கட்ன பாட்டா? ரொம்ப நல்லாருக்கு... அப்டீண்ணுட்டு போயிட்டார்... எனக்கு ரொம்ப ஏமாத்தமாப் போச்சு... எனக்கு ஏமாத்தமானாலும் எல்.ஐ.சிக்கு லட்ச ரூபாய் லாபம்... மூணாம் மாசம் செட்டியாரு மாரடைப்பிலே போய்ட்டார்..."

மதனி மீண்டும் மாடிக்குப் போகும் போது மெயில் பேப்பரையும் சாக்லேட்டையும் தந்து அண்ணனிடமும் கொடுக்கும்படி சொன்னான்

சண்முகம்.

பெரியப்பா சொன்ன கதைக்குச் சிரித்துக் கொண்டிருந்த போது தரையில் பளார் என பேப்பர் வந்து விழுந்த சத்தம். நிமிர்ந்து பார்க்கையில் மாடிப் படிக்கட்டில் நின்றிருந்த அண்ணன் கையில் இருந்த சாக்லேட்டுகள் மார்பில் பட்டுச் சிதறின.

"நீயே தின்னுடா பொறுக்கி" என்றொரு உறுமல் கேட்டது.

சண்முகம் பிராந்து அடித்தது போல் சற்று நேரம் உட்கார்ந் திருந்தான். உதடுகள் ஒரு விதமாய் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டுக் கோணின. கண்களில் சாம்பல் பறந்து விழுந்தது போல் வெள்ளை விழிகளைப் பக்கவாடுகளில் உருட்டி கண்ணீரைத் தடுக்க முயன்றான். வாயை இலேசாகத் திறந்து இரண்டு மூன்று முறை மூச்சை வெளி யேற்றினான்.

அங்கு அமர்ந்திருந்த யாரும் அனங்கவில்லை. தங்கச்சி திகைத்தாற்போன்று அவன் முகத்தைப்பார்த்துக் கொண்டிருந்தாள். வீக்லி படிப்பதுபோல் மூத்தவள் முகத்தை மறைத்துக் கொண்டாள். காப்பித் தம்ளர்களைப் பொறுக்கிப்போன வேகத்தில் பெரியம்மாவின் கோபம் தெறித்தது.

பெரியப்பா மெலிதாகச் சிரித்தார்–உதடு குவித்து ஒரு விதமாய் ஊதினார்.

"ஒரு குறள் கேளுப்பா சண்முகம்...

புத்தகத்தால் அடித்துப்போ டா பொறுக்கி என்றான்

மத்தகத்தில் மூளையில்லா மண்டு"

இலேசாக வந்த சிரிப்பில் சிலதுளி அவமானத் தெறிப்பு.

சற்று வெளியேபோய் வந்தால் என்ன? அன்றைய உற்சாகமே அவிந்துவிட்டது. அந்த மகிழ்ச்சி திரும்பக்கிட்டா விட்டாலும் போகட்டும். இயல்பான முகம் வந்தால்போதும் என்று தோன்றியது.

இதில் தன்தவறு என்ன என்று யோசித்துப் பார்த்தான்–கேட்ட உடன் பேப்பர் கொண்டு போய்க் கொடுக்காதது? நேரில்போய் மிட்டாய் தராமல் மதனிமூலம் அனுப்பியது?

எதுவானாலும் திட்டமிட்டுச் செய்ததில்லை. அறியாமை காரணமாக அல்லது ஒரு உற்சாகத்தில் இவ்வளவு தூரம் எட்டி யோசியாமல் போனது. அதற்காக இந்த அவமானம் வேண்டாமாக

இருந்தது.

"விசாலம் காப்பிக்கொட்டை என்னமோ வாங்கணும்னு சொன்னியே" என்றார் பெரியப்பா.

"ஆமா... சக்கரையும் ஆகிப்போச்சு..."

இடதுகையில் சுருட்டி மடக்கிய துணிப்பையை வைத்துக் கொண்டு பெரியப்பாவுடன் வெளியே நடப்பது சற்றே ஆறுதலாக இருந்தது. வழி நெடுக என்னவெல்லாமோ பேசிக் கொண்டு வந்தார். எல்லாம் அண்ணன் காரணமாய் ஏற்பட்ட ஏமாற்றங்கள், சிறுமைகள், சிக்கல்கள்...

அன்று இரவு சாப்பிட்ட பிறகும் நெடுநேரம் பேச்சுதான். பேச்சினூடே சொன்னார்பெரியப்பா–

"தூக்கம் வருதுண்ணா போய்த் தூங்குப்பா... இப்பத் தூங்கினா உன் டைம், இல்லேண்ணா அன்டைம்"

தூங்கப் பிடிக்கவில்லை.

முன்னிரவு முடிந்ததும் காற்று குளிர்ந்து வீசியது. கொசுக்களின் கும்மியடிகூடத் தணிந்து போனது. சால்வை ஒன்றால் பொதிந்து மூடியபடி பெரியப்பா சொன்னார்–

"வா ரோட்டிலே போயி ஒரு டீ சாப்பிட்டுவிட்டு வரலாம்."

முன்கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தார்கள். தெருவில் ஆள் நடமாட்டம் இல்லை. ரோட்டில் உதிரிச் சந்தடிகள். டீக்கடைக்காரன் பெரியப்பாவுக்கு முகமன் சொன்னான். பாலையா அண்ணன் இப்பத்தான் எழுந்து போனார் என்றான். கரி பிடித்திருந்த கடிகாரத்தில் மணி இரண்டு அடித்தது.

மறுபடியும் வீட்டு வாசலில் அமர்ந்தனர்.

"அம்மா போனதுக்கப்புறம் அய்யா சித்தியைக் கெட்டினாரு... அண்ணனும் நானும் கிருஷ்ணன்கோயில் பெரியம்மை வீட்டிலேதான் நிப்போம். அய்யா வெள்ளிக் கிழமை சாயந்திரம் வந்து கூட்டிக்கிட்டுப் போவாரு... வீட்டுக்குப்போனாலும் சித்தி மூஞ்சியை மோரையை இழுப்பா...அய்யா சில சமயம் பாத்துக்கிட்டு பேசாம இருப்பாரு.. சில சமயம் சித்தியைத் தூக்கிப் போட்டு வெள்ளாவிமுறை வைப்பாரு... அப்பம் உங்க அப்பன் ராமசாமி கைப்பிள்ளை. திரும்பி கிருஷ்ணன் கோயிலுக்கு வந்தா பெரியம்மை கேப்பா–'சோறு தந்தாளாலே

மக்கா'ண்ணு. சில சமயம் அந்தப் பக்கம் வந்தா அய்யா எட்டிப் பாப்பாரு. வரச்சிலே முக்குக் கடை காரச்சேவு வாங்கீட்டு வருவாரு. சிலசமயம் கையிலே அரைச் சக்கரம் ஒரு சக்கரம் தருவாரு.... ஆனா அய்யா வந்த உடனே பெரியம்மை ஆரம்பிச்சிருவா ராமாயணம். சித்தியைத் திட்டி குட்டையிலே வாரீருவா. அய்யாவைப் பாக்க பாவமா இருக்கும். பொறவுதான் நான் நாடகக் கம்பனியிலே சேர்ந்தேன்.

திருநெல்வேலி பக்கம் கம்பனி ஆடினா எட்டிப்பாத்துக்கிட்டுப் போவேன்.

ஒருக்க திருவந்திரத்திலே கம்பனி ஆடிட்டிருந்தது. ஒரு நாள் லீவு கிடைச்சு கரிக்கேசு வண்டி பிடிச்சு நாகர்கோயில் வந்து புத்தேரி குளத்தாங்கரையோடு நடந்து குறுங்குளம் விலக்கு வரச்சிலே விளக்கு வச்சாச்சு. கையிலே திரும்பிப்போகத்தான் காசு இருந்தது. காசொண்ணும் கொண்டாராம வீட்டுக்குப் போனா சித்தி என்ன சொல்வாளோண்ணு பயம். ரொம்ப நேரம் பாலக்கலுங்கிலே படுத்துக் கிடந்தேன். நிலா நல்ல உயந்திட்டு... கூட்டமா சந்தவண்டி போகச்சிலே அதிலே ஏறித் திரும்பீட்டேன்.

அடுத்த முறை ஊருக்குப் போவதுக்குள்ளே அய்யா போய்ச் சேந்தாச்சு...

அய்யாக்கு பழனி திருப்பரங்குன்றம் எல்லாம் போய்ப் பாக்கணும்ணு ஆசை. ஒருக்க கூட்டீட்டுப் போணும்ணு நினைச் சிருந்தேன். முடியாமப் போச்சு..."

நாற்பதாண்டுப்பழைய கதையானாலும் பெரியப்பா நெஞ்சின் சோகம் இன்னும் புதியதாகவே இருந்தது. ஒரு வேளை இப்போதுதான் பெட்டகத்தைத் திறந்து பார்க்கிறாரோ என்னவோ?

எத்தனையோ சொல்லிக் கொண்டே போனார்.

வாழ்க்கையை எல்லாக் கோணங்களிலும் பெரியப்பா வாழ்ந்திருப்பதாகத் தெரிந்தது. அவர் மீது மரியாதை அதிகரித்தது. பெருமிதம் தோன்றியது, பொறாமையாகக்கூட இருந்தது.

விடிந்துகொண்டு வந்தது. விழித்துக்கொண்டு வந்தது நகரம். அரவங்கள் சில கேட்டன. சைக்கிள் மணிகள். பால்காரன் வந்தான். பால்வாங்க பாத்திரம் எடுக்கப் போனபோது பெரியம்மா விழித்துக் கொண்டாள்.

"நீங்க ராத்திரி பூராத் தூங்கலியா?"

வெந்நீர் பானையில் தண்ணீர் கொண்டு வந்து நிறைத்தான்

சண்முகம். பைப்புத் தண்ணீர் பிடித்துக்கொண்டு வந்து பானையில் நிரப்பினான்.

அங்கு எல்லோருக்கும் வென்னீர்க் குளியல். சண்முகத்துக்கு பச்கெட்டுத் தண்ணீரில் குளித்தால் குளித்ததுபோல் இல்லை. கிணற்றடியில் போய் நின்று கொண்டு ஏழெட்டு வாளி தண்ணீர் கோரிவிட்டுக் குளித்தான். கண் எரிச்சல் அமர்ந்தது. மனதில் புத்துணர்வு துளிர்த்தது. தலை துவட்டி வருகையில் பெரியப்பா கட்டில் மீது அமர்ந்து காப்பி குடித்துக் கொண்டிருந்தார்.

"லே சம்முவம்.. குளிக்கப் போச்சிலே அந்த மாட்டையும் கொண்டு போய் தேச்சிக் களுவிக் கொண்டாரப் பிடாதாலே" என நக்கல் செய்தார்.

யூனிவர்சிடிக்குப் போய் டிகிரி சர்டிபிகேட் இன் ஆப்ஸன் ஷியா வாங்குவதற்கு பாரம் நிரப்பி ஸ்டேட் பேங்க செலானும் வைத்துக் கொடுத்த பிறகு எக்மோருக்குப் போய் மறு நாளைக்கு டிக்கட் ரிசர்வ் செய்துவிட்டு வந்தான்.

சொல்லாமல் போய் டிக்கட் வாங்கி வந்தது பெரியப்பாவுக்குப் பிடிக்கவில்லை.

எல்லோரிடமும், சுவரிடம் சொல்வது போல் அண்ணனிடமும் கூட சொல்லிக் கொண்டுதான் புறப்பட்டான்.

வழியனுப்ப வந்தபோது பெரியம்மா சொன்னாள், "இங்கே நடந்த சமாச்சாரம் ஒண்ணும் ஊரிலே போய்ச் சொல்ல வேண்டாம்" என்று.

ஊரில் இதுபற்றி யாரிடமும் அவன் சொல்லவும் இல்லை. பிறகு இந்த மூன்று ஆண்டுகளில் அண்ணன் ஒரு முறையும் பெரியப்பா இரண்டு முறையும் வந்துவிட்டுப் போனார்கள். அவன் எல்லோரிடமும் இயல்பாகவே பழகினான். சென்னை திரும்பும்போது கடைசியாக ஞாபக மூட்டியும் இதுநாள் வரை ஒன்றும் நடந்தபாடில்லை. எங்கு என்ன தவறு நேர்ந்தது என்று தெரியவில்லை.

அவரால் முடியாது என்பதை நம்ப முடியவில்லை. பிறகு செய்யக்கூடாது என்பதற்கு என்னதான் காரணங்கள்?

ஒரு சிறு சம்பவம் லேசாக நெருடியது.

அறுபத்தேழு தேர்தலில் பெரியப்பா தொற்றிக் கொண்டிருந்த கட்சி அமோக விளைச்சலைப் பெற்றது.

தொண்டைத் தண்ணீர் வற்ற வற்ற "வாக்காளப் பெருமக்களே"

என ஊர் ஊராகக் கத்தி ஓய்ந்தவர்கள் ஆட்சி கிடைத்தபின் ஓராண்டு வெற்றி விழாக் கூவல்களில் ஈடுபட்டனர். இரண்டு ஆண்டுகள் ஓடியபிறகு ஆங்காங்கே முனகல்கள் கேட்டன.

அப்போது ஒரு முறை பெரியப்பா வந்திருந்தார். பேச்சு வாக்கில் பெரியப்பாவிடம் சொன்னான் சண்முகம். "தேர்தல் கூட்டங்கள்ல எல்லாம் ரொம்பச் சத்தம் போட்டுப் பேசினியோ... 'பூண்டி வாண்டையார், வடபாதிமங்கலம், மூப்பனார் வீட்டுக் குழந்தைகள் மட்டும்தான் டாக்டர் ஆகலாமா? குப்பன் மகனும் சுப்பன் மகளும் டாக்டர் ஆகக் கூடாதா?" என்றெல்லாம்...

இப்பம் என்ன ஆச்சு? சுப்பன் மகளுக்கும் குப்பன் மகனுக்கும் சீட்டுக்கு முப்பதினாயிரம் கொடுக்க முடியுமா?"

பெரியப்பா சொன்னார்-

"அதெல்லாம் சும்மா சொல்றதுப்பா... ஏதோ ஒண்ணு ரெண்டு கேஸ் இப்படி அப்படி இருக்கும்...."

"பின்னே எப்பிடி நம்மூரு எம்.எல்.ஏ. ரெண்டு வருசத்திலே ஒரு ரைஸ்மில்லு, மூணு டாக்சி, பெரிய கொட்டாரம் போல வீடு. துவரங்காட்டிலே சினிமா தியேட்டர் கட்டினாரு? உங்களுக்கே தெரியும் எலக்ஷெனுக்கு முந்தி அந்தாளுக்கு ரெண்டாயிரம் ரூபாயிலே ஈடு உள்ள வீடும் நானூறு ரூவா சம்பளத்திலே மலேரியா டிபார்ட்மெண்டிலே வேலையும்தான் உண்டும்ணு... இது எப்படி முடிஞ்சு?"

"காங்கிரஸ்காரங்களும் தான் செய்தாங்க..."

"இது என்ன பேச்சு பெரியப்பா? குஞ்ஞன் நாடார் செய்தாரா? டி.எஸ்.ராமசாமிப்பிள்ளை செய்தாரா? நதானியல், நேசமணி செய்தாரா? சரி! காங்கிரஸ்காரங்க செய்தாண்ணே வச்சுக்கிடலாம்... அப்பம் நீங்களும் காங்கிரஸ்காரங்க மாதிரிதானா?"

அன்று பூராவும் பெரியப்பா ஏதும் பேசாமல் யோசித்துக் கொண்டே இருந்தார்.

ஒரு வேளை அது காரணமாக இருக்கலாம்.

ஆனால் அப்பாவுக்கு இன்னும் நம்பிக்கை இருப்பது விசேடம் தான்.

* * *

## மூன்று

மருமகன் யோகம் கோழி தோல் முட்டை இட்டது போல், நமக்கு என்று வரும்போது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தாலும் கிடைக்காமற் போய்விடுகிறது.

தோவாளை பஞ்சாயத்து ஒன்றியத்தில் தற்காலிக வேலை ஒன்று காலியாயிற்று. யாரோ மகப்பேறு விடுமுறையில் போகிறார்களாம். இரண்டு மாத வேலை என்றாலும் ஆறு மாதங்கள்வரை நீடிக்கும் என்றார்கள். சுமார் முந்நூற்றறுபது ரூபாய் சம்பளம் கிடைக்கும். அந்தத் தாலுக்கா பூராவும் வேலையில்லாதவன் பேச்சாக இதுவே இருந்தது. எம்.எல்.ஏ. மூலமும் மற்ற மற்றப் பிரமுகர் மூலமும் பலபேர் முயற்சி செய்வதாகத் தெரிந்தது.

ஒரு நாள் பேச்சுவாக்கில் மாடசாமி அண்ணனிடம் இதைச் சொன்னான், சண்முகம்.

யூனியன் பிரசிடென்டும் மாடசாமி அண்ணனும் ஹைஸ்கூலில் ஒன்றாகப் படித்தவர்கள். கையில் கிடந்த மோதிரத்தை விற்று மாடசாமி அண்ணன் பெரியார் கூட்டம் போட்டபோது அதே திடலில் ஒரு மூலையில் தற்காலிகமாக சுடலைமாடன் பீடம் போட்டு கொடை கழித்தவர் யூனியன் பிரசிடென்ட்.

காற்று அடித்தபோது கட்சி மாறி இப்போது கொஞ்ச காலமாக இந்திரப் பதவி. இதெல்லாம் மாடசாமி அண்ணன் பலமுறை சொல்லி நகைத்ததுண்டு.

ஒரு நாள் சாயங்காலம் பாலக்கலுங்கில் பேசிக்கொண்டிருந்த போது மாடசாமி அண்ணன் கூட்டிக் கொண்டு போனார். நடந்தேதான் போனார்கள். மாடசாமி அண்ணன் சொன்னார்–

"உன்னைக் கருதித்தான் வாரேன் பாத்துக்கோ... இல்லேண்ணா நாய்க்கு பெறந்தபயக்க மொகத்திலே முளிக்க நீதம் கிடையாது. பத்து

வருசத்துக்கு முந்தி இவன் ஆமவடை சுக்குக்காப்பி வக்கீலு... இப்பம் பெரியதலைவரு... மயிரு... மந்திரி வந்தா இவுரு வீட்டிலேதான் தங்குவாரு... இவுரு யூனியன் பிரசிடென்ட்டா செயிச்ச உடனே இங்கு நம்ம பிள்ளையோ ஒரு கூட்டம் போட்டாளே... என்னையும் பேசச் சொன்னா... நம்ம விதியைப் பாரு... பெரியாரையும் அண்ணாத் துரையையும் பாராட்டிப் பேசிக்கிட்டு இப்பம் பண்ணி, நாயி எல்லாத்தையும் பாராட்ட வேண்டியிருக்கு."

பிரசிடென்ட் வீட்டில் மாடசாமி அண்ணனுக்கு பெரிய வரவேற்பாக இருந்தது. காப்பி எல்லாம் கொடுத்தார்கள். உங்களுக்கு இல்லாமலா என்று தெம்பூட்டினார். சண்முகத்தின் பெயர் முகவரி எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டார். ஆனால் கதைதான் பாஸாகவில்லை. கடைசியிலே மூணுமாசச் சம்பளம் அன்பளிப்பா கொடுத்த மாத்தால் பண்ணையார் மகனுக்குத்தான் வேலை கிடைத்தது. அப்பாவிடம் இருந்து இதற்கு எங்கே பணம் பெயரும்?

அயர்ந்து போய் இருந்த போதுதான் பம்பாயில் இருந்த ஐயர் ரொம்ப நாட்களுக்குப் பிறகு நாகர்கோயில் வந்தார்.

ஐயருக்கு நாகர்கோயிலில் பெரிய வீடு. தெருவில் இருந்து நான்கடி உயரத்தில் ஐந்தடி அகலத்தில் பெரிய கல்படிப்புரை. உள்ளே வீடு நீளமாகப் போய்க்கொண்டே இருந்தது.

பாட்ட நெல் கொண்டு சிலசமயம் அவர் வீட்டுக்குப் போயிருக்கிறான் சண்முகம்.

ஆறேகாலடி உயரத்தில் மஞ்சள் நிறத்தில் ஐயரின் மாமா, பெரியசாமி, இருப்பார். பதினைந்து கோட்டை நெல் கொண்ட வண்டியை வீட்டு நடையில் அவிழ்த்ததும், "அவல் கொண்டு வந்தாயாடா?" என்றே முதலில் கேட்பார். முக்குறுணி அவல் கொண்ட குட்டிச் சாக்கை வீட்டினுள் கொண்டு வைக்க வேண்டும். தலை வேட்டியை அவிழ்த்து கையில் எடுத்துக் கொண்டு தரையில் உட்கார்ந்த பிறகு "சாமி, பொடி எடுங்கோ" என்பார் அப்பா.

பெரியசாமி ரொம்பக் கறார். அறுபதுக்கு மேல் வயதிருக்கும். அவர் வயதுக்குரிய ஊளைச்சதை கிடையாது. கூனல் கிடையாது. இன்னும் ஒரு பல் கூட ஆடவில்லை. மயிரெல்லாம் வெள்ளையாக நரைத்திருக்கும். குரலில் ஒரு கம்பீரம் உண்டு.

அந்தக் காலத்து பி.ஏ. லோகல் பாங்கில் மேனேஜராக இருந்தார்.

உமிக்கரி நிறைந்த டின்களை தேயிலை என்று நம்பிக்கடன் கொடுத்ததால் பத்தாயிரம் ரூபாயும் கட்டி வைத்து வேலையையும் ராஜி வைத்துவிட்டு வீட்டுக்கு வந்தார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால். கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவருக்கு என்று இருந்த நிலங்கள், தோப்புகள் யாவையும் தன் காலத்துக்குப்பிறகு அக்கா, தங்கைக்கு என்று எழுதி வைத்துவிட்டு கவலையற்று இருந்தார்.

'நெல்லு காச்சல் போராது... சாவி ரொம்ப' என்று தாட்பூட் டென்று சத்தம் போட்டாலும் பெரியசாமி உள்ளும் வெளியும் சுத்தம்.

வண்டியை அவிழ்த்ததும் அப்பாவுக்கும் வண்டிக்காரனுக்கும் சண்முகத்துக்கும் பெரிய லோட்டாவில் மோர் வரும். அண்ணாந்து தூக்கிக் குடித்து தண்ணீர் வாங்கி லோட்டாவைக் கழுவிக் கவிழ்த்து வைக்க வேண்டும். அப்பாவுக்கோ வண்டிக்காரனுக்கோ இது ஒன்றும் உறைக்காது போலிருக்கிறது. சண்முகத்துக்கு ஒரு மாதிரியாக இருக்கும்.

ஒருமுறை – வெள்ளிக்கிழமை, பாட்ட நெல் வரும் என்று சொல்ல சண்முகம் போயிருந்தான். தரையில் உட்காரப் பிடிக்காமல் அப்படியே நின்றான். உட்கார்ந்து பொடி உறிஞ்சிக் கொண்டே கட்டிலில் உட்காரச் சொன்னார் பெரிய சாமி. கட்டிலில் இருக்கவும் காப்பி குடித்த தம்ளரை அப்படியே விட்டுவிட்டு வரவும் ஒரு மாதிரியாக இருந்தது.

மாடசாமி அண்ணனிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கண்ணில் கண்ட பிராமணன் எல்லாவனுடைய குடுமியையும் கத்தரித்து பூணுலையும் அறுத்து எறிய வேண்டும் போல் ஆவேசம் ஏற்பட்டதுண்டு. ஆனால் பெரியசாமியைப் பார்க்கும்போது ஒரு வித மரியாதை தோன்றும்.

பாட்ட நெல்லை அளந்து கட்டி சாக்குகளை அட்டிபோட என்று ஒரு செட்டியார் வருவார். பதினைந்து கோட்டை நெல்லை அறக்காய்ச்சி மூன்றாம் வீச்சு சாவிபோக வீசிக் கொண்டு போனால்தான் செட்டியார் அளவுக்கு பதினாலு கோட்டை இருக்கும். அளவுக்கூலி குறுணி நெல் தனியாகக் கொடுக்கவேண்டும். செட்டியார் பெரிய சாமிக்கு அனுகூலம் செய்வதாய் எண்ணிக்கொண்டு மரக்காலில் நெல்லை முக்கி முக்கி அமுக்கித் தன் சீவனை விடுவார்.

வயிற்றெரிச்சல் பொறுக்க முடியாமல் அப்பா ஒரு முறை பெரியசாமியிடம் சொன்னார்.

"சாமி... இந்தப் பாவம் உங்களுக்கு என்னத்துக்கு? ஆறு மாசம்

வெசர்ப்பு சிந்தி பாடுபட்டாத்தான் எங்களுக்கும் ரெண்டு கோட்டை நெல்லு கிடைக்கும்...”

“என்னடா சொல்றே நீ ராமசாமி?”

“சாமி பாத்துக்கிட்டுத்தாலா இருக்கியோ! இது என்ன நெல்லளவா, மண்ணளவா? சர்க்கார் கணக்கே பதினாலு மரக்கா நெல்லு கொண்ட சாக்குக்கு, சாக்கு அடக்கம் அம்பத்தெட்டு கிலோ தான்.. இதிலே நீங்க எந்த மூடையாம் எடைபோட்டுப் பாருங்கோ... அறுபத்திரண்டு கிலோவுக்கு கீழே இருந்தா நான் வேட்டியையும் உரிஞ்சு போட்டுக்கிட்டு கோமணத் தோட நடந்து போறன்...”

செட்டியாருக்குப் பொறுக்கவில்லை.

“அதில்லே சாமி, நெல்லு கொஞ்சம் பதம்... சாவியும் உறுப்பாங்கட்டியும் கொஞ்சம்...”

“நெல்லு பதமா? என்ன வெளையாடுகேரா ஓய்? குறுங் கொளத்து நெல்லு பவுனுல்லா! கொறை சொல்ல ஒரு பய இனிமே பொறக்கணும்...”

“சரிடா ராமசாமி... விடு... ஓய் செட்டியாரே! கடவுளுக்குப் பொதுவா அளயும்... வயசான காலத்திலே சம்சாரிக்கு சாபம் எனக்கு என்னத்துக்கு ஓய்? அவங்கிட்டே புடுங்கிப் பறிச்சு நான் யாருக்கு சேத்து வய்க்கணும்?”

“அதில்லே சாமி...”

“சொல்லியாச்சில்லா... சொன்னது போலச் செய்யும்”

எப்போதாவது விளைச்சல் சரியில்லை, நோய் விளுந்து போச்சு என்றால் பாட்டம் கொஞ்சம் குறைந்து அளக்கச் சொல்வார். முப்பது வருடங்களுக்கும் மேலாக அப்பா கையில் இருக்கும் நிலம். பாட்டம் கூடுதல் வேண்டும், அது இது என்று கரைச்சல் கிடையாது. நிலங்களும் கைக்கெட்டிய நிலங்கள். வயற்கரையில் தோட்டம் போட்டால் வெண்டைக்காய், கீரைத் தண்டு, வாழைக்காய் என்று கொண்டு போவார் அப்பா. அவரும் யாரைக் கேட்டுக் கொண்டு கோடையில் உளுந்து போட்டாய், பயறு போட்டாய் என்று பஞ்சரிப்பது கிடையாது. உள்ளதில் ஒரு வீதம் போய்ச் சேர்ந்து விடும்.

பெரிய சாமிக்காவது வயல்கள் எந்தத் திசையில் கிடக்கும் என்பது தெரியும். ஐயருக்கு அதுவும் தெரியாது.

இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பம்பாயில் இருந்து குடும்பத்தோடு வருவது. வந்தால் குலை குலையாய் இளநீரும் நுங்கும் கொண்டு போடுவார்கள். ஐயர், மாமாவுக்கு ஏற்ற மருமகன். மிக வெகுளி. சின்னப்பிள்ளையில் ஒரு முறை சண்முகம் ஐயரைப் பார்த்தது.

அந்த ஏப்ரல் விடுமுறையில் அவர் நாகர்கோயிலுக்கு வந்த போது அப்பா அவனையும் கூட்டிக் கொண்டு போனார். அப்பாவுக்கும் ஐயருக்கும் ஒரே வயது. ஆனாலும் அப்பா அவரை சாமி என்று தான் கூப்பிடுவது. தலை முண்டைக் கையில் எடுத்துக் கொள்வார். தரையில் தான் உட்காருவார்.

"ராமசாமி இது யாருடா? உம் மகனா? என்னலே படிச்சிருக்கே?"

"பி.ஏ.சாமி..."

"எப்பம் பாசானே?"

"சிக்ஸ்டி எயிட்லே"

"அவுனுக்குத்தான் ஒரு வேலை வாங்கிக் குடுங்க சாமி. இங்க எல்லாம் முயற்சி செய்து பாத்தாச்சு..."

"மூணு வருஷமா என்னடா செய்தாய்? எனக்கு ஒரு லட்டர் எழுதப்படாதாடா? ஏண்டா உனக்கெல்லாம் புத்தி இருக்கிறதா? இஞ்ச இந்த சூனாமானா ராஜ்ஜியத்திலே உனக்கும் எனக்கும் எவனடா வேலை குடுப்பன்?"

"அதான் சாமியை வந்து பாத்துச் சொல்லலாம்ணு..."

"என்ன வேலையானாலும் செய்யணும்... பம்பாயிலே தரையிலே முக்குளிக்கத் தெரியணும்... அப்பதான் பொழைக்கலாம்.. வீடு சரியில்லே, சாப்பாடு சரியில்லே, அம்மாவைப் பார்க்கணும்ணா நடக்காது..."

"அதெல்லாம் ஒண்ணும் சொல்லமாட்டான்..."

"அப்டீண்ணா நீ ஒண்ணு பண்ணு... ஆகஸ்ட் பதினைஞ்சுக் மேலே புறப்பட்டு வா... ரெண்டு சூட்டு ரெண்டு சட்டை... ரெண மாசம் சாப்பாட்டுக்கு உள்ள பணம் ஒரு நானூறு ரூபாய்... அட்ர தாறன்.... அங்க வந்து என்னைப்பாரு... நான் உன்னைக் கூ வச்சுக்கிட முடியாது. யாராம் தெரிஞ்சவா இருக்காளாடா உங ஆள்லே?"

"நம்ப மூக்கையாக்கு மகன் அங்கதாலா இருக்கான். மிலிட்ரியிலே..."

"அப்ப சரி... அவுனுக்கு எழுதி தாமசத்துக்கு ஏற்பா செய்துக்கோ... நான் உன்னை எங்கேயாம் உக்காத்தி வச்சிர்ரேன்..."

ஐயா பேச்சில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. இவ்வளவு வெள்ளை மனிதருக்கு கண்ட இடம் கடத்தத் தெரியாது. இவரால் ஆகும் என தோன்றியது. முதலில் சில நாட்கள் நேவியில் இருக்கும் சுந்தரண்ண கூட இருந்துவிட்டு பிறகு வேறு ரூம் பார்த்துக் கொள்ளவும் முடியும்

வீட்டுக்குத் திரும்பி வரும்போது, இப்போதே வேலை கிடைத் விட்டதைப் போல் இருந்தது சண்முகத்துக்கு

○

மெட்ராஸ் தாதர் எக்ஸ்பிரஸ். இது பம்பாய் வரை போகுமா டிக்கட் வாங்கும் போதே இது சந்தேகமாக இருந்தது. என்றாலு துணிந்து வண்டியில் ஏறியாகிவிட்டது. மூன்றடுக்கு தூங்க வசதியுள் பெட்டி. வண்டியிலும் இரண்டு மூன்று பேரிடம் கேட்டாயிற்று.

சென்னைக்கு வந்ததைப் போல இல்லாமல் கேள்விப்படா பெயர்களாக நீங்கிக் கொண்டே போயின. அரக்கோணம் ரேணிகுண்டா, குண்டக்கல் என பெயர்ப்பலகைகளில் ஆங்கிலம், இந் அந்த மாநில மொழி என. தமிழ்போலவே ஆனால் வளைவுக பழக்கமில்லாத விதத்தில்... கன்னடமாக இருக்கலாம், தெலுங்கா இருக்கலாம். சில பெயர்கள் விசித்திரமாகக் கூட இருந்தன. ஆங்கில ஊடாக எப்படி உச்சரிப்பது என்றும் குழப்பமிருந்தது. வாடி,கூட்டி, எர் குண்டலா என...

ஊர்கள் வேறுபட்டன. ஊரின் தன்மைகள், வீடுகளி அமைப்புகள், கலப்பைகள், வண்டிகள், பெண்கள் ஆண்களின் மு அமைப்புகள், உடை விதங்கள்...

எட்டுமுழ வேட்டியை முறுக்கி பிரிவணைபோல் தலைப்பாகை கட்டிக் கொண்டிருந்தனர். ஒய்.பி.சவான்போல் தொப்பி வைத்துக் கொண்டிருந்தனர். முன்பெல்லாம் தொப்பிவைத்தவரை துருக்கர் எனவே சண்முகம் நினைத்துக் கொண்டிருந்தான். ஜவகர்லால் நேரு பற்றிக்கூட இந்தக் குழப்பம் இருந்தது.

பெண்கள் முழங்கை வரை வெள்ளையாக வளையங்கள் அடுக்கிக் கொண்டிருந்தனர். காதுகளில் குறுங்கா வளையங்கள் போல வெள்ளியில் தொங்கின. முதுகுப்புறம் திறந்து முன்புறம் கண்ணாடிச் சில்லுகள் வைத்துத் தைத்த ரவிக்கைகள் அணிந்திருந்தனர். சில இடங்களில் பெண்கள் தார்பாய்ச்சி சேலை உடுத்தி இருந்தனர். ஊரில் பெண்கள் கால்களை அகற்றி நின்று இரண்டாம் பேருக்குத் தெரியாமல் மூத்திரம் பெய்வார்கள். இவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை.

ஊருக்கு ஊர் தண்ணீரின் சுவை மாறுபட்டது.

பிராட்கேஜ் வண்டியாதலால் சன்னலோரமான ஒற்றை இருக்கை ஒன்று சண்முகத்துக்கு வாய்த்திருந்தது. காற்று வாங்க, வேடிக்கைபார்க்க கன்னத்தில் கையூன்றி கனவுகளில் ஆழ, நல்ல தோதான இருக்கை.

கம்பார்ட்மென்ட் பூராவும் ஒரு குஜராத்திக் குடும்பம். சென்னையில் செட்டிலான குடும்பமாக இருக்கலாம். நல்ல தமிழ் பேசினர். குடும்ப காரியமாக சண்டை போடும் போது குஜாராத்தியில் பேசினர். சி,சே, ச்சே என்றொரு சொல் அடிக்கடி காதில் விழுந்தது.

பெரிய பெரிய அலுமினிய டப்பாக்களில் தின்பண்டங்கள் கொண்டு வந்திருந்தனர். கைவிரல்களை மூஞ்சிக்கொண்டு, இடதுகையிலும் பலகாரங்களை வைத்துக்கொண்டு இரைந்து கொண்டு சாப்பிட்டனர்.

அவர்களைக் கவனிப்பதும், வெளியே பார்ப்பதும், கண்ணை மூடிக்கொண்டு யோசிப்பதுமாக–

இந்த முறை பம்பாய்க்குப் புறப்படும் எண்ணத்துடன் சென்னை வந்தபோது பெரியப்பா வீட்டில் தங்கவில்லை. சண்முகத்துடன் படித்த ஒருவன் பைகிராப்ட்ஸ் ரோட்டில் இருந்த லாட்ஜ் ஒன்றில் தங்கி இருந்தான். அவனுக்கு கடிதம் எழுதி கேட்டபின்பே ஊரில் இருந்து புறப்பட்டான்.

சென்னை வந்த பிறகுதான் டிக்கட் வாங்கியது. நான்கு நாட்கள் பொறுத்தே கிடைத்தது. கிடைத்த அவகாசத்தில் ஒரு நாள் பெரியப்பா வீட்டுக்குப் போனான். பத்தரை மணி இருக்கும். அவர்கள் அவன் வருகையை எதிர்பார்த்திருக்கவில்லை. பெரியப்பா துண்டு ஒன்றைக் கட்டிக்கொண்டு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். வீட்டு நடையில் அவனைக் கண்ட அதிர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது. கூடவே ஒரு மலர்ச்சியும். கூடப் பிறந்த கேலி பேச்சில் தொனித்தது.

"வாயேம்பிலே... நடையிலே ஏன் நிக்கே?"

"அது யார் கிட்டே பேசறீங்க?" பெரியம்மா குரல் உள்ளிருந்து ஒலித்தது.

"வெளீல வந்து பாருவுள்ளா! ஒனக்க கொளுந்தனுக்கு மகம்லா வந்திருக்கான்!"

பெரியம்மா முகத்திலும் வியப்பு. "வாப்பா, எப்ப வந்தே?"

பெரியப்பா அப்போது தான் கவனித்தார் போலிருந்தது. "பெட்டி படுக்கை எல்லாம் எங்கே? டாக்ஸியிலே இருக்கா?"

"நான் ... நான் முந்தா நாள் வந்தேன்"

"எங்க தங்கறே?"

"திருவல்லிக்கேணியிலே... ஒரு பிரண்டு கூட... லாட்ஜிலே"

"கேட்டியாடி... மெட்ராஸ் வந்து மூணு நாள் ஆச்சாம். லாட்ஜிலே தங்கி இருக்கானாம்."

பெரியம்மாவிடம் இருந்து பதில் ஏதும் இல்லை. இடைவெளியின் அமைதி, அவன் பயந்த நேரம். "கொஞ்சம் இரு குளிச்சிட்டு வந்திர்ரேன்"

பெரியப்பா போய்விட்டார். அடுப்படியில் பெரியம்மா வேலை செய்யும் சப்தம். மேஜை மேல் கிடந்த குமுதத்தை எடுத்துப் புரட்டலானான்.

பெரியப்பா குளித்துவிட்டு வந்தார். சந்தன சோப்பின் மணம். தலைமயிரைத் தட்டி விட்டுக் கொண்டு மூலையைப் பார்த்துத் திரும்பி நின்று வேட்டி மாற்றினார். கட்டிலில் வந்து அமர்ந்தார். இரண்டு கால்களையும் சேர்த்துத் தட்டி மண்ணைப் போக்கிவிட்டு கால்களை

மேலே தூக்கி வைத்துக் கொண்டார். வேட்டிக்கு வெளியே தெரிந்த பாதம் வெள்ளையாக இருந்தது. நகங்கள் சுத்தமாய் வெட்டப் பட்டிருந்தன. காலில் வெடிப்புகள் இல்லை. நகங்களில் கறைகள் கிடையா. அப்பாவின் கால் இப்படி எல்லாம் இருக்காது. தொழி உழவில் கால் நகங்கள் அற்று அரைச் சந்திர வடிவில் உள்வாங்கி இருக்கும். உப்புக் குத்தியின் ஓரத்தில் பாளம் பாளமாய் வெடிப்புகள் ஒழுங்கற்ற கனபரிமாணங்களில். அப்பா செருப்புப் போட்டு சண்முகம் பார்த்ததே இல்லை.

"ம்... அப்போ முந்தாநாளே வந்தாச்சாக்கும்...?" அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். முன்னைவிட முகத்தில் முதுமை தெரிந்தது. பற்கள் சில விழுந்திருந்தன.

"ம்... வேலை கெடச்சு வந்தயா? இன்டர்வியூவுக்கு வந்தயா?"

"இல்ல... பம்பாய்க்குப் போறேன்."

"வேலை கிடைச்சிருச்சா?"

"இல்ல... போய்த்தான் தேடணும்..."

"ரொம்பத் தூரமாச்சேப்பா?"

"தூரம்தான்... ஆனா வேற வழியில்லை. ஒண்ணு எங்கேயாவது ஓடணும். இல்லாட்டா பாலிடால் குடிச்சுச் சாகணும். சாகத் தைரியம் இல்லாததினாலே ஓடுகேன்."

சொல்லும்போதே சண்முகத்துக்குத் தொண்டை அடைத்தது. முகம் கோணியது. பெரியப்பாவுக்குக் கூட முகம் இலேசாகத் திரிந்தது. சற்று நேரம் குனிந்தவாறு இருந்தார்.

"ம்... சரி வந்தது வந்தாச்சு... ஒரு மாசம் இங்கேயே இரு... லாட்ஜை காலி பண்ணீட்டு வந்திரு... முயற்சி செய்து பார்ப்போம்."

நிறைந்த ஆங்காரத்தோடு சொன்னான் சண்முகம்– "இல்ல பெரியப்பா... பம்பாய்க்குப் போறதுண்ணு தீர்மானிச்சாச்சு..."

சாப்பிட்டுவிட்டுப் போகச் சொன்னதற்கு அவன் இருக்கவில்லை. அதில் அவர்களுக்கு வருத்தம் கூட.

ஆனால் அவன் மனதில் ஒரு வீம்பு ஏற்பட்டுப் போயிருந்தது.

அவன் அவர்களைப் பார்க்க வந்ததுகூட முழுமனதோடு இல்லை. ஊரில் இருந்து புறப்படும்போது அப்பாவும் அம்மாவும் படித்துப் படித்துச் சொல்லி அனுப்பினார்கள்.

'ஒரு நா அங்கிணயும் போயி எட்டிப் பாத்துக்கிட்டுப் போலே... இனி எப்பம் வரப்போறியோ.. நீ திரும்பி வரச்சிலே யாரு இருக்கமோ? யாரு போறமோ?'

மறுநாள் திரும்ப வருவதாகச் சொல்லிவிட்டு வந்தாலும், அங்கு மறுபடியும் போகும் உத்தேசம் இல்லை. அக்கா, தங்கை, அண்ணன், மதனி, பிள்ளை என்று மனதில் பாசம் பீறிடவும் இல்லை.

ஒரு விதமான ஆங்காரமே அதிகமாக இருந்தது. பம்பாயில் போய் வேலையொன்று தேடிக்கொள்ள வேண்டும். கஷ்டப்பட்டு பாடுபட வேண்டும். பெரிய ஆளாகித் திரும்ப வரவேண்டும். எத்தனையோ சம்பவங்கள் – வறுமையில் உழன்று, உழைத்து உயர்ந்த சம்பவங்கள் நினைவு வந்தன.

சென்னையில் இருந்த மூன்று நாட்களில் சுற்றிச் சுற்றி வந்த போது, அங்கு போவோர் வருவோர், அலுவலகம் செல்வோர், வியாபாரம் செய்வோர் மீதெல்லாம் பொறாமையாக இருந்தது.

இவர்களுக்கெல்லாம் இங்கு வேலை கிடைத்திருக்கிறது. பிழைப்பு நடக்கிறது. என்றாலும் தனக்கு மட்டும் ஏன் இவ்வளவு தூரம் வெளியே ஓட வேண்டியது வருகிறது?

வண்டிக்குள் திரும்பிப் பார்த்தான் சண்முகம். இவர்களில், எல்லோரும் பொழுது போக்குக்காய் கொழுத்துப்போய் பிரயாணம் செய்யவில்லை. ஊருக்குப் போய்த் திரும்புபவர்கள், வேலை தேடிப் போகிறவர்கள், உறவினர்களைக் காணப் போகிறவர்கள், கண்டு திரும்புகிறவர்கள், விடுமுறையில் போகிறவர்கள், கல்யாணமாகி இனியாவது சிறகுகள் வளரும் என்ற நம்பிக்கையில் போகிறவர்கள், தொழில் நிமித்தம் போகிறவர்கள், பொருள் வழிப் பிரிந்தவர்...

பம்பாய் நகரத்தைக் கண்ணில் கோடிட்டு வரைந்து பார்க்கக் கூடவில்லை. பிரம்மாண்டமான நகரம் என்கிறார்கள். உலகில் ஏழாவது பெரிய நகரம் என்கிறார்கள். சென்னைக்கு வரும் முன்னரும் அப்படித் தான் மனதில் ஒரு பிரமிப்பு இருந்தது. வந்து பார்த்த பிறகுதான் வாழும் தமிழ் நாட்டின் தலைநகராக இல்லாமல் மிக அன்னியமானதோர்

ளர்போலத் தோன்றியது. சென்னையே அப்படியானால் பம்பாய் எப்படியிருக்குமோ? நிறையப் பேர் பயமுறுத்தி வைத்திருந்தார்கள். அந்த பயங்கள் நெஞ்சில் நீராடுகின்றன.

பதினோராவது வகுப்புவரை படித்த இந்தி –

எஹ் கியா ஹை ?
எஹ் கலம் ஹை !
வஹ் கியா ஹை ?
வஹ் கமல் ஹை !

லட்டு பெண்பால், வாழைப்பழம் ஆண்பால் என்ற புரியாத இலக்கண மரபுகள்.

ஆங்கிலமும் அப்படியொன்றும் தளபாடமாய் இல்லை. இந்திய மக்கட்தொகை பெருக்கம் பற்றி ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை வரைவதுவேறு, அதையே சகஜமான உரையாடலில் கொண்டு வருவது வேறு. இனிதான் சோதித்துப் பார்க்க வேண்டும்.

இவை தவிர உள்ளூர் மொழி மராத்தி எப்படி ஒலிக்கும் என்பது கூடத் தெரியாது.

சிவசேனா பற்றி மனதில் நிறைந்திருந்த பீதி.

மாட்டுங்கா பகுதியில் வேட்டி கட்டிய வயோதிகர்களை
அடித்தார்கள்.
பெண்களைப் பரிகசித்தார்கள்.
தமிழ்க்காரர் கடைகள் நொறுக்கப்பட்டன.
தாராவியில் வீட்டுக்குள் இழுத்துப் போட்டு
போலீஸ்காரர்களை வெட்டினார்கள்.
கணக்கற்ற கொலைகள்....

பூனாவில் பொழுது விடிந்தது.

பல் தேய்த்து விட்டு ஒரு ரூபாய்க்கு பூரியும் கிழங்கும் வாங்கித் தின்றான். ரப்பர்மாவில் செய்தவைபோல் வலுக்வலுக்கென்று உப்புச் சப்பின்றி இருந்தன. மீதி வாழ்க்கையும் இப்படித்தான் இருக்குமோ என்னவோ? கையில் காசு குலுங்கிய நாட்களில் அசோக் பவனிலோ, ஆரியபவனிலோ பூரிகிழங்கு அல்லது சப்பாத்திகுறுமா என்று சொகுசாக, பெருமிதத்தோடு தின்றது நினைவுக்கு வந்தது. அந்த ஆசையில் இதைத் தின்ன முடியவில்லை. கையில் வைத்துக்கொண்டு

நொறுங்கச் சவைக்கையில் சுற்றிலும் கையை ஏந்திக் கொண்டு, கண்களிலும் கையை ஏந்திக்கொண்டு இரண்டு மூன்று சிறுவர். அவர்களுக்கு அஞ்சி அவசரமாய்த் தின்றவர்கள், மறுபக்கம் திரும்பிக் கொண்டவர்கள், 'ஜாவ், ஜாவ்' என்று விரட்டியவர்கள்...

ஊரில் இருந்து புறப்பட்டு ஏழு நாட்கள் ஆகி இருந்தன. ஆனால் ரொம்பக் காலம் ஆகிவிட்டதுபோல் இருந்தது. இனி எப்போது திரும்பிப் போவோம், எல்லோரையும் எப்போது பார்ப்போம் என்று தோன்றியது.

வேலை கிடைத்து ஒரு வருடகாலம் சென்றல்லாமல் லீவில் போக முடியாது என்று எண்ணுகையில் நெஞ்சு பீதி அடைந்தது.

ஸ்டேஷனுக்கு சுந்தரண்ணன் வருவானா என்றொரு சந்தேகம். வருவான். பத்து நாட்கள் முன்பு எழுதிய கடிதம் இன்னும் கிடைக்காமலா இருக்கும்? கையில் விலாசம் இருந்தது. சுந்தரண்ணனின் அப்பா சொன்ன உபரித் தகவல்கள் மனவசத்தில் இருந்தன.

"பழைய காலத்துக் கட்டறம் பாத்துக்கோ... செவுருல எல்லாம் நெறைய மாடப்புறாவா இருக்கும். வெளீல ஆப்பிளு ஆரஞ்சு எல்லாம் வச்சு விப்பான். அங்கிண இருந்து நேவி நகர்னு ரெண்டோ மூணோ பஸ்சு போகும்... ஏறி இருந்து இருபது பைசா குடுத்தா நேரே கொண்டு விட்டிருவான். நெறைய கெட்டறமா இருக்கும். அங்கிண போயிக் கேட்டாப் போரும்..."

இதெல்லாம் வி.டியில் இருந்து போவதற்கான வழி. ஆனால் தாதரில் இறங்கி எப்படிப்போவது? அது அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என மனதில் தேற்றிக் கொண்டான்.

பூனா தாண்டிப் போயிற்று வண்டி. கன்ட்லா, லோனாவாலா ... நிறைய மலைக் குகைகள் வந்தன. தலையை ஜன்னலை ஒட்டி வைத்துக் கொண்டு பார்க்கும்போது வண்டியின் வால் நீண்டு வருவதும் புற்றுக்குள் நுழையும் பாம்புபோல குகைக்குள் தலை நுழைத்துப் போவதும் தெரிந்தன. கர்ஜத் தாண்டி கல்யாண் வந்தது. நிறையப்பேர் இறங்கினார்கள். அடுத்த நிறுத்தம் தாதர் என்றனர்.

பெட்டியை ஒழுங்கு படுத்தினான் சண்முகம். வெளியே கிடந்த சீப்பு, துண்டு, சமுக்காளம், ஒரு வாராந்திரி, ஒரு ராணிமுத்து எல்லாம் மடக்கி உள்ளே வைத்தான். சாரத்தையும் அழுக்குச் சட்டையையும்

மாற்றி பான்ட், வேறு சட்டை அணிந்தான். டிக்கட்டை எடுத்து பாக்கெட்டில் வைத்தான். பெட்டியின் நடுவில் சர்டிபிகேட் அடங்கிய ஃபைல் இருக்கிறதா என இருபத்தாறாம் முறையாகச் சரி பார்த்துக் கொண்டான். இரகசியக் கிடங்கில் இருந்த ரூபாய் நோட்டுக்களில் இருந்து இருபது ரூபாய் உருவி பேன்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

ஸ்டேஷன் வரப்போகிறது போலிருக்கிறது. வண்டி ஓட்டம் தளர்த்தியது. நிச்சயிப்பதற்குள் பொந்து போல் இருந்த பிளாட்பாரத்தில் நுழைந்து நின்றது. பிளாட்பாரத்தில் 'தாதர்' என ஆங்கிலத்திலும் எழுதி இருந்தது.

நாள், கிழமை, மேற்கு, கிழக்கு யாவும் மாறிப் போனது போல் மயக்கமாக இருந்தது.

பெருவெள்ளமாக மக்கள் வெளியே பாய்ந்தனர். டிரங்குப் பெட்டிகள், ஹோல்டால்கள், சூட்கேஸ்கள், 501 அட்டைப் பெட்டிகள், சக்கைப்பழம் போட்டுக் கட்டிய சாக்குகள், ஏர் பேக்குகள், சுருட்டிக்கட்டிய படுக்கைகள், பெருங்காயப்பைகள், முருகன் ஸ்டோர்ஸ் பைகள்...

தார்ப்பாய்ச்சி வேட்டி கட்டியவர்கள், டைட் பேண்ட் அணிந்தவர்கள், லுங்கிஉடுத்தவர்கள், சாரிகள், பட்டுகள், சூடிதார், பைஜாமா, கவுன்கள்....

வெளியே டாக்ஸிகள் மயம். சில வேன்கள், ஜீப்புகள், கார்கள்... கல்யாண வீட்டுக்கு வந்திருப்பவர்களை வரவேற்பது போன்று தாடியும் உச்சிக்கொண்டையும் வைத்த தாடிக்கார டாக்ஸி டிரைவர்கள் உபசரித்தனர்.

சண்முகத்தின் பெட்டி அவ்வளவுகனம் கிடையாது. சுந்தரண்ணனுக்காக அவர்கள் வீட்டிலிருந்து கொடுத்தனுப்பிய ஆர்லிக்ஸ் அட்டைப்பெட்டி அவன் கையில் இருந்ததது. பச்சைக்கோடு போட்ட அவன் சட்டையை அடையாளம் வைத்துக்கொண்டு பின்னால் நடந்தான். லோக்கல் ரயில் பிடித்து வி.டியில் இறங்கி இரண்டாவது மாடியில் இருந்த ரயில்வே ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டார்கள். சாப்பிடும் போதே சாயங்கால வண்டிக்குத் திரும்பிவிடலாமா என்று தோன்றியது.

நாலு பூரி, எண்ணெய்க் கிண்ணத்தில் நிறைத்துக் கவிழ்த்திய சோறு இரண்டு கட்டி, தண்ணீராக ஒரு கிண்ணம் பருப்பு. ஒரு கிண்ணம் சாம்பார். உருளைக் கிழங்கும் கத்திரிக்காயும் போட்ட ஒரு கறி அரைக் கிண்ணம். நார் நாரான பீன்ஸ் துவரன் அரைக் கிண்ணம். ஒரு துண்டு ஊறுகாய். பாதி பப்படம். இரண்டு ரூபாய் சார்ஜ். ஊரில் ஐந்தணா அல்லது முப்பத்தோரு பைசா கொடுத்தால் சாப்பாடு வயிறு புடைத்துப்போகும். இந்த ரைஸ் பிளேட்டில் எப்படி நெடுங்காலம் உயிரோடு இருப்பது என்று தெரியவில்லை. நிறையத் தண்ணீர் குடித்த பிறகு வயிறு நிறைந்தாற்போல ஒரு தோற்றம்.

அங்கிருந்து மூணாம் நம்பர் பஸ் பிடித்து நேவி நகர் ஸ்டாப்பில் இறங்கி நடந்தார்கள்.

வழிநெடுக பாதை விபரங்களைச் சொல்லித் தந்து கொண்டே வந்தான் சுந்தர அண்ணன்.

"இது வி.டி. ... இதிலே இறங்கி சைடோட வந்தா இன்னா முன்னால் தெரியே, அது பாம்பே முனிசிபாலிடி பில்டிங். அடுத்தால இருக்கது டைம்ஸ் ஆஃப் இந்தியா. அதுக்க எதுக்க இருக்க ஸ்டாப்பிலே நிண்ணா மூணு இல்லேண்ணா நாப்பத்தஞ்சு வரும். அதுலே ஏறி கடேசி ஸ்டாப்புதான் நேவி நகர். இல்லேண்ணா நூத்திமூணு. ஆசி சர்ச் வரை அது போகும். ஆனா நமக்கு அங்கவரை போகாண்டாம். முக்குத் திருப்பிலே ஆப்கான் சர்ச்... நான் வளீல காட்டித் தாறேன். அதுலே இறங்கி ரைட் ஆங்கிள்லே திரும்பி நடந்தா நேவிநகர் வரும்..."

நேவி நகர் ஸ்டாப் வந்தது.

"உனக்காகச் சுட்டித்தான் கடேசி ஸ்டாப்பிலே இறங்கினேன் பாத்துக்கோ. இதுக்கு முந்தின ஸ்டாப்பிலே இறங்கினாலும் போரும். இடம் எல்லாம் நல்லா பாத்து வச்சுக்கோ... இன்னா கறுப்பு பெயிண்ட் அடிச்சு ஒரு பதினோரு மாடி கட்டடம் தெரியே, அது டி.ஐ.எஃப். ஆர்-டாட்டா இன்ஸ்டிடூட் ஆஃப் ஃபன்டமென்டல் ரிசர்ச்.. அதுக்க எதுக்க இருக்கதும் அதான். பொறவு கூட்டீட்டுப் போறேன்... இந்த ரோட்டிலே திரும்பிப் போயி ரைட்லே திரும்பினா வலது பக்கம் சென்ட்ரல் ஸ்கூல். இடதுபக்கம் ஸ்மித்தா மார்க்கெட். இன்னும் கெட்டி முடியல்லே. அந்த ரோட்டைவிட்டுக்கிட்டு அடுத்த ரோட்டிலே திரும்பி நேர நடந்தா நாலவதுரோ... முதல் பில்டிங்தான் எஃப். அதிலே கீழே முத வீடு 16-நம்பர். நீ இனி தனியா வந்தா தடுமாறப்பிடாது. இதெல்லாம்

டிஃபன்ஸ் ஏரியா. சும்மா விறுவிறுண்ணு நடந்து போகணும்... தெக்கேயும் வடக்கேயும் பாத்துக்கிட்டு இருந்தா. நீ யாரு, யாரைப் பார்க்கணும், எதுக்குண்ணு ஆயிரத்தெட்டு கேள்வி வரும் என்னா?"

சுந்தரண்ணன் வீடு விசாலமாக இருந்தது. முதலில் ஏறியதும் பால்கனி.. ஒரு ரூம். அடுத்தாற்போல இன்னொரு ரூம். பின்னாலே அடுக்களை, ஸ்டோர் ரூம், பால்கனி, குளிமுறி, கக்கூசு தனித்தனியாக, முதல் ரூமையும் ஸ்டோர் ரூமையும் உபயோகித்துக்கொண்டு ஒரு பஞ்சாபிக் குடும்பம் இருந்தது. இரண்டாவது அறையையும் கிச்சனையும் உபயோகித்துக்கொண்டு சுந்தரண்ணன் குடும்பம். பேற்றுக்கு தாய்விடு போயிருந்ததால் சுந்தரண்ணன் தனியாக இருந்தான்.

"இங்க நீ ரெண்டுமாசம் இருந்துக்கிடலாம். பொறகு ஃபேமிலி வந்ததும் இங்க எங்கயாம் ரூம் பார்க்கலாம்... நான் எப்பமாந்தான் பொங்குகது பாத்துக்கோ... சவத்தைப் போட்டு பொங்கவும் கறி வைக்கவும் பாத்திரம் களுவவும் நம்மால் ஆகாது. காலம்பற பிரட், பட்டர், ஜாம். நீயும் வாங்கி வச்சுக்கோ... இல்லை நானே நேவி கேன்டீன்லே இருந்து வாங்கித் தாறேன்... அங்கே சீப்பா இருக்கும். வேற சோப்பு, பேஸ்ட் எல்லாங்கூட மாசாமாசம் அங்கேயே வாங்கிக்கிடலாம்.. சரி... நீ அப்பம் குளிச்சுக்கிட்டு கொஞ்சம் படுத்து உறங்கு. நான் ஆங்கரேக்கு போயிட்டு அஞ்சுமணிக்கு வாறேன். பொறவு இங்கிணோடி சுத்தலாம். நாளைக்கு சன்டே. ஐயரைப் போயிப் பாப்பம் என்னா?"

***

## நான்கு

பம்பாய்க்கு வந்து மாதம் ஒன்றாச்சு. ஐயர் தந்த முகவரிகளையும் கடிதங்களையும் கொண்டு தினமும் ஒன்றிரண்டு பேரைக் கம்பனிகளில், வீடுகளில் சென்று பார்ப்பதில் முடக்க மில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம் இருந்தது. இந்த ஆண்டில் மராட்டிய மாநிலத்தில் கடுமையான வறட்சியும் பஞ்சமும். மின்வெட்டு நாற்பது சதமானம் அமலில் இருக்கிறது. இப்போதுதான் எங்கள் நிறுவனத்தில் ஆட்குறைப்புச் செய்தார்கள். எங்கள் அலு வலகத்தில் புதியதாய்த் தென்னிந்தியனை எடுப்பதில்லை –

இல்லாத தகுதிகளைக் கேட்டார்கள். எதற்கும் ஒரு வாரம் பொறுத்து வா என்றார்கள். விண்ணப்பம் எழுதி வாங்கிக் கொண்டு தெரியச் செய்கிறோம் போ என்றார்கள்.

எட்டு ரூபாய் முப்பத்தைந்து காசு செலவு செய்து டைம்ஸ் ஆப் இந்தியாவில் விளம்பரம் கொடுத்தான்– வேலை தேவை. இருபத்தி நான்கு வயது. இரண்டாம் வகுப்பு பி.ஏ. புதுப் பட்டதாரி.

பத்துப் பன்னிரண்டு கடிதங்கள் வந்தன. நேரில் வந்து காணச் சொன்னார்கள். பெரிய நம்பிக்கைகளுடன் பேட்டிகளுக்குப் போனான்.

டைப்பிங் ஷார்ட் ஹான்ட்? தெரியாது.

டெபிட் கிரெடிட்? தெரியாது.

முன்னனுபவம்? கிடையாது.

உள்ளூர் மொழி? தெரியாது.

இவற்றையெல்லாம் மீறி, ஒரு இருநூறு ரூபாய் சம்பளம் தர யாரும் தயாராய் இருந்ததாகத் தெரியவில்லை.

தினமும் மாலையில் அன்றுள்ள நிலவரங்களைச்

சுந்தரண்ணனிடம் சொல்ல வேண்டும்.

ஆர்தர் பந்தர் ரோட்டில் ஆர்.கே.எட்வார்ட் அன்ட் கம்பனி பி.லிமிட்டட்; எஸ்.கே. சிங்குக்கு சிபாரிசுக் கடிதம் கொண்டு போனது– அந்த எஸ்.கே.சிங் இறந்து இரண்டு மாதம் ஆகி இருந்தது...

மெடோ ஸ்ட்ரீட்டில் பிரிமியர் அலாய்சில் கணேசனைப் பார்த்தது. அவர் உட்கார வைத்து, காப்பி வாங்கிக் கொடுத்து, பரிவுடன் குடும்பச் சூழ்நிலையை விசாரித்து, தான் வேலை கொடுக்கும் ஸ்தானத்தில் இல்லை என்று விளக்கி, டைரி தந்து அனுப்பியது.

பெரோஷா மேத்தா ரோட்டில் ஸ்தாணுகிருஷ்ணன் சார்ட்டட் அக்கவுன்டன்டைப் பார்க்கப் போய் தெரியாமல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்து அவர் ஆங்கிலத்தில் சரளமாய்த் திட்டியது...

மெரீன்லைன்ஸில் வைன்டிங் மெஷினரி ஏஜன்ஸீஸ் நடத்திய மாணிக்லால் மேத்தா அடிக்கடி கோயம்புத்தூர் போய்வரும் பழக்கத்தில் கொச்சையாகத் தமிழ் பேசி வாரந்தோறும் இழுத்து அடித்தது...

"மனசைத் தளரவிடப்பிடாதுப்பா... எப்படியும் கிடைக்கும். தைரியமா இருக்கணும்" என்று சுந்தரண்ணன் சொல்லும் போதெல்லாம் சங்கடம் மேலிட்டு நெஞ்சடைக்கும்.

கையிருப்பு நாளுக்கு நாள் தேய்ந்து வந்தது. ரூம் வாடகை இல்லை என்றாலும் போக்குவரத்துக்கு , சாப்பாட்டுக்கு என்று எப்படியும் தினம் குறைந்தது ஐந்து ரூபாய் ஆயிற்று. இந்த நிரக்கில் இன்னும் ஒரு மாதம் தாக்குப் பிடிக்கலாம். பிறகு என்ன செய்வது?

வீட்டுக்குப் பணம் கேட்டு எழுதினால் வருமா?

திரும்பிப் போகவா?

திரும்பிப் போகப் பணம்?

திரும்பினால் நம்பிக்கையோடு வீட்டில் காத்திருப்பவர்கள் முன்னால் தன் முகம் எந்நிறம் கொள்ளும்?

வாரத்திற்கு மூன்று நான்குமுறை ஐயரை வீட்டில் சென்று பார்ப்பதில் குறைவில்லை. டிபனும் தின்று காப்பியும் குடித்து கையில் அறிமுகக் கடிதங்களோடும் முகவரிகளோடும் ரயில்வே ஸ்டேஷனுக்கு நடக்கையில்– வான வெளியைப் பார்த்து ஏமாற்றத்தைத் தொண்டைக் குழியில் இருந்து கீழே இறக்க முயல்கையில்...

ஏதோ பேச்சு வாக்கில் சுந்தரண்ணனிடம் சொன்னான் சண்முகம்–

"நா வேலை இல்லாமத் திரும்பிப் போமாட்டண்ணேன். இந்த அரபிக்கடல்லே விழுந்து செத்தாலும் சரிதான்..."

அவனுக்கு ரொம்பக்கோபம் வந்து விட்டது. "நீ எப்படி எம்முன்னாலே அப்பிடிப் பேசுவே?" என்று சண்டைக்கு வந்து விட்டான்.

ஆனால் நிலமை சீர் திருந்தவில்லை.

ஐயர் கூட ஒரு நாள் இறங்கிய குரலில் சொன்னார். "என்னடா? உனக்கு ஒண்ணு அமையவே மாட்டேங்கிறது? நான் சொன்னா பத்து நாள்லே பட்படன்னு ஆகும்... நீ எதுக்கும் கவலைப் படாதே... பகவான் இருக்கார்... எங்கேயாம் உக்காத்தி வச்சிர்றேன்..."

சில நாட்கள் யாரையும் பார்ப்பதற்கு இருக்காது. வேறு செய்ய என்று வேலையும் இருக்காது. ஒரு வசதிக்காக வாங்கி வைத்திருந்த சர்ச்கேட்– அந்தேரி ரயில் பாஸை எடுத்துப் பாக்கெட்டில் போட்டு விட்டுப் புறப்படுவான் சண்முகம்.

சில சமயம் அந்தேரி லோகல் பிடித்து அற்றம் வரை போய் விட்டு அதே வண்டியில் திரும்பி வருவான். வெளியே பார்த்துக் கொண்டு, ஏறும் ஆட்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு, சுய நினைப்புகளை அசை போட்டு, ஆட்பட்டு, அலைக்கழிந்து...

சில சமயம் பாம்பே சென்ட்ரலில் இறங்கி ரோடுகளை அடையாளம் வைத்துக்கொண்டு கால் வலிக்கும் வரை நடப்பான். சில சமயம் தாதர், சில சமயம் கார் ரோடு.

வாழ்க்கை அங்கு ரொம்ப வேகமாக இருந்தது. ரோடுகளில் சந்துகளில் கை கால்களை வீசி நடக்க முடியவில்லை. ராமலிங்க அடிகள் பாடல் "கைகளை வீசி நடப்பதை நாணி..." நினைவுக்கு வந்தது. ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு தள்ளிக்கொண்டு நடந்தார்கள். பெண்கள் இதையெல்லாம் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. பஸ்ஸில், ரயிலில் நெருக்கி அடித்துக் கொண்டு ஏறினார்கள். மழிக்கப் பட்ட கைக்கிடைகளைக் காட்டிக் கொண்டு பஸ்ஸின் தொங்குவாரைப் பற்றிக் கொண்டு கூச்சமின்றி நின்றனர். முட்டுக்குக் கீழ் வராத கவுன் போட்டுக் கொண்டு கால்களைப் பரத்தி அமர்ந்திருந்தனர்.

ஆற்றின் குளத்தின் நீராடு துறைகளில் துண்டுச் சதைக்காக நாத் தொங்கலிட்டு பார்க்காதது போல் பார்த்ததெல்லாம் போக, இங்கு சதைக்காட்சி திகட்டும் அளவுக்கு இருந்தது.

கறிகாய்க்காரர், பழக்காரர், ரோட்டின் ஓரத்தில் பரப்பிக் கிடந்த பாத்திர, துணிக்கடைகள், உதிரி மாடுகள்...

எங்கும் பஸ், லாரி, டாக்ஸி, கார், தூசு புகை, சத்தம்...

நடை பாதைகளில் நிறையக் குடிசைகள், பாலிதீன் பேப்பர்களால், கோணித்துணிகளால், தகரத்துண்டுகளால், அட்டைகளால், கந்தல்களால், பரம்புப் பாய்களால் ஆன கூரைகள்... குடிசை வாசலில் கக்கூசுக்குப் போய்க்கொண்டு குழந்தைகள், பாத்திரம் தேய்க்கும் பெண்கள், காலையில் குடித்த நாட்டுச் சாராய போதை தெளியாமல் விழுந்து கிடந்த ஆண்கள்...

எல்லா ஓட்டலிலும் சாப்பாடு ஒரே விதமாக இருந்தது. ரைஸ் பிளேட்டுகளில் வித்தியாசம் இல்லை. ஓட்டலினுள் நுழைகையில் உள்ளே இருந்து வெளியே வரும் கலவை வாசனை. ஆவியும் வெக்கையும்...

வேலை கிடைத்தாலும் இந்த நகரத்தில் எப்படிப் பிழைக்கப் போகிறோம் என்றிருக்கும்.

சில சமயம் நரிமன் பாயின்டில் கடற்கரை மதிலில் அமர்ந்து கடலையே பார்த்துக் கொண்டிருப்பான் சண்முகம்.

இங்கே கடல் கன்னியாகுமரிக் கடல் போல சௌந்தர்யம் கொண்டதல்ல. குறைப்பிரசவக் குழந்தை போல பயங்கரமும் ஆபாசமும் கொண்டதாக இருந்தது. கடல்மட்டம் ஏறியிருந்தால் இந்தக்கதி. இறங்கி இருந்தால் கேட்கவே வேண்டாம். கோரமாக இளித்தது. நகரத்தின் கசடுகள், அழுக்குகள், டீசல் மிதப்புகள், ஒரு விதமான துர்நாற்றம் கொண்ட காற்று. இந்தக்காற்று உடலை மனதை மாசு படுத்தும், ஆரோக்கியம் கெடுக்கும். இளநீர்க் கதம்பைகள், மக்காச் சோளக் கதிர்கள், உடைந்த பிளாஸ்டிக் சாமான்கள், காய்ந்த மலர் மாலைகள் என்று என்னவெல்லாமோ மிதந்தன.

சில சமயம் ஹார்னிமன் சர்கிள் பக்கம், சுந்தரண்ணன் வேலை பார்க்கும் ஐ.என்.எஸ். ஆங்கரேயை அடுத்து இருக்கும் சென்ட்ரல் லைப்ரரிக்குப்போவான். உயரமான படிக்கட்டுகள். பெரிய தூண்கள்,

இருண்ட மாடங்களில் புறாக்கள், புறா எச்சம், வீச்சம், இருட்டு, பழைய புத்தக, பத்திரிகைக் கட்டுகள் எல்லாம். ஒரு வாரம் முன்பு வந்த தினமணி படிக்கக் கிடைக்கும்.

திடீரென சுந்தரண்ணன் ஒரு தகவல் சொன்னார். அவருடன் வேலை பார்க்கும் சுர்வே சொன்னதாக, பழைய கஸ்டம் ஹவுசில் இருக்கும் கலக்டர் ஆபீசில் டெம்பரரியாய் ஒரு வேலை இருப்பதாகவும் சுர்வே சொல்லி வைத்திருப்பதாகவும் கிடைக்கும் என்றும்.

மறுநாள் காலை பத்துமணிக்குப் போனான் சண்முகம். அங்கு கன்ஸால்வஸ் என்று ஒருவர். மலையாளம் சில சொற்கள் அறிந்து வைத்திருந்தார். எக்ஸர்வீஸ்மெனுக்கு ஆன பிரிவு அது. சில நாட்கள் வேலைக்கு வைத்துக் கொள்வதாக ஒத்துக் கொண்டார். அப்பாயின்ட் மென்ட் லெட்டர் ஏதும் கிடையாது.

ஆயிரத்துக்கு மேல் முகவரிகள் கொண்ட ஃபைலைக் கையில் கொடுத்து நீண்ட கவர்களைக் கொடுத்து முகவரி எழுதச் சொன்னார்கள்.

கவர்களின் தலைப்பில் கொடிதினம்–அழைப்பிதழ் என்று அச்சிடப்பட்டிருந்தது.

தினசரி ஓயாமல் கைவலிக்க எழுதினான். மூத்திரம் பெய்யவும் சாப்பிடப் போகவும்தான் எழுந்திருப்பது.

பத்தே முக்காலுக்கு ஒரு கையில் தோல் பையும் மறுகையில் சிறு கான்வாஸ் மடக்குஸ்டூலும் கொண்டு டெக்கான் குயீனில் இருந்து இறங்கி மேஜர் மாமுன்கர் வருவார். சாயங்காலம் டெக்கான் குயீனைப் பிடிக்க நாலரைக்குப் புறப்பட்டுப் போய் விடுவார். எட்டுமணிக்கு பூனா போய்ச் சேருவார் போலும்.

மற்றபடி அலுவலகப் பொறுப்பு எல்லாம் கன்ஸால்வஸ்தான். பெரும்பாலும் மராத்தியில், சிலசமயம் இந்தியில், அபூர்வமாய் ஆங்கிலத்தில் கிளார்க்குகள் எல்லோரும் பேசினர். மூன்று பெண் கிளார்க்குகள். எதற்கும் சேர்ந்தே போனார்கள். சண்முகத்தைத் தங்களில் ஒருவனாய் எவரும் சேர்த்துப் புன்னகை கூடச் செய்யவில்லை. பழைய மிலிட்டரி யூனிபாரத்தில் வந்து வயதனாவர் சிலர் ஏதோ கேட்டுச் சென்றனர்.

நான்கு நாட்கள் கவர்களை எழுதியபிறகு எதிர்ப்பக்கம் பெரிய கோடவுடன் போலிருந்த ஒரு ரூமில் குவித்து வைக்கப்பட்டிருந்த கொடிதினம் : நன்கொடை தாரீர் – என்று அச்சிடப்பட்டு

ஒட்டப்பட்டிருந்த- டப்பாக்களை வரிசை எண்கள்படி பத்துப் பத்தாகச் சேர்த்துக் கட்டச் சொல்லி ஒரு லெட்ஜரில் குறித்துக் கொள்ளச் சொன்னார்கள்.

டப்பாக்களில் தாள் ஒட்டிக் குவிக்க, சண்முகம் அடுக்கிக்கூட்ட, ஜீப் ஒன்றில் வாரிப்போட்டுக்கொண்டு போனார்கள். இது ஒரு நான்கு நாட்கள் நடந்தது. இடைஇடையே ஆபீசுக்கு வரும்போது தான் இருந்து முகவரி எழுதிய இடத்தில் சல்வார்கமீஸ் போட்டுக்கு கொண்டு ஒரு பெண் எழுதிக் கொண்டிருந்தாள். அவள் இருந்த சுவாதீனத்தையும், பற்கள் ஒன்றிரண்டு விழுந்த அந்த வழுக்கை மண்டையானிடம் பேசிய தோரணையையும் பார்த்தால் அவன் மகள் இவள் எனத் தோன்றியது.

எல்லா டப்பாக்களையும் கட்டிய பிறகு கன்ஸால்வஸ் பக்கம் வந்து நின்றான் சண்முகம்.

"ஓவர்?"

"எஸ் ஸார்"

காஷியரைக் கூப்பிட்டு ஒன்பது நாளைக்கு நாற்பத்தைந்து ரூபாய் கொடுக்கச் சொன்னார்.

ரெவ்னியூ ஸ்டாம்புக்கும் அகதிகள் ஸ்டாம்புக்குமாக இருபது பைசா வாங்கிக்கொண்டு வவுச்சரில் கையெழுத்து வாங்கிக் கொண்டு பணம் தந்தார். அந்தப்பெண் இன்னும் நிறையக் கவர்களை முன்னால் வைத்துக் கொண்டு அவசரமில்லாமல் எழுதிக் கொண்டிருந்தாள்.

கன்ஸால்வஸிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான். முதன் முதல் சர்க்கார் சம்பளம் வாங்கிய பெருமை இன்னும் மீதமிருந்தது. ஒருபக்கம் ஒரு தினுசான குறைச்சலும் இருந்தது.

மணி நாலரையே ஆகி இருந்தது. கொஞ்சநேரம் இங்கு எப்படி யாவது ஒட்டிவிட்டு சாப்பிட்டுவிட்டே வீட்டுக்குப்போய் விடலாம். போய்விட்டு சாப்பிட என்று திரும்ப ரோட்டுக்கு வருவதைவிட சாப்பிடாமலேயே படுத்து விடலாம்.

சாப்பாட்டை நினைத்தாலேயே ஒரு குமட்டல் உணர்ச்சி முன் தூக்கியது. பூரியின் நினைப்பே வெறுப்பூட்டியது. ஆனால் ஆறு பூரிக்குப்பதில் ஒரு கிண்ணம் சோறு என்ற ஒப்பீட்டைப் பார்க்கையில் பூரிதான் இடத்தை அடைக்கும்.

ஊரில் இருந்து வந்தபிறகு எடை, நிச்சயமாகக் குறைந்திருந்தது. பேண்ட் இடுப்பில் நிற்க மறுத்தது. வழுக்கி வழுக்கிக் கீழே இறங்கியது. பெல்ட் வாங்கிக் கட்டிக் கொள்ளலாம் என்றால் பேண்டில் அதற்குண்டான லூப்புகள் வைத்துத் தைக்கப் பட்டிருக்கவில்லை. சிலசமயம் இடுப்பில் பேண்டை ஒரு மடிப்பு மடித்து விட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

நேரே லயன்கேட், கௌன்சில் ஹால் பக்கம் நடந்து ரீகல் அருகே திரும்பி கேட்வே ஆஃப் இந்தியா பக்கம் போனான். பலமுறை போய் உட்கார்ந்த இடம்தான். அதே வீர சிவாஜி சிலை, நெஞ்சில் கைகட்டி நிற்கும் விவேகாநந்தர் சிலை, எதிரே தாஜ்மகால் ஓட்டலும் தாஜ் இன்டர்கான்டினென்டலும். எட்டாவதோ ஒன்பதாவதோ பிரின்ஸ்ஆஃப் வேல்ஸ்க்கு வரவேற்பாகக் கட்டிய தோரணவாயில். பழுப்பு, சிவப்புக்கல்லால் சாய்ப்பு பெஞ்சுகள் கட்டியிருந்தனர். அதில் கடல் பார்த்து அமர்ந்து தூரத்தில் தெரியும் கப்பல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மாலை திரண்டு வந்தது.

நிறையப்பேர் வேடிக்கை பார்க்கும் கூட்டம்.

பம்பாய் பார்க்க வந்தவர், பம்பாயிலேயே இருந்தாலும் புதிதாய்ப் பார்க்க வந்தவர், கைகளைக் கோத்து, தோள் மேல் கைபோட்டு வந்த காதலர், புது மணமக்கள்...

இருட்டிக் கொண்டு வந்தது.

டிசம்பர் மாதம். இலோசாகக் குளிரத் துவங்கியது. பரவலாக ஜனங்கள் உட்கார்ந்திருந்தனர். சிலர் ஸ்வெட்டர் போட்டிருந்தனர்.

கழுத்தில் தவில் போல பெரிய அலுமினியக் கூடை தாங்கி அதில் கடலை வைத்து, கடலையைச் சூடாக்க தீக்கங்குகள் செஞ்சுடர்க்கும் சட்டியை வைத்துக்கொண்டு சென்னா கரம்... க்ரம் ஷெய்ங்க்... சென்னாவாலா... என்று புகையைப் பரப்பிக் கொண்டு திரிந்த பையாக்கள். அதென்னவோ உ.பி. யில் இருந்து வந்த எவரையும் பையா என்றே அழைத்தனர். காய்கறி, பழ, கடலை வியாபாரமும் கை வண்டி இழுப்பு, ரோட்டோரம் குந்திஇருந்து நம்கையிலேயே கண்ணாடியைக் கொடுத்து பிடித்துக் கொள்ளச்செய்து முகம் வழிப்போர், பால்காரர், கோதுமைமாவு திரித்துக் கொடுக்கும் சக்கி வைத்திருப்போர் அனைவரையும் செய்யும் தொழில் சேர்த்து பால்காரப்

பையா, காய்கறிக்காரப்பையா என்று... ஐயர், ஐவகர்லால் நேருவைச் சில சமயம் 'பையா' என்று சொல்லக்கேட்டிருக்கிறான்.

குடிதண்ணீர், தம்ளர் ஐந்து காசு என்ற விற்பவர், பாப்கார்ன் விற்பவர், ஐஸ்கிரீம் வண்டி, பாதையோரத்துக் கடைகளில் சங்குமாலை, பாசிமாலை, சங்கு, மான்கொம்பு என்று விற்பவர், கைத்தொழிற் பொருள் விற்போர், சுருங்கச் சொன்னால் சதுக்கப்பூதம் ஒன்றுதான் பாக்கி.

தூரத்தில் கப்பல்களில் எல்லாம் விளக்குப்போட்டுவிட்டார்கள். நிறைய நின்றன. சுந்தரண்ணன் சொன்னது நினைவு வந்தது– பெர்த் கிடைக்காமல் ஸ்ட்ரீமில் நிற்பவை என. பத்துப்பதினைந்து நாட்கள் கூட இப்படி நிற்க வேண்டியது இருக்குமாம்.

கப்பலில் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆசை சண்முகத்துக்கு நெடுங்காலமாக உண்டு. சாண்டில்யனின் யவனராணி படித்த நாளில் எழுந்த ஆசை. சுற்றிலும் தண்ணீர் இருக்க நடுக்கடலில் மிதக்கும்போது எவ்வளவு நன்றாக இருக்கும்? பம்பாயில் இருந்து கோவாவுக்குப் கப்பலில் போகலாமாம். இயற்கைக் காட்சிகள் மிக அற்புதமாய் இருக்குமாம். வேலை கிடைத்துச் சம்பளம் தாராளமாய் வாங்கத் துவங்கிய பிறகு ஒரு முறை விடுமுறையில் கப்பலில் கோவா போக வேண்டும்.

வயிறு பசித்தது. சாப்பிடப் பிடிக்கவில்லை என்றாலும் பசிக்குக் குறைவில்லை.

நாளை ஐயரைப் பார்க்கப் போகவேண்டும். போய்த் திரும்புகையில் மாட்டுங்கா ரோட்டில் இறங்கி நெடும்பாலம் கடந்து வந்து கிங்சர்கிளில் ஒரு கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் இருக்கும் மலையாளி மெஸ்ஸில் சாப்பிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அங்கு பூரி, கிண்ணத்தில் சோறு, கிண்ணத்தில் ரசம், கிண்ணத்தில் கூட்டு, கிண்ணத்தில் பொரியல் என்ற சிங்காரிப்புகள் இல்லாமல் நிறைய பெரிய புழுங்கலரிச் சோறுபோட்டார்கள். மீன்குழம்பு ஊற்றினார்கள். ஒரு ரூபாய்தான். பொரித்த மீனோ, முட்டைக்கறியோ, தயிரோ எஸ்ட்ராவாகத்தந்தார்கள். முப்பது பைசாவுக்கு.

வீட்டில் இருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் வேலை கிடைத்ததா, உடம்பைப் பார்த்துக்கொள்,

சுந்தரத்தை, ஐயரைக் கேட்டதாகச் சொல்லு. இங்கு வயல் களைபறி நடக்கிறது. உரம் எடுத்துப் போட வேண்டும் போன்ற விவகாரங்கள்.

ஒன்றரை மாதம் ஆகி விட்டது. பம்பாய் வந்து இன்னும் வேலை கிடைக்கவில்லை என்றெழுத வெட்கமாக இருந்தது.

O

அன்று கிறிஸ்துமஸ் விடுமுறை. எல்லோருக்கும் லீவு. எனவே ஐயரின் வீட்டுக்குப் போனான் சண்முகம்.

"வாடா... எப்படி இருக்கிறாய்?" அன்று ஐயர் பேச்சில் ஒரு உற்சாகம் காணக் கிடைத்தது. "உனக்கு ஒரு வழி பண்ணியாச்சுடா... ரே ரோடு தெரியுமா உனக்கு? வி.டியிலிருந்து ஆர்பார் பிராஞ்சு ட்ரெயின் பிடிக்கணும். ஒண்ணாம் நம்பர் அல்லது ரெண்டாம் நம்பர் பிளாட்பாரத்திலே குர்லா, மான்கூர்டு, பாந்தரா அல்லது செம்பூர் வண்டி இருக்கும். மஸ்ஜீத் பந்தர், சென்டர்ஸ் ரோடு, டாக்யார்ட் ரோடு, ரேரோடு... நாலாமத்த ஸ்டேசன். இறங்கி வெளியே ரோட்டுப் பக்கம்வா. வந்து அட்லஸ் மில்ஸ் காம்பவுன்ட்டுண்ணு கேளு. அதுக்கு உள்ளே ஆர்.எச்.தாம்சன் அன்ட் கம்பனி லிமிடெட் இருக்கும்... ஆமா ... உள்ளே போயி டிக்மானிண்ணு ஒருத்தர்– ஓர்க்ஸ் மேனேஜர்– இருப்பார். அவர் கிட்டே இந்த லெட்டரைக் குடு... சம்பளம் நீ ஒண்ணும் கேக்காண்டாம். கேட்டா சாமிகிட்டே பேசிக்கிடுங்கோண்ணு சொல்லு... இந்த வாரம் போகாதே... ஒண்ணாந்தேதி சண்டே... திங்கட்கிழமை போ... ஆமா..."

ஐயர் தந்த கவரை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டான். முகவரியை மனதில் நன்றாகப் பதித்துக் கொண்டான். கொஞ்சம் உற்சாகம் தோன்றியது. கூடவே ஒரு அவநம்பிக்கையும், நிறையத்தரம் இப்படிப் போய்ப் பார்த்து ஏமாந்தது உண்டு.

அன்று ஐயர் வீட்டிலேயே சாப்பிட்டான். அவர்களுடன் சரி சமானமாக உட்கார்ந்து சாப்பிடுவது என்னவோ போல் இருந்தது. எல்லோருக்கும் டைனிங் டேபிளில் தட்டு போடப்பட்டிருந்தது. டம்ளரில் இருந்த தண்ணீரைச் சற்று வலது கையில் சரித்து சோற்றைச் சுற்றி விட்டு ஏதோ மந்திரம் முணுமுணுத்து தண்ணீரை உறிஞ்சி, மூன்று முறை சோற்றுப் பருக்கைகளை எடுத்து வாயில் வைத்து விட்டுச் சாப்பிடத் துவங்கினார்கள்.

தன்னுடைய அப்பா இப்படி எல்லோருடனும் உட்கார்ந்து

சாப்பிட்டிருக்க முடியாது என்று நினைத்தான் சண்முகம். ஐயர் அகரத்துக்குப் போனால் துண்டை விரித்துத் தரையில் உட்காருவார். குடிக்கக் காப்பியோ மோரோ கொடுத்தால் போணியைத் தூக்கி அண்ணாந்து குடிக்க வேண்டும். பிறகு அதைக் காட்ட வீட்டுப் பெண்களில் ஒருத்தி தண்ணீர் விடுவாள். போணியை அலம்பி மூலையில் கவிழ்த்து வைக்க வேண்டும்.

ஐயரின் கொழுந்தியாள் கல்யாணத்துக்கு, சாமான்கள் வாங்கவும் சந்தைக்குப் போகவும் மற்ற எடுபிடி வேலைகளுக்குமாக வண்டியையும் மாடுகளையும் கொண்டு போட்டுக் கொண்டு ஐயர் வீட்டு வாசலில் அப்பா பழிகிடையாகக் கிடந்தது–

மாடுகளுக்கானால் பிரச்னை இல்லை, மனிதனுக்கு?

வியர்த்து வடிய, தொப்பை சரிய, பூணூல் அலைய, உள்ளூர் பிராம்மணர்கள் எல்லாம் சாப்பிட்ட பிறகு, கொட்டுக்காரன், குடிமகன், வண்ணான் ஆகியோரோடு உட்கார்ந்து சாப்பிட்டதை அப்பா பலமுறை சொன்னதுண்டு. சில சமயம் சண்முகத்துக்குத் தோன்றும்– நம் வீட்டுக் கல்யாணங்களில் நம் வயலில் வேலை செய்பவர்களுக்கும் இப்படித்தானே சாப்பாடு போடுவது. இது இந்த அப்பாவுக்கு உறைக்குமா என்று.

“கூச்சப்படாம நிறையச் சாப்பிடுடா... இன்னும் கொஞ்சம் சாம்பார் போடட்டா? அப்பளம் எடுத்துக்கோ....”

சண்முகத்தின் கண்கள் கலங்கின. நீண்ட நாட்களுக்குப் பிறகு நிறையச் சாப்பிட்டான். ஐயர் வீட்டுக்கு எப்போது வந்தாலும் ஏதாவது சாப்பிடத்தராமல் அனுப்பமாட்டார்கள். அன்று கொலாபா திரும்புகையில் வயிறோடு மனமும் நிறைந்திருந்தது.

இரண்டாம் தேதி, ரேரோடு கம்பனிக்குப்போனான். அதுவரை சின்னஞ்சிறு கம்பனிகள், கிளைகள், தலைமை அலுவலகங்கள் என்று அலைந்திருக்கிறானே தவிர தொழிற்சாலைகள் பக்கம் போனதில்லை. ரயிலில் போகும்போதும் வரும்போதும் சில தொழிற்சாலைகளை வெளியே இருந்து பார்த்திருக்கிறான். ஒரு முறை தாணாவில் செகன்ட் போக்ரான் ரோட்டுக்குப் போனபோது சில தொழிற்சாலைகளைப் பார்த்திருக்கிறான். வால்டாஸ், இனார்கோ, டபிள்யூ.ஜி.ஃபோர்ஜ் எனச் சில. தாணா போகும் வழியில் சில பெரிய தொழிற்சாலைகள். காத்ரெஜ், கிராம்டன் கிரீவ்ஸ், கெஸ்ட் கீன் வில்லியம்ஸ் என. பம்பாயின் உள்ளே

பெரிய பெரிய மில்கள் சிலவற்றை பஸ்ஸில் போகும்போது பார்த்ததுண்டு. டான் மில்ஸ், மொரார்ஜி மில்ஸ், கோஹினூர் மில்ஸ் என– அரக்கத்தனமான ஆண் குறிகளுடன் வானத்தைப் புணர நினைக்கும் புகை போக்கிகளுடன்.

அதுபோல் ஒரு பெரிய தொழிற்சாலையாக ஆர்.எச்.தாம்சன் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு போனான்.

ரேரோடு ஸ்டேஷனில் காலை எட்டே முக்காலுக்கு இறங்கி வெளியே வந்ததும் ரோட்டின் இருபுறமும் கந்தலால் ஆன குடிசைகள். மூத்திர நாற்றம். காலையில் கழித்த புது மலம். ரோட்டில் சாரிசாரியாய் லாரிகள்...

அலுமினியப் பாத்திரங்களை மண்போட்டுத் துலக்கிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்.

சிவப்பு நிறத்தில் பார்க்க அழகாகவும் தின்னச் சுவையற்றும் இருக்கும் செந்நவரை மீன்களின் தலையைக் கொய்து குடலை உருவி எறிந்து வால் நறுக்கிக் கழுவிக்கொண்டிருந்தாள் வேறொரு பெண்.

குடிசை வாசலில் உட்கார்ந்து பிளாஸ்டிக் பக்கெட்டில் இருந்த தண்ணீரைத் தகரடப்பாவில் கோரி விட்டுக் குளித்தாள் இன்னொரு பெண்.

ஒருத்தி மணைப்பலகைமேல் அமர்ந்து கால் நீட்டி, சாரியை முட்டுவரைச் சுருட்டி, முழங்காலில் குழந்தை ஒன்றை மலம் கழிக்கப்பிடித்தாள். மாந்தம் வந்தாற்போன்று மாக்கரைசலாகப் பீய்ச்சியது குழந்தை.

நிறையக் குடும்பங்கள் முஸ்லீம்களாகத் தெரிந்தன.

ஒரு குடிசையின் முன்னால் அலுமினிய மூடியைத் தூக்கி எறிவதுபோலச் சோறு கொதித்தது. ஒரு குடிசை முன்னால் இட்டிலி வியாபாரி உட்கார்ந்து தட்டில் ஏழெட்டு இட்லிகள் வைத்து ஒரு புறம் சாம்பாரும் மறுபுறம் சட்டினியும் விட்டுக் கொண்டிருந்தான். ரூபாய் நோட்டை நீட்டியவாறே இன்னும் சட்டினி விடச்சொன்னது ஒரு சிறுபெண். இரண்டு பேர் பல் தேய்க்க ஒருவன் ஒருகையில் பீடியும் மற்றகையில் சாயாவுமாக இருந்தான். சாக்கடை கொப்பளித்துப் பாய்ந்து ரோட்டோரம் கால்வாய் போல் ஓடியது.

அட்லஸ் மில்ஸ் காம்பவுன்டை விசாரித்ததில் பெரியதோர் லாரி

நுழையும் குகை போன்ற ஒன்றைக் காட்டினார்கள். உள்ளே சருகும் கூளமும் செத்தையுமாய் இருந்த பாதை. இருபுறமும் நாலைந்து சின்னஞ்சிறு கம்பனிகள். நடுவில் சாக்கடை நீரோட்டம். மாமாஜி இன்டஸ்ட்ரீஸ், சயிஃபீ எலக்ட்ரோ பிளேட்டர்ஸ், ஸ்பீட் வே புராடக்ஸ். நான்காவது வாசல் எச்.ஆர்.தாம்சன். வாசலில் புராதன உடையில் ஒரு கூர்க்கா. காக்கியில் சட்டை, பேண்ட், தொப்பி, கையில் மூங்கில் தடி.

ஐயர், டிக்மானிக்குத் தந்த கடிதத்தைக் கூர்க்காவிடம் காட்டி– அதில் அவன் என்ன படித்தானோ– உள்ளே போனால் ஒரு சோபா. அதை அடுத்து ஒரு கேபின். வெளி வாசலைப் பார்த்து ஸ்டோர்ஸ் வாசல். கேபின் வாசலைப் பார்த்து உள்ளே நுழையும் பெரிய வாசல்.

மணி ஒன்பது ஆனதுக்கு அடையாளமாய் செண்டை மணியில் கூர்க்கா சுத்தியால் டாண் டாண் எனத் தட்டினான்.

யாரைப் பார்ப்பது என்பதறியாமல் கேபின் பக்கத்தில் இருந்த சோபா பக்கம் நின்று சுற்றிலும் பார்த்தான். உள்ளே நிறைய மரப்பலகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சில பெரிய பெட்டிகள் வேலை முடியப் பெறாமல் கிடந்தன. ஒரு வேளை மரக்கடையாக இருக்குமோ என்று தோன்றியது.

உட்கார்ந்து பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தவனிடம் வெள்ளையாக, உயரமாக, ஒல்லியாக, பையன் போலிருந்த ஒருவன் வந்து நின்றான்,

என்ன விஷயம் என்று கேட்டவன் முகத்தில் நல்லதல்லாததோர் புன்னகை சுளித்தது. "இருங்கள்... டிக்மானி வருவார்..."

மரப்பலகைகள் சேமிப்புக் கிடங்கைத் தாண்டி இன்னுமோர் இடம் இருக்கும் போலிருந்தது. யார் யாரோ வந்தார்கள், போனார்கள். ஸ்டோர் உள்ளிருந்து உதிரிகள் நிறைந்த பெட்டியை இருவர் தூக்கிச் சென்றனர். உள்ளே அடுத்து ஸ்டவ் எரியும் சத்தமும் பீங்கான் கோப்பைத் தட்டுக்களின் அரவமும்.

எல்லோருக்கும் சாயா விநியோகம் நடந்தது. கம்பெனியே தருகிறதோ என்னவோ? அந்த நெட்டைப் பையன் கையைக் காட்ட சண்முகத்துக்கும் ஒரு கோப்பை வந்தது. சூடு நாக்கைச் சுட்டது. இஞ்சி தட்டிப் போட்ட வாசனை கம்மென்று இருந்தது.

வெளியே காரொன்று வந்து நிற்கும் சத்தம். கோட்டு, டை,

கையில் பெட்டி சகிதம் உயரமான வாட்டமான மனிதர் ஒருவர் மிடுக்குடன் உள்ளே வந்தார். உள்ளே வேலைச் சத்தத்தில் ஒரு சுறுசுறுப்பு. இவர்தான் டிக்மானியாக இருத்தல் வேண்டும்.

கேபின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனதும் ஊதுபத்தி கொளுத்திய புகை கும்பலாக, ஏர்கண்டிஷனரின் மெல்லிய ரீங்கரிப்பு.

நெட்டைப் பையன் உள்ளே ஒரு தரம் போய் வந்தான். சடாரெனக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து தொழிற்சாலையின் உள்ளே போனார் டிக்மானி. மரப்பெட்டிகள் செய்யும் இடத்தில் 'ரீங்ரீங்' என மரமறுக்கும் மெஷின் ஓட்டும் சத்தம். 'தடாக் தடாக்' என அறுத்த துண்டுப்பலகைகள் தரையில் வந்து விழும் ஓசை உள்ளே மெஷின்களின் அரவம்.

சற்று நேரத்தில் டிக்மானி திரும்ப வந்தபோது சண்முகம் எழுந்து நின்றான். அவர் சற்று நிதானித்த போது கவரை நீட்டினான். பிரித்துப் பார்த்து மேலோட்டமாகப் படித்துவிட்டு உள்ளே கூப்பிட்டார்.

இருக்கச் சொல்லவில்லை.

சில்லறை விவரங்கள் கேட்டார். சர்டிபிகேட்களைப் பார்க்கவில்லை. "மிஸ்டர் ஆச்சார்யா" என்று இன்டர்காமில் அழைத்தார். நெட்டைப்பையன் வந்து நின்றான்.

"இவனைத் திங்கட்கிழமை முதல் வேலைக்கு வரச்சொல்லு கிறேன்... ஏதாவது வேலை பிரித்துக் கொடு..."

"எங்கே அக்காமடேட் செய்வது?"

"ராவுத் பக்கத்தில் ஒரு நாற்காலி போடு..."

ஆச்சார்யா இவனை ஒரு தினுசாகப் பார்த்துவிட்டுப் போனான். வணக்கம் சொல்லிவிட்டு வெளியே வந்தான். வெளிக்காற்றில் சூடு தெரிந்தது. ஆச்சரியாவிடமும் பணிவாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

சாயங்காலம் ஐயரிடம் போய் விபரம் சொன்னான். "சரி... ஒழுங்கா வேலை செய்... இனிமேல் அடிக்கடி வரணும்னு இல்லே... அவசியப்பட்டால் வா..."

ஜனவரி எட்டாம் தேதி சண்முகத்துக்கு 'வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நாள்.' அன்று தான் முதலாவது வேலைக்குப் போனான்.

கொலாபாவில் இருந்து மூன்றாம் நம்பர் பஸ் பிடித்து, வி.டியில் இறங்கி ரயில்வே சீசன் டிக்கட் வாங்கி, ஆர்பர் பிராஞ்சு ரயில் பிடித்து ரேரோட்டில் இறங்கினான். ஒன்பதடிப்பதற்குள் போய்விட்டான். ஒவ் வொருவராய் வந்து கொண்டிருந்தனர். சிறிய கைப்பை வைத்துக் கொண்டு, துணிப்பையில் மடக்கிய சாப்பாட்டு டப்பாவுடன், தோள்பை போட்டுக்கொண்டு, மெடிகல் ரெப் போல பை வைத்துக் கொண்டு—

ஆச்சர்யா வந்த பிறகு ஸ்டோர்ஸ், கேபின் சாவிகளை எடுத்துக் கொடுத்தான். திறந்தபின் பெண்ணொருத்தி வந்து பெருக்கி விட்டுப் போனாள். பியூன் ஒருவன் மேஜை நாற்காலிகளைத் துடைத்தான். வேலை நாள் துவங்கியது.

வெளியே மரப்பெட்டிகள் கிடந்த பேக்கிங் பிரிவில் நீண்ட மேஜைமுன் சுவரைப் பார்த்துக்கொண்டு இருவர் இருந்தனர். மூன்றாவது ஆளாக சண்முகம் உட்காரந்தான். மேற்கு ஓரத்தில் இருந்தவன் எஸ்.எஸ்.டெலெ—சிவாஜி சந்து டெலெ. அடுத்தது எஸ்.எஸ்.ராவுத்— சத்யவான் சிவ்ராம் ராவுத். இருவரும் மராட்டியர்.

சிவாஜி முன்னால் மேஜையில் ஒரு மஸ்டர்புத்தகமும் கொஞ்சம் சிவப்பு நிறக்கார்டுகளும் கிடந்தன. கார்டுகளை வரிசை எண்படி அடுக்கி எல்லாவற்றிலும் நேரம் குறித்துக்கொண்டிருந்தான். ராவுத் முன்னால் இ.எஸ்.ஐ.சி. என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட தோர் புத்தகம் விரிக்கப்படாமல் இருந்தது.

யாரும் வேலை தொடங்கியதாகத் தெரியவில்லை.

போகும் போதும் வரும்போதும் தொழிலாளர்கள் அந்தப் புதிய சேர்க்கையைப் பார்த்துக் கொண்டு போனார்கள். சற்று நேரம் பொறுத்து சாயா வந்தது. பிறகு ஆச்சார்யாவிடம் சென்று நின்றான் சண்முகம். இவனுக்குப் பெரியதோர் சலுகை செய்வதாக நினைத்துக் கொண்டு இரு சொற்கள் உதிர்த்தான்.

கேட்பாஸ் தயார் செய்வது,

செல்லான் எழுதுவது,

ஆக்டராய் இன்வாய்ஸ் எழுதுவது,

டெஸ்பாட்ச் ஆகப் போகும் பெட்டிகளில் அடிக்க லேபில் தயார் செய்வது,

உள்ளே வரும் உதிரிச் சாமான்களை எண்ணுவது...

பத்து நாட்கள் ஆகிவிட்டன.

இன்னும் நாள் பூராவும் நாற்பது பேருக்கான அட்டன்டென்ஸ் போடுவதிலும், முந்தின நாள் வராத நாலைந்து பேருக்கு லீவு பாரம் நிறைப்பதிலும், லேட்டாகி வந்த, சீக்கிரம் போக வேண்டியதிருந்த மூன்று நான்கு பேருக்கு மஞ்சள் பாரம் நிறைப்பதுமாக இருந்தான் சிவாஜி. ராவுத்துக்கு முன்னால் இ.எஸ்.ஐ.சி. என்றெழுதிய புத்தகம் தினமும் இருந்தது. டிக்மானி இருந்தால் அது திறந்திருக்கும். இல்லாத போது மூடியிருக்கும் டிக்மானி தினமும் இரண்டு மூன்று மணி நேரம் இருந்தார். மீதி அதிகாரம் ஆச்சார்யாதான். செல்லப் பிள்ளை போல் அவன் நடந்து கொண்டான். ஒன்று அவனிடம் எல்லோரும் கொஞ்சிப் பேசினார்கள்; அல்லது கெஞ்சிப் பேசினார்கள்.

உள்ளே இரண்டு வகை மெஷின்கள் ஒன்றித்தனர். உதிரிச் சாமான்களை ஆமதாபாத், நவ்சாரி, சுரேந்திர நகர் என்றும் மீதிச் சாமான்களை பம்பாயில் சின்னக்கம்பனிக்காரரிடமும் வாங்கி இங்கே மெஷின் கூட்டினார்கள். டெக்ஸ்டைல் வைன்டிங் மெஷின்கள். ஆறு ஸ்பின்டில்கள் கொண்ட தாம்சன் பிரிசிஷன் வைன்டர். இதில் நூல் ட்யூப் அல்லது சிறிய மூன்று இஞ்சு பேபி கோன் சுற்றலாம். இரண்டாவது நூற்றிருபது ஸ்பின்டில்கள் கொண்ட தாம்சன் கோனர்ஸ்.

எல்லாம் கூட நாற்பது பேர் உள்ள பேக்டரி அது. ஷாப் அன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் சட்டப்பிரிவு சட்டமிடப் பட்டுத் தொங்கியது. ஞாயிறு விடுமுறை, வேலை நேரம் 9–5.15, மதிய உணவு 1.00 – 1.30. சம்பளநாள் ஏழாம் தேதி என்ற விபரங்கள் ஒரு பலகையில் எழுதப்பட்டிருந்தது.

ஆச்சார்யா உட்பட ஸ்டோர் மற்ற கிளார்க்குகள் ஏழுபேர், பேக்கர் நாலுபேர், ஒரு வாச்மேன், ஒரு சூப்பர்வைசர், மூன்று எரக்டர்கள், இரண்டு பெயின்டர், மீதி ஒன்றிப்பு வேலையில்.

ஸ்டோர் ரூம், கேபின், பேக்கிங் செக்ஸன், அசெம்ப்ளி செக்ஷன், மூத்திரம் பெய்ய ஒரு முறி, வாஷ் பேஸின், கை கால் கழுவ ஒரு அங்கணம், குடி தண்ணீர் பானைகள் கொண்ட ஸ்டாண்ட் இவையே தொழிற்சாலை. எட்டு மணி நேரமும் எவருக்கும் வேலை இருந்ததாகத் தெரியவில்லை. ஆச்சார்யா மட்டும் எப்போதும் பிஸியாக இருந்தான். டெல்ஃபோனில் பேசிக்கொண்டு அங்கும் இங்கும் நடந்து கொண்டு,

ஏய் என்று யாவரையும் விளித்துக் கொண்டு, எழுதிக் கொண்டு....

சனிக்கிழமை வேலை அரைநாள். ஞாயிறும் மற்ற பாங்க் விடுமுறை நாட்களிலும் விடுமுறை.

மேற்சொன்ன சில்லறை வேலைகள் போக, உதிரிச் சாமான்களுக்கான விலைப்பட்டியல் ஒன்று தயாரிக்கச் சொன்னான். அதில் ஒரு பதினைந்து நாட்கள்.

ஏழாம் தேதியன்று இருபத்தி நான்கு நாட்களுக்கு நூற்றறுபத்தெட்டு ரூபாய் சம்பளம் தந்தனர்.

மனம் ஒரு தினுசில் இருந்தது. மிட்டாய் வாங்கிக் கொண்டு ஐயரைப் போய் பார்த்தான். ஒரு ஆறுமாதம் இரு பார்ப்போம் என்றார்.

பெப்ரவரி மாதம் பூரா ஓட்ட வேண்டும். இனிமேல் கொஞ்ச நாளைக்கு மாதம் இருநூற்றுப்பத்து ரூபாயில் கதையை நடத்த வேண்டும். உத்தேசமாய்க் கணக்குப் போட்டால் வாடகை இருபத்தஞ்சு, பஸ்சுக்கு பத்து, சீசன்டிக்கட்டுக்கு ஆறு, கம்பனியில் டீக்குப் பதினைந்து, காலையில் சாப்பிட பிரட்பட்டர் ஜாம்வகையறாவுக்கு இருவத்தஞ்சு, மத்தியானம் சாப்பிட முப்பது, ராத்திரி சாப்பிட முப்பத்தேழு. எண்ணெய், சோப்பு, பேஸ்ட், இன்லண்ட் வகையறாவுக்கு ஒரு எட்டு. எல்லாம் சேர்த்து நூற்றறுபதாகக் கொண்டாலும் ஐம்பது மிச்சம். அதை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான்.

தனது சொந்தச் செலவில் கொஞ்சம் சுருக்கினால்தான் ஏதாவது மிச்சம் பிடித்துத் துணிமணி, ஊருக்குப் போய்வர என்ற செலவுக்கு ஆகும்.

ஊர் நினைப்பு வந்ததும் மனதை என்னவோ செய்தது.

✱ ✱ ✱

## ஐந்து

இரவுகளில் நிம்மதியான உறக்கமில்லை. சின்ன அரவங்கள் கூடத் திடுக்கிடவைத்தன. சௌகிதாரின், தார்ரோட்டில் மூங்கில் தட்டு, எந்தப் பசிக்கோ நினைப்பு வந்து ஊளையிடும் ஒற்றைத் தனி நாய், அடுத்திருக்கும் கேரிஸான் இன்ஜினீயரிங் ஓர்க்ஸில்நேரம் கழித்து வந்து நிற்கும் ஆலிவ் பச்சை பெயின்ட் அடித்த ஹெவி ட்ரக்.

எதிர்த்த பில்டிங் சர்தாரின் தொண்டைச் செருமல்...

படுக்கும்போது எல்லாப் பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்து கொள்வான் சண்முகம். முன் வராந்தா பின் வராந்தாவில் இருந்து வெண்டிலேஷன் கண்ணாடி மூலமாய் டார்ச் அடித்துப் பார்த்தால் தெரியாத கோணத்தில் சுவரை ஒட்டிபடுக்கை போட்டிருந்தான். நேவல் குவார்ட்டர்ஸ் எல்லாவற்றிலும் கிடைக்கும் கயிற்றுக்கட்டிலை படுக்கைக்கு அணையாய் சரித்து, அதில் பெட்ஷீட் ஒன்றைக் காயப் போட்டது போல் காமோபிளாஜ் செய்து...

ராத்திரி சாப்பிட்டுவிட்டு நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வருவது. அதிகம் விளக்கை உபயோகிப்பதில்லை. குறைந்த வால்டில் ஒரு மேஜைவிளக்கு. படுக்கும்போது சாவியைக் கொடுத்தால் முன் வராந்தாவில் இருந்து அந்த அறைக்குள் நுழையும் கதவைச் சாத்தி பூட்டிக் கொள்வார் சுர்வே. பாத்ரூம் போகப் பின்புற வாசல் உண்டு. அதை உள்ளே தாளிட்டுக் கொள்வான். காலையில் சுர்வே முன்கதவைத் திறந்து சாவியைக் கொடுத்தபின் பூட்டிக் கொண்டு போவான் சண்முகம்.

சுந்தரண்ணன் ஆண்டு விடுமுறையில் ஊருக்குப்போன பின்பு இதுதான் நடைமுறை. நேவி நகரெங்கும் கடுமையான செக்கிங் நடந்து கொண்டிருந்தது. வீட்டுத் தட்டுப்பாடு காரணமாக ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு குடியிருப்புகள், நேவிக்காரர்களாக இருந்தால் எழுத்துமூலம்

அனுமதிவாங்கிக் கொண்டு வீட்டைப் பகிர்ந்து கொள்ளலாம். சிவிலியன்கள் இருக்க அனுமதி கிடையாது. என்றாலும் ஒளித்தொளித்து பல மலையாளிக் குடும்பங்கள், சில பேச்சலர்கள் இருக்கவே செய்தனர். இதைக் கட்டுப்படுத்துவதற்கென திடீர் திடீரென நள்ளிரவுகளில் -- பன்னிரண்டு மணிக்கோ ஒன்றரை மணிக்கோ நேவல் போலீஸ் பிரிவினர் ரெய்டு நடத்தினார்கள். சோதனை நடக்கும் நாள், நேரம் எல்லாம் மிகவும் ரகசியம்.

சுந்தரண்ணன் ஊருக்குப் போகும் முன்பு பல முறை சுர்வேயிடமும் சண்முகத்திடமும் திரும்பத் திரும்பச் சொன்னார்.

"நான் இருந்தாலாவது பரவால்லே... தம்பியாக்கும், நேத்துத் தான் ஊர்லேருந்து வந்தான்னு சொல்லி சமாளிச்சிருவேன்... கெவனமா இருந்துக்கோ... பொறவு குவார்ட்டர்சை ஸீஸ் பண்ணீருவான்..."

சுர்வே பயந்த மனிதர். அவரோடு கலந்து ஆலோசித்த பின்பே அந்த ஏற்பாடு. எதிர்பாராமல் செக்கிங் வந்து விட்டால் கூட சுந்தரம் லீவில் போயிருக்கிறார், உள்ளே யாரும் இல்லை, சாவியைக் கொண்டு போயிருக்கிறார் என்று சொல்லிச் சமாளிக்கப் பார்க்கலாம்.

உள் மனத்தில் ஒரு பயம் நெருக்கிக் கொண்டிருந்ததால், சீக்கிரம் சுந்தரண்ணன் வந்துவிட்டால் நல்லது என்று தோன்றியது. வரும்போது குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு வருவாரோ என்னவோ? வந்தால் நாலைந்து நாளைக்குள் வேறூரும் பார்த்துப்போக வேண்டியதிருக்கும். இருபத்தைந்து ரூபாய்க்கு இவ்வளவு வசதியுடன் வீடு கிடைக்காது. ஒரு வழியில் பார்க்கப் போனால்— பம்பாயின் நெருக்கித்தள்ளும் பிரச்னைகளில் இருந்து இதுவரை ஒரு பாதுகாப்பு இருந்திருக்கிறது. இனிமேல் தெருவில் இறங்கிப் பார்த்தால் தெரியும்.

வழக்கம்போல் சாப்பிட்டு வந்து படுக்கையைச் சீர் செய்து விட்டு விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான் சண்முகம். கொஞ்ச நேரம் வீட்டு நினைவுகள். கொஞ்ச நேரம் வேலை பற்றிய கனவுகள். கொஞ்சம் குளிராக இருந்தது. ஒரு பெண்ணைப் பக்கத்தில் கிடத்திக் கொண்டு புணர்வது போல் கற்பனை செய்து கொண்டே உறங்கிப் போனான்.

படபடவென வாசல் கதவு தட்டப்படும் சத்தம். அந்த வரிசையில் இருந்த எதிர் எதிரான எட்டுக் கட்டிடங்களிலும் கதவு தட்டும் ஓசை பலவித தாளலயங்களுடன். சுர்வே கதவை திறக்கும் சத்தம். உள்ளே

வந்து பேசும் ஒலிகள். தன் மூச்சே ரைஸ்மில் ஓடுவது போலக் கேட்டது சண்முகத்துக்கு. பூட்டை இழுத்துப் பார்க்கும் சத்தம். மங்கலாக டார்ச் ஒளி உள்ளே விரவியது. நெஞ்சு தண்டவாளத்தில் ஓடும் லோகல் ட்ரெய்ன் போலத் தடதடத்தது. சற்று நேரத்தில் சத்தமில்லை.

பெரிய கண்டத்தில் இருந்து தப்பியதுபோல இருந்தது. இனி நமக்கேது பயம் என்று எண்ணினான்.

அந்த நம்பிக்கை பொய்யாகிப் போயிற்று.

மறுநாள் இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது பின் கதவை யாரோ சுரண்டுவது கேட்டது. சுரண்டலின் அவசரமும் சத்தமில்லாத விளியும்.

எழுந்து விளக்கைப் போடாமல் தப்பரவி நடந்து பின் கதவின் கொண்டியை நீக்கினான்.

"கமான்... கெட் அவுட் த்ரூ த பேக் டோர்... எகெய்ன் தே ஹாவ் கம் ஃபர் செக்கிங்..."

தகவலை மூளை சரியாக வாங்கிக் கொண்டதும், சட்டையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, பேண்டைப் பட்டன் போடாமல் இரண்டு கையாலும் சேர்த்துப் பிடித்து, வெறும் காலோடு வழுக்கும் பின் வாசல் படிக்கட்டில் இறங்கி தாழ்வார இருளுக்கு வந்தான்.

அறையின் வாசலையும் புறவாசலையும் சத்தமில்லாமல் அடைத்து விட்டு முன்வாசல் கதவைத் திறக்கும் சப்தம் கேட்கும்போது சண்முகம் பேன்ட் பட்டன்களைப் போட்டு விட்டு சட்டையை மாட்டிக் கொண்டு மெதுவாக இருளில் நகர்ந்து கட்டிட விளிம்புக்கு வந்தான்.

நேற்று வந்த அதே செக்கிங் பார்ட்டியா அல்லது வேறா? வேண்டுமென்றே இரண்டாவது முறை வந்திருக்கிறார்களா அல்லது நேற்று செக்கிங் நடந்தது தெரியாமல் வந்திருக்கிறார்களா? முன்புறம் பூட்டைப் பரிசோதித்து விட்டுப் போவார்களா? அல்லது பின்புறம் வந்து பார்ப்பார்களா? வந்து பார்த்தால் பின்புற அறைவாசல் திறந்தும், முன்புறம் பூட்டியும் இருப்பதைப் பார்த்து சர்வேயை மடக்கிக் கேட்கமாட்டார்களா? என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன.

திருடன் போல கட்டிட இருளில் மறைந்திருக்கும் அபாயமும் தற்செயலாக நேவல் போலீஸின் டார்ச் ஒளியின் வீச்சு தன்மீது பட்டால்

தப்பிக்க முடியாது என்பதும் கிலியூட்டியது.

இருளோடு மறைவாக நடந்து முகப்போரம் வந்து எட்டிப் பார்த்தான். இரண்டு கட்டிடங்கள் தள்ளி நேவல் போலீஸ் டிரக் ஒன்று விளக்கணைத்து நின்றது. ஏராளமானவர் கட்டிடங்களின் படிக்கட்டுகளில் ஏறி வீட்டுக் கதவுகளை "தட்தட் , தட் தட்" என்று தட்டும் ஒலி தொடர்ந்தும் ஒழுங்கற்றும் விட்டு விட்டும் கேட்டது. வெளியில் சில சென்ட்ரிகள் நின்றார்கள். சிகரெட் முனையில் கனியும் நெருப்புப் புள்ளிகள்...

நிறைய மேகங்கள் இருந்ததால் நிலவு வெளிச்சம் அதிகமாக இல்லை. சிலீரெனக்குளிர்ந்த காற்று தாக்கியது.

மறுபடியும் பின்புறம் வந்து, கட்டிடங்களின் ஓரமாக நடந்து கடைசிக் கட்டிடத்தை அடைந்து, காரிஸான் ஒர்க்ஷாப்பின் வேலியோர இருளில் நின்று எதிர்முனை ரோட்டை நுணுக்கமாகக் கவனித்து அடர்ந்த மரங்களின் இருளில் நடந்து போனான்.

நேவி நகரின் கிழக்கு நுழைவெல்லை அது. அங்கே யாரும் இல்லை. இரண்டு ஆலமரங்கள் கவிந்த இருளில் நின்று நெஞ்சுப் படபடப்புத் தணிய, எங்கே போவது என்று யோசித்தான்.

பஸ்டான்டு பக்கம் போகலாம் என்று தீர்மானித்து மெயின் ரோட்டுக்கு வந்தான் சண்முகம். ஆள் நடமாட்டமே இல்லை. மெதுவாகப் பஸ் டெர்மினஸ் பக்கம் நடந்தான்.

ரோட்டோரம் காய்கறி, பழ வண்டிகள் கோணிச் சாக்கால் பொதிந்து சுற்றப்பட்டு நின்றன. வண்டியின் அடியிலேயே கோணி விரித்து, அதன் மேல் ஷோலாப்பூர் சமுக்காளம் விரித்து, கட்டிக் கம்பளியால் மூடிப் பொதிந்து கொண்டு படுத்திருந்த பையாக்கள்...

ரோட்டின் மேற்கு முனையில் டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபன்டமென்டல் ரிசர்ச் இருப்பதால் அதிலிருந்து ஆஃப்கான் சர்ச் திரும்புவது வரை நேரான சிமன்ட் ரோடு. இருபுறமும் கடப்பா கல் பாவிய ஆறடி அகல நடை பாதை. ஓரங்களில் செஞ்சிவப்பில் கொத்தாய்க்கனலும் பூக்கொள்ளும் கொன்றை மரங்கள்....

குளிரும் இருளும் தவிர வேறு துணையற்ற இரவு.

இருபுறமும் இருந்த கட்டிடங்களில் பாத்ரூம் விளக்குகள்

உதிரியாய் எரிந்து அணைந்தன.

டி.ஐ.எஃப். ஆரில் இருந்து ஜீப் ஒன்று புறப்பட்டுப் போயிற்று. வேகமான அதன் டயர்கள் சிமன்ட் ரோட்டில் ஓடுகையில் சர்ரென்ற ஒலி, நிசப்தத்தில் ஒரு சுவாரசியம் ஏற்படுத்தியது

கட்டி முடிக்கப் படாத ஸ்மிதா மார்க்கெட் முன்பு கொத்து வேலைக் கூலிகளான தெலுங்குக் காமாட்டிகள் நிறையப் பேர் உறங்கினர். பெரிய மூட்டை போலத் தெரிந்த சமுக்காளப் பொதியலின் உள்ளே கணவன் மனைவிகள் இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டு உறங்குவார்கள் போலும்.

சற்றுத்தள்ளி, குப்பை செத்தைகள் போட்டு வளர்க்கப்பட்டிருந்த தீயைச்சுற்றிக் கொஞ்சம் பேர் உட்காந்து சுருட்டுப் புகைத்துக் கொண்டும் தூங்கி விழுந்து கலைந்து கொண்டும் இருந்தனர். பேச்சுச் சத்தம் இல்லை. கைகளை தீச்சுவாலையின் மேல் விரித்துக் காட்டுவதும் பிறகு கம்பளிப் போர்வைக்குள் இழுத்துக் கொள்வதுமாய் எவ்வளவு நேரம் இருப்பார்களோ?

படைகுருவி வருவதுபோல் ஒரு குளிரலை கடந்தது. வெடுக்கென உடம்பை உதறிக்கொண்டு, வளர்த்திருந்த தீயருகே சென்று குத்த வைத்து உட்கார்ந்தான். மௌனமாய் நிமிர்ந்து பார்த்த ஒருவன் சற்று நகர்ந்து இடம் கொடுத்தான். கைகளைத் தீ நாக்குகள் அருகில் நீட்டியவாறே சண்முகம் அவர்கள் முகங்களைப் பார்த்தான். பயந்து போய் தலையை உதறிக்கொண்டான்.

தள்ளிப் படுத்திருந்த கூட்டத்தில் யாரோ உளறும் சத்தம். தெலுங்கு தெரிந்தால் அதற்குப் பொருள் தெரியலாம்.

குத்தவைத்திருந்து கால்கள் கடுத்ததால், குளிரும் சற்றுப் பின்வாங்கி இருந்ததால் எழுந்து நடந்தான்.

பஸ் டெர்மினஸ் வரை வந்தாயிற்று. அங்கும் எந்த அரவமும் இல்லை. எதிரே இருந்த டி.ஐ.எஃப்.ஆர் ஆஸ்டலில் சில அறைகளில் விளக்குகள் எரிந்தன.

அதிகநேரம் தனியாக இங்கு நின்று கொண்டிருப்பது சரியல்ல. இந்தக் குளிரில் நடந்து கொண்டிருக்கவும் மனமில்லை. மணி என்ன இருக்கும்? இன்னும் ஒரு மணிக்கும் அதிகமாகவே ஆகும் செக்கிங் முடிய.

போஸ்ட்டாபீஸ் வராந்தா குளிருக்கு அடக்கமாக இருக்கும். போய் உட்காரலாமா என்று நினைத்தான். நேவி நகர் போஸ்ட்டாபீஸ் ஒரு கிராமத்து வீடு போல முன்பக்கம் வராந்தாவை அடக்கி கைப்பிடிச்சுவர். உள்ள போனால் முதுகைச் சுவரில் சாய்த்துகால் நீட்டி உட்காரலாம். உட்கார்ந்தபடியே ஒரு மணி நேரம் உறங்கவும் செய்யலாம்.

உள்ளே நுழைந்தது போது உலகின் நெருக்கடிகள் புரிந்தது. வாசலை, நீக்கி மீதி இடத்தில், வலது இடது புறங்களில் சுருணை சுருணையாக மனிதர்கள் உறங்கினார்கள். விளக்கொளியில், சிலர் தலைமாட்டில் மூடியற்ற தகர டப்பாக்கள், கைத்தடிகள் தெரிந்தன. தலையில் துணி மூட்டைகள்.

உள்வாசல் கதவில் சாய்ந்து கால்களை நீட்டினான் சண்முகம். கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தது.

நேரம் போகப் போகக் குளிர் உறைக்க ஆரம்பித்தது. பேன்ட் துணிக்கு வெளியே நீட்டிக்கிடந்த பாதங்கள் குளிரை அஞ்சல் செய்தன. கைகளை வசமாக அக்குளுக்கிடையில் கொருத்துக் கொண்டாலும் காது மடல்கள், முகம், உதடுகள் விறைத்தன. மூக்கு நேரடியாய்க் குளிரை உறிஞ்சியது. ரொம்ப நேரம் இப்படியே இருக்க முடியாது. பன்றியின் வாலாய் மனதில் சுழிகள்.. குளிர் குறையவில்லை. படுத்திருந்த ஒருவன் எழுந்து, தலைமாட்டில் தடவி பீடி பற்ற வைத்தான். தீக்குச்சி ஒளியில் குறைபட்ட விரல்களின் மழுங்கல் பள பளத்தது.

அருவருப்பாய் இருந்தது சண்முகத்துக்கு. உடம்பெங்கும் அரிப்பது போல ஒரு உணர்ச்சி. எழுந்து இலக்கின்றி நடக்க ஆரம்பித்தான்.

குளிரை விலக்குவதற்கு என வேகமான நடை. ஆஃப்கான் சர்ச்சுக்கு முன்பே இடதுபக்க ரோட்டில் திரும்பி கஃபரேடு ரோட்டில் நடந்தான். குளிர்விலகி சற்று கதகதப்பு ஏற்பட்டது. சுகமாக இருந்தது, 'நூக்' பங்களாவைத் தாண்டி, பேக்பே ரெக்லமேஷனில் கொத்தாய் எழும்பிக்கொண்டிருக்கும் ஸ்கை ஸ்கிரப்பர்களைத் தாண்டி ரோட்டின் வடக்கு எல்லையில் போய் நின்றான்.

தேவிநகர் நோக்கித் திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

O

வேலையில் சேர்ந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. கிட்டத்தட்ட ஐந்து ஆண்டு பர்ச்சேஸ் ஆர்டர்களைப் பார்த்துப் பார்த்து பெரியதோர் விலைப்பட்டியல் தயாரித்து முடித்திருந்தான். உதிரிச் சாமான்களின் பட்டிகை எண்கள் வரிசைப்படி ஒன்றும் விற்பனையாளரின் பெயர் வரிசைப்படி ஒன்றும். காகிதக் குப்பைகள் போலக் கிடந்தவற்றைச் சீர் செய்து ஃபைல்களை வரை முறை செய்தான். ஆர்டர்கள், இன்வாய்ஸ் காப்பிகள், உள்ளூர் விற்பனையாளர் செல்லான்கள், வெளியூர் விற்பனையாளர் செல்லான்கள், கொட்டேஷன்கள், தலைமை அலுவலகக் கடிதங்கள், வாடிக்கையாளர் கடிதங்கள்....

இந்தத் தொழிற்சாலை தொடங்கி இரண்டு ஆண்டுகளே ஆகியிருந்தன. யாரும் முயற்சி எடுத்து வகை செய்ததாகத் தோன்றவில்லை. கொஞ்ச நாள் இதில் ஈடுபட்டால் விவகாரங்களைத் துப்புரவாக்கி விடலாம் என்று நினைத்தான் சண்முகம்.

ஆனால் இவன் வேலைகளை ஆச்சாரியா அங்கீகரித்ததாகத் தெரியவில்லை.

ஆச்சாரியாவுக்கு இருபத்தோரு வயசிருக்கும். மங்களூர்க்காரன். பேச்சில் இன்னும் மழலை இருந்தது. மீசை செம்பட்டையாக வந்தது. தலைமை அலுவலகத்தில் அவன் மாமா இருந்தார். அவர் செல்வாக்கில் பதினொன்று தேறிய உடனேயே வந்து சேர்ந்தவன். டிக்மானியிடம் அவனுக்கு நிறையச் சலுகை இருந்தது. எனவே சூபர்வைசர்களும் தொழிலாளர்களும் ஆச்சாரியாவை அஞ்சினர். டிக்மானி தவிர மற்றவர்க்கெல்லாம் அவன் சொல்தான் கடைசிச் சொல்.

வயதில் சிறுவனாக இருந்தாலும் நிறைய வேலை செய்தான். அபார ஞாபக சக்தி. வேலை வாங்க, விரட்டத் தெரிந்திருந்தது. நிறையப் பொறுப்புகள் இருந்தன. ஊடேயூடே சிறுபிள்ளைத் தனங்கள் செய்தான்.

சண்முகம் வந்தது முதலே ஆச்சாரியாவுக்கு ஒரு கவலை ஏற்பட்டிருக்க வேண்டும். முதற்காரணம் இவன் இரண்டாவது தென்னிந்தியன். இரண்டாவது இவன் கல்வித்தகுதிகள். மூன்றாவது இவனும் அக்கறை எடுத்துக் கொண்டு வேலை செய்தான்.

மனமின்றியே கேள்விகளுக்குப் பதில் சொல்வான் ஆச்சாரியா.

தேவைக்குமேல் சண்முகத்துக்குத் தெரியவேண்டியதில்லை என்பதில் எச்சரிக்கையுடன் இருந்தான். இதைப்பார்த்து இதில் எழுது என்பானே தவிர சமாச்சாரம் என்ன என்று தெளிவாகச் சொல்வதில்லை. சில வேலைகளைத் தானே செய்வான். அவன் செய்யும் போது கிட்டே போனால் மூடி வைத்துவிட்டு என்ன என்பான். மற்றவர்களுக்கு இதில் ஒன்றும் அக்கரைகள் இல்லை. மேற்கொண்டு வேலை சொல்லாமல் இருந்தால் சரி என்று மனோபாவம். அப்படியொன்றும் பிறர் புரிந்து கொள்ள முடியாத அட்டாமிக் ஃபிஸிக்ஸ் சமாச்சாரங்கள் அல்ல அவை. எனவே இரண்டு மூன்று மாதங்களில் வேலைகளின் அமைப்புப் புரிந்துவிட்டது சண்முகத்துக்கு. சும்மா இருப்பது எப்படி என்று தானே வேலைகளைச் செய்ய முயன்றான். கோடவுன் அட்வைஸ் எழுதுவதும், கார்டெக்ஸ் போஸ்ட் செய்வதும், பின்கார்டு போஸ்ட் செய்வதும், ரிட்டர்ன் என்ட்ரி, லோகல் பர்ச்சேஸ் ஆர்டர் செய்வதும் பெரிய தொழில் நுணுக்கங்கள் அல்ல. ஆனால் சண்முகம் சில செய்ய முற்படும் போது ஆச்சாரியா கண்களில் பகை தெரிந்தது. நட்பின் தடயங்கள் எப்போதும் இல்லை. சண்முகம் சாப்பிடவோ, சிறுநீர் கழிக்கவோ செல்கையில் இளக்காரமாய்ப் பேசினான் போல் தெரிந்தது.

இங்கே எப்படிச் சமாளிக்கப் போகிறோம், எங்ஙனம் நிலைக்கப் போகிறோம் என்ற அச்சம் தோன்ற ஆரம்பித்தது அவனுக்கு.

பிரட் சரியாகக் கிடைப்பதில்லை. பேக்கரிகளுக்கு ரேஷனில் மாவின் அளவைக்குறைத்ததுவே காரணம் என்று சொன்னார்கள். கிடைக்கும் ஆட்டாவில் பிரட் செய்து விற்பதைவிட பிஸ்கட் செய்து விற்பதுதான் லாபம் என்றார்கள்.

முன்பெல்லாம் தேவி நகரின் கடைகளில் எப்போதும் பிரட் இருக்கும். பிரிட்டானியாவும் இருக்கும் மார்டனும் இருக்கும். பிரிட்டானியாவை விட மாடர்ன் பிரட்டின் சதுரம் சுத்தமாக, துல்லியமான கோணங்களில் அழகாக இருக்கும். ஆனால் தின்னும் போது பிரிட்டானியாவில் இருந்து சுவை வேறுபாடு தெரியும்.

சண்முகம் எப்போதும் பிரிட்டானியாதான் வாங்குவது. இந்த இரண்டு தவிரவும் வேறு சில பிராண்டுகளும் கிடைத்தன. சின்ன லோஃப் ஒன்று வாங்கினால் அதில் பதினோரு ஸ்லைசுகள் இருக்கும். சண்முகத்துக்கு இது ஒரு நாளைக்கு அதிகம். இரண்டு நாளைக்குப் பத்தாது. எனினும் இரண்டு நாட்களுக்குக் காணுவது போல் முதல் நாள் ஆறும் இரண்டாவது நாள் ஐந்தும் தான் தின்பது.

பச்சை நிறமும் கட்டித் தோலும் உடைய வாழைப்பழங்கள் தாராளமாகக் கிடைத்தன. அதில் அரை டஜன் வாங்கி வைத்துக் கொள்வான்.

தினமும் காலையில் பிரட் பட்டர் ஜாம் அலுப்பாக இருந்தது. பசிக்கும் போது நிர்ப்பந்தம் கொண்டு தின்பது. சில நாட்கள் சர்வே சாயா தருவார். வெறும் பிரட்டை அதில் முக்கித் தின்பான். ஆசைக்காகக் கூட ஓட்டலுக்குப் போக முடியவில்லை. சுந்தரண்ணன் வைத்து விட்டுப்போன ஸ்டவ், மண்ணெண்ணெய் எல்லாம் இருந்தன. எப்போதாவது முட்டை வாங்கி அவித்துக் கொள்வான்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் காலையில் எழுந்ததும் முதல் வேலை பிரட் வாங்கி வருவது.

இப்போது சில நாட்களாக பிரட்டுக்குப் பெரிய பஞ்சம். கோட்டா வைத்து கடைகளுக்கு வந்தது. வந்ததும் தீர்ந்தது. கடைகளுக்கு முன்னால் க்யூ நிற்க ஆரம்பித்தது. சில நாட்களில் அதிகாலையிலேயே எழுந்து போய் கடைவாசலில் நிற்க வேண்டியதாயிற்று. சைக்கிள் எப்போது வரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குமேல் நின்று கொண்டிருக்கப் பொறுக்காது. நின்றாலும் சில நாட்கள் கிடைக்காது.

கிடைக்காது போனால் 'பாவ்' என்றொரு நாட்டு பிரட் கிடைக்கும். மேல் தோல் ஓடு போல் கட்டியாகவும் உள்ளே மெதுவாகவும் இருக்கும். அதில் இரண்டு வாங்கி வருவான். அதைத் தின்னும் போது மேல்தோடு உள்வாயைக் குத்தும். சிலசமயம் கிழிக்கும்.

சுந்தரண்ணனுக்கு ஒரு கடைக்காரனிடம் பழக்கம் இருந்தது. அவனுக்கு ரேஷன் அரிசியும் குறைந்த விலையில் ரம் பாட்டிலும் வாங்கிக் கொடுப்பான். அந்தப் பழக்கத்தில் ஆளில்லாத நேரத்தில், அரைகுறை இந்தியில் தன் நெருக்கடியைச் சொன்னான் சண்முகம். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காலை ஐந்தரை மணிக்கு காரிஸன் வொர்க்ஷாப் முடியும் சந்தியில் காத்து நின்றால் ஒரு லோஃப் தருவதாய்ச் சொன்னான் கடைக்காரன்.

ஏழெட்டு நாட்கள் இது நடந்தது. நிற்காத சோட்டா ஸ்டேஷனில் என்ஜின் டிரைவர் சாவியை வீசி எறிவதைப் போல, சைக்கிளில் போகும் கடைக்காரன் ஒரு லோஃபை இவனிடம் எறிந்துவிட்டுப் போவான். இவன் இப்படி வாங்கி வருவதை ஒரு நாள் ஒரு சர்தார்ஜி

பார்த்தார். அடுத்த நாள் காலை அவரும் நின்றார். இரண்டு நாட்கள் பொறுத்து நாலைந்து பேர் தொங்கும் பைஜாமா நாடா முடிச்சுகளோடு நின்றனர். பிறகு கடைக்காரன் பாதையை மாற்றிக் கொண்டான்.

காலையில் பிரட் தின்றுவிட்டு வேலைக்குப் போனால் பதினோரு மணி வாக்கில் பசிக்க ஆரம்பிக்கும். சாப்பிடாமற் போனால் போய்ச் சேரு முன்னாலேயே பசிக்கும்.

மத்தியானம் ஒரு மணிக்கு சாப்பாட்டு மணி அடிக்கும். கொஞ்ச நாட்கள் வெளியே சுஜாதா என்றொரு மங்களூர் ஷெட்டி ஓட்டலில் ரைஸ்பிளேட் சாப்பிட்டான். ஆறு பூரி, ஒரு கிண்ணம் சோறு, ஒரு கிண்ணம் பருப்பு, ஒரு கிண்ணம் சாம்பார். இரண்டும் தெளிநீராகவே இருக்கும். சீனி அவரைக்காய், பூசணிக்காய், சுரைக்காய் அல்லது கோவைக்காய் இவற்றில் ஏதோ ஒன்றுடன் பெரும்பயறு அல்லது கறுப்புப் பட்டாணி சேர்த்து ஒரு கூட்டு. ஒரு துண்டு ஊறுகாய். ஒன்றேகால் ரூபாய். இதில் பருப்பும் சாம்பாரும் மறுபடி தருவார்கள். சண்முகத்தின் உணவுக்கொள்கை கிடைப்பதை வயிற்றில் அடைப்பது என்று மாறிச் சில காலம் ஆகியிருந்தது. எனவே தட்டில் ஏதும் மிச்சம் இருக்காது. சர்வர் தெரிந்தவனாக இருந்தால் சாம்பாரில் கிடக்கும் காய்களைப் போடச் சொல்லிக் கேட்பான். சுற்றிச் சாப்பிடும் மற்றப் பலரும் சாம்பார்க் காய்களை ஒதுக்கி விடுவதைக் காண ஆற்றாமையாக இருக்கும். சிலர் நல்ல தடியும் அகலமும் உள்ள சப்பாத்திகளை வீட்டில் இருந்து கொண்டு வந்து ஓட்டலில் ஒரு பிளேட் சாம்பாரோ பருப்போ அல்லது உசல் என்ற குழம்பு ஊற்றிய உருளைக்கிழங்கு வடையோ வாங்கி, சப்பாத்திகளைக் கிழித்து முக்கிமுக்கித் தின்றார்கள். சிலர் ஒரு பிளேட் உசலும் இரண்டு பாவ் என்ற பிரட்டும் வாங்கிக் கொண்டனர். அப்படியானால் எட்டணாவில் சாப்பாடு முடிந்து விடும். சாப்பிட்டு வெளியே வரும்போது சண்முகத்துக்கு வயிறு நிறைந்தாற் போன்று தோன்றும். இது ஒரு தோற்றம் மட்டுமே. மூன்று மணிவாக்கில் மறுபடியும் பசிக்கும். பசியைவிட வாயின் புளிப்புத்தான் சண்முகத்துக்குப் பிடிக்காதது.

அட்லஸ் மில்ஸ் காம்பவுண்டின் ஒரு மூலையில் கண்ணனூர் மலையாளிகள்– அப்துல், மூஸா என்று இரு சகோதரர்கள் சில சிறுவர்களை வைத்துக்கொண்டு ஒரு கேன்டீன் நடத்தினார்கள். சாயா கிளாஸில் வெங்காய வாடை வீசும். பிளேட்டில் முட்டை உலும்பு அடிக்கும். மத்தியானம் சோறு, பருப்பு, தாக்காரி என்று உருளைக்

கிழங்கும் பட்டாணியும் போட்டு ஒரு கூட்டு, ஆம்லெட் என்று செய்து விற்றார்கள். சில சமயம் மட்டன் கீமா ஸ்பெஷலாக இருக்கும். மட்டன் என்பது மாட்டுக்கறி என்று அறியச் சிலகாலம் ஆகியது. அப்போதுதான் இவ்வளவு மலிவாக கீமா தரமுடிவதன் நியாயம் புரிந்தது. இது தெரிந்த பிறகு சண்முகம் கீமா சாப்பிடுவதில்லை.

சோறும் பருப்பும் ஆர்டர் செய்தால் கொஞ்சம் அரிந்த வெங்காயமும் இரண்டு பச்சைமிளகாயும் இனாமாகத் தந்தனர். ஷெட்டி ஒட்டலில் சாப்பிட்டு அலுத்தால் சண்முகம் ஒரு பிளேட் சோறும் பருப்பும் தர்க்காரியும் வாங்கிக் கொள்வான். சில நாட்கள் தர்க்காரி வேண்டாம் என்று சொல்லி விடுவான். இரவு கூட இதே கதிதான். பெரிய வேறுபாடுகள் கிடையா.

சில சமயம் அரிசியில் கல் கிடக்கும். எப்போதும் நாலைந்து நெல்லும் சில நெல்மூக்கும் கிடக்கும். சில வேளைகளில் தலைமுடியோ அரிசிப் புழுவோ கிடக்கும். அரிசிப் புழு தின்னாதவனும் அவுசாரி கையால் சாப்பிடதவனும் இல்லை என்று ஒரு பழமொழி உண்டு. எனவே எடுத்துப் போட்டு விட்டுத் தின்பான். ஊரில் ஆனால் தட்டுப் பறக்கும், தாலம் பறக்கும். இங்கு ஓட்டல்காரனிடம் சுட்டிக் சொல்லக் கூட பயமாக இருந்தது.

எடை மிகவும் குறைந்து விட்டது.

இடுப்பில் பேன்ட் நிற்பதற்கு பேன்டை இரண்டு மடிப்பு மடிக்க வேண்டியது இருந்தது. சட்டை, வேறு யாருடையதையோ வாங்கிப் போட்டதுபோல் தெரிந்தது. கழுத்தெலும்புத் துருத்தலும், கன்னத்தின் உள்வாங்கலும் கண்ணாடி முன் நிற்கும் போது தன்னிரக்கம் ஏற்படுத்தியது. சாயங்காலம் வேலை விட்டு வரும்போது சில சமயம் பலமிழந்தது போல் உடம்பு தள்ளம்பாடியது.

வீட்டிலிருந்து வரும் எல்லாக் கடிதத்திலும் உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள் என்றொரு வாக்கியம் இருக்கும். எப்படிப் பார்த்துக் கொள்வது என்பதுதான் தெரியவில்லை.

சுந்தரண்ணன் வர இன்னும் பத்துப் பதினைந்து நாட்கள் இருந்தன. குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு வந்தால், கூடத் தங்க முடியாது. அவர் நண்பர்கள் மூலம் வேறு ஏதாவது ரூம் பார்த்துத் தந்தால் போதும். சாப்பாடு ஒரு பிரச்னையாகவே இருக்கப் போகிறது. அதற்கு ஒரு தீர்வு காணக்கூடும் என்று தோன்றவில்லை. மாதுங்கா

பகுதியை பிரம்மச்சாரிகளின் சொர்க்கம் என்றார்கள். இரண்டு நேரம் நல்ல சாப்பாடு. தமிழ் சினிமாக்கள். பட்டுப்புடவைகள். ஆனால் சொர்க்கத்துக்கு அடிக்கடி போய்வரும் தூரத்தில் சண்முகம் இல்லை.

வாடகை ரூம் தேட ஆரம்பத்தாயிற்று.

சுந்தரண்ணன் வந்ததுமே வாசலிலே நின்ற நாகசர்ப்பமாய் கோவாவுக்கு மாற்றல் உத்தரவும் இருந்தது. மாற்றலாகிப் போகும் முகமாய் தயாரிப்புகளில் இருந்தான்.

டரிகள் எல்லாம் துவைந்து தொங்கின. தண்ணீர் டிரம்மைக் கழுவி பெயின்ட் அடித்தாயிற்று. கண்டான் முண்டான் சாமான்கள் பெரிய மரப்பெட்டியில் அடைபட ஆரம்பித்தன. எல்லா நேவிக்காரர்களிடமும் நாலடி நீளம், மூணடி அகலம், மூணடி உயரத்தில் ஜாதிக்காய் பெட்டிகள் இருந்தன. அதில் ஜி.எம்.மத்தாய். ஜோத்பூர் டு நாசிக் என்ற ரீதியில் பெயின்டால் எழுதி இருப்பார்கள். இடம் மாறி வந்த உடன் பெட்டி மீது டரி ஒன்றை மடித்துப் போட்டால் இரண்டு பேர் அமரும் இருக்கை. எட்டு ஒன்பது வயதுப் பையனுக்குப் படுக்கை. மாற்றல் உத்தரவு வந்துவிட்டால் பெட்டிக்குள் ஸ்டவ்வு, பாத்திரங்கள், சப்பாத்திக்கல், கட்டை, திருவலைக் குத்தி, தென்னை ஈர்க்கு வாரியல் எல்லாம் அடக்கம். இது போல் தண்ணீர் டிரம்முக்கு மூடி செய்து அதனுள் படுக்கை வகையறாக்கள். கோணிச்சாக்கால் சுற்றிக்கட்டி ரயிலில்–பிரேக் வானில் புக் செய்துவிடுவார்கள். மாற்றலாகிப் போகும் இடத்தில் குவார்ட்டர்ஸ் இருக்கும். அல்லது தெரிந்த இனத்தவர், மொழியினர், அறிமுகமானவர் மூலமாக பாதி வீட்டைப் பகிர்ந்து கொள்வார்கள். பெரும்பாலும் புறப்படும் முன்பே இந்த ஏற்பாடுகள் ஆகிவிட்டிருக்கும்.

சுந்தரண்ணன் கவலை எல்லாம் சாமான்களைப் பத்திரமாய்க் கொண்டு சேர்த்து, சேருமிடத்தில் வசதியாய், தண்ணீர் வரும் விதமாய், வீடு அமைந்து செட்டில் ஆகிவிடுவதிலேயே இருந்தது.

ஞாயிற்றுக் கிழமைக்கு டிக்கட். இன்னும் நாலைந்து நாட்கள். மூன்று நாட்களாய் வீட்டுச் சாப்பாடு. மறந்து போயிருந்த ருசிகள் . உலகில் பிரட் தவிர வேறெதுவுமே தின்னச் சுவையானதுதான் என்று ஆகிவிட்ட நிலையில், சண்முகத்துக்கு நாளுமே விருந்துச் சாப்பாடு போல்.

ரூம் தேடுவது பெரிய சிக்கலாக இருந்தது. ஆனால் எப்படியும் தேடி ஆகவேண்டும். இங்கு எங்காவது நேவி குடியிருப்பில்

ஒன்றிரண்டுமாதங்கள் யாரிடமாவது சொல்லிச் சமாளிக்கலாம் என்றான் சுந்தரண்ணன். ஆனால் இந்த செக்கிங் பாடு பெரும்பாடு. நிறைய மலையாளிகள் இந்தப் பாங்கிலேயே ஆண்டுக்கணக்கில் ஓட்டுகிறார்கள். தனக்கு அவ்வளவு தன்றிடம் போதாது என்று தோன்றியது.

ஃபோர்ட்டில், ஃப்ளோரா ஃபவுன்டன் அருகிருக்கும் மெடோ ஸ்ட்ரீட்டில் ஒரு இடம் இருப்பதாய் எவரோ சொன்னதன் பேரில் சுந்தரண்ணனுடன் இரவு எட்டரை மணிக்குப் போனான் சண்முகம். கேட்டன் சேம்பர்ஸ் பில்டிங்கின் மூன்றாவது மாடி. வீடல்ல அது. ஆபீஸ். வேலை நேரம் முடிந்துவிட்டது. நாற்காலிகள், டேபிள்கள், ஃபைல்கள், கப்போர்டுகள், ரேக்குகள் என ஆட்களில்லாதபோது பிரதானமாகத் தோற்றின.

மூன்று உ.பி.கார பையாக்கள் இரவு உணவு தயாரிப்பதில் முனைந்திருந்தனர். ஒருவன் ரொட்டிக்கு மாவு பிசைந்து கொண்டிருந்தான். பம்பு ஸ்டவ்வில் பருப்பு அவிந்து கொண்டிருந்தது. ஒருவன் வெங்காயமும் உருளைக்கிழங்கும் நறுக்கிக் கொண்டிருந்தான். தட்டில் தக்காளி, கொத்து மல்லிக் கீரை, மிளகாய், பூண்டு கிடந்தது.

வெளியே எங்கும் இருட்டு. மாடியின் மரப்படிகளில் எவரோ நடமாடும் சத்தம்.

அந்த மூவரும் அந்த ஆபீசிலேயே பியூன் வேலை செய்பவர்கள் என்று தோன்றியது. அங்கேயே தங்கினார்கள். சண்முகம் அங்கு தங்கினால் யாருக்கும் தெரியக்கூடாது. காலையில் ஒன்பது மணிக்குள் போய்விட வேண்டும். இரவு எட்டுக்கு முன்பு திரும்பக்கூடாது. ஞாயிறு மட்டும்தான் பகலில் இருக்கலாம். குளியலறை, கக்கூஸ் அந்த ஃப்ளோருக்கு எனப் பொது. பெட்டி, படுக்கைகளை அலமாரிக்குப் பின்பக்கம் மறைவாக வைத்துக்கொள்ள வேண்டும். துணி ஏதும் வெளியே தொங்கலாகாது. ஈரமான துவர்த்து இருக்குமே? குளியலை இரவு வைத்துக் கொள்ள வேண்டும். காலையில் உலர்ந்துவிடும். மடித்து வைத்துவிட வேண்டும். துவைப்பு சனிக்கிழமை இரவுகளில்....

இடம் சுத்தமாக இருந்தது. நகரின் மையம். வசதிதான். ஆனால் சனிக்கிழமை பிற்பகல்களை, இவர்கள் கம்பனிக்கு விடுமுறை இல்லாத, அவனுக்கு விடுமுறையாக இருக்கும் நாட்களை என்ன செய்வது? எப்போதாவது தலைவலி, காய்ச்சல், வயிற்றுப்போக்கு என்று வந்தால் சும்மா படுத்துக்கிடக்க எங்கே போவது?

டாக்யார்டில் வேலை செய்யும் சுப்பையா தாராவியில் பொங்கல் வீடுகளில் இடம் இருக்கிறதா என்று பார்க்கலாம் என்றார். புதன் கிழமை மாலையில் ரேரோட்டில் வண்டி ஏறி மாகிம் ஸ்டேஷனில் இறங்கி நின்றான். தமிழராக நிறையப்பேர் தெரிந்தனர். அவர்களிடம் ராமர்வாடிக்கு வழி கேட்டான். ஒருவர் தன்னுடனேயே வருமாறு சொன்னார்.

“அண்ணாச்சிக்கு எந்த ஊரு?”

“களக்காடு”

“நீங்களும் ராமர்வாடியிலே தான் இருக்கேளா?”

“ஆமா... நீரு ஆரைப் பார்க்கணும்?”

“சுப்பையாண்ணு டாக்யார்டிலே வேலை செய்யாருல்லா?”

“யாரு? ஏர்வாடி சுப்பையாவா? அவன் முத்துராமலிங்கம் சால்லே இல்லா இருக்கான்? அவனை எப்படிப் பளக்கம்?”

“எங்க ஊர்க்காரருக்குத் தெரிஞ்சவரு... தங்கதுக்கு இடம் இருக்காண்ணு கேக்கணும்....”

“நீரு தேவமாரா?”

“இல்லே...”

“பின்னே எப்படி முத்துராமலிங்கம் சால்லே தங்க முடியும்? அது தேவமாரு சாலுல்லா? எதுக்கும் நீரு சுப்பையாவைப் பாரும்... அவன் என்னவாம் ஐடியா வச்சிருப்பான்...”

வழியெங்கும் சாக்கடை ஓட்டம். குப்பைக் குன்றுகள். ரோட்டில் எக்கச்சக்கமான நெரிசல். உடைந்த கண்ணாடிக் குப்பிகள் மலையாய் ஒரு கடை முன்... கிழிந்து, கசங்கித் தொய்ந்த காகிதக் கட்டுகள் ஒரு கடையுள் ... பழைய அழுக்கான பாலிதீன் பேப்பர் போர் ஒரு கடையில்...

வழி நெடுக நிறையப் பலகாரவண்டிகள். எண்ணெய் ஒலிக்கும் சமோசாக்கள், பஜ்ஜிகள்... முழுதாய், மண்டையுடன் பொரித்த, அயிலை மீன்கள்.

இடையிடையே தமிழ்ப்பெயர்கள்...

https://t.me/aedahamlibrary

கஜலெட்சுமி சிற்றுண்டி நிலையம்,

அறிஞர் அண்ணா உலர் சலவையகம்,

கலைஞர் முடித்திருத்தகம்,

ஜீவா அச்சகம்,

பெரியார் டெய்லர்ஸ்....

நிறைய கட்சிக்கொடிகள் பறந்தன. கருணாநிதிக்கு புரட்சித்தலைவர் அறை கூவலும். மதுரையில் டாக்டர் தமிழ்வேள் கலைஞர் முழக்கமும் கட்சித் தினத்தாள்களில் கேட்டன.

பம்பாயின் மற்றப் பகுதிகள் போலல்லாமல் இங்கு மனிதர்கள் கறுத்து, மெலிந்து அல்லது நரங்கித் தெரிந்தார்கள். அரை நிக்கர் போட்டுக்கொண்டு முழு மனிதர்கள் நடந்தனர். சத்தமாகப் பேசினார்கள். கூட வந்தவரிடம் சண்முகம் கேட்டான்...

"அண்ணாச்சி எங்க வேலை செய்கியோ?"

"ரே ரோட்டில் தான்... பன்னாலால் சில்க் மில்ஸ்..."

"குடும்பம் எல்லாம் இங்க தானா?"

"எல்லாம் ஊர்லேதான் இருக்கு.. நான் இங்கே பொங்காட்லே இருக்கேன்..."

"ஊருக்கு எப்பம் போனையோ?"

"ரெண்டு வருசம் ஆச்சு... இந்தத் தீவாளிக்கு போனஸ் வாங்கீட்டுப் போணும்...."

நிறையப் புழுதியும் ஈக்களும் பறந்தன. காக்கி நிக்கரும் கசங்கிய வெள்ளைச் சட்டையுமாய் ஒரு கூட்டம் சிறுவர் போயினர்.

"அண்ணாச்சிக்கு பிள்ளையோ படிக்கா?"

"மூத்த பய பத்தாங்கிளாஸ் படிக்கான்.. பொம்பிளைப்பிள்ளை சமஞ்சு இருக்கு.... கடக்குட்டி நாலாங்கிளாஸ் போறான்..."

ராமர்வாடி வந்தது. லாரியொன்றில் இருந்து உப்பிட்ட, ஈரம் சொட்டும் தோல்களை இறக்கிக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறமெங்கும்



https://telegram.me/aedahamlibrary

குமட்டும் நாற்றம். பொருட்படுத்தாமல் நிறையப்பேர் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர்.

சுப்பையா வீட்டில் இருந்தார். பக்கத்துச் சாலுக்குக் கூட்டிப் போனார்.

அது ஒரு நீளமான கட்டிடம். கீழே வரிசையாய் அறைகள். மேலே பலகைப்பணி செய்து ஒரு தட்டு. அதற்குமேல் ஓட்டுப்பணி. கீழே பதினைந்தும் மேலே பதினைந்தும் அறைகள்.

ஒரு நீளமான அறைக்கு சுப்பையா கூட்டிப்போனார். இருபத்தைந்தடி நீளமும் பத்தடி அகலமும் இருக்கும். அறையின் கோடியில் அங்கணம் இருந்தது. அதன் ஓரத்தில் அறுபது காலன் டிரம்கள் மூன்று இருந்தன. இரண்டு மூன்று பிளாஸ்டிக் பக்கெட்டுகளும் மக்கும் கிடந்தன.

அறையின் நீளமான சுவர்கள் இரண்டிலும் பதினைந்து அல்லது பதினெட்டு அங்குல வீதியில் பலகைகள் தாங்கலாகப் பொருத்தப் பட்டிருந்தன. ஒரு பக்கம் வரிசையாய் பழைய ட்ரங்குப் பெட்டிகள். பலகைக்குக் கீழே கட்டப்பட்டிருந்த கொடியில் இருபது இருபத்தைந்து தலை துவட்டும் துண்டுகள் தொங்கின. சுட்டி போட்டது, கரைபோட்டது, சுட்டியும் கரையும் இல்லாமல் விளிம்பு மடித்துத் தைக்கப்பட்டது, குற்றாலத்தில் வாங்கியது, டர்க்கி இழை பிரிந்தது என... மறுபக்கப் பலகை பூராவும் ஸ்டவ்வுகள், மண்ணெண்ணெய் டின்கள், அலுமினியப் பாத்திரங்கள், சப்பாத்திக் கட்டைகள், தட்டுகள், தம்ளர்கள்.

சுப்பையா சொன்னார்– "ஒரு ஆளு கூட வச்சுக்கிடலாம். வாடகை இருவது ரூவா... அதை முன்னக்கூட்டியே தந்திரணும். ஏற்கனவே இதிலே இருவத்தேழு பேர் இருக்கா... அதுலே செலவன் காலம்பற போயிக்கிட்டு சாயங்காலம் வருவான். செலவன் மத்தியானம் போயிக்கிட்டு ராத்திரி சாமத்திலே வருவான். செலவன் ராத்திரி சோலி பாத்துக்கிட்டு வந்து பகல்பூரா கெடந்து உறங்குவான்.. தண்ணி காலம்பறயும் சாயந்திரமும் வரும். வரச்சிலே பிடிச்சு வச்சுக்கிடணும். துணி எல்லாம் தண்ணி வரச்சிலே துவைச்சுக்கிடணும். செண்டாஸ் வெளியிலேதான். அஞ்சு மணிக்கு எந்திரிச்சுப் போனா கூட்டம் இருக்காது. பொறவு எட்டு மணி வரை லைன்தான். ஒருத்தன் உள்ளுக்குப்போனா சிகரெட் பிடிச்சுக்கிட்டு அரை மணிக்கூர்

உள்ளேயே முக்கிக்கிட்டு இருப்பான்... பகல்லே அவ்வளவு கூட்டம் இருக்காது. மோரியிலே குளிச்சுக்கிடலாம்..."

இது ஒரு மாதிரி சமாளித்துக் கொள்ளலாம் போலத் தோன்றியது. ஞாயிற்றுக்கிழமை பெட்டியை எடுத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி விட்டு சண்முகம் புறப்பட்டான்.

***

## ஆறு

ஞாயிற்றுக்கிழமை காலை எட்டரைமணிக்கு மீரஜ் எக்ஸ்பிரஸில் சுந்தரண்ணன் போவதாக இருந்தான். இரவு பூரா உறக்கமில்லை. சாமான்களை எல்லாம்– பிரேக்வானில் முன்தினமே புக் செய்தது போக மீதியை – சேர்த்து பெட்டிகள் கொள்ளக் கொள்ள அடைத்தாயிற்று. சுற்றிச் சுற்றி வந்து என்ன வேறு மீதி கிடக்கிறது என்று பார்த்தாயிற்று. காலையில் பிரட்டும் ஜாமும் சாப்பிட்டபின் ஏழுமணிக்கு டிரான்ஸ் போர்ட்–மிலிட்டரி டிரக்– கொண்டுவரப் போனான் சுந்தரண்ணன்.

சண்முகம் தனது சாமான்களையும் கட்டி வைத்துக் கொண்டான். ஊரில் இருந்து வந்தபோது கொணர்ந்திருந்த டிரங்குப் பெட்டி போக மீதி சமுக்காளம், தலையணை, சில பழைய புத்தகங்கள் யாவற்றையும் சுற்றிக் கட்டினான். சுந்தரண்ணன் தனக்காக விட்டுவிட்டுப் போகும் பழைய பிளாஸ்டிக் வாளியுள் அலுமினிய மக், அலுமினியத் தட்டு, அலுமினியத் தம்ளர், அலுமினிய ஸ்பூன், ஒரு வெண்ணெய்க் கத்தி, பாதி பாட்டில் ஜாம், ஆர்லிக்ஸ் குப்பியில் வழித்து வைத்திருந்த வெண்ணெய், தலைக்குத் தேய்க்க காய்ச்சிய தேங்காய் எண்ணெய்...

சுந்தரண்ணன் சாமான்களையும் தனது சாமான்களையும் டிரக்கில் ஏற்றி, இவர்களும் ஏறிக்கொண்டபின், வண்டி புறப்பட்டுப் போய் வி.டி. சேரும்போது காலைமணி ஏழே முக்கால். பதின்மூன்றாம் நம்பர் பிளாட்பாரத்தில் மீரஜ் எக்ஸ்பிரஸைப் பிடித்திருந்தார்கள். போர்ட்டர் வைக்காமலேயே மூன்று நடையாய் சாமான்களைக் கொண்டு மிலிட்டரிக் கம்பார்ட்மெண்டில் சேர்த்தனர்.

அதிகக் கூட்டமில்லை. ஆறுபேர் உட்காரும் பிரிப்பில் அவர்கள் மட்டுமே. வண்டி புறப்பட நிறைய நேரம் இருந்தது. சுந்தரண்ணன் நிறைய புத்திமதிகளாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான்– புருசன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே, தங்கச்சி கண்ணே என்ற கணக்கில்.

அவன் சொல்ல, நேரம் நெருங்க, சண்முகத்துக்கு காய்ச்சல் போல் ஒன்று உடம்பில், மனதில் பரவியது. கண்கள் பொங்கிப் பொங்கி வந்தன. தோளில் தட்டிவிட்டு வண்டியில் தொற்றிக் கொண்டான். ஆயாசமாகக் கை அசைத்தபடியே கொஞ்ச நேரம் நின்றான் சண்முகம்.

எழுபது லட்சம் ஜனத்தொகை கொண்ட இந்த மாநகரில் தனக்கு தான் மட்டுமே ஆதரவு, நம்பிக்கை என்பது புத்தியில் சடாரென அடித்தது. சோர்ந்தான். ஒரு கையில் பெட்டியும் கையிடுக்கில் படுக்கையும் மறு கையில் பிளாஸ்டிக் வாளியுமாய் வெளியே வந்தான். ஆர்பர் பிராஞ்சில், முதல் பிளாட்பாரத்தில் எட்டு ஐம்பத்திரண்டுக்கு பாந்த்ராவுக்கு வண்டி இருந்தது.

மனதில் பதித்திருந்த தடம் பற்றி நடந்து ராமர்வாடி போய்ச் சேர்ந்தபோது மணி பத்தும் தாண்டி விட்டது. சுப்பையா பொங்கல் வீட்டில் இருந்தார். இருபது ரூபாயை அட்வான்ஸ் தந்தான். ஒருவனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, எல்லோருக்கும் கேட்கும்படியாக, இவன் அன்றுமுதல் அங்கே தங்கப் போகும் அறிவிப்பைச் செய்தார்.

அங்கணத்தில் ஒருவன் சோப்புப் போட்டு உடம்பு தேய்த்துக் கொண்டிருக்க, இன்னொருவன் கோரிக் கோரித் தலையில் விட்டுக் குளித்தான். கக்கூசுக்குப் போய் வந்து இரண்டு கிலோ போஸ்ட்மேன் டப்பாவை ஒருவன் வைக்க இன்னொருவன் அதில் தண்ணீர் நிறைத்து மறுகையில் சிகரெட்டும் தீப்பெட்டியுமாக பிளாஸ்டிக் செருப்பில் கால் நுழைத்து நடந்தான். ஒருவன் பக்கெட்டில் அரைப்பாகம் தண்ணீர் எடுத்து பாதி பாக்கெட் சோப்புத்தூள் விதைத்துக் கையால் நுரை பதைத்து குப்பை போல் அழுக்குத் துணிகளை அமுக்கினான். தரையில் சம்மணம் போட்டு அமர்ந்து, டிரங்குப் பெட்டி மேல் சாய்த்திருந்த கண்ணாடி பார்த்து ஒருவன் முகம் வழித்தான். இருவர் தலையோடு மூடிப் பொதிந்து படுத்திருந்தனர். ஒருவன் குமுதம் படிக்க இன்னொருவன் நேற்றைய முரசொலியில் மூழ்கி இருந்தான். இரண்டு பேர் தலை சீவி, பாண்ட்ஸ் பவுடர் முகத்தில் பரத்தி உலகம் சுற்றும் வாலிபன் பார்க்கப் போகும் அவசரத்தில் இருந்தனர். ஆறு ஸ்டவ்வுகள் சமைக்க எட்டுப்பேர் சீட்டாடினர்.

சண்முகத்துக்கு உடனே செய்யும் வேலை ஏதும் இல்லை. கடன்கள் காலையிலேயே கழிந்து விட்டன. பார்க்கப்போக யாரும் இல்லை. சினிமா காணும் உற்சாகம் இல்லை. மதியம் உண்ண வெளிச் சென்றால் போதும். பேண்ட் சட்டையை மாற்றி விட்டு சாரம் கட்டிக்

கொண்டு உட்கார்ந்தான். வீட்டுக்குக் கடிதம் எழுதலாம் என்று தோன்றியது. கடித உறைகள் இருந்தன. பெட்டியை முன்னால் நகர்த்தி வைத்துக் கொண்டு எழுதலானான்.

O

இருக்கிற இருப்பைப் பார்த்தால் ஓட்டல் சாப்பாடு தகராறு செய்யும் போலத் தோன்றியது. மனம் போல ஊர்ப்பலகாரங்கள் கிடைக்கும் என்றாலும், சாம்பார் சட்னி கிண்ணங்களில் வைக்காமல் வாளியில் இருந்து அகப்பையால் கோரிக் கோரி ஊற்றினார்கள் என்றாலும் ஊர்ச்சாப்பாடாகக் கிடைத்தது என்றாலும் – மனத்துக்குப் பிடிக்காத விதத்தில் சூழ்நிலை அழுக்காக இருந்தது.

தரையில் எப்போதும் ஈரநயப்பு. சாப்பிடும் மர பெஞ்சுகளில் இருந்து எச்சிலும் தண்ணீரும் ஊறி ஊறி ஒரு மடி நாற்றம். ஈக்கள், எண்ணெய்க்கசடு படிந்த ஈயத்தம்ளர்கள், கை கழுவப் போகும் போது கண்ணை தற்செயலாய் உட்புறம் செலுத்தினால் சமையலறை எருமை மாட்டுத் தொழுவம் போல் ஆபாசமாகக் கிடந்தது.

சில சமயம் மலம் கழிக்கும் போது மூலம் சிவீர் என எரிந்தது. சில சமயம் வயிற்றினுள் ஒரு முறுமுறுப்பும் இரைச்சலும் கேட்டது. சில சமயம் ஒரு காந்தல் இருந்தது. கொஞ்ச நாட்களுக்குப்பிறகு சரியான வயிற்றுக் கடுப்பு வந்தது.

சன்னஞ் சன்னமாய் மூக்குச் சளிபோல் மலம் கழிந்தது. எப்போதும் கக்கூசுக்குப் போக வேண்டும் என ஒரு நிர்ப்பந்தம். போய் உட்கார்ந்தால் லேசில் வராது. மனம் போல் போய் உட்காருவதற்கான சௌகரியம் பொங்கல் வீட்டிலும் இல்லை, அலுவலகத்திலும் இல்லை. அந்த அலுவலகக் காம்பவுண்டுக்குப் பொதுவான ஆறு கக்கூசுகள் உண்டு. ஒன்றிற்கும் கதவு கிடையாது. தொழிற்சாலையில் இருந்து போகிறவர்கள் ஒரு விரலை வெளியே நீட்டிக் கொண்டே மலம் கழிப்பார்கள். கோப்பை எப்போதும் நிறைந்து, நுரைத்து எழுத்தில் உணர்த்தவே முடியாத ஒரு நாற்றம் கவிந்து கிடக்கும்.

நிறைய கை வைத்தியம் சொன்னார்கள்.

பொரிகடலை வாங்கி இடித்து அதில் பேயன் பழத்தைப் போட்டுப் பிசைந்து தின்பது.

கால்கிலோ அல்வா வாங்கி இரண்டு வேளையாய்த் தின்பது.

பச்சைப் பாலில் ஒரு எலுமிச்சம்பழம் பிழிந்து அப்படியே குடிப்பது. தேயிலையை அவித்து இறுத்து சீனி போடாமல், பால் ஊற்றாமல், எலுமிச்சம்பழம் பிழிந்து குடிப்பது.

மாதுளம் பழம் வாங்கி தோட்டோடு இடித்துச் சாறு எடுத்துக் குடிப்பது...

வயிற்றுக் கடுப்பின் முடுக்கம் குறையவில்லை. அப்புறம் யாரோ சொன்னார்கள் குளோரோஸ்டெப் என்று ஒரு காப்ஸ்யூல் கிடைக்கும். பத்து மாத்திரை எட்டு ரூபாய்ச் சில்லறை, வாங்கி நான்கு நாட்கள் தின்றால் சரியாகிப் போகும் என்று. கடைசியில் அதுதான் தாக்குப் பிடித்தது. அதன் பெயரைக் குறித்து வைத்துக் கொண்டான். மறந்து போனால் பின்னால் இதுபோல் சிரமப்பட வேண்டும் என்று. சில நாட்களாய்ச் சாப்பாடு வெறும் தயிரும் சோறுமே. ஓட்டல்களில் தயிரும் சோறும் அப்படியொன்றும் மலிவாக இல்லை. பம்பாய் பேச்சலர்களுக்கு இந்த வயிற்றுக் கடுப்பு, வாங்கி வந்த வரம். இது தவிர இனியும் இரண்டு உண்டு. மஞ்சள்காமாலை, சிக்கன் பாக்ஸ். ஏழெட்டு ஆண்டுகள் தொடர்ந்திங்கே வாழ்ந்தால் இதில் ஏதேனும் ஒன்றோ, இரண்டோ அல்லது மூன்றுமேயோ வராமற் போகாது. உடனடியாய் இதிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் ஏதும் தெரியவில்லை. சற்று சுகாதாரமான ஓட்டலாய்ப் பார்த்து வைத்துக் கொண்டால் ஒரு நிவாரணம் உண்டு.

மாட்டுங்காவில் இரண்டு சாப்பாட்டு மெஸ்கள் இருந்தன. இரண்டு வேளை சாப்பாட்டுக்கு நூற்றிருபது ரூபாய் பக்கம் வாங்குவதாகச் சொன்னார்கள். உறுப்பினர் ஆகி முன்பணம் கட்ட வேண்டும். ரேஷன் கார்டு அரிசிக்காகக் கொடுக்க வேண்டும்.

சண்முகத்துக்கு இதில் இரண்டு வசதிக்குறைவுகள் இருந்தன. ஒன்று, ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு அவனால் இரண்டுரூபாய் செலவிட முடியாதது. இரண்டாவது, காலை ஒன்பதுமணிக்கு அவன் வேலையில் இருக்க வேண்டும். அங்கே ஒன்பதுக்கு முன்னால் காலையில் சாப்பாடு போடுவதில்லை.

சாப்பாடு ஓரளவுக்கு சுத்தமானதாயும், நல்ல சுவை உள்ளதாயும், தாராளமாகவும் இருந்தது அங்கே. ஓிரண்டு நாட்கள், சம்பளம் வாங்கிய சுரப்புள்ள நாட்களில், தனிச் சாப்பாடு என இரண்டரை ரூபாய் கொடுத்துச் சாப்பிட்டதுண்டு. ஒரு துவரன், ஒரு கூட்டு, சாம்பார், ரசம், மோர், பப்படம், சோறு நிறையப்போட்டு ஒரு கரண்டி நெய்யும்

ஊற்றினார்கள். ஆனால் அங்கு நிலவும் வேகம் தாக்குப் பிடிக்க முடியாததாக இருந்தது. ஊரில் கல்யாணப் பந்தியில் செய்வது போல, விளம்பும் திசையைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு அள்ளி அள்ளிப் போட்டுக் கொள்ள வேண்டியதாயிருந்தது. சாப்பிடும் போது அடுத்த பந்தியில் இடம் பிடிக்க பிடரியில் கூச்சம் காட்டுவதுபோல் மூச்சு விட்டுக் கொண்டு ஒவ்வொருவன் நிற்பது எரிச்சலூட்டியது.

இன்னொரு முக்கியமான விஷயம், இரண்டு மெஸ்களுமே பிராம்மணர்கள் நடத்துவது. பம்பாய் என்பது நிற, இனவேறுபாடு காட்டும் தென்னாப்பிரிக்கா இல்லை என்றாலும் சில சந்தர்ப்பங்களில் தான் வேற்றாள் என்பதை உணரும் விதத்தில் இருந்தது. முகம், பேச்சு, சாப்பிடும்முறை ஆகியவை பிராம்மணனையும் அல்லாதவனையும் சொல்லியது. இந்த மெஸ்களில் சாப்பிட வருபவர்கள் தொண்ணூற்றெட்டு சதமானத்தினர் பிரம்மணர்கள் என்பதால் அவர்களுக்கு ஒரு சலுகை இருந்தது. அல்லது இருப்பது போல் சண்முகத்துக்குத் தோன்றியது. அந்தச் சலுகை அவனுக்கு ஒரு புறக்கணிப்பாகப் பட்டது.

ஒரு மாத காலத்தில்– ஒரு மாறுதலுக்காக என்றும், ருசி பேதத்துக்காக என்றும், பைக்கு அடக்கமான ரேட் என்றும் பல இடங்களில் சாப்பிட்டுப் பார்த்து விட்டான் சண்முகம்.

வேறொரு மலையாளி மெஸ், கிங்சர்கிளில் முருகன் ஸ்டோர்ஸ் மேலே இரண்டாவது மாடியில் நடப்பதாய் அறிந்தான். வேலை முடிந்து வந்து மேல் கழுவி, உடை திரும்ப அணிந்து கொண்டு ஏழரை மணி போலப் புறப்பட்டுப் போனான்.

தரையில் அமர்ந்து, இலைபோட்டுச் சாப்பாடு. வேண்டுமட்டும் பெரிய புழுங்கலரிசிச் சோறு. சாம்பார், ரசம், துவரன், ஒரு பச்சைக்கறி அல்லது மீன்கறி, ஊறுகாய். மலையாளி ஓட்டல்களில் மோர் அல்லது தயிர் சாப்பிடக்கூடாது என்று சண்முகத்துக்கு ஒரு பாடம். ஊளை வாடையும் புளிப்பும் சகிக்க முடியாததாய் இருக்கும். இந்தச் சாப்பாட்டுக்கு ஒரு ரூபாய் முப்பது காசு. வறுத்த மீனோ, மட்டனோ, முட்டைக் கறியோ, தயிரோ எக்ஸ்ட்ரா. மலையாளி கடைகளில் மட்டன் சாப்பிடக்கூடாது என்பது இன்னொரு பாடம். ஆட்டிறைச்சியைவிட மாட்டிறைச்சி உயர்ந்தது என்ற ஐரோப்பிய மனோபாவம் அவர்களுக்கு.

இந்தச் சாப்பாடு ஒரு விதம் பரவாயில்லை என்று தோன்றியது. ஊரில் கிளப் சாப்பாடு போல.

ஒரே அறை. அண்ணன் தம்பிகளான மூன்று மலையாளிகள். அங்கேயே கண்முன் சமைத்துப் பரிமாறினார்கள். கைகழுவும் இடமும் எச்சில் இலைபோட வைத்திருக்கும் மூடி வெட்டிய எண்ணெய் டப்பாவும் ஆபாசமாக இருந்ததேயன்றி வேறு சொல்லும்படியான சுத்தக் குறைவுஇல்லை. பொதுவாய் மலையாளிகள் சுத்தக் குறைவு உள்ளவர்கள் அல்ல. இரண்டு மூன்று நாட்கள் சாப்பிட்டதில், அங்கு மாதக் கணக்கு வைத்துக் கொள்ளலாம் என்று தெரிந்தது. சண்முகம் விசாரித்துப் பார்த்தான். நூறு ரூபாய் முன்பணம் கட்ட வேண்டும் என்றும் மாதாமாதம் பத்தாம் தேதிக்குள் பில்பணம் கட்டிவிட வேண்டும் என்றும் சொன்னான்.

உத்தேசமாய் மாதம் முப்பது இரவுச் சாப்பாடு. ஐந்து ஞாயிறுகள். எப்போதாவது எக்ஸ்ட்ரா வாங்கினாலும் ஐம்பது ரூபாய்க்குள் ஆகிவிடும். இது ஒரு தோதுப்படும் ஏற்பாடே. ஆயினும் நூறு ரூபாய் முன்பணம் பெரிய மலைப்பாகக் கிடந்தது. எதைக் குறைத்து நூறு ரூபாய் கொடுப்பது. வீட்டுக்கு அனுப்பும் பணம் ஐம்பது ரூபாயை மிகுந்த மனச் சங்கடத்துடன் நிறுத்தலாம். வேறு எதை?

தொடர்ந்து சில நாட்கள் அங்கேயே சாப்பிட்டான். சில சமயம் ஆபீஸ் விட்டு ரூமுக்கு போய் மேல் கழுவி அதே உடையைத் திரும்பவும் போட்டு புறப்பட்டுவந்து சாப்பிட்டுத் திரும்பப் போவது மடியாக இருந்தது. அதுவரை பசியும் பொறுக்க முடியவில்லை. ஏழு மணி முதல் தான் இரவுச் சாப்பாடு என்றாலும் ஆறே முக்காலுக் கெல்லாம் போட ஆரம்பித்தார்கள். எனவே ஆபீஸில் இருந்து கிங்சர்கிளில் இறங்கி கொஞ்ச நேரம் சந்தியில் ஓரமாய் நின்று வேடிக்கை பார்த்த பின்பு சாப்பிடப் போவான். சில நாட்கள் தயாராக இருக்கும். சில நாட்கள் சோறு வடிப்பார்கள். சற்று நேரம் உட்கார்ந்திருந்து சாப்பிட்டுவிட்டு வருவான்.

சில சமயம் மெஸ் நடத்தும் அண்ணன் தம்பிகளுடன் பேச்சுக் கொடுப்பான். சமைக்கும் அம்மாவன் ஏதாவது கேட்பார். இப்படி முன்கூட்டிச் சாப்பிடப் போவதில் ஒரு சௌகரியம். தரையில் எச்சில் வழுக்கு, கைகழுவும் இலை போடும் இடத்தின் கசகசப்பு, மெலிதான புளிச்சவாடை எல்லாவற்றையும் தவிர்க்கலாம்.

முதலாளி ஒருவனிடம் ஒரு நாள் கேட்டான். 'ஐம்பது ரூவா தான் அட்வான்ஸ் தரான் கழியும். மாசக்கணக்கில் சேர்க்குமோ?' அவன்

தலையசைத்தபின் நெஞ்சப் படபடப்பு தணிந்தது.

சாப்பிட்டு முடித்தபின் கிங்சர்கிளில் வண்டி பிடித்து மாஹிம் இறங்கி நடந்து பொங்கல் வீட்டுக்குப் போனால் ஏழே முக்கால் எட்டுக்குள் போய்விட முடியும். அங்கு அப்போது கந்தர் கோலமாய் இருக்கும். குழுக்களின் சமையல் ஆதாளிகள். சிவனே என்று உட்கார்ந்திருப்பது கூடும் காரியமல்ல. பத்து மணிக்குள் எப்படியும் படுக்கை விரிக்க முடியாது. கொஞ்ச நேரம் அங்கிங்கு என நேரம் கடத்திவிட்டுச் செல்வான்.

மகேஷ்வரி உத்தியானில் ரோட்டைப் பார்த்துக்கொண்டு சில சிமெண்ட் நாற்காலிகள் கிடந்தன. நாற்காலியில் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கலாம்.

சில சமயம் இடவசதி இல்லாத ஊர்ச்சங்கம், சாதிச்சங்கம், சிறு சிறு தொழிற்சங்கம் என புல்தரையில் அமர்ந்து பொதுக்குழுக் கூட்டங்கள் நடக்கும். அல்லது ஓய்வு பெற்ற பொய்ப்பல்கட்டிய, கண்ணாடி அணிந்த, கைத்தடிவைத்த, கண்களில் நீர் கசிந்த ஆறேழு கிழவர்கள் அமர்ந்து பேசுவார்கள். கவனிக்காதது போல் பாவனையில் கவனித்துக் கொண்டிருப்பான்.

ஒற்றை நாற்காலி கிடைக்காவிட்டால் மற்ற நாற்காலிகள். பல வயது அடைப்பைச்சார்ந்தவர்கள் நாற்காலிகளில் காணக் கிடைப் பார்கள். பெரும்பாலானவர்களின் மன நிலை தொய்ந்து, கசந்து, சுயவெறுப்புற்று இருக்குமோ எனத்தோன்றும்.

புல் வெளியில் கூட்டமாய் அமர்ந்து விட்டுப்போகும் குடும்பங்களும் நண்பர்களும் வேறு கதியிலும் நாற்காலியில் அமர்ந்து அசை போடுபவர் மற்றொரு கதியிலும் இயங்குவதாகத் தோன்றும்.

சில நாட்கள் இதுவும் அலுப்புத்தரும். இந்த யோசனை, தனிமை, வெறுப்பு எல்லாம் ஒன்றிரண்டு நண்பர்கள் இருந்தால் ஏற்படாதோ என்று தோன்றும்.

தொழிற்சாலையில் யாவருடனும் அறிமுகம் உண்டு. நட்பு இல்லை. பொங்கல் வீட்டிலும் இதே கதைதான். இப்படியே எத்தனை காலம் ஓட்டுவது? காவல்காரன் விசில் ஊதினான். மணி ஒன்பது ஆகிவிட்டது. இனி இங்கு அமர்ந்து கோட்டைகள் கட்ட அனுமதி இல்லை. இரவில் நெடுநேரம் இருந்து சமூக விரோத காரியங்களில்

மக்கள் ஈடுபடக்கூடாது என்ற நோக்கம். ஆனால் காவல்காரன் சம்மதத்துடனேயே இரவில் இங்கு சில தொழில்கள் நடக்கும்.

O

காத்தமுத்து, சண்முகத்தின் பக்கத்துப் படுக்கைக்காரன். அவன் சொன்னான்– ஒரு ஸ்டவ்வும் சில அத்யாவசியபாத்திரங்களும் வாங்கி வைத்துக்கொண்டால் பொங்கிச் சாப்பிடலாம் என்று. அல்லது ஏற்கனவே பொங்கிச் சாப்பிடும் குழுக்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளலாம்.

கொஞ்ச நாட்களாய்க் கவனித்த விஷயங்கள் ஞாபகம் வந்தது. ஸ்டவ் கொளுத்தி பாத்திரத்தில் தண்ணீர் வைத்து விட்டு அரிசியில் கல், நெல், நெல்மூக்கு, குதிரைவாலி பொறுக்கி, கழுவிப்போட்டால் அது வேகும். வெந்து கொண்டிருக்கும் வேளையில் உருளைக்கிழங்கை தோல்சீவி, வெங்காயம் அரிந்து, பச்சைமிளகாய் வகிர்ந்து, புளி கொவரப்போட்டு புளிக்குழம்புக்கு ஆயத்தம். சோறு வடித்து இறக்கி விட்டு, சீனிச் சட்டியை அடுப்பில் ஏற்றி எண்ணெய்விட்டு, கடுகு தாளித்து கொத்துமல்லி, மஞ்சள், மிளகாய்ப்பொடி வறுத்து, வெங்காயம் சேர்த்து, புளித்தண்ணீரை ஊற்றி நுரைத்ததும் உருளைக்கிழங்கைப் போட்டு வெந்ததும் இறக்கிவிடலாம். ராத்திரிக்கும் மறுநாள் காலைக்கும் ஆகும். முட்டைக் கோசோ, பீன்ஸோ வாங்கினால் தேங்காய் போடாமல் துவரன். சில நாட்களில் சோறு மாத்திரம் பொங்கிவிட்டு எதிர்த்த கடையில் எட்டணாவுக்கு சாம்பாரோ, மீன்குழம்போ வாங்கலாம்.

மாலையும் இரவும் இதற்கே சரியாகிப் போகும். சாப்பிட்ட பின் முறைவைத்து பாத்திரம் கழுவல். இது தோதுப்படும் என்று சண்முகத்துக்குத் தோன்றவில்லை.

காத்தமுத்துவுடன் நட்பு போல் ஒன்று சமீப காலமாய் முளைக்க ஆரம்பத்திருந்தது.

சண்முகத்தைவிட இரண்டு மூன்று வயது குறைவாகவே இருக்கும். வி.டி. ஸ்டேஷனில் டிபார்ட்மெண்ட் கான்டீனில் வேலை. அங்குமிங்கும் நாலைந்து ஓட்டல்களில் பெற்ற சர்வீஸும், மேலப்பாறையூர் முத்துச்சாமி அண்ணாச்சியின் சிபாரிசும் வாங்கித்தந்த வேலை. எப்படிச் சம்பளம் ஆளை அயர்த்துகிற விதத்தில் இருக்கும்?

ஆனால் ஊருக்குப் போக வர தாராளமாய்ப் பாஸ் கிடைக்கும். ஆண்டுக்கு ஒரு முறை லீவில் ஊருக்குப் போகையில் சுளையாய் ஆயிரம் ரூபாய் செலவழிப்பதும் சென்ட்ரல் ரெயில்வேயில் வேலை என்று அளப்பதுமாக காத்தமுத்துக்கு ஊர்ப்பக்கத்திலும் சொந்தக்காரர் மத்தியிலும் ஒரு சவுக்களித்த கௌரவம் உண்டு.

இரவில் இரண்டாவது காட்சி சினிமா பார்த்துவிட்டோ, செகன்ட் ஷிப்ட் முடிந்தோ காத்தமுத்து திரும்புகையில், பொங்கல் வீட்டில் அடித்துக் கிடத்தியது போல் அத்தனை பேரும் நெடு நீளமாய்ப் படுத்திருப்பர். யாராவது ஒருவர் இல்லை என்றால் அந்த இடம் மட்டும் இரண்டடி அகலம் காலியாகக் கிடக்கும். காத்தமுத்து வரத் தாமதமானால் சண்முகம் படுக்கை விரித்து வைப்பான்.

மங்கலாய் ஒரு விளக்கு எரியும். பிறகு யாராவது அதையும் அணைத்து விடுவார்கள். குளத்து நீரை மூடும் பாசி போல் நகர்ந்து நகர்ந்து, காலியிடம் சுருங்கி இல்லாமல் ஆகும். நேரம் கழித்து வருபவன் பாடு திண்டாட்டம். விளக்கைப் போட்டால் சில சாரைப்பாம்புச் சீறல்கள் கேட்கும். இருட்டுக்குக் கண்கள் பழகி, பொய்யடி வைத்து நடந்து இடத்தைத் தப்பரவி, கொடியில் முறுமுறுத்துக் கிடக்கும் துண்டின் நாற்றத்தை வைத்துத் தன் துண்டை உணர்ந்து, முகம் துடைத்து–

கொஞ்சம் தள்ளிப்படுப்பா...

குரல் கேட்டு அசையும் உடல்களின் இடையில் உடம்பை ஒருக்களித்துக்கிடத்தி, மல்லாந்து...

உறக்கத்தில் அடுத்தவன் காலோ, கையோ, சிலசமயம் மேலே விழுவதை அனக்கமில்லாமல் அனிச்சையாய் விலக்கி...

முதல் ஷிப்டுக்குப் போகிறவன் விளக்குப் போட்டுச் செய்யும் அரவத்தில் கண்விழித்தால் ஒவ்வொருவனும் தனித்தனித் தினுசில் படுத்திருப்பது தெரியும்.

துடைக்கிடையில் கை நுழைத்து,

சளுவாய் ஒழுக்கிக் கொண்டு,

மெல்லிய குறட்டைச் சுருதியில் மல்லாந்து,

தவளை போல் குப்புறக்கவிழ்ந்து,

வாயை அகலப் பிளந்து கொண்டு,

வேட்டியை விலக்கி அதிகாலையைப் புணரும் குறி பற்றிய பிரக்ஞை அற்று...

காத்த முத்துவுக்கு வாரம் தவறாமல் காகிதம் வரும். பொங்கல் வீடு வரை தேடி எங்காவது போட்டுவிட்டுப் போய்விடக்கூடும் என்ற பயத்தில், மெயின் ரோட்டில் இருந்து சாலுக்குப் பிரியும் முடுக்கின் முகப்பில் இருந்த லாண்டரிக்கடையைத் தான் முகவரியாகக் கொடுத்திருந்தார்கள்.

எஸ்.கே.முத்து,
மேற்பார்வை – பேரறிஞர் அண்ணா உலர் சலவையகம்,
கும்பர்வாடா ரோடு,
தாராவி,
பம்பாய் – 400 017.

என்று முகவரி எழுதப்பட்டிருக்கும்.

வழக்கமாக வேலை முடிந்து வரும்போது சலவையகத்தில் கடிதத்துக்காகத் தப்பரவி விட்டுத்தான் வருவான் காத்தமுத்து. செகண்ட் ஷிப்டில் இருந்தால் சண்முகம் கடிதம் இருந்தால் எடுத்து வருவான்.

'கடிதத்தைப் படிச்சுப் பாருங்கோ அண்ணாச்சி...' என்று சண்முகத்திடம் நீட்டுவான். ஆரல்வாய்மொழி மாமா கடிதமானால் 'தேகத்தைப் பாத்துக்கோ. வெயில்லே கண்டமானம் அலையாதே. அம்மைக்கு ஒளுங்கா பணம் அனுப்பு. பதில் காயிதம் போடு' என்ற கணக்கில். ஈசாந்திமங்கலம் கடிதமானால் 'அம்மா சொல்ல தங்கச்சி எழுதுவது – இங்கு மழை இல்லை. வயலுக்கு களை பறிக்கணும். பேய்ச்சிக் கோணத்திலே ஒருவாடு வளரி புடிச்சுக் கிடக்கு. இந்த மாசம் அம்பது ரூவா கூடுதலா அனுப்பு. நாலு நாளைக்கி மிந்தி தெக்குத் தெருவிலே சம்முகவேலுப் பாட்டா செத்துப் போயிட்டாரு. நாங்கோ எல்லோரும் சுகம். நீ ராத்திரி பாலு வாங்கிக் குடி' எனும் பாங்கில்.

இப்படி மாதம் நான்கு கடிதங்களே வருவதாயினும், வரும் கால நேரம் நிச்சயமற்ற ஒன்றாகையால், தினமும் சலவை நிலையத்தில் போய்ப் பார்ப்பது நடைமுறை. கடை முன் போய் நின்றதும் கடை முதலாளி மாடசாமி ஒரு கட்டுக் கடிதத்தை எடுத்துப் போடுவார். அதில் தேட ஆரம்பிக்க வேண்டும். மூன்று மாதத்திற்கு முந்தி வந்தது முதல் நேற்று வந்தது வரை கசங்கி, மூலை மடங்கி, சுருங்கி நைந்து கிடக்கும்.

ஆள் அகப்படாத பசலைப் பரிதவிப்புத் தெரியும்.

அன்று மாஹிம் ஸ்டேஷனில் இறங்கி பொங்கல் வீட்டுக்கு சண்முகம் நடந்து வந்த போது பின்னாலிருந்து அண்ணாச்சி என்ற விளி கேட்டுத் திரும்பினான். காத்தமுத்து விசையாக வந்தான். கிட்டே வரும் வரை சண்முகம் ஒய்ந்த கதியில் நடந்தான்.

மாலை வெயிலில் தூசிகள் ஒளி பெற்றுப் பறந்தன. செங்கொடிக் கம்பத்தின் நடுவில் தட்டியொன்று தொங்கிற்று. அந்த வெள்ளியில் தோழர் ஒருவர் முழங்க இருந்தார்.

பக்கத்துக் கடையில் காத்தமுதது ஒரு 'குத்தீட்டி' வாங்கினான். அவன் ஒரு கட்சி அனுதாபி. மதுரை தமுக்கம் மைதானத்தில் மூன்று நாட்கள் முன்னால் தலைவர் முழங்கிய எச்ச சொச்சங்கள் வெளியாகி இருந்தன.

"அண்ணாச்சி சாயா குடிக்கலாமா?" என்றான் முத்து. பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே பருப்பு வடையும் நின்று சாயாவும் குடித்தனர்.

சலவை நிலையத்தில் முத்து கடிதம் தப்பரவினான். அவன் பெயருக்கு ஒரு கவர் இருந்தது. முழுப்பெயரையும் காத்தமுத்து என்று எழுதுபவர் ஆரல்வாய்மொழி மாமா ஒருத்தர் தான். வழக்கமாக அஞ்சலட்டையில்தான் எழுதுவார். சில சமயங்களில் சுடலைமாடன் கோயிலில் கொடைகழிந்தாலோ, பொங்கல்விட்டுச் சேவல் அறுத்தாலோ, சித்தூர் தெங்கரை மகாராஜா கோவிலுக்குப் போய் வந்தாலோ திருநீற்றுப் பிரசாதம் கவரில் வரும். ஆனால் அவை மாசி–பங்குனி மாதங்களில், ஐப்பசியில் இல்லை. எனவே கடிதத்தில் காரியமான சேதி உண்டு என்ற கருத்தில் பைக்குள் மடித்து வைத்தான். உடனேயே பிரித்துப் படிப்பதென்றால் நடவாது. எழுத்துக் கூட்டிப் படிப்பது என்பதாலும், மாமா கையெழுத்து கூட்டு நடையில் நிரம்ப மேடு பள்ளங்கள் கொண்டதாக இருக்கும் என்பதாலும் நேர்மையானதோர் அவகாசம் வேண்டும்.

பொங்கல் வீட்டை அவர்கள் அடைந்தபோது மணி ஏழும் தாண்டி விட்டது. பல்வேறு குழுக்களின் சமையல் வேலைச் சுறுசுறுப்பு. ஏழெட்டு ஸ்டவ்வுகளின் இரைச்சல். சப்பாத்திக்கு மாவு பிசைதல், அரிசியைச் சீர் பார்த்தல், காய்கறி அரிதல்...

சில ஸ்டவ்வுகளில் குழம்பு கொதிக்கும் மணம். அம்மியில்

ஒருவன் தேங்காய் சேர்த்து மசாலா அரைத்தான்.

"ராமசாமி ஒரு உள்ளி எடு."

"எங்கிட்ட இல்லப்பா... ஒனக்கு நிதம் இதே எளவு..."

"சரி எடுடே... நாளைக்கி வாங்கியாறேன்..."

இது போல் அடுத்தவர் பிரதேச ஆக்கிரமிப்புகள்.

குமாரசாமி ஆர்லிக்ஸ் குப்பி ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே போனான். காய்கறிகள், வெஞ்சனம் எல்லாம் தீர்ந்து விட்டதால் கடையில் இருந்து சாம்பாரோ மீன் கறியோ வாங்கப் போகிறான்.

சட்டை பேன்டைக் கழற்றிப் போட்டு சாரம் உருவிக் கட்டிக் கொண்டு வாசல் பக்கம் கிடந்த பெஞ்சில் அமர்ந்தான் சண்முகம். சற்று நேரத்தில் கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு காத்தமுத்தும் வந்தான். முத்து இன்று சமைக்கும் திட்டத்தில் இல்லை போலிருக்கிறது. காலையில் குளித்துவிட்டுப் போனால் கேன்டீனில் போய்த்தான் நாஷ்டா. மத்தியானச் சாப்பாடும் அங்கேயே ஆகிவிடும். இரவு தோன்றினால் சமைப்பான். இந்த வகையில் கத்தமுத்து மீது மற்றவர்களுக்கு ஒரு பொறாமையும் உண்டு. "அவனுக்கென்னவே? சம்பளம் பூரா மிச்சம்லா" என்று.

பெஞ்சில் அமர்ந்திருந்தவன் எழுந்து பக்கத்தில் எரிந்த ஸ்டவ்வில் பீடி பற்றவைத்தான். புகையை இழுத்து ஊதி விட்டுக் கடிதத்தைப் பிரித்தான். மொத்தையாக மூன்று அரைத்தாள்கள்.

"என்னவே? கயிதம் கனமா இருக்கு? லவ்வா?"

"அட சும்மாரும்வே... மாமால்லா எளுதி இருக்காரு."

மனதுள் கூட்டிக் கூட்டிப் படிக்கத் துவங்கினான். வரிகள் செல்லச் செல்ல முகத்தில் பூரிப்பு, கவலை, எரிச்சல்....

மாடத்தியை நினைக்கையில் மனம் மையல் கொண்டது. தாய்மாமன் ஆனபடியால் எப்போது ஊருக்குப் போனாலும் பணகுடியில் இரண்டு மூன்று நாட்கள் தங்கல் உண்டு. வெறும் நெல் மட்டும் விளையும் வயற்காடுகளைக் கொண்ட நாஞ்சில் நாட்டு சூழலை விட்டு, புஞ்சைக் காடுகளில் கால்களில் செம்மண் புழுதி படர, அலைந்து திரிகையில் மனம் கிளர்ச்சி கொள்ளும். வாழைத் தோப்புகள்,

சோளக் கொல்லை, கம்புக்காடு, மிளகாய் புஞ்சை, உடையும் கருவேலமும் செறிந்த குளத்தங்கரைகள், செங்காவி கலங்கிய தண்ணீர்க் குட்டைகள், காளை மாடுகள் ஏறி இறங்கும் கமலைக் கிணறுகள், கிணற்றடி வெண்டை, கத்தரி, அவரை துவரை...

போன வருஷம் விடுமுறையில் அங்கு தங்கும்போது மாடத்தியைக் காண்கையில் மனம் பித்துக் கொண்டது. அத்தையும் மாமாவும் மற்றவர்களும் அருகில் இல்லாத ஒரு நாள் மாலையில் தோரணையாக அமர்ந்து வாராந்தரி படிப்பதாக அவன் பாவனை கொள்கையில், அவனருகே பெஞ்சின் மேல் மஞ்சள் பூத்த, முற்றிலும் கன்னாத கொய்யாப்பழம் ஒன்றை வைத்து விட்டு மாடத்தி ஓடி உள்வீட்டில் நின்று சிரிக்கையில்....

காத்தமுத்து சற்று நேரம் தலை குனிந்திருந்தான்.

தங்க இடம் பெரிய பிரச்னை.

பெண்டாட்டியுடன் பொங்கல் வீட்டில் தங்க முடியாது. மாமாவோ கல்யாணத்துக்கு நாள் குறித்தாயிற்று. போக்கு வரத்துச் செலவுகள், துணிமணிகள், தாலி...

கடிதத்தை சண்முகத்திடம் கொடுத்து, தற்சமயம் மனதுக்குள் வைத்துக் கொள்ளுங்கள் என்றான்.

சாப்பிடப் போகும்போது நிறையப் பேசிக் கொண்டே வந்தான். மாமா பேச்சைத் தட்ட முடியாது. வீட்டில் சொன்னால் கேட்க மாட்டார்கள். தப்பிக்க மார்க்கமே இல்லை...

போன ஆண்டு ஊருக்குப் போய் வந்த கடன்கள் இப்போது தான் தீர்ந்தது. பக்கத்து சால் ஒன்றில் பாதி முறி வாடகைக்குப் பிடிக்க இரண்டாயிரம் முன்பணம் வேண்டும்....

மாடத்தியைப் பற்றிக் கேட்டபோது முத்துவுக்குக் கூச்சமாக இருந்தது. சண்முகத்தை தக்ஷணமாற நாடார் சங்கம் பக்கம் நிற்கச் சொல்லிவிட்டு வடக்கன்குளம் சீட்டுக் கரைக்காரரைப் பார்க்கப் போனான்.

திரும்பி வந்தபோது அவன் முகத்தில் தெளிச்சம் இருந்தது.

***

## ஏழு

அலுவலகத்தில் சுவாரஸ்யமாக ஏதும் இல்லை.

சண்முகத்தை ஆச்சரியா அண்டையில் நாடவிடுவதில்லை. மற்றவர்களைப்பற்றி அவனுக்கு அவ்வளவு அச்சம் இல்லை. அதனால்தானோ என்னவோ அவன் விடுமுறையே எடுப்பதில்லை. அலுவலகத்தில் முதலில் வருவதும் கடைசியில் போவதும் ஆச்சாரியாதான். அவன் லேட்டாக வந்து சண்முகம் பார்த்ததே இல்லை. ஊருக்கு ஆச்சார்யா போய் வந்து மூன்றாண்டுகள் ஆகின்றன. அறுபத்திமூன்று நாட்கள் பிரிவ்லெஜ் லீவ் அவன் கணக்கில் சேர்ந்திருந்தது. லீவில் போனால் இரண்டு மாதங்களாவது எடுப்பான். ஆனால் அந்த இரண்டு மாதங்களில் வேறு யாராவது அவன் வேலையைப் பார்க்க வேண்டியது வரும். அதனால் அவனுக்கு ஒரு ஸ்தானம் கிடைத்து விடும் என்பது ஆச்சாரியாவின் அச்சமாக இருக்கலாம்.

ஆச்சாரியா இல்லாதுபோனால் அவன் வேலையை இங்குள்ளதில் யார் செய்வார்கள்.

சத்யவான் சிவ்ராம் ராவுத் இதற்கு முன் ஸ்பின்னிங் மெஷினில் ஸ்பிண்டில் ஆயில் விட்டுக் கொண்டிருந்தவன்.

சிவாஜிசந்து டெலெ புத்திசாலி. ஆனால் பாரஸ்ரோடு, ஃபால்க் லாண்ட் ரோடு, ப்யூலாஹவுஸ், ஜம்னா மான்ஷன், ஹனுமான் கல்லி ஆகிய இடங்களில் வாடிக்கைக்காரன். நாளெல்லாம் மூன்று ரூபாய்க்கும் ஐந்து ரூபாய்க்கும் படுத்துவிட்டு வந்த கதை. 'நேப்பாளி சோக்ரி ஏ ஒன்... மதராஸி மால் பார்ஸ்ட் கிளாஸ்' என மற்ற தொழிலாளர்களிடம் கூறு வைத்து விற்பான். அது தவிர, முன் தின இரவில் 'தீன் பாவுசேர் கன்ட்ரி' குடித்தும் தான் கிறங்கவில்லை

போன்ற விஸ்தரிப்புகள். மட்கா சூதாட்டத்தில் கல்யாணில் ஏழு கண்டிப்பாய் வரும்; மென்டி தவறாது போன்ற சூதாட்டக் குறிப்புகள். யாரை விளித்தாலும், அரசர்களுக்குப் புலவர்களும் கழகத்தோழர்களுக்குத் தம்பிகளும் சேர்க்கும் அடைமொழி போல, பெஹன் சூத், ஸாலா, காண்டூ, சூத்தியா, ஆய்ச்சி காண்ட் எனும் அடைமொழிகள் போட்டு விளித்தான். இவை போதாதென்று சதா காலமும் மூன்று ரூபாய் தா, ஐந்து ரூபாய் தா என்று கண்டவரிடம் எல்லாம் பஞ்சரிப்பு வேறு. கல்யாண் குளோஸிங், ஜனதா பிராக்கெட் என நாளெல்லாம் அட்டவணை போடவே அவனுக்கு நேரம் போதாது.

ஆரன் ரூபென் பென்கர், போர்ட் ட்ரஸ்டில் வேலைபார்த்து ஓய்வு பெற்று இங்கு வேலை பார்க்கும் யூதர். இஸ்ரேலில் இருந்து வரப்போகும் விமானத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பவர். டென்ட் டச்சுக்காரர். அவர் மகள் தலைமை அலுவலகத்தில் சீஃப் எக்ஸிக்யூடிவுக்கு பி.ஏ. ஆகவே அறுபத்தாறாவது வயதிலும் வேலை பார்த்துக் கொண்டிருப்பவர், கான்ட்ராக்டில். கண்ணாடிக்குள் அவர் உறங்குவதைக் காண பாவமாக இருக்கும்.

ஷ்யாம் சரண் சுக்லா சாமர்த்தியம் உள்ளவன். லோகல் பார்ச்சேஸ் அது இது என்று வெளியே அலைந்து தினமும் சில்லறை பார்க்கும் கருமத்தில் கண்ணாயிருந்தான்.

இவர்கள் அனைவரும் தத்தம் போக்கில் இருப்பதை ஆச்சாரியா வசதியாகக் கருதினான். பொறுப்பான வேலைகளை எல்லாம் அவனே செய்து விடுவது மற்றவர்களுக்கும் வசதியாக இருந்தது. இந்த நடப்பில், கீரையில் மண் கடிப்பது போன்று சண்முகம் இருந்தது வசதிக்குறைவாக இருந்தது அவனுக்கு. மற்றபடி ஆச்சாரியாவின் உழைப்புக்கும் புத்தி கூர்மைக்கும் அவனுக்கு இருக்கும் பிரதான்யம் தேவையானது தான். மற்றும் அவன் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய அக்கா சயானில் சுமார் எண்ணூறு சதுர அடி கொண்ட மூன்று ரூம், கிச்சன் ஃபிளாட்டில் இருந்தாள். அக்காள் புருஷனுக்கு பாக்கு வியாபாரம். வீட்டில் ஃபோன் உண்டு. சில பார்ட்டிகளிடம் இரவு ஏழுமணிக்கு மேல் வீட்டுக்கு ஃபோன் செய்யச் சொல்வதை சண்முகம் கவனித்திருந்தான். வேலையாட்களுக்கு ஐம்பது, நூறு எனத் தாராளமாகக் கைமாற்று கொடுத்தான்.

மத்தியானம் வீட்டில் இருந்து ஆச்சாரியாவுக்கு சாப்பிட அடுக்கு டப்பா வரும். தகர டப்பாவின் பூட்டைத் திறந்து உள்ளே இருக்கும்

அடுக்கை வெளியே எடுப்பான்.

சண்முகம், மூசாவிடம் வாங்கிய, சோறு - பருப்பு தனது இருக்கையில் அமர்ந்து சாப்பிடும் போது ஆச்சாரியா அடுக்கைத் திறக்கையில் மோர்க்குழம்பு, சாம்பார் என கும்மென மணக்கும். ஓரக் கண்ணால் எச்சிலூறும் வாயுடன் கவனிக்கும் போது பர்பி, அல்வா, பேடா என ஏதாம் இனிப்பு இருக்கும். பாதி ஆப்பிள், ஆரஞ்சு சுளைகள், சிறு திராட்சைக் கொத்து, மாம்பழக்கீற்றுகள் அல்லது கதலியின் இரு பழங்கள் இருக்கும். காரெட், தக்காளி, வெள்ளரித் துண்டங்கள் இருக்கும்.

ஆரம்பத்தில் ஒன்றிரண்டு நாட்கள் ஒப்புக்கோ விருந்தோம்பல் பண்பிலோ, 'வா எடுத்துக்கொள்' என்று சண்முகத்தை அழைத்தான். ஆச்சாரியா என்ற உடுப்பிக்காரப் பிராம்மணனுக்குத் திருப்பித்தர தன்னிடம் ஏதும் கிடையாது என்ற உணர்வில் சண்முகம் மறுத்ததில் இப்போதெல்லாம் அவன் கேட்பதில்லை. தன் சோற்றில் நெல், மண்ணுருண்டை எனக் கிண்டிக் கிண்டிப் பொறுக்கும் போது ஆச்சாரியா ஏளனத்திலோ அருவருப்பிலோ புன்னகைப்பதைக் கவனித்தும் கவனிக்காதது போல இருப்பான். தான் திருப்பிச் சிரிக்கும் சந்தர்ப்பம் வராது என்பது சண்முகத்துக்குத் தெரியும்.

நல்லா சாப்பிட்டாலும் ஆச்சாரியா ஒல்லியாகவே இருந்தான். ஒல்லி என்றால் ரொம்ப ஒல்லி. அம்மா சொல்வது போல், ஆய்ந்து கழுவினால் அரைச்சட்டிக் கறி இருப்பான். ஆறடிக்குக் கிட்டேயுள்ள உயரத்துக்கு நாற்பத்தி மூன்று கிலோ எடையே இருந்தான். முகத்தில் சரியாக – ஒரு மீசைக்குத் தேவையான அளவு கூட – முடி வளராததில் அவனுக்கு மிக வருத்தம். முகம் நிறையப் பருக்கள் பழுத்திருக்கும்.

இயந்திரத்தில் சேரும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உதிரிகளின் பெயர், பட்டிகை எண், எண்ணிக்கை அவனுக்குப் பாடம். சண்முகத்துக்கு போல்ட், ஸ்டட், ஸ்க்ரூ இவற்றின் வேறு பாடே தெரியாது. ஸ்க்ரூவில் மாத்திரம் அறுகோணத்தலை நாற்கோணத்தலை, வட்டத்தலை, மொட்டைத்தலை, ஃபிலிஸ்டன் தலை உண்டு என்றோ க்ரப், ஸாக்கெட் செட், நர்லிங் உண்டு என்றோ சண்முகம் கேட்டதே கிடையாது. ஆச்சாரியா என்றால் ஒரு உதிரியைப் பார்த்த உடனே, 'ஃபார்ட்டி ஃபோர் டேஸ் த்ரீ தார்ட்டி எய்ட் டேஸ் ஸெவன்சிடு' என்பான். அதன் மெட்டீரியல் என்ன, சைஸ் என்ன, த்ரெடிங் யு

.என்.எஃப்பா, பி.எஸ்.எஃபா, பி.எஸ்.டபிள்யூவா என்பது கூட அவனுக்குத் தெரிந்திருக்கலாம். இருபது இருபத்தோரு வயதில் வெறும் இன்டரையும் மூன்றாண்டு அனுபவத்தையும் கொண்டு இத்தனை சாதிக்க முடிந்ததில் சண்முகத்துக்கு வியப்புத்தான். ஆங்கில அறிவு அல்லது புலமை அவ்வளவு போதாது என்று வேண்டுமானால் குறையாகச் சொல்லலாம். பேசும் போது, எழுதும் போது தப்புக்கள் நிறையக் காணலாம். வேலை சரியாக ஆகும் போது நிர்வாகத்துக்கு இது அவ்வளவு பிரதானமா என்ன?

ஓர்க்ஸ் மேனேஜர் டிக்மானியிடம் அவனுக்கு நிறையச் சலுகையும் உரிமையும் இருந்தது. நிறைய நாட்கள் அவருடன் மாலை காரில் போயிருக்கிறான். அவர் தாமதமாக வர நேர்ந்தால் வீட்டுக்கு ஃபோன் செய்து பேசுவான். சண்முகத்துக்கு இருநூற்றுப்பத்து ரூபாய் தந்த போது ஆச்சாரியாவுக்கு அறுநூற்றைம்பது ரூபாய் சம்பளமாகத் தந்தனர்.

கம்பெனியில் இரண்டு ஃபோன் இருந்தது. இரண்டும் கேபினில் மேனேஜர் டேபிளில். இரண்டுக்கும் எக்ஸ்டென்ஸன் ஆச்சார்யா டேபிளில். டயலிங் வசதிகளுடன் எஸ்.ட்டி.டி வசதியுடன்.

தினமும் நிறைய ஃபோன் வரும். யாரையுமே ஃபோனைத் தொட விடுவதில்லை அவன். சில சமயம் அவன் ஒன்றுக்குப் போயிருந்தாலோ அசெம்பளி பிரிவில் நின்று கொண்டிருந்தாலோ டெலிஃபோன் மணி அடித்தால் ஓடி வருவான். வேறு யாருமே எடுப்பதில்லை. ஒரு விதத் துணிவுடன் சண்முகம் எடுத்து ஹலோ தாம்சன்ஸ் என்பான். அதற்குள் ஆச்சார்யா வந்துவிடுவான். என்னிடம் தா, என்னிடம் தா என்று அவசரப்படுத்துவான். சில சமயம் வேண்டுமென்றே ஏதாவது கேட்டு சண்முகம் தாமதப் படுத்தினால் கையிலிருந்து பிடுங்கி விடுவது போல் நிற்பான்.

டிக்மானியிடம் ஒரு கடுப்பு முகம் இருந்தாலும் மோசமான மனிதரில்லை என்று நினைத்தான் சண்முகம். எனவே ஓய்வாக அவர் இருக்கும்போது ஆச்சார்யா உள்ளே வேலையாக இருந்தபோது, அவர் கேபினுக்குப் போனான். சாதாரணமாய் அவர்கள் யாருக்கும் மேனேஜரோடு நேர் வார்த்தையாடல் கிடையாது. கேபின் கதவைத் திறந்ததும் ஏர்கன்டிஷன் குளிர்ச்சி. மெதுவான ஒரு மணம். டிக்மானி நிமிர்ந்து பார்த்ததில் மேலும் குளிரடித்தது. மன்னிக்க வேண்டும், கொஞ்சம் பேச வேண்டும் என்றான். தினசரி தனக்கு மாமூலாக

ஒதுக்கப்பட்டிருக்கும் வேலை போகத் தன்னிடம் நிறைய நேரம் இருக்கிறது. தனக்கு நிறையக் கற்றுக் கொள்ள ஆசை இருக்கிறது. தாங்கள் வழிப்படுத்த வேண்டும் என்றான். சரி, பார்க்கட்டும், போ என்றார்.

ஆச்சாரியாவிடம் என்ன சொன்னாரோ தெரியவில்லை. ஒரு நாள் காலை பில்கள் அடங்கிய ஃபைல், கோடவுன் அட்வைஸ் கத்தை ஆகியவை சண்முகத்தின் மேஜைமேல் வந்து விழுந்தது. பில்லையும் கோடவுன் அட்வைஸையும் ஒப்பிடுதல், எண்கள், இனம், பட்டிகை எண், ஆணை எண், கையெழுத்து, பெருக்கல் கூட்டல் கழித்தல்கள், வரி எனச் சரிபார்த்து கோடவுன் அட்வைஸ் எண்ணை பில்லிலும் பில் எண்ணை கோடவுன் அட்வைஸிலும் கிராஸ் ரெபரன்ஸ் எழுதி கோர்த்து, பதிவேட்டில் பதிந்து மேனேஜர் கையெழுத்து வாங்கி, பியூன் புக்கில் பதிந்து தலைமை அலுவலகம் அனுப்ப வேண்டும்.

இது கொஞ்சம் வேலையை அதிகப்படுத்தியது. முன்பெல்லாம் பில் தனியாக, கோடவுன் அட்வைஸ் தனியாக தாறுமாறாகப் போகும். தொழிற்சாலையில் பின்பு எந்தத் தொடர்புத்தடயமும் கிடைப்பதில்லை.

மாதக் கடைசியில் லெட்ஜரைப் பார்த்து ஒரு ரிப்போர்ட் தயாரித்தான். மார்ச்மாதம் ஆறு லட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று அறுபது ரூபாய் எண்பது காசுகளுக்கு உதிரிகள் வாங்கப்பட்டன என. ஒவ்வொரு மாதமும் ஒப்பு நோக்கும் போது இந்த மாதம் அறுபதினாயிரம் வாங்கியது குறைவு, இந்த மாதம் முப்பத்தைந்தாயிரம் அதிகம் எனக்காண ஒரு கிளர்ச்சி இருந்தது.

ஒரு நாள் சண்முகத்துக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ஆமதாபாத்தில் இருந்து ஒரு சாமான் வாங்கினால் அந்தப் பொருளுக்கு கிளீயரன்ஸ் செலவுகள் 2% ஆக்ட்ராய் ட்யூட்டி, பேக்கிங்– ஃபார் வார்டிங் சார்ஜஸ் 2 ½% மற்ற சில்லறைச் செலவுகள் ½ % என ஆகியது. வாங்கும் பொருட்களில் சில சமயம் பத்து முதல் இருபது சதமானம்வரை ரிஜக்ட் ஆகும். அப்படி ஆகும் போது இந்தச் செலவுகளை சப்ளையரிடம் டெபிட் செய்யலாமா? மறுநாள் டிக்மானியிடம் கேட்டான். அவர் கேட்டுச் சொல்கிறேன் என்றார். மறுநாள் அவர் சம்மதம் சொன்னதன் பேரில் அன்று தொட்டு இதற்கென தனியானதோர் டெபிட் நோட் போட்டான். ஆச்சாரியா ஆரம்பத்தில் இதைப் பொருட்படுத்தவில்லை. பிறகு பொருட்படுத்தாதது போலக் காட்டிக் கொண்டான்.

மேலும் அங்கு மாதம் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வரை கேஷ் பர்ச்சேஸ் செய்தார்கள். இதற்கெனவே ஒழுங்காய் ஒன்றிரண்டு சப்ளையர்கள் இருந்தனர். ஆச்சாரியா அவர்களிடம் பேசிய தோரணை பரிமாற்றம் இவை கொண்டு இங்கு ஏதோ சிறியதோர் எலிப்பொந்து இருப்பதாகத் தோன்றியது. பெட்டி கேஷ்பில்கள் உட்பட பல அவன் பார்வைக்கும் வந்ததால் தோராயமாய் விலைகள் தெரிந்தன. இவற்றில் பலவற்றை நேரடியாக உற்பத்தி செய்யும் நிறுவனத்திடம் வாங்கினால் சில வசதிகள் கிடைக்கும். விலையில் வேறுபாடு கணிசமாய் இருக்கும். பொருள் தரமானதாக இருக்கும், பணம் முப்பது அல்லது அறுபது நாட்கள் பொறுத்துத் தந்தால் போதும்.

ஒரு நாள் லேசாக டிக்மானியிடம் சொன்னான். அவர் உடனே ஆச்சாரியாவைக் கூப்பிட்டார். அவன் ஒரு விதமாய் முறைத்தான். டெலிவரி, நேரத்தில் கிடைக்காது; சரியாகப் பதில் எழுதமாட்டார்கள்; ஆர்டர் செய்யும் அளவு அதிகமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னான். என்றாலும் விலை விசாரித்துக் கடிதங்கள் எழுது என்றார்.

சண்முகம் அதுவரை கடிதங்கள் டிராஃப்ட் செய்ததில்லை. இதில் தனது ஆங்கிலப்புலமை வெளிப்பட வேண்டும் என்ற முனைப்பில் யோசிக்க ஆரம்பித்தான். முதலில் ரெபரன்ஸ் எண் கொடுக்க வேண்டும். அசெம்பளி டிவிஷன் என்பதைக் குறிக்க ஏ.டி. என்று எழுதி ஸ்ட்ரோக் போட்டான். தனது இனிஷியல்களைக் குறிக்க ஆர் எஸ் என்று எழுதி ஸ்ட்ரோக். பிறகு வரிசை எண், தேதி. பலவித மாற்றங்கள் செய்து முதல் கடிதம் வரைந்து முடிக்க இரண்டு மணிக்கூர் ஆகியது. இதே ரீதியில் ஆறு கடிதங்கள் எழுதி டைப் செய்யக் கொடுத்தான். நான்கு நாட்கள் ஆகியும் கடிதங்கள் டைப் ஆகவில்லை. ஆச்சாரியா சொல்லி இருக்கலாம். பிறகுதானே தட்டுத் தட்டு என்று தெரிந்திருந்த ரீதியில் டைப் செய்து, சரி பார்த்து கையெழுத்துக்குக் கொடுத்தான். பத்து நாட்கள் பொறுத்துப் பதில்கள் வர ஆரம்பித்தன. அந்தத் தொடர்புக் காகிதங்களில் டிக்மானி சிவப்புமையால் அடையாளம் செய்து அவனுக்கு அனுப்பிய போது பெருமையாக இருந்தது.

அந்த மாசம் காஷ் பர்சேஸ் பன்னிரண்டாயிரம் குறைந்தது. வழக்கமாய் அந்த ஐட்டங்களை சப்ளை செய்பவர்கள் வந்து பார்த்துவிட்டு போனார்கள். சண்முகத்துக்கு அவர்கள் ஏமாற்றத்தில் ஒரு சந்தோஷம் இருந்தது. இன்னும் சற்று முயற்சி செய்தால் எட்டுப் பத்தாயிரம் குறைக்கலாம் என்று தோன்றியது.

ஆச்சாரியா இப்போது சபதம் எடுத்துக் கொண்ட எதிரி போலப் பரிமாறினான்.

O

அசெம்பிளியில் வேலை செய்தவர்களில் ரூபென் ஜோஸஃப் என்றொரு அஸிஸ்ட்டென்ட் ஃபிட்டர். சண்முகத்துக்கு சில சொற்களே தெரிந்திருந்த போது, ரூபென் சரளமாய் ஆங்கிலத்தில் பேசினான். ஆங்கில மீடியத்தில் மெட்ரிக் தோற்றவன். மற்றவர்களிடம் ஏதும் தொடர்பு கொள்ள முடியாதபோது அவனிடம் சில நிமிடங்கள் பேசுவது குளிர்ச்சியாக இருக்கும். அவன் அப்பா சிறு பிள்ளையில் பம்பாய் வந்தவர் என்றும் சென்னை வண்ணாரப் பேட்டையில் அவர்கள் வீடு இருந்தது என்றும் தான் தமிழ் நாட்டுக்குப் போனதே இல்லை என்றும் வீட்டில் சில வார்த்தைகளில் பரிமாற்றம் தமிழில் இருக்கும் என்றும் சொன்னான். ஆங்கிலோ இந்தியக் கொச்சையில் தமிழ் பேசினான். காலையில் பார்த்ததும் "ஸ்தோத்திரம்" சொன்னான். அவனுடன் வெறும் அறிமுகப்பழக்கத்தை மீறிய ஒன்று நிறம் காட்டியது.

வேலை நேரங்களில் எதற்காவது ஸ்டோர் பக்கம் வந்தால்– போன் பேச, கைகழுவ சோப் பேஸ்ட் எடுக்க, காட்டன் வேஸ்ட் வாங்க, பழுதுபட்ட உதிரிகளை மாற்ற என– சண்முகத்திடம் சில சொற்கள் பேசுவான்.

"என்ன செஞ்சுக்கினுருக்கே?"

"ஊர்லேந்து லெட்டர் வந்திச்சா?"

ஆச்சாரியா வெறுப்புடன் ஓரக்கண்ணால் பார்ப்பான். சில சமயம் "ச்சு" என்பான். சிலசமயம் "க்யா ஹை ரூபென்?" என அதட்டுவான். அவன் அதட்டலை வேண்டுமென்றே பொருட்படுத்தாமல் சில நிமிடங்கள் நின்று கொண்டிருப்பான். போய் விட்டு கையில் த்ரெட்டிங் கெட்ட ஸ்க்ரூ ஒன்றை எடுத்துக் கொண்டு மறுபடியும் வருவான். ஐந்து நிமிடத்தில் ஆச்சாரியாவை எரிச்சலூட்டும் திருப்தி முகத்தில் துளிர்த்திருக்கும்.

ரூபென் அப்பா ஜேக்கப் அந்த கம்பனியின் வேறொரு பிரிவில் ஃபோர்மெனாக இருந்தவர். அங்கு வேலை செய்த பலருக்கும் ஆரம்பத்தில் தொழில் பயிற்றிக் கொடுத்தவர். நிறையக் குடித்தவர். அசெம்பிளியில் ஒரு பிற்பகலில் விழுந்து செத்தவர்.

ரூபெனுக்கு கம்பனி உடனே வேலை கொடுத்தது. மற்ற தொழிலாளர்களுக்கு அவன் மேல் ஒரு பரிவு இருந்தது.

நல்ல வேலை செய்வான். சில்லறை அக்குறும்பும் செய்வான். லஞ்சுக்கு வெளியே போனால் ஒரு பூனைக் குட்டியைத் தூக்கி வந்து சாசரில் பால் ஊற்றி வைப்பான். பக்கத்துக் காம்பவுண்டில் வளர்ந்து கவியும் மாவில் பிஞ்சு அடிப்பான்.

மற்ற தொழிலாளர்களை விட படிப்பும் நிதானமான பாங்கும் உண்டு. எனவே, இருபத்தைந்து வயது பக்கமே ரூபெனுக்கு இருந்தாலும் ஒரு தலைமை ஸ்தானம் இருந்தது.

தொழிற்சாலையில் வாட்டர் கூலர் வந்ததும். சாயா சலுகை விலையில் கிடைப்பதும் அவனால்தான் என்றார்கள். அவனது மற்ற கோரிக்கைகள் – வேலை யூனிபாரம், சம்பளத்தில் எல்லோருக்கும் நூறு ரூபாய் உயர்வு....

பெரும்பாலும் சாப்பிட்ட பின் இருக்கையிலேயே அமர்ந்து ஏதும் படிப்பான் சண்முகம். அல்லது உள்ளே போய் ரம்மி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டு நிற்பான். பென்கர் மத்தியானம் சாப்பிடுவதில்லை. காலையில் சாப்பிட்டு விட்டு வந்தால் பிறகு மாலை வீட்டுக்குப் போய் தான் சாப்பாடு. இடைவேளையில் வெளியே சென்று ஒரு சிகரெட் பிடித்து விட்டு, பான் போட்டு வருவார். அபூர்வமாய்ச் சில நாட்களில் இரண்டு வாழைப்பழம் வாங்கித் தின்பார்.

சண்முகம் சுஜாதாவில் சாப்பிடப் போனால் திரும்பி வரும் போது அட்லஸ் மில்ஸ் காம்பவுண்டின் வாசலில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும் பென்கருடன் நிற்பான். இஸ்ரேல் பற்றிப் பேச ஆரம்பித்தால் பெருமை தோன்றப் பேசிக் கொண்டே போவார். இங்கிருந்து சில ஆண்டுகளில் ஓய்வுபெற்று விடுவதாகவும் பின்பு இஸ்ரேல் போய் விடுவதாக இருப்பதாகவும் சொல்வார். அவருடைய உறவினர்கள் ஒவ்வொருவராய்ப் பிரிந்து கொண்டிருந்தனர். அறுபது வயதுக்கு மேல் போனால் அங்கு ஓய்வு ஊதியம் கிடைக்கும் என்பார்.

ரே ரோடு முழுக்க நிறைந்திருக்கும் டிரான்ஸ்போர்ட் கம்பனிகளின் கிடங்குகளில் இருந்தும், இந்திரா டாக், பிரின்ஸஸ் டாக் என வரிசையாய் இருக்கும் துறைமுகங்களில் இருந்தும், மத்திய ரயில்வே சரக்கு ஸ்டேஷன்களான வாடி பந்தர், கர்னாக் பந்தர்களில் இருந்தும் வரும் போகும் பன்னிரண்டு டன் லாரிகள், லோகல்

டிரக்குகள், பத்து வீலர் ட்ரெய்லர்கள், டெம்போக்கள், கைவண்டிகள் என்று முடுக்கம் நிறைந்த ரோடு அது. புகையும், தூசியும், இரைச்சலும் எங்கும் பரம் பொருள் போல் நீக்கமற்ற நிறைந்திருக்கும்.

சில சமயம் "தேக்கோ... தேக்கோ" என்பார் பென்கர். பார்ப்பதற்குள்ளே நாலைந்து விடலைப் பையன்கள் சரக்கு நிறந்த லாரியொன்றில் தொற்றி ஏறி அகப்பட்டதை எடுத்து ரோட்டோரம் வீசுவார்கள். லாரி ஓடிக் கொண்டிருக்கும் போதே குதித்து ஓடி விடுவார்கள். லாரிக்காரன் தற்செயலாய்ப் பார்த்து, கிளீனர் தொற்றி ஏறி வருமுன்பே மாயமாய் மறைந்து விடுவார்கள். ஆ, ஊ என்ற சத்தமோ, கம்பித்துண்டை எடுத்துச் சுழற்றுவதோ அவர்களை ஏதும் செய்வதில்லை. கீழே விழுந்த சாமான்கள் நொடிக்குள் குடிசைக்குள் நுழைந்துவிடும். இன்னதுதான் என்றில்லை. பெரிய பெரிய இரும்பு கர்டர்கள், ஆங்கில்கள், ஸ்க்ரேப் துண்டங்கள் என எதுவானாலும் சரி.

ஒரு நாள் காலங்குல விட்டமுள்ள செம்புக்கம்பி ரோல்கள் மூன்று. ஒரு ரோல் நூறுகிலோ இருக்கும். இழுத்து வந்து காம்ப வுண்டினுள் ஒளித்து வைத்துச் சில நிமிடங்களில் பணமாகிவிட்டது. மூவாயிரம் ரூபாய்க்குப் போயிற்று என்றார் பென்கர். நேர்விலை கிலோ முப்பத்தெட்டு ரூபாய். அரை மணி நேரம் பொறுத்து போலீஸ் வரும்போது துப்பும் கிடையாது; துறவுகோலும் கிடையாது.

இன்னொருநாள் சண்முகம், பென்கர், ராவுத் ஆகியோர் பார்த்துக் கொண்டு நின்றபோது ஆயில் டேங்கர் ஒன்று ஃடிராஃபிக் நெருக்கடியில் நகர்ந்து நகர்ந்து போயிற்று. ஒருவன் பின்னாலேயே ஓடிப்பின்புறக் குழாயைத் திறந்து பார்த்தான். இரண்டங்குல விட்டமுள்ள பைப்பு. டீசல் எண்ணெய் கொப்பளித்துப் பாய்ந்தது. சற்று நேரத்தில் பிளாஸ்டிக் பக்கெட்டுகள், குடங்கள், சமைக்கும் அலுமினியச் சட்டிகள், சருவங்கள் எல்லாம் கொண்டுவந்து பெண்டுகள், பிள்ளைகள் கிழங்கள் என ஆயில் சுமந்து சென்றனர். சிக்னல் மாறியதும் ஒருவன் குழாயை அடைக்க, ஒழுக்கிக் கொண்டே சென்றது டாங்க்கர்.

ஒரு நாள் சாயங்காலம் வேலை முடிந்து திரும்பும் போது இரண்டு மூடை பச்சைப்பட்டாணி ரோட்டோரம் கிடக்க, கோணியைக் கிழித்து கொள்ளுமட்டும் அள்ளிக்கொண்டு போனார்கள். மாமாஜி இன்டஸ்ட்ரீஸில் வேலை பார்க்கும் ஒருவன் இரண்டு பேன்ட் பாக்கெட்டுகளிலும் திணிக்க, சண்முகத்தைக் கண்டு வெட்கமுற்றுச் சிரித்தான். ஒரு நாள் பத்துப் பதினைந்து வாழைக்குலைகளை எடுத்து

வீசிக்காய்கள் ரோடெங்கும் சிதறின. ஒரு நாள் பருப்பு மூடை.

சில சமயம் வெளிநாடுகளில் இருந்து நன்கொடையாய் ரெட் கிராஸ் மூலமோ மற்ற சேவாதளங்கள் மூலமோ வெள்ள அல்லது வறட்சி நிவாரணங்களுக்காக வரும் பழைய துணி மூட்டைகளைக் கிழித்துக் கையில் அகப்பட்டதை வாரி வீசுவார்கள். சற்று நேரத்தில் பொருத்தமில்லாத ஸ்வெட்டர்களுடன் ஓவர் கோட்டுகளுடன், கவுன்களுடன் மக்கள் திரிவர்.

நல்ல வெயில் காய்ந்து புழுதி பறந்த ஒரு நாளில் திமுதிமுவென ஒருவன் ஓடி வந்து தொழிற்சாலையில் நுழைந்தான். கையில் ஐந்தாறு துணி ரோல்கள். ஓரங்குல கனமுள்ள நீளமான உருளைகளில் சுற்றப்பட்ட ரோல்கள். பாலியெஸ்டர் ஷர்டிங் துணிகள். ஒரு ரோலில் முப்பது மீட்டர்கள். நல்ல அழகழகான டிசைன்கள். கடையில் வாங்கப் போனால் மீட்டர் இருபத்தைந்து முப்பது ரூபாய் ஆகலாம். ஓடி வந்தவன் வழக்கமாக ரோட்டோரம் தென்படும் ஆள்தான். ரோலுக்கு இருநூறு ரூபாய் கேட்டான். இரண்டு சூபர்வைசர்களிடம் இருந்த பணமும் மற்ற சிலரது சில்லறையுமாக இருநூறு ரூபாய் சேர்த்து இரண்டு ரோல்கள் கைமாறியது. எல்லாத் தொழிலாளிகள் சார்பிலும் இருநூறுரூபாய் கம்பனியில் கைமாற்று வாங்கி மேலும் இரண்டு ரோல்கள் விலை தீர்ந்தது.

ஆச்சாரியா சற்று நேரம் அருகில் போவதும் வருவதுமாய் இருந்தான். ஆவலும் அச்சமும் படர்ந்த முகபாவம். தோல் பையைத் திறந்தான், அடைத்தான். மறுபடி திறந்து, பர்ஸ் எடுத்து இரண்டு நூறு ரூபாய் நேட்டுக்களை எடுத்துக் கொடுத்துவிட்டு இரண்டு ரோல்கள் வாங்கினான். எங்கு வைப்பது என்று சற்று நேரம் யோசித்தான் போல. கப்போர்டுக்குள் அந்த நீளம் நுழைய மறுத்தது. முகத்தில் கலவரம் இருந்தது. கடைசியில் ஸ்டோரின் மூலையொன்றில் ஒரு லொகேஷனில் மறைவாகப் போட்டுவிட்டு வந்தான்.

அசெம்பளி செக்ஷனில் இரண்டு இரண்டு மீட்டராக அறுத்துக் கொண்டிருந்தான் ரூபென். மூன்று மணிக்கு மேல் யாரும் வேலையே செய்யவில்லை. ஆச்சாரியா தீவிரமாக எழுதும் பாவனையில் இருந்தபோது ரூபென் வந்தான்.

“என்னா சண்முகம்? நீ வாங்கலே?”

“இல்லப்பா!”

"பயந்துக்கினியா? க்யா பென்கர் மாஸ்டர், ஆப்?"

பென்கர் சிரித்துவிட்டு யாருக்குத் தைத்துப்போட என்று குழந்தைகள் இல்லாத விரக்தியைத் தொனித்தார்.

ஆச்சாரியாவைப் பார்த்து நக்கலாக சைகை செய்து விட்டுப் போனான். இந்த ரோல்களை எவ்விதம் அவன் வீட்டுக்குக் கொண்டு போவான் என யோசிக்க ஆரம்பித்தான் சண்முகம்.

○

பம்பாயில் மாதுங்கா பகுதியில் தமிழ் மன்றம் ஒன்று இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு சனிக்கிழமை பிற்பகலில் கேட்டுக் கேட்டுப் போனான். புதையலைக் கண்டது போல் இருந்தது. நிறையப் புத்தகங்கள், பத்திரிக்கைகள்... புத்தகங்கள் இருபதினாயிரம் இருக்கும். நாவல்கள் மட்டும் ஐந்தாயிரம். உறுப்பினர்களுக்கு இரண்டு புத்தகங்கள் கொண்டு போகலாம். எட்டு ரூபாய் டெபாசிட். ஆண்டுக்குப் பன்னிரண்டு ரூபாய் சந்தா. நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய். ஆக பத்தொன்பது ரூபாய்க்கு உடனடியாக எங்கு போவது என்று கருதி பத்திரிகைகள் மாத்திரம் படிக்கப் போனான் தினமும்.

தினமணி தினமும் படிக்கக் கிடைத்தது. சம்பளம் வாங்கிய ஏழாம் தேதி மாலை பணத்தோடு போனான். நூல் நிலையம், படிப்பகம் – முதல் மாடியில். மாடியின் கோடியில் நிர்வாகக் குழு என்று போர்டு மாட்டி ஒரு நீள அறை. எப்போதும் நாலைந்து பேர் அமர்ந்து ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சுக் கொச்சையில் பிராம்மணர்கள் என்று தெரிந்தது. சிலசமயம் டைப் அடிக்கும் சத்தம். சில சமயம் டெலஃபோன் மணிச் சத்தம். பெரும்பாலும் பேச்சுச் சத்தம்.

உள்ளே எட்டிப் பார்த்தான் சண்முகம். கார்டெக்ஸ் மாதிரி இரண்டு உறுப்பினர் பதிவேடுகள். காப்பித் தம்ளர்கள். கணக்குப் பிள்ளை போல் ஒருவர் குள்ளமாக, தடியாக, வயதானவராக இருந்தார். வேட்டி கட்டி இருந்தார். மூக்குக் கண்ணாடி தொங்க, "என்னய்யா?" என்றார்.

"உறுப்பினர் ஆகணும் சார்...."

"என்னத்துக்கு? சாண்டில்யன் புஸ்தகம் படிக்கவா?"

"அதெல்லாம் படிச்சாச்சு சார்..."

"தெரியும்ய்யா... சாண்டில்யன் புஸ்தகம் தீர்ரது வரை வருவீங்க... அப்புறம் பணத்தை வாங்கீட்டுப் போயிருவீங்க..."

"இல்லே சார்..."

"தெரியும்யா... இப்பம் பாரம் தீந்து போச்சு... அடுத்த மாசம் வந்து பாருங்க..."

அவர் எதிரே ஒல்லியாக, மூக்கு முடி வெளியே தெரியும்படி இருந்த ஒருவர் மெலிதாகச் சிரித்தார். இப்படிப் 'பொடு பொடு' வெனப் பேசுபவரிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், சற்று சோர்வுடன் சண்முகம் வெளியே வந்தான்.

நேரே தி.மு.க. மேடையில் இருந்து இறங்கி வருபவர் போன்ற தோற்றத்தில், பட்டு வேட்டி, முழுக்கைச் சட்டை, நடு வகுப்பு, செதுக்கல் மீசை, தோளில் சால்வையுடன் ஒருவர் எதிரே வந்தார்.

"என்னப்பா தம்பி?"

"உறுப்பினர் ஆகணும்ணு..."

"உள்ளே யார்ருக்கா? சுந்தரராமனா? பாரம் இல்லன்னு சொன்னானா? தேவ்டியாப் பயலுவ... பாப்பானா இருந்தாத்தான் பாரமே குடுப்பான்... வா நீ எங்கூட..."

மயிர்க்குரு ஒன்றைப் பிய்த்தது போல் சிவீர் என வலித்தது. சண்முகம் பின்னால் போனான்.

"யோவ் சுந்தரராமா... ஒரு மெம்பர்ஷிப் பாரம் எடுயா!" கனத்த ஆசாமி ஏறிட்டுப் பார்த்தார்.

"அது வந்து ... அது ஒண்ணுமில்லே... பாரம் பிரின்டுக்குப் போயிருக்கு... வரல்லே..."

"சும்மா மளுப்பாதீங்க... உங்க டிராயர்லே இப்பம் திறந்து பார்த்தா இருநூறு பாரம் இருக்கும்... இவங்க எல்லாம் மெம்பர் ஆகக் கூடாதுண்ணா வாசல்லே இருக்க போர்டை மாத்துங்க முதல்லே..."

"அது இல்லீங்க கவிப்பித்தன்... சாண்டில்யன் புஸ்தகம் படிச்சுத் தீர்ரது வரை மெம்பரா இருப்பாங்க... பிறகு பணத்தை வாங்கீட்டுப் போயிருவாங்க..."

"அப்ப சாண்டில்யன் பொஸ்தகத்தை எல்லாம் வாபஸ்

வாங்குயா... என்ன பெரீய மயிரு வேத பொஸ்தகம்னு நினச்சு வாங்கி வாங்கி அடுக்குறீங்க.. இப்பம் நீங்க பாரம் குடுங்க....”

அறிமுகம் செய்பவர் இடத்தில் கையெழுத்துப் போட்டு சண்முகத்திடம் நீட்டினார், கவிப்பித்தன். “சீக்கிரம் பில்லப் செய்து பணத்தைக் கெட்டுப்பா... இல்லேண்ணா மேனேஜர் பூட்டீட்டுப் போயிருவாரு.”

பணம் கட்டியதும் ரசீது காட்டி நூலக அட்டைகள் பெற்றுக் கொண்டான். அன்றே இரண்டு புத்தகங்கள் எடுத்துக் கொண்டான்.

O

கம்பனி நிலைமை சரியாக இல்லை என்று பேசிக் கொண்டார்கள். பிரிசிஸன் வைன்டர் மெஷினுக்கு செஞ்சுரி ரேயானிடம் எதிர்பார்த்த மேலும் நூறு மெஷினுக்கான ஆர்டர் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றார்கள். டெக்ஸ்போஸ் மெஷின் தங்கள் மெஷினைவிட நன்றாக வேலை செய்வதால் ஆர்டர் அவர்களுக்குப் போய்விட்டது என்றார்கள். காற்றில் ஒரு நிச்சயமற்ற நிலைமை தெரிந்தது. இரண்டு மூன்று மாதங்களாகவே குறித்த தினத்தில் சம்பளம் வரவில்லை. எட்டு, ஒன்பது, பத்து என்று கூடப் பிந்தியது. அதுவும் தொழிலாளர் சம்பளம் மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டது. ஆபீசர்களுக்கு இன்னும் போனமாதச் சம்பளம் கிடைக்கவில்லை என்றார்கள். லிமிடெட் கம்பனியில் இதெல்லாம் எப்படிச் சாத்தியம் என்பது சண்முகத்துக்கு விளங்கவில்லை. சேட்டுகள் கம்பனிப் பணத்தைச் சுரண்டிக்கொண்டு போனார்கள்; ஒரு ரிட்ரெஞ்மென்ட் வரும்; டெம்பரரிகளை எல்லாம் எடுத்து விடுவார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

சண்முகம் வேலை தேட ஆரம்பித்தான். டைம்ஸ் ஆஃப் இந்தியா பார்த்து தினமும் ஏழெட்டு விண்ணப்பங்கள் எழுதி வி.டி.போய் அதெற்கென வைத்திருக்கும் பெட்டியில் போட்டு விட்டு வந்தான். ஒன்றிரண்டு கம்பனிகள் பேட்டிக்கு அழைத்தன. பெரும்பாலும் பின்னால் தெரியப்படுத்துவதாய்ச் சொன்னார்கள். சிலர் வேலை தருவதாகச் சொன்னார்கள் ஆனால் சம்பளம் இருநூறு ரூபாய்க்கு மேல் தரமுடியாது என்றார்கள். ஒன்றும் தோதுப்பட்டு வரவில்லை.

சண்முகத்துடன் ஏழெட்டுப்பேர் டெம்பரரியாக இருந்தார்கள். பேக்கிங் செக்ஷனில் ஒருவன். பெயின்டிங்கில் ஒருவன்,

அசெம்பிளியில் இவர், க்ளரிகலில் அவன் மட்டும். தலைமை அலுவலகத்தில் பெருமளவில் ஆட்குறைப்புச் செய்தனர். மற்றவர்கள், சம்பளத்தில் இருநூறுரூபாய்கள் குறைத்துக் கொண்டனர். கம்பனி நிலைமை சீரானால் இந்த இருநூறை அதிகப்படுத்துவதாய் ஒப்பந்தம். அவர்களுக்குக் கட்டுபடியாகும். ஒவ்வொருவரும் இரண்டாயி ரத்துக்கும் குறையாமல் சம்பளம் வாங்கினார்கள். சாதாரணமான படித்தம் உள்ளவர்கள்தான். காற்று வசதியான திசையில் வீசியதால் தொழிலும் நன்றாக நடந்ததால் கணிசமான சம்பள உயர்வுகள் கிடைத்தன போலும்.

தலைமை அலுவலகத்தில் ஆட்குறைப்புச் செய்த கையோடு பன்னிரண்டு தற்காலிக கிளார்க்குகளும் வேலை இழந்தனர். சண்முகத்தின் பிரிவில் மற்ற ஏழு பேருக்கும் கன்பார்மேஷன் வந்தது. அடிப்படைச் சம்பளம் நூற்று நாற்பது ரூபாயும் பஞ்சப்படியும்.. எல்லாமாக முந்நூற்றுப் பதினைந்து ரூபாய் வரும். சண்முகத்தின் கிளரிகல் க்ரேடில் அடிப்படைச் சம்பளம் இருநூற்றைம்பதும் பஞ்சப்படியுமாக நானூற்றிருபத்தைந்து வரும். தற்போது வாங்கும் சம்பளத்தில் இரண்டு மடங்கு.

ஒன்றரை ஆண்டாகக் கனவில் வந்து போன வசதிகள் கைக்கெட்டும் போல. வீட்டுக்கு ஐம்பது அனுப்புவதை நூற்றைம்ப தாக்கலாம். காலையில் ஏதும் சாப்பிட்டு விட்டே வேலைக்கு வரலாம்.

ஜனவரி முதல் கன்பர்மேஷன் தேதி போட்டிருந்தனர். மேமாதம் முடிய அரியர்ஸ் கிடைக்கும். தனக்கு எண்ணூற்றெழுபத்தைந்து ரூபாய் வரை வரும். இரண்டு பேன்ட் ஷர்ட் எடுத்துக்கொள்ளலாம். மீதிப் பணத்தை ஊருக்குப் போய்வர என ஒதுக்கி வைக்கலாம்.

ஒவ்வொருவராய் பெயர் கூப்பிட்டு லெட்டர் கொடுத்தனர். சண்முகம் எதிர்பார்த்திருந்தான். ஏழுபேரும் வாங்கிக் கொண்டு போயாயிற்று. டிக்மானி வேலையாக இருக்கிறார் போலும். பத்துப் பதினைந்து நிமிடங்கள் காத்திருந்தான். கேபினில் டிக்மானிக்கு எதிரே சப்ளையர் ஒருத்தர் இருந்தார். அவர் போகட்டும் என்று தாமதித்தான். அங்குமிங்கும் நடந்தான். போன பிறகு சண்முகம் உள்ளே போனான்.

டிக்மானி நிமிர்ந்து பார்த்தார்.

சற்று நேரம் அதை எடுப்பதும் இதைவைப்பதுமாக இருந்தார். அவன் பார்வையைத் தவிர்த்தார். கடைசியில்

"க்யா?" என்றார்.

"சார்... மைலெட்டர்....?"

"ஐம் ஸாரி சண்முகம்"

தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதில் தனக்கு சிரமம் இருக்கவில்லை என்றும், எச்.ஓ.வில் நாற்பது நிரந்தர கிளார்க்கு களையும் பன்னிரண்டு தற்காலிக கிளார்க்குகளையும் ஆட்குறைப்புச் செய்யும் நிலைமையில் இங்கு ஒரு கிளார்க்கை நிரந்தரம் செய்ய அனுமதி கிடைக்கவில்லை என்றும் சண்முகம் இதனால் ஏமாற்ற முறுவதில் தனக்கும் வருத்தமுண்டு என்றும் பொறுமையுடன் இருக்கும்படியும் விரைவில் தன்னால் முடிந்ததைச் செய்வதாயும்...

அழுகை மெல்லக் கசியும் போலத் தோன்றியது. வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை. கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டு வெளியே வந்தான். ஆச்சாரியா முகத்தில் அறிந்தும் அறியாத பாவம் இருந்தது. ஆனால் அவன் தூண்டுதலால் இது நடந்திருக்கும் என்று தோன்றவில்லை. டிக்மானி எடுப்பார் கைப்பிள்ளை அல்ல.

ஏமாற்றம் வயிற்றில் நிறைந்து கிடந்தது. சற்று நேரம் குனிந்து உறைந்திருந்தான். நிறையப்பேர் வந்து துக்கம் கேட்டுவிட்டு போனார்கள். ரூபென் வந்து தோளில் கை வைத்தான்.

ப்யூன் வந்து டிக்மானி கூப்பிடுவதாகச் சொன்னான்.

வாஷ் பேஸினில் முகத்தைக் கழுவி, ஒரு வாய் தண்ணீர் குடித்து, தன்னைத் திடப்படுத்திக் கொண்டு போனான். ஒரு வேளை இன்றே இறுதி நாளாகவும் இருக்கலாம். போகு முன்னால் இது நியாயம் தானா என்று மட்டும் கேட்டுவிட்டுப் போக வேண்டும்.

ரே ரோடு டிவிஷினில் டெம்பரரி கிளார்க்குக்கு இரு நூற்றைம்பது ரூபாய் சம்பளம் கொடுத்த போது, எச்.ஓ.வில் அறுநூற்றைம்பது ரூபாய் கொடுத்தனர். இங்கு சண்முகம் நிரந்தரமாகும் பட்சத்தில் நானூற்றுப் பதினைந்து ரூபாய் தந்தால், எச்.ஓ.வில் நிரந்தரமானவர்க்கு எழுநூற்றுத் தொண்ணூறு ரூபாய் கொடுப்பார்கள். இந்த நிலைமையில் அவர்களின் விதி தனக்கு எப்படிப் பொருந்தும் என்று கேட்க வேண்டும்.

டிக்மானி முன்னால் போய் மறுபடியும் நின்றான். வருத்தப் படும் தொனியில் பேசினார். மறுபடியும் மேலிடத்தில் பேசிப் பார்த்ததாயும் தற்போது வேறெதுவும் செய்வதற்கு இல்லை என்றும் தன்னுடைய

சொர்தப் பொறுப்பில், பயணப்படி என்று போட்டு, வவுச்சரில் மாதம் ஐம்பது ரூபாய் தருவதாகவும் கவலைப்படாமல் வேலை செய்யும்படியும்....

சற்று நேரம் பேசாமல் நின்றான் சண்முகம்.

மனதில் ஒரு வீம்பு தோன்றியது.

நெஞ்சில் ஒரு வஞ்சம் திரண்டது.

சத்தமாகப் பேச்சு வரவில்லை.

கரகரத்த குரலில் சொன்னான்–

"வேண்டாம் சார்... வயிறு இதை வாங்கிக்கொள் என்றாலும் மனசு வேண்டாம் என்கிறது. வேண்டாம் சார். என்னால் காத்திருக்க முடியும்."

வெளியே வந்தபோது ஓர் வைராக்கியம் கலைந்து கலைந்து கூடியது.

முன்போல் சண்முகத்திடம் கலகலப்பு இல்லை. ஆனால் வேலையில் தீவிரம் காட்டினான். எல்லோருக்கும் முன்னால் அலுவலகம் வந்தான். எல்லோரும் போன பின்பும் இருந்தான். சொந்த வேலை இல்லாதபோது பென்கருக்காக அட்வைஸ் எழுதினான். பின் கார்டு போஸ்டிங் செய்தான். இன்ஸ்பெக்ஷனில் போய் எண்ணிக் கொடுத்தான். பேக்கிங் செய்த பெட்டிகளின் மீது மார்க்கிங் செய்தான். மார்க்கிங் செய்தபோதுதான் புரிந்தது. காகிதத்தில் பேனாவால் எழுவதுபோல இல்லை பெட்டியில் பிரஷ்ஷால் எழுதுவது என்பது. அசெம்பளி செக்ஷனில் போய் நின்று என்ன செய்கிறார்கள் என்று கவனித்தான். உதரிகள் பெயரும் பட்டிகை எண்ணும் தெரிந்திருந்தது என்றாலும் அதன் பணி என்ன, அசெம்பிளியில் எப்போது தேவையாகிறது என்பதை அறிய முனைந்தான்.

ஆச்சாரியா அலட்சியமாக ஆரம்பத்தில் சிரித்தாலும் பின்னர் அந்தச் சிரிப்பில் செயற்கை தொனித்தது. உள்ளுக்குள் சண்முகத்தின் தீவிரத்தால் கலவரப்படுகின்றான் என்பது புரிந்தது. அவன் மேலும் உற்சாகமடைந்தான். ரூபென் சில வேலைகளையும் அவனுக்கு கற்றுத் தந்தான்.

***

# எட்டு

டைம்ஸ் ஆஃப் இந்தியா வாசலில் ஒரு சனிக்கிழமை பிற்பகலில் பரக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் சண்முகம். தோளளவு உயரம் நாலடி விட்டமுள்ள நியூஸ் பிரின்ட் ரோல்கள், ஃபின்லாண்டில் இருந்து இறக்குமதியானவை. முழு ரோல்கள் மெஷினில் உருண்டு துணிபோல் நீண்டு ஒரு பக்கம் அச்சாகி, மறுபக்கம் அச்சாகி, மூன்று நிறமும் தனித்தனி அச்சாகி மடிந்து, ஸ்டேப்லர் அடிக்கப்பட்டு தனித்தனி இல்லஸ்ட்ரேட்டட்வீக்லி யாக ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி விழும் அதிசயத்தை அரை மணிக்கூர் பார்த்துக் கொண்டிருந்தான்.

மணி நான்குதான் ஆகி இருந்தது. பொங்கல் வீட்டுக்குப் போக மனமில்லை. தமிழ் மன்றத்தில் ஆறு மணிக்குத்தான் சனியன்று நூலகம் திறப்பார்கள். இன்னும் கணிசமாய் இரண்டு மணி நேரம் இருந்தது. மெல்ல நடந்து, ரோட்டை சிக்னல் பார்த்துக் கடந்து வி.டி. ஸ்டேஷனுக் குள்ளே வந்தான். பதிமூன்று பைசா கொடுத்து ஸ்டேஷன் ஸ்டாலில் சாயா குடித்தான். சும்மா நின்று கொண்டிருக்க அலுப்பாக இருந்தது. ஆர்பர் பிராஞ்சு ரயில்களில் கூட்டமில்லை. இரண்டாம் சனிக்கிழமை. இந்த வண்டியில் ஏறி குர்லா போய் அதே வண்டியில் திரும்பி வரலாம். நேரம் போகும்.

வண்டியில் ஏறி சன்னலோர இருக்கையொன்றில் அமர்ந்து நகம் கடிக்க ஆரம்பித்தான். நகத்தை எப்போதாவதுதான் வெட்டுவது. ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ந்து அழுக்குச் சேர ஆரம்பிக்கும்போது கடித்து எடுத்துவிடுவது. பெருவிரல் நகம் கடிப்பது கொஞ்சம் கடினமான வேலை. எனவே அதை மட்டும் கொஞ்ச நேரம் துப்பினியில் ஊற வைத்துக் காத்திருந்து கடிப்பது. கால் நகம் மட்டும் கடிப்பதில்லை. எனவே ஒரு எல்லை வரை அது வளர அனுமதிக்கப்படும்.

பெருவிரல் நகத்துக்கு வருமுன் பக்கத்தில் யாரோ வந்து இருந்தார்கள். யதேச்சையாகத் திரும்பிப் பார்த்தான். எங்கோ கண்ட முகமாக இருந்தது. இங்கில்லை — ஊரில்தான். ஆ... கிங்காங்கின் அண்ணன், கருப்பையாபிள்ளை சாரின் மருமகன்— காமாட்சி... காமாட்சிநாதன்.

கருப்பையா சார் வீட்டில் ஒரு சீமை நெல்லிக்காய் மரம் உண்டு. அதிகப்புளிப்பில்லாமல் கருகரு வென்று கடிக்கச் சுவையாக இருக்கும். உப்பில் ஊறப்போட்டால் அடுத்த நாள் காலையில் நல்ல வாசனை வரும். ஆனால் சரியாகப் பருக்கும் வரை விடுவது கிடையாது. சற்று உயரமான கட்டமண். ஆனாலும் ஆளில்லாதபோது பயல்கள் ஏறிப் பறிப்பார்கள். பாட்டா— கருப்பையா சாரின் அப்பா—– பார்த்தால் கண்டபடி அறுத்துக் கிழிப்பார். சாரின் தங்கச்சி வீட்டில் சமைந்து இருந்தாள். "யக்கா.. யக்கோவ்... ஏ கிட்ணமக்கா... நெல்லிக்கா..." என்று கட்ட மண்ணின் இந்தப்புறம் இருந்து குரல் கொடுக்க வேண்டும். "யாருலே அது?... சரி ஏறிப் பறிச்சுக்கோ... பிஞ்சைப் பறிச்சிராதே... அஞ்சாறு பறிச்சுக் கிட்டு சீக்கிரம் இறங்கு ... பாட்டா குளிக்கப் போயிருக்காரு.... வந்தா ஏசுவாரு..."

அங்குதான் கிங்காங் நின்று வளர்ந்தான். ஆள் நல்ல தண்டியாக இருந்தான். ஆகவே காரணப்பெயர் அல்லது உவமை ஆகுபெயர். சண்முகத்தை விட இரண்டு வயது சின்னவன். பன்னிரண்டு வயதிலேயே அவனுக்கு உயரம் நின்றுவிட்டது. பக்கவாடுகளில் வளர்ந்தான். குரல் கரகரத்தது. மார்பில் அக்குளில் முகத்தில் முப்பது வயதுக்காரன் போல் முடி வளர்ந்தது. மீசை முளைத்தது. பன்னிரண்டு வயதில் பகவதி அம்பட்டன் முகத்தில் சோப்புத் தடவி அவனுக்கு முகம் வழித்தான். பரிகாசத்துக்கு அஞ்சி மற்ற பயல்களுடன் சேருவது கிடையாது.

கோவிலுக்கோ, குளிக்கவோ போவது பாட்டா கூடத்தான். பாட்டாவின் குரலுக்கு அஞ்சிப் பயல்கள் பக்கத்தில் போவது கிடையாது. என்றாலும் முடுக்கின் மறைவில், மரத்தின் ஒளிவில் இருந்து "லேய் கிங்காங்" என்று சத்தம் அடிக்கடி கேட்கும். பள்ளிக்கூட வாசல் வரை தாத்தா கூட வந்தாலும் மற்ற பயல்களுடன் தானே உள்ளே உட்கார வேண்டும்? வாத்தியார் இருக்கும் போது எதுவும் செய்ய முடியாது என்றாலும் ஒன்றுக்கு விடும்போது, சாப்பிட விடும்போது,

குமைக்கும் போது "பாட்டாக்கிட்டே சொல்லுவேன்... நான் பாட்டாக்கிட்டே சொல்லுவேன்" எனக் கரகரத்த குரலில் உறுமுவான். ரொம்பக் கோபம் வரும்போது ஆளை அப்படியே அப்பிப்பிடித்து இறுக்கி நெரித்து விடுவான். ஒற்றைக்கு ஒற்றை என கிங்காங்குடன் யாரும் மோத முடியாது. சப்பிப்போடுவான் சப்பி.

விடுமுறையில் காமாட்சியும் மாமா வீட்டுக்கு வருவான். அப்போது சண்முகம் நிறையப் பார்த்திருக்கிறான். கடைசியாகப் பார்த்து நாலைந்து ஆண்டுகள் இருக்கும்.

"நீங்க... நீ.. கிங்கானுக்கு அண்ணம்லா?"

"ஆமா... நீங்க?"

"நான் குறுங்குளம்... நீ கருப்பையா சார் வீட்டுக்கு வருவேயில்லா?"

"ஆமா... ஞாபகம் வருது ... நீங்க எடக்குடியில்லா?" என்று சொல்லிவிட்டு நாக்கை கடித்தான். சமாளிப்பது போலத் தொடர்ந்து– "ஆமா... இப்பம் நல்ல ஞாபகம் வருகு.. உங்க வீட்டுக்கு பாலு வாங்க வந்திருக்கேன்... உங்க வீட்டுக்குப் பொறத்த ஒரு கருவப்பிலை மரம் நிண்ணுல்லா? இப்பம் நிக்கா?"

"ஆமா!"

"நீங்க எங்க வேலை பாக்கையோ? நான் பால்டன் ரோட்லே இமாலயன் இன்ஸ்ட்ருமென்ட் கம்பனியிலே டைப்பிஸ்ட். வாங்க ஒரு நாளைக்கு ... ஊரிலே இருந்து எப்பம் வந்தயோ? பாட்டாக்கு அடிக்கடி வயத்துவலி வருகுண்ணு மாமா எளுதி யிருந்தா. குணமாயிட்டோ என்னவோ? தம்பிக்கு கல்யாணம் ஆயிட்டு தெரியும்லா.. அதான் ஆறுமுகம்... ஆராம்புளிச்சித்திக்கு மகன்.. போனமாசம்.. நான் போல்ல.. சவம் கிட்டயா கெடக்கு? தீவாளிக்குப் போணும்" என்ற ரீதியில் பேசிக்கொண்டே போனான் காமாட்சி.

பேசியவாறே சண்முகத்தைச் செம்பூருக்குக் கூட்டிக் கொண்டு போனான். குர்லாவில் இறங்கி டிக்கட் வாங்கி குர்லா – மான்கூர்டு லோகல் பிடித்து செம்பூரில் இறங்கி...

வழிநெடுக வளவள என்று பேசிக்கொண்டே வந்தான் காமாட்சி.

ஊரில் மாமாவீட்டுக்கதை, கொலாபாவில் ஒரு மாமா இருப்பது, அவருடன் இரண்டு வருடம் தங்கியது, சண்டை போட்டுவிட்டு வெளியேறியது, அவர் தம்பி இவனை அடித்தது, சாகரில் மார்னிங் ஷோவுக்கு சிவாஜிகணேசன் படம் பார்த்தது என...

செம்பூர் ஸ்டேஷனில் இறங்கி, ரெயில்வே பாட்டக்கோடு நடந்து லெவல் கிராஸிங்கில் ரோட்டுக்கு வந்து, ஷெல்காலனி ரோட்டில் நடந்தனர். இரண்டு புறமும் அஸ்பெஸ்டாஸ் கூரைகளும் தகரச்சுவர்களும் கொண்ட கடைகள். பலவகைப்பட்ட வியாபாரங்கள். சிமன்ட், செங்கல், மரம், இரும்பு, பார்னிச்சர், பாத்திரம், துணி, விறகு, மார்வாடி அடகு, ஓட்டல், காய்கறி, லாண்டரி, முடிவெட்டு, ஸ்டவ் ரிப்பேர், கன்ட்ரி லிக்கர், பான்பீடி, சாயா.....

தலைக்குமேல் இன்னொரு ரோடு ஓடும் பாலம் தாண்டியதும் ஒரு முடுக்கில் நுழைந்து, ரயில்வே லைனைத்தாண்டி குடிசை வரிசைகள். புறநகர்ப்பகுதிகளில் ரயில்வே லைனின் இருபுறமும் அமைந்திருக்கும் ஏராளமான குடிசைகளைக் கொண்ட நகர்களைப் போல, இது செம்பூர் ஸ்டேஷனை ஒட்டிய நகர் – இந்திராநகர்.

ரயில்வே லைனைத் தாண்டியதும் ஒரு முற்றம். முற்றத்தின் இரண்டுபுறமும் மூன்று மூன்று குடிசைகள். எதிர்புறம் ஒரு குடிசை. குடிசையின் பின்புறம் தேங்கிக்கிடக்கும் ஒரு குட்டை– சகதியாய்ப் பின்வாங்கியிருக்கும் கடலின் ஒரு துமியாய். குட்டைக்குப் போக ஒரு முடுக்கு.

இடது கைப்பக்கம் மூன்றாவது இருந்த குடிசையைத் திறந்து உள்ளே கூட்டிச் சென்றான் காமாட்சி.

உள்ளே கொஞ்சம் சுத்தமாக இருந்தது. நடைக்கு எதிர்ச்சுவர் ஓரத்தில் ஒரு கட்டில். இடதுகைச் சுவரோரம் சமைக்கும் மேஜை. இரண்டு பம்பு ஸ்டவ்கள். அலுமினியப் பாத்திரங்கள். மேஜையின் கீழ்த்தட்டுப் பலகையில் சப்பாத்திக் கட்டை, கம்பு, குப்பிகளில் மசாலா சாமான்கள். இரண்டு பெரிய பிஸ்கட் டின்களில் சப்பாத்தி மாவும் அரிசியும், ஒரு மூலையில் தொங்கும் கம்பிக்கூடையில் உருளைக் கிழங்கு, வெங்காயம். அதன் நேர்கீழே அங்கணம். அங்கணத்தின் மூலையில் தண்ணீர் டிரம், இரண்டு பிளாஸ்டிக் பக்கெட்டுகள். ஒரு மக். வளையமாக கைப்பிடிக் கம்பி கட்டிய கக்கூசுக்குத் தண்ணீர் எடுத்துப் போகும் இரண்டு லிட்டர் டப்பா.

கவரில் சில காலண்டர்கள். சிவகாசி முருகன், எம்.ஜி.யார், ஜெயலலிதா... முருகன் படத்தை ஒட்டி எரிந்து தீர்ந்த ஊதுபத்திக் கட்டைகள். நான்கு படுக்கைகள் சுருட்டப்பட்டு கட்டிலின் கீழே கிடந்தன. கட்டிலின் மேல் ஒரு தலையணையும் சமுக்காளமும். கட்டிலின் ஓரத்தில் உயரே ஒரு நைலான் கயிற்றுக் கொடி. கொடியில், தொங்கலாக பேன்ட், சட்டை, துண்டுகள்....

காமாட்சி கட்டிலில் உட்காரச் சொன்னான்.

"மணி என்னாச்சு?"

"நாலே முக்கால்"

"இரிங்கோ பாலு வாங்கியாறேன். சாயா போட்டுக் குடிக்கலாம்..."

"இல்லே போணும் சீக்கிரம்"

"போலாம்... எல்லோரும் வரட்டும்... ராத்திரி சாப்பாடு எல்லாம் முடிஞ்சு போலாம்.... எல்லாம் இனிமேல்தான் ஒண்ணொண்ணா வரும். செம்பகம் அரிசி யாவாரத்துக்குப் போயிருக்கான். அஞ்சு மணிக்கு மேலேதான் வருவான். அவன் தம்பி முத்து, நாடார் கடையிலே நிக்கான். வர ஒம்பதுக்கு மேலே யாகும்... நீங்க இரிங்கோ. இன்னா வந்திருதேன்."

ரயில்வே லைனைத் தாண்டி ரோட்டுக்குப் போய் பால் வாங்கி வந்து சாயா போட்டான். செம்பகத்துக்கு ஒரு தம்ளரில் ஊற்றி மூடி வைத்தான்.

காமாட்சியின் அப்பாவையும் அம்மாவையும் சண்முகத்துக்குத் தெரியும். அவர்கள் சைவக்காரர்கள். சண்முகத்தின் வீட்டுக்குப் பால் வாங்க வருவார்கள். அப்பாவை 'அண்ணேன்' என்றுதான் கூப்பிடு வாள் காமாட்சியின் அம்மா. சிறிய ஊராகையால் எல்லோருக்கும் உறவு உண்டு. கல்யாணம் போன்ற அடியந்திரங்கள் வந்தால் கலந்து கொள்வார்கள். ஆனால் கை நனைக்க மாட்டார்கள். எனவே அரிசி, பருப்பு, காய்கறிகள் என முந்திய நாளே அவர்கள் வீடுகளுக்கு அனுப்ப வேண்டும். அம்மன் கோவில் அன்னக்கொடை வந்தால் பள்ளுப்பறை பதினெட்டு சாதிகளுக்கும் சாப்பாடு உண்டு. ஆனால் சைவக் காரர்களுக்கு முதல் பந்தி, தனிப்பந்தி வைக்க வேண்டும்.

காமாட்சியின் அப்பா ஆர்.வி.மில்லில் கார்டிங் செக்ஷனில் ஜாபராக இருந்தார். பெரிய கம்யூனிஸ்ட். நிறையப் படிப்பார். ஊருக்கு விடுமுறையில் வரும்போது, சாப்பிட்டு விட்டு சாத்தாங்கோயில் படிப்புரையில் துண்டு விரித்துப் படுக்கும் போது எஸ்.ஏ.டாங்கே புத்தகமோ ஏ.கே.கோபாலன் புத்தகமோ கையில் இருக்கும். ஆர்வி மில்லில் ஒரு முறை வேலை நிறுத்தம் நடந்தபோது இரண்டு மாதங்கள் ஊரில் தங்கியிருந்தார். அப்போது பேசிப் பழக்கம் உண்டு. எல்லோரும் ‘கரட்டுக் கம்புக்கு முரட்டுக் கோடாலி’ என அரசியல் பேசும்போது அவர் புள்ளி விவரங்கள் நிறையக் கொடுப்பார்.

இந்த ஆண்டோடு அவர் பென்ஷன் ஆகிவிடுவார் என்றும் அவர் இடத்தில் பரமசிவத்துக்கு– அதுதான் கிங்காங்கின் பெயர் – வேலை கொடுப்பார்கள் என்றும் சொன்னான் காமாட்சி. பேசிக்கொண்டிருக்கும் போது செம்பகம் வந்தான்.

அறிமுகம் முடிந்தபிறகு சண்முகம் புறப்பட யத்தனித்தான். அவர்கள் விடவில்லை.

சமையல் வேலைகளோடு பேச்சும் தொடர்ந்தது. அந்த வீட்டுக்கு நூறு ரூபாய் அட்வான்ஸ், நாற்பது ரூபாய் வாடகை. மூன்று பேர் இருக்கிறார்கள்.

வாடகை உட்பட மூன்று வேளைச் சாப்பாட்டுக்கு மாதம் நூறு அல்லது நூற்றப்பத்து ரூபாய் ஆகும்.

காலையில் சாயாவும், சப்பாத்தியும்.

மத்தியானத்துக்கு சப்பாத்தியும் ஏதாவது ஒரு கறியும் டப்பாவில் கொண்டு போகலாம்.

இரவில் சோறு பொங்கி ஒரு குழம்பு. செம்பகமும் முத்தும் அசைவம். வாரத்தில் ஒரு நாள் மீனோ இறைச்சியோ வாங்குவார்கள். அன்று காமாட்சி தனியாகக் கறி மட்டும் வைத்துக் கொள்வான்.

இன்னும் ஒருவர் கூடத் தங்கலாம்.

காதறை கூதறைகளைச் சேர்த்துக் கொள்வதில்லை.

செம்பகம் கறிக்கு அரைத்துக் கொண்டிருந்தான். சோறு ஸ்டவ்வில் வெந்து கொண்டிருந்தது. காமாட்சியுடன் சண்முகமும் வெள்ளாங்கம் உரித்தான். வெங்காயம் உரித்தான். அண்ணாச்சி

வந்திருப்பதனால் பூண்டும் சின்ன உள்ளியும் போட்டு காரக்குழம்பு வைத்து பப்படம் சுட்டுக்கொள்ள ஏற்பாடு. செம்பகத்தைச் சண்முகத்துக்குப் பிடித்துப் போயிற்று. தன்மையாகப் பேசினான். மனதைச் சிரித்தான்.

இங்கேயே வந்துவிடலாமா என்று தோன்றியது சண்முகத்துக்கு. இவர்களுடன் சேர்ந்து சமைத்து உண்ணலாம். பகலில், இரவில் இஷ்டத்துக்குப் படிக்கலாம். வீடுபோல ஒரு அடக்கம் இருந்தது.

"தண்ணிக்கு என்ன செய்வியோ?"

"பாட்டக் தாண்டி ஒரு தமிழக்காரர் வீடு இருக்கு. இருவத்திநாலு மணியும் தண்ணி வரும். பக்கட் கொண்டுபோயி பிடிச்சுக்கிட்டு வரணும். மாசம் அஞ்சு ரூபா... மோரியிலே குளிக்கலாம். இல்லேண்ணா வீட்டுக்குப் பொறத்த ரெண்டு சப்பைக்கல்லு போட்டிருக்கு. அதுக்கு மேல நிண்ணு கோரிவிட வேண்டியதுதான்."

"கக்கூசுக்கு?"

காமாட்சி முதலில் சிரித்தான். பிறகு சொன்னான். "ரயில்வே லைனை ஒட்டிப் போகணும். டப்பாவிலே தண்ணி கொண்டுக் கிட்டுக் போகணும். காலம்பற தரை வெளுக்கதுக்கு முன்னால் போணும். இல்லைண்ணா மூந்தி கருக்கலுக்குப் பொறவு போகணும். இல்லைண்ணா குறைச்சலா இருக்கும். ரயில் போகச்சிலே வரச்சிலே முகத்தைத் திருப்பி வேறபக்கம் வச்சுக்கிட்டு நிக்கணும். அல்லது கையிலே ஒரு துண்டோ குடையோ வச்சுக்கிடணும்."

மாஹிமில் ரயில் பிடித்து காலை எட்டரை மணிக்குப் பயணம் செய்கையில் வடாலா ரோடு ஸ்டேஷன் அருகில் பெண்களும் வெளிக்குப் போவதைப் பார்த்திருக்கிறான். மூன்று நிமிடத்துக்கு ஒரு முறை போகவோ வரவோ செய்யும் ரயில்களுக்குக் கூசினால் நாள் பூரா நின்றுகொண்டே இருக்க வேண்டியது தான். டப்பாவை முன்னால் வைத்துக்கொண்டு சேலையைப் பெண்ணுறுப்புத் தெரியாமல் முன்னால் கவித்துக்கொண்டு, தலையைக் கவிழ்த்துக்கொண்டு, சிலர் குடையால் முகத்தை மறைத்துக் கொண்டு....

ஆண்கள். இந்தக் கவலையெல்லாம் இல்லாமல் பீடி புகைத்துக் கொண்டோ, ரயில் பற்றி உணர்வற்றோ பராக்குப் பார்த்துக்கொண்டோ சாவகாசமாக இருந்தனர்.

இருளில் போய்வருவதுதான் வசதியானது. ஆனால் போகும் போதும் வரும்போதும் ரயிலைக் குறித்து மிகக்கவனமாக இருக்க வேண்டும். எப்போதும் ரயில் முன்னால் வருகின்ற திசையில் பாட்டக்கில் நடக்க வேண்டும்.

சண்டாசுக்குப் போய்வர என்று தனியாக பிளாஸ்டிக் சப்பல்கள் வேண்டும். காலைக்கழுவியல்லாமல் வீட்டுக்குள் வரக்கூடாது.

மழைக்காலத்தல் அங்கெல்லாம் நிறையத் தண்ணீர் தேங்கும். சில சமயம் தண்டவாளங்கள் மாத்திரம் மேற்பரப்பு வெளித்தெரிய மற்றெல்லாம் நீரில் அமிழ்ந்து இருக்கும். அப்போது குடிசை வாசலில் கூடக் குளம் போலத் தண்ணீர் கெத்துக்கெத்தென்று தேங்கும். துளும்பும். அப்போது வெளிக்குப் போக என்ன செய்வார்கள்?

காமாட்சி சென்னான் –

"அதெல்லாம் எப்பிடியும் அட்ஜஸ்ட் செய்துக்கிட வேண்டியது தான் அண்ணாச்சி. நாமாது பரவாயில்லே... வெளியே தெரிஞ்சாக்கூட ஒண்ணுமில்லே. பொம்பிளையோ என்ன செய்வா? பேப்பரைப் பரத்தி வீட்டுக்கு உள்ளேயே வெளிக்கிருந்து ஆளனக்கம் இல்லாத நேரத்திலே வெளீல எறிஞ்சிட்டு வருவா தெரியுமா?"

சண்முகத்துக்கு 'திக்' கென்றிருந்தது.

சாப்பாடெல்லாம் ஆன பிறகு "அண்ணாச்சியும் இங்க வந்திருங் களேன்" என்றான் செம்பகம்.

"ஆமா... ஒண்ணாந்தேதி காலி பண்ணீட்டு வந்திருங்கோ" என்றான் காமாட்சி.

சண்முகத்துக்கு உடனடியாக ஏதும் பதில் சொல்லத் தோன்றவில்லை.

O

எதிரே இருந்த மூன்று வீடுகளில் முதல் வீட்டில் லட்சுமி இருந்தாள். பிராம்மணத்தி. அவள் கல்யாணம் செய்திருந்தது பலசரக்குக் கடையில் வேலை பார்த்த ஜெயபாண்டியன் நாடாரை. சண்முகத்ததுக்கு அதிசயம் போலப்பட்டது. அது எப்படி ஒரு பிராம்மணத்தி நாடாரைக் கல்யாணம் செய்ய முடியும்? கடத்திக்

கொண்டு வந்திருப்பாரென்றால் காவலிலும் வைக்கவில்லை. காதலாக இருக்குமோ என்றால் சாதி சனத்தை விட்டும் காதல் ஏற்படுமா என்ன?

எல்லோரும் கூப்பிடுவதைப் போலவே சண்முகமும் அவளை லெச்சுமியக்கா என்றே கூப்பிட்டான். லட்சுமி அக்கா கர்ப்பமாக இருந்தாள். சாயங்காலம் வேலை எல்லாம் முடிந்து மேல் கழுவி, தலை சீவிப் பொட்டிட்டு, நடையில் வந்து அமர்ந்து ஆனந்தவிகடனோ கலைமகளோ படித்துக் கொண்டு நாடார் வரவு பார்த்திருப்பாள். மேலும், சண்முகம் படிக்க வாங்குவதை எல்லாம் இரவல் வாங்கிக் கொண்டு போவாள்.

அடுத்த வீட்டில் நாலைந்து மலையாளிப் பையன்கள் இருந்தனர். சித்தப்பா பெரியப்பா மக்களான அண்ணன் தம்பிகள். இரண்டு பேர் மோட்டார் மெக்கானிக் என்று சொல்லிக்கொண்டனர். இரண்டுபேர் பாஸ்போர்ட் வாங்கி வைத்துக்கொண்டு சவூதி அரேபியாவுக்கோ அபுதாபிக்கோ போக விஸா வரவு பாத்திருந்தனர்.

கடைசி வீட்டில் ஐம்பது வயதான ஒரு அம்மாளும், இருபதுக்கு மேல் இருபத்தைந்து வயதிருக்கும் கல்யாணமாகாத அல்லது கல்யாணமாகிப் பிரிந்த அல்லது விதவையான சற்றுப் பருமனான ஒரு பெண்ணும் முனிசிபல் ஸ்கூலில் படிக்கும் ஒரு பையனும். அம்மாவுக்கு கொலாபாவில் நேவி ஹாஸ்பிட்டல் ஐ.என்.எஸ். அஸ்வினியில் வேலை. தூக்கும் துடைக்கும் கழுவும் வேலையாகத்தான் இருக்க வேண்டும். தரை வெளுக்கும் போது புறப்பட்டுப் போய்விட்டு நாலரை ஐந்து மணிவாக்கில் வருவாள். துணிப்பையில் திணித்தபடி ஏதும் சாமான் இருக்கும். வந்ததும் மகளை ஒரு பாட்டம் ஏச்சு நடக்கும். பாத்திரம் தேய்க்கவில்லை என்றோ வீடு பெருக்கவில்லை என்றோ காரணம் கொண்டு. ஏச்சில் அந்த அம்மாளின்தோல்வியும் தளர்ச்சியும் தொனித்துக்கொண்டே இருக்கும். பிறகுதான் சாயா போட்டுக் குடிப்பது. அன்னம்மையின் தோலை இவை ஒன்றுமே செய்வதில்லை.

முற்றத்தை முறைத்துக்கொண்டிருக்கும் ஒற்றை வீட்டில் போனமாதம் காலிபண்ணிப் போனபிறகு ஆட்கள் இல்லை.

சண்முகம் வீடு இருந்த வரிசையில் முதல் வீடு ஒரு முஸ்லீம் குடும்பம். தமிழ் முஸ்லீம் – பேரணாம்பட்டுக்காரர்கள். அந்த ஆளை சண்முகம் பார்த்ததே இல்லை. எப்போது போவார் எப்போது வருவார் என்பதும் தெரியாது. அந்த அக்காள் கைக் குழந்தைக்காரி. மீண்டும்

கர்ப்பமாக இருந்தாள். பார்த்தால் மனதின் வாட்டம் போக்கும் முகம். ‘என்னா தம்பி’ என்று கேட்கும்போது ஒரு மனித நேயம் தூக்கலாகத் தென்படும்.

சண்முகமும் மற்றவர்களும் இருக்கும் நடுவீட்டை அடுத்து ஒரு மராட்டிக் குடும்பம். எங்கோ பாரமேற்றி இறக்கும் வேலை செய்கிறார்கள். பீடபூமிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இரவு பத்து மணிக்கு மேலாகும் சில சமயம் வீடு திறக்க. அதன்பின் சமையல் தொடங்குவார்கள். நெடு நேரத்துக்கு ஸ்டவ் எரியும். பூண்டு வதக்கித் தாளிக்கும் மணமடிக்கும் சில நாட்கள். கூனிப்பொடிக் கருவாட்டை சொட்டு எண்ணெயும் விடாமல் சப்பாத்திக் கல்லில் வறட்டும் நெடி சில நாட்கள் ஆளை வெருட்டும். நிறைய நாட்கள் அவர்களின் பம்பு ஸ்டவ்வின் இரைச்சலிலேயே தூங்கிப் போயிருக்கிறான் சண்முகம். நன்றாக விடியுமுன் “காய் ரே அண்ணா மாச்சஸ் தே” என கதவைத் தட்டித் தீப்பெட்டி கேட்பாள் சம்பாபாயி; ராத்திரியில் கைப்பிள் ளைக்கோ கணவனுக்கோ திறந்த முலைகளைச் சரியாக மூடாமலேயே, அது மூடப்படாமல் கிடக்கிறது என்ற உணர்வு அற்றே. ஆரம்பத்தில் காச்சல் பூச்சல் என அவர்கள் மொழி வெறும் ஒலியாக விழும். இப்போதெல்லாம் ஒலி உருத்தெரிய ஆரம்பித்துள்ளது.

காமாட்சி ஒரு வகையில் காரியக்காரன். தன் காரியம் அவனுக்கு மிக முக்கியம். மற்றவை எல்லாம் பிற்பாடுதான். செண்பகம் அப்படியல்ல. உள்ளே ஒரு பரிவு நிறைந்து வெளியே கசியும் பையன்.

அப்போது பம்பாயில் அரிசிக்கு மிகுந்த தட்டுப்பாடு. கிலோ ஏழு ரூபாய்க்கு மேலேயே விற்றது. ஓட்டல்களில் திங்களும் புதனும் அரிசிச் சோறு பொங்கக் கூடாது என்றும் சட்டம். இருபது பேருக்கு மேலே உணவிடக்கூடாது என விருந்தினர் கட்டுப்பாட்டுச் சட்டம்.

சில மங்களூர்க்கார ஷெட்டி ஓட்டல்களில் வரகரிசிச் சோறு சமைத்தனர். அதில் மிக மண் கடிக்கும். சில ஓட்டல்களில் வேகவைத்து உலர்த்தி உடைத்த கோதுமையைச் சோறு போல லாப்ஸி என்று பொங்கினார்கள். அது ஒரு வழவழத்தனத்துடன் மங்கிய நிறத்துடன் ரப்பர் இழுப்புடன் இருக்கும்.

நிறையச் சாம்பார் விட்டு, ரசம்விட்டுப் பிசைந்து இறக்குவார்கள் உள்ளே.

கறுப்புச் சந்தையில் அரிசிக்கு நிறையக் கிராக்கி இருந்தது.

அதிலும் கொத்துக்கொத்தாகத் தமிழர் வாழும் சயான், கோலிவாடா, மாதுங்கா, செம்பூர், தாராவி, அந்தேரி பகுதிகளில். ஐந்துகிலோவுக்கு மேல் சேர்ந்தாற் போல அரிசி எடுத்துச் செல்ல நகரெங்கும் தடை இருந்தது. நிறைய சேலத்துக்காரர்களுக்கு, ஆண், பெண், குழந்தைகள் என அரிசி யாவாரம் அடிப்படை வாழ்க்கை மூலதனம். சென்ட்ரல் ரயில்வேயில் டிராம்பேயில் இருந்து மும்பராவில் இருந்து டிட்டிவாலா அல்லது பத்லாப்பூரில் இருந்து, வெஸ்டர்ன் ரெயில்வேயில் பஸீன்ரோட்டில் இருந்து கொண்டு வர வேண்டும். போகவரப் பிரயாணத்துக்கு நான்குமணி நேரம் எடுக்கும். கிலோவில் ஒருரூபாய் நியாயமாய் எதிர்பார்க்கலாம்.

கிலோவுக்குத்தான் விலை என்றாலும் தராசும் படியும் வைத்து நிறுப்பதில்லை. போர்ன்விடா அல்லது கிளாக்ஸோ டப்பாதான் அளவு. சரியாக இருக்கும். அரிசிவாங்கும் வீடுகளிலேயே டப்பா வைத்திருப்பார்கள்.

ஒரு நாள் இரண்டு ட்ரிப் அடிப்பார்கள். ரயில்வேக்கு சீசன் டிக்கட். இடையில் ஆர்பிஎஃப் அல்லது டிடி எதிர்ப்பட்டால் கையில் ஒன்றிரண்டு வைத்து அழுத்துவார்கள். கூட்டமாகவே வியாபாரத்துக்குப் போவதும் வருவதும். சிலசமயம் ஆர்பிஎஃப் அல்லது டிடி வைத்திருக்கும் பைகளில் ஆள்வீதம் கைநிறைய அரிசி அள்ளிப் போடுவார்கள். சில சமயம் சிரித்து மழுப்பிவிட்டு ஓடிவிடுவதும் உண்டு.

செண்பகம் இந்த வியாரத்தைச் சற்று நாகரீகமாகச் செய்தான். ஆள், பார்க்க வாட்டசாட்டமாய் – முகம் மழித்து, மீசை கத்தரித்து கச்சிதமாய் உடுத்தி இருப்பான். ஒரு ஏர் –பேக்கும் ஹேண்ட் பேக்குமாக பஸ்ஸில் இருந்து ரயிலில் இருந்து இறங்கி நடக்கும் போது கனம் வெளியே தெரியாதபடி வசமாகப் பிடித்து நடப்பான்.

நல்ல சன்ன அரிசியாகப் பார்த்தே வாங்குவது. குர்லாவில் வண்டி மாறி மும்பராவில் இறங்கி பஸ்பிடித்து தலோஜா போய் வாங்கிவருவான். அங்கு விலை சற்று மலிவாகவும் எடை முனைப்பாகவும் இருக்கும். நடைக்கு பதினைந்து முதல் இருபதுகிலோ வரை அவனால் கொண்டுவர முடிந்தது. எத்துக் குத்தாய் சனியன்கள் எதிர்ப்பட்டால் கொடுக்க என இரண்டு ரூபாய் நோட்டுகள் வைத்திருப்பான். 'சாப்பாட்டுக்கு வாங்கீட்டுப் போறமுங்க' என்று முகத்தை வைத்துக் கொள்வான்.

வீடுகளில் கொடுக்கும் போதும் அளப்பு நிறுப்பு கிடையாது. 'சாமி.... இருவது கிலோ இருக்கு. நூத்தி நாப்பது ரூவா கொடுங்க' என்கிற ரீதியில் அவன் கைவசம் இருபது முப்பது புள்ளிகள் உண்டு. மாலை ட்ரிப்பில் மட்டும் வீட்டுக்காக ஒரு கிலோ அரிசி தனியாகக் கொண்டு வருவான். வரும்போது செம்பூர் நாக்காவில் இருந்து காய்கறி வாங்கி வருவதும் அவன்தான். கீரை வாங்கி வந்தால் ஆய நேரமாகிறது என்ற காமாட்சி ஏசுவான். கறிக்கு அரைப்பு செண்பகம். வைத்து எடுப்பது காமாட்சி. பாத்திரம் கழுவுவதும் தண்ணீர் கொண்டு வந்து நிறைப்பதும் முத்து. கறிக்கு நறுக்கிக் கொடுப்பது, கீரை ஆய்வது, சப்பாத்திக்கு மாவு பிசைவது, அரிசியில் கல்பொறுக்குவது சண்முகம் என்று நடந்தது.

எல்லோரும் வயிறு நிறையச் சாப்பிட்டார்கள். மத்தியானம் சப்பாத்தியும் கறியும் கொண்டு போனார்கள். ஞாயிறுகளில் நால்வரும் சேர்ந்து சினிமா போனார்கள். ஒரு சிறிய சிக்கல்-காமாட்சி சிவாஜி ரசிகன்; செண்பகம் எம்.ஜி.ஆர் ரசிகன். சில சமயம் இருவருக்கும் குத்து வெட்டு எனச் சண்டை நடக்கும்.

சண்முகம் எல்லா வாராந்தரிகளும் வாங்கினான். தமிழ் மன்றப் புத்தகங்கள் இரண்டு எப்போதும் கைவசம் இருக்கும். எனவே பெரிய படிப்பாளி அறிவாளி என்று ஸ்தானம் உண்டு; குமுதம், விகடன் படிப்பவன் எல்லாம் அறிவாளி என்ற கணக்கில். சண்முகத்துக்கு சில சமயம் அதில் பெருமையும் அடிக்கடி தமிழ்மன்றம் போய்வரும் சலுகையும் உண்டு.

ஞாயிறு ஆனால் மாலை நான்கு மணிக்குத் தமிழ் மன்றம் போகத் தவறுவது இல்லை. சீக்கிரமாகப் போய்ச் சேர்ந்தால் தமிழ் மன்றத்தில் ஒரு சௌகரியம். வசதியாக கக்கூசுக்குப் போகலாம். கீழே அரங்கில் ஆண்பெண்களுக்குத் தனித்தனியே ஒன்றும், முதல் மாடியில் ஆங்கிலேயர் பாணியில் ஒன்றும் இரண்டாம் மாடியில் பயணிகள் வசதிக்காக ஒரு வரிசையும் உண்டு. ஆங்கிலேயப் பாணி கக்கூஸ் சண்முகத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. மலம் 'டுமுக்' கென விழும் போது தண்ணீர் சிலசமயம் தெறிக்கும். அருவருப்பாக இருக்கும். கிழேயானால் இந்தியப் பாணி. கல்யாணம் வரவேற்பு எது இருந்தாலும் புகுந்து விடுவதுதான் தைரியமாய். தமிழ் மன்றத்துக்குப் போகும் நாட்களில் சண்முகம் இரவில் ரயில்வே பாட்டக் ஓரம் கக்கூசுக்கும் போவது கிடையாது.

தமிழ் மன்றத்தின் செயலாளரும் நூலகரும் வேறு வழக்கமாக அங்கு வரும் ஒன்றிரண்டு பேரும் செம்பூரில் தங்கினார்கள். சண்முகத்துக்கு அவர்களுடன் முகப் பரிச்சயம் உண்டு. ஒன்றிரண்டு சொற் பரிமாற்றமும் உண்டு. செம்பூரில் தங்கல் எங்கே என்று கேட்டபோது ஷெல் காலனி என்று சொல்லியும் வைத்திருந்தான்.

சில சமயம் செயலாளரோ நூலகரோ "இரு நானும் வருவேன்" என்று புறப்படுவார்கள். எப்படியாவது அவர்களைத் தழையப் பார்ப்பான், "மாட்டுங்கா போறேன் கொஞ்சம் வேலை இருக்கு" என்று சொல்லி. சில சமயம் புறப்பட்டு கோலிவாடா ஸ்டேஷனுக்குப் போய்க்கொண்டிருக்கும் போது வேகமாகப் பின்னால் வந்து தோளில் தட்டினால் என்ன செய்ய முடியும்? செம்பூர் ஸ்டேஷனில் இறங்கியதும் வெட்டிவிட முயற்சி செய்வான். சில சமயம் காய்கறி அல்லது பழம் வாங்குவது போல், சில சமயம் சாப்பிட ஓட்டலுக்குப் போவது போல் பாவனைகள். இந்தக் குடிசை ஒன்றில்தான் இருக்கிறோம் என்பதை அவர்கள் யாரும் அறிந்து விடக்கூடாது என்ற கவலை சண்முகத்துக்கு எப்போதும் இருந்தது.

காலையில் தரை வெளுக்குமுன் கக்கூசுக்குப் போய்வந்து விடுவதனால் சிக்கல் இல்லை. இரவில் போகும் போது முகப்பு வெளிச்சத்தைக் கொட்டிக் கொண்டு ரயில்கள் போகும். தெரிந்தவர்கள் யாரும் பார்த்துவிடுவார்களோ என்று கூச்சமாக இருந்தது. எனவே ஒரு தலை முண்டு எப்போதும் தலையை, கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்தான். மணவறை சுற்றி நடக்கும் பெண்போல் தலை தாழ்ந்தே இருக்கும்.

காலையில் எப்போதும் நேரத்தோடு எழுந்து விடுவான். ஞாயிறிலும் கூட. சில ஞாயிறுகளில் மற்றவர்கள் சண்முகத்தின் கவலை அற்றுத் தூங்கி விடுவார்கள். எழுந்து பார்க்கும் போது சூரியன் சுடரும். சண்முகத்துக்கு அப்போது வெளியே போக முடியாது. கூடியவரை அடக்கிப் பார்ப்பது. அடக்க முடிகிற விஷயமா இது? சட்டை பேன்டை மாட்டிக் கொண்டு பாக்கெட்டில் சில்லறையும் சீசன் டிக்கட்டும் போட்டுக் கொண்டு ஸ்டேஷனுக்கு வருவான். செம்பூர் ஸ்டேஷனில் அதற்கு சௌகரியம் கிடையாது. குர்லா ஸ்டேஷன் வந்து, வரிசையில் காத்து நின்று, முந்திப் போனவன் போட்டு விட்டுச் சென்ற பீயைத் தண்ணீர் விட்டுத் தள்ளச் சொல்லி, டப்பாவில் தண்ணீர் நிறைத்தபின் உட்காருவான்.

போன உடன் அப்படியே உட்கார்ந்துவிடவும் முடியாது. பேன்டை முட்டுவரை மடக்கிவிட்டு, பெல்ட் அவிழ்த்து, பட்டன்களை அவிழ்த்து, அன்டர்வேரைக் கீழே தள்ளி விட்டு....

கழித்து முடிப்பதற்குள் கதவில் தட்டல்கேட்கும். "சலோ தீன் நம்பர்... சலோ ஜல்தி... சலோ தோன் நம்பர்" என்று.

தான் மிகத் தாமதித்து விட்டோமோ என்று பதைத்து அவசரமாய் முக்கி... அது பெரிய வேதனை.

பின்னால் தான் புரிந்தது- இந்தத் தட்டல் தனக்காக மட்டும் இல்லை. பொதுவாகவே கொஞ்ச நேரத்துக்கு ஒரு முறை எல்லாக் கதவுகளையும் தட்டிவிட்டுப் போவான் என்று. இதே போல்தான் இங்குள்ள மலிவான தேவடியாக்குடிகளிலும் என்று கேள்விப் பட்டிருந்தான். வேலையை முடிக்கு முன்னாலேயே கூடக்கிடப்பவளும் வெளியாளும் அவசரப்படுத்திக் கொண்டு இருப்பார்கள் என்று. 'சலோ... ஜல்தி கரோ...' என விரட்டும் போது எப்படிப் புணர முடியுமோ?

ஒவ்வொரு கதவுத்தட்டலுக்கும் அவனுள் திடுக்கிடல். அதுவே நேரத்தை அதிகப்படுத்தி விடும். நேரத்தை விரைவுப் படுத்தும் சங்கதியும் உண்டு. மலநாற்றம், மூத்திரக்கவிச்சம், கதவின் இடுக்குகளில் அடைந்து மீசைகளை நீட்டும் கண்டாங்கிப் பாச்சைகள், வில்லாகத் தெறிக்கும் புழுக்கள், மலக் குழியின் குமிளிகள் வெடித்துத் திடீரெனப் பரவும் கெட்ட நாற்றம், இறந்து மலர்ந்து கிடக்கும் மலப்புழுக்கள், கபத் துப்பல்... ரயில்வே அமைச்சர்களை, ரயில் போர்டு மெம்பர்களை, ஜெனரல் மேனேஜர்களை, டிராஃபிக், டெக்னிகல், கமர்சியல் மேனேஜர்களை இதனுள் சிலமணி நேரங்கள் அடைத்துப் பூட்ட வேண்டும்.

வெளியே வந்து கைகழுவி, தண்ணீர் ஊற்றும் பங்கியிடம் பத்துப்பைசா கொடுத்துவிட்டு வெளியேவருவான். அதென்னவோ இங்குள்ள கக்கூஸ் காப்பாளர்கள் குஜாராத்தி பேசினார்கள்.

சில ஞாயிறுகளில் காமாட்சி, செண்பகம், முத்து ஆகியோருக்கு அண்ணாச்சி காலையில் எங்கே வெளியே போகிறார் என்ற கேள்வி இருந்தது. பிறகு தெரிந்தபோது, ஒவ்வொரு முறை சண்முகம் கிளம்பும்போது சிரிப்புக் கிளரும்.

பிறகு முற்றத்து வளைவில் எல்லோருக்கும் தெரிந்த பிறகு "என்னா செண்டாசுக்கா?" என மகா இளக்காரம்.

காமாட்சிக்கு மூலத் தொந்தரவு உண்டு. வெளி மூலம் வந்து விட்டால் உள்ளே போவது வரைக்கும் பெரிய அவஸ்தை. நாட்டு மருந்துப் பிரயோகங்கள் உண்டு. எரிப்பு அதிகம் தின்பதில்லை. குழம்பு புரட்டினாற்போல்தான் விட்டுக் கொள்வான். உருளைக் கிழங்கு கறி வைத்தால் பச்சைமிளகாய்த் துண்டுகளை இருந்து பொறுக்குவான். தனியாக குப்பியில் அரை லிட்டர் நல்லெண்ணெய் வாங்கி வைத்துக் கொள்வான். வாழைப்பழம் பொதுக் கணக்கு. செண்பகத்துக்கும் முத்துவுக்கும் கணிசமாய் எரிப்பு வேண்டும். சண்முகத்துக்கும் பிடிக்கும். சில சமயம் காரக்குழம்பு வாய்த்துவிட்டால் அடுத்த நாள் மூலக்காந்தல். சிலசமயம் இரண்டு முறை காலையில் போகவேண்டியது வரும் - ஞாயிறனால் இரு முறை குர்லா பயணம்.

சனிக்கிழமை சண்முகத்துக்கு அரைநாள் வேலை. பேங்க் விடுமுறை நாட்களிலும் அவனுக்கு விடுமுறை. மற்றவர்களுக்கு அன்று விடுமுறை கிடையாது. அப்போது நேரம் போக்குவது பெரும்பாடாக இருக்கும். ஒன்றரை மணிக்கு சனிக்கிழமைகளில் வீட்டுக்கு வந்து விடுவான். சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கிடந்து படிப்பான். சில சமயம் அப்படியே தூங்கியும் போவான். வாசல் திறந்தே இருக்கும். நடையில் ஒரு சாக்குப் படுதா உண்டு. வெளிச்சம் வரும். சிலசமயம் யாராவது பேச வருவார்கள்.

பிராம்மணத்தி அக்காள் வாசலில் வந்திருந்து பேசிக்கொண்டு இருப்பாள். படுதாவைத் தூக்கிக் கதவின் மேல் போட்டுவிட்டு வெளியே கால் நீட்டி நிலையில் சாய்ந்து, வயிற்றை அனுப்பானமாகத் தழைத்து உட்கார்ந்து பேசுவாள். அல்லது சண்முகம் ஒன்று படிக்க அவள் வேறு ஏதாவது படிப்பாள். எப்படி இந்தக் கல்யாணம் நடந்தது என்று அவளிடம் கேட்க கொஞ்ச நாட்களாகவே எண்ணம் உண்டு. முஸ்லீம் அக்காள் வந்தால் நிலையைப் பிடித்து நின்றபடியே பேசுவாள். அவளுக்கு கைப்பிள்ளைத் தொந்தரவு அதிகம். இருக்க விடமாட்டான்.

அன்னம்மை வந்தால் திடுக்கென்று இருக்கும். அவள் வரத்தும் அப்படித்தான். வந்து நின்று மிரள மிரள முழிப்பாள். சேலத்துக் கொச்சையில் பேசுவாள். அதிகம் படிப்பதெல்லாம் கிடையாது. படம் பார்ப்பாள். அவ்வளவுதான்.

எத்தனை வாராந்தரிகள் கிடந்தாலும் சண்முகம் கையில் இருப்பதைப் பறிப்பாள்.அங்கும் இங்குமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு அவன் மார்மீது எறிந்துவிட்டுப் போய்விடுவாள். அவள் போவதும் திடுக்கென்றுதான் இருக்கும். அவளை என்ன செய்வதென்று தெரியவில்லை. போகும் வரை நெஞ்சில் கலவரம் இருக்கும்.

பேங்க் விடுமுறை நாட்களில் மற்றவர்கள் எல்லோரும் வேலைக்குப் போனபிறகு, காலையில் வேலை எல்லாம் முடிந்த பிறகு பிராம்மணத்தி அக்காளும் முஸ்லீம் அக்காளும் உறங்கக் கதவடைத்த பிறகு அன்னம்மை வருவாள். வாசலில் நிற்பதும் இருப்பதும் படுதாவைத் தூக்குவதும் இல்லை. நேரே உள்ளே வந்து நிற்பாள். ஏதும் பேச முற்படுவாள். சிலசமயம் இருந்து படம் பார்ப்பாள்.

அன்னம்மைக்கு பெரிய உடம்பு. போதையூட்டும் பெரிய பெரிய முலைகள். குளிக்கு முன் அவள்கிட்டே வந்தால் வியர்வை வாடை குப்பென்று அடிக்கும். சில இரவுகளில் அவளைக் கற்பனை செய்து கொள்வான். அவனுக்கு மட்டும் விடுமுறையுள்ள ஒவ்வொரு நாளும் அன்னம்மை வரவை அச்சத்துடன் எதிர்பார்க்கலானான். இப்போது வந்து விடுவாள், வந்து விடுவாள் இப்போது என நெஞ்சு திடுக்கிடத் திடுக்கிட அடிக்கும். மனம் ஒன்றிப் படிக்க முடிவதில்லை. எதிர்பார்ப்பில் காய்ச்சல் வரும். நேரம் நெருங்க நெருங்க காய்ச்சலின் வேகம் அதிகரிக்கும். வந்துவிட்டுப் போன பின்பு மெல்லத் தணியும். சில நாட்கள் அவள் வராமல் இருந்தால் சுவாரசியம் இல்லாமல் இருக்கும்.

முதலில் அச்சமாக இருந்தது நீங்கி, எதிர்பார்ப்பில் ஏற்படும் காய்ச்சல் ஒரு சுகமாக மாறியது. ஒரு போதை போல் மறுபடி மறுபடி மனது எதிர்பார்த்தது. அவள் மீது ஆரம்பத்தில் இருந்த அருவருப்புகள் விலகி அவையே அழகு போலத் தோன்றத் துவங்கின.

இரண்டு பேருக்கும் நிறைய யோசனைகள். முதல் தொடுகையை யார் செய்வது என்றொரு மௌனமான பந்தயம் போல.

சிலசமயம் அன்னம்மை வரும் நேரம் பார்த்து, புத்தகத்தை மார்மீது கவிழ்த்துக் கண்மூடி உறங்கும் பாசாங்கில் இருப்பான் சண்முகம். சற்று நேரத்தில் அவள் வந்த அரவம் இருக்கும். பின்பு சுவடற்றுப் போயிருப்பாள்.

தீர்மானம் செய்ய முடியவில்லை. பயம் [illegible]ங்கரமாய்த்தாக்கியது.

செண்பகமோ, காமாட்சியோ, முத்தோ வரமாட்டார்கள் என்றாலும் பிராம்மணத்தி அக்காளோ, முஸ்லீம் அக்காளோ வந்துவிட்டால்? வாய்கிழியப் பேசும் அன்னம்மையின் அம்மை குதிக்கும் குதியில் ரயில் தண்டவாளங்கள் பெயருவது ஒருபுறம். யோக்கியன் என்ற பூச்சு உதிர்ந்து ஆபாசமாகப் பிறர் பார்வையில் பட நேரிடும் குறுகல்....

இதெல்லாம் இருந்தாலும் உடலுறவின் வேட்கை, வெக்கை தீவிரமாக இருந்தது.

சனிக்கிழமை பிற்பகலில் செம்பூரில் இறங்கி, பழக்கமில்லாத ஒரு ரோட்டில் சற்று நேரம் நடந்து, வாடிக்கைக்காரர் இல்லாத பெட்டிக் கடை ஒன்றைத் தேடி, அங்குமிங்கும் ஆள்பார்த்து, ஒரு பாக்கெட் நிரோத் கேட்கும்போது மிகக் கூச்சமாக உணர்ந்தான் சண்முகம்.

https://telegram.me/aedahamlibrary

✱✱✱

## ஒன்பது

இரண்டு நாட்களாய் செண்பகத்தைக் காணவில்லை. காலையில் அரிசிக்குப் போனவன் திரும்பவில்லை. இரவு எப்படியும் ஏழு அல்லது எட்டுமணிக்குள் வந்துவிடக்கூடியவன் எங்கு போயிருக்கக்கூடும்? ஒரு வேளை தாமதிக்கலாம் என்ற எண்ணத்தில் காமாட்சியும் சண்முகமும் பொங்கினார்கள். மேலும் சற்று நேரம் பொறுத்துவிட்டுச் சாப்பிட்டார்கள். செண்பகத்தின் சாப்பாடு மூடி வைக்கப்பட்டிருந்தது.

எப்போது தூங்கினோம் என்பது நினைவில்லை. இடையில் முழிப்பு வந்தபோது கும்மிருட்டில் ஒன்றும் தெரியவில்லை. கண்டாங்கிப் பாச்சைகள் எதற்கோ கலவரப்பட்டு குறுக்கும் நெடுக்கும் கூட்டமாய்ப் பறந்தன. கண் தெளிந்த போது செண்பகத்தின் படுக்கை விரிக்குமிடம் காலியாக இருந்தது. மனது திக்கென்றது.

எழுந்து, தீப்பெட்டியைத் தடவி எடுத்துக் கொளுத்தி மணிபார்த்தான் சண்முகம். இரண்டு நாற்பது. இன்னும் வராமல் எங்கு போயிருப்பான்?

மனம் கெட்ட முடிவுகளை நாடியது. லோகல் ட்ரெய்ன்களில் கதவோரம் தொங்கியவாறு பயணம் செய்பவர்கள் கால் சறுக்கியோ, கைவழுக்கியோ, கம்பங்களில் அடிபட்டோ சராசரியாய் நாளுக்கு நான்குபேர் செத்தனர். ரயில்வே லைனைக் கடக்கும் போது எதிர்த் திசையில் வரும் வேகவண்டியில் அடிபட்டு அடிக்கடி நிறையப்பேர் கால், கை துண்டமானார்கள். இடுப்புக்கு மேல் ஒரு பாதியும் கீழ் ஒரு பாதியுமாய்ப் பிளப்புண்டு துடித்து அடங்கினார்கள். அடிபட்ட காயம் வெளிப்படையாய் ஏதும் இன்றி காதில் ஒழுகிய ரத்தத்துடன் சவமானார்கள்.

சாத்தி வைத்திருக்கும், கறைகள் நிறைந்த கான்வாஸ் ஸ்ட்ரச்சரைத் தூக்கி, பீடிகுடித்துக் கொண்டு ரயில்வே கூலிகள் வரும்வரை அங்கேயே கிடந்தனர்.

தோல் மரத்துப் போன மக்கள் நேர்ப்பார்வையும், அச்சப் பார்வையும், அருவருப்புப் பார்வையும் பார்த்து விட்டு அலுவலகம் போனார்கள். அரைகுறையாய் அடிபட்டவர்கள், ஸ்ட்ரச்சரில் கிடந்து அடுத்த ரயிலுக்குக் காத்திருந்து செத்தனர்; வழியில் செத்தனர்; பைகுலா ரயில்வே ஆஸ்பத்திரியிலோ, தாணா சிவில் ஆஸ்பத்திரியிலோ வராந்தாவில் கிடந்து மாண்டனர். மிகச்சிலர் அங்கங்கள் குறைபட்டோ, ஆகிருதி குறைபட்டோ வெளிப்போந்தனர்.

செண்பகம் ரயிலில் கதவோரத் தொங்கலில் பயணம் செய்பவன் அல்லன். என்றாலும் விபத்துக்கு எத்தனையோ மார்க்கங்கள்.

அல்லது அரிசி கொண்டு வரும்போது சிவில் சப்ளை ஆட்கள் பிடித்திருக்கலாம். பிடித்தால், இரண்டு ரூபாய் அழுத்தலுக்கு அசையாவிட்டால், அரிசியைப் பறிமுதல் செய்துவிட்டு ஆளை இரண்டு தட்டுத்தட்டி விடுவார்கள். பிடித்த அரிசியைப் பகிர்ந்து வீட்டுக்குக் கொண்டு போவார்கள் போலும். அல்லது ஒரு நாள் அடைத்து வைத்திருந்து மறுநாள் வெளியே விட்டு விடுவார்கள். அப்படித்தான் ஏதும் ஆகியிருக்க வேண்டும். மற்றபடி செண்பகம் யார் வீட்டிலும் தங்குபவன் அல்ல. ரொம்பச் சுணையுள்ள பையன். செம்பூரில் கோவண்டி போகும் வழியில் அவன் தாய்வழி மாமா ஒருத்தர் இருந்தார். அவர் வீட்டுக்கும்கூட எப்போதாவதுதான் போவான்.

பன்னிரண்டு வயதுவரை செல்லமும் செழிப்புமாக வளர்ந்தவன். ஊரில் இருந்து நான்கு மைல்கள் தள்ளி இருந்த வள்ளியூரில் கான்வென்டுக்கு வில்வண்டியில் போனான். அப்பா ஊரில், வட்டாரத்தில் செல்வாக்கான தேவர். குடும்பப்பகை கொலைகளில் முடிந்தன. ரிவால்வரும் கையுமாக செண்பகத்தின் அப்பா பிடிபட்டபோது இருதரப்பிலும் ஏழு கொலைகள் விழுந்திருந்தன. நான்கு ஆண்டுகள் கேஸ் நடத்தி, சொத்து சுகம் போனபின்பு எட்டாவது கொலையை அரசாங்கம் செய்தது.

செண்பகத்தின் அம்மா, அப்பா, ஒரு அக்கா, ஒரு தங்கை, இரண்டு தம்பிகள் இருந்த படத்தை சண்முகம் பார்த்திருக்கிறான். அட்டியலும், சித்துருவும், பாம்படமும், கொத்தான தங்கத்தில் மறவர் தாலியுமாக அவன் அம்மா இருந்தாள். இப்போது எப்படி இருப்பாள் என்று எண்ண முனைகையில் கற்பனை கூடவில்லை. செண்பகமும் முத்தும் அனுப்பும் பணமும் ஏதோ சொற்பமாய்க் கடலையோ காணமோ விளையும் சின்ன விளையுமாகக் குடும்பம் நடந்தது.

அக்காவுக்குக் கல்யாணம் ஒப்பேறியது எனவும், தங்கச்சிக்கு

ஒன்றிரண்டு ஆண்டில் வீட்டையோ விளையையோ விற்றுக் கல்யாணம் நடத்த வேண்டும் என்றும் சொல்வான். அம்மாவைப் போல் அவள் நல்ல சிவப்பாம். மூன்று வெள்ளாடுகள் அவள் சேமிப்பு என்பான். சில சமயம் செண்பகம் சொல்லும் போது அவன் தங்கையைத் தானே கட்டிக் கொள்ளக் கேட்கலாமா என்று தோன்றும் சண்முகத்துக்கு. சலிப்பான சிரிப்பும் கூடவே வரும். தன் அப்பா எத்தனை ஆயிரத்துக்குக் கணக்கு வைத்திருக்கிறாரோ? கொச்சையான பழமொழி யொன்று கடவுளையும் பூசாரியையும் பற்றியது நினைவுக்கு வந்தது.

செருப்பைப் போட்டுக் கொண்டு, வெளியே பாட்டக்கில் போய் ஒன்றுக்கு இருந்துவிட்டு வரும்போது இதே ஞாபகம்தான்.

மேகமற்ற வானம். கூன்பிறை. பகலெல்லாம் கேட்கும் லோகல் ட்ரெய்னின் தடதடப்பின் ஓய்வு. சற்று நேரம் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தான். மிகக் கவலையாக இருந்தது. எங்கு போயிருப்பான்? காலையில் வருகிறானா என்று பார்க்கலாம் என்று போய்ப் படுத்தான். உறக்கம் வரவில்லை. செண்பகத்தின் வருகையின் காலடி கேட்காதா என்றொரு எதிர்பார்ப்பு.

விடிந்ததும் அன்று இரவு வரையும் பார்க்கலாம் என்றான் காமாட்சி. ஒருவகை அச்சத்துடன் வேலைக்குப் போனார்கள். முத்து சற்று மருண்டிருந்தான். மறுநாளும் செண்பகம் வரவில்லை. மாமாவிடம் போய்ச் சொல்லிவிட்டு வந்தான் முத்து.

மறுநாள் காலை முதல் தேடத் துவங்கினார்கள். எல்லா ஆஸ்பத்திரிகள், சவக்கிடங்குகள், டிக்கட் இல்லாமல் பயணம் செய்தால் பிடித்து வைக்கும் சிறைகள், மற்ற சில போலீஸ் ஸ்டேஷன்கள்... ஏதும் தடயங்கள் இல்லை.

ஒரு மர்மமாக இருந்தது. அவன் வராமற் போனதற்குப் பொறுப்பு தமதே என்ற கனம் எல்லோர் மனத்திலும். என்ன செய்வது என்று தெரியவில்லை. ஊருக்கு எழுதிப் பார்க்கலாம் என்றால் கலவரப்பட்டுப் போவார்கள். போலீஸில் புகார் கொடுத்திருந்தனர். சில நாட்கள் பொறுக்கலாம் என்றார் மாமா.

நல்ல வெயிலும் புழுக்கமும் வியர்வைக் கசகசப்புமான காலம். ரயில் பயணங்களில் பனியன் கொவர்ந்து ஊறி மாலையில் ஒரு தினுசாய் நாறியது. இரவில் உறங்கமுடியவில்லை. முற்றத்தில் கிடுகு வாங்கி ஒரு சிறு பந்தல் போலப் போட்டிருந்தனர். அதன் கீழே சிலர் உறங்கினார்கள். காற்றடிக்கும் போது உலகத்து அழுக்கின் எல்லா மாதிரிகளும் தூசியாகக் கிளம்பிப் புரண்டு அடிக்கும். இதில் எப்படிப்

படுத்துப் புரள்வது?

வெயில் காரணமாகவோ, அலைச்சல் காரணமாகவோ உடல் தளர்ந்து இரண்டு நாட்கள் முத்துக்கு நல்ல காய்ச்சல். மேல் பொரிந்தது. மண்டைக்கனம். மேலெல்லாம் அடித்து முறித்தது போல் வலி. மூன்றாவது நாள் காலையில் நெற்றியில் சின்னஞ்சிறு காரம்பழம் போல் மினுங்கியது. முகம் சீறி உதடுகள் காய்ந்து....

வாசலில் வேப்பங்குழை பறித்துக் கட்டினார்கள். சாம்பிராணி கொளுத்தி வைத்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள் எட்டியெட்டிப் பார்த்துவிட்டுப் போனார்கள். அறிவுரைகள் உதிர்த்தார்கள். மிகச் சுத்தமாக இருக்க வேண்டும். பயப்படக்கூடாது. அசைவம் சமைக்கலாகாது. கடுகு தாளிக்கவோ, பப்படம் வறுக்கவோ படாது. சூடாக, கொதிக்க, எதையும் தின்னவோ குடிக்கவோ கூடாது. தணுப்பான ஆகாரங்கள் வேண்டும். கருக்கு, பூவன் பழம், மெட்ராஸ் உள்ளி அரிந்து போட்டு வைத்த ஆறிய கஞ்சி, தயிர், நுங்கு...

காய்ச்சல் இறங்க வேண்டும். முகக் கட்டு இறங்குவது வரை சிரமம்தான். பிறகு கவலை இல்லை. கையால் சொறியக் கூடாது. மேல் நன்றாகக் கடிக்கும். வேப்பங் குழையால் தடவலாம். கொப்புளங்களை உடைக்கக்கூடாது. புண்ணாகி விட்டால் ஆற நாளாகும். தானாகவே வத்தி பொருக்காடி இளகி உதிரும். அதன்பின்பே குளிக்கலாம். மஞ்சள், வேப்பிலை போட்டுத் தண்ணீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின் மஞ்சளும் வேப்பிலையும் அரைத்து மேல் தடவிக் குளிக்க வேண்டும். மூன்று தலை குளித்த பிறகே வெளியே வரலாம். அதுவரை வீட்டினுள்ளேதான் இருக்க வேண்டும்.

முத்துவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஆள் ஒடுங்கிப் போய்விட்டான். அடக்க முடியாத முரட்டுத்தனம் வடிந்து கண்களில் இரங்கும் பாவம். நிர்ப்பந்தமான கிடப்பு. காலையில் பிரட்டும் பாலும். கஞ்சி வைத்து மூடிவைத்தவிட்டு மத்தியானம் குடிக்கச் சொல்லி வேலைக்குப் போனார்கள். பிராம்மணத்தி அக்காளும் முஸ்லீம் அக்காளும் வயிற்றுச் சூலிகள். அடிக்கடி அவர்கள் வருவது நல்லதல்ல. அன்னம்மையிடம், அவள் அம்மா இல்லாதபோது, தனியாகச் சொன்னான் சண்முகம்.

சாயங்கலாம் வீட்டுக்கு வரும்போது 'திக்' கென்று இருக்கும். வீட்டினுள் எட்டிப்பார்த்து, மார்பு உயர்ந்து தாழ முத்து உறங்கிக் கொண்டோ, மிரள விழித்துக் கொண்டோ கிடப்பதைக் காண ஆசுவாசம் கிடைக்கும்.

அறையினுள் ரொம்பச் சூடாக இருக்கிறது என்று சொல்லி, தெரிந்த முதல் நாளே காமாட்சி படுக்கையைத் தூக்கிக் கொண்டு முற்றத்துக்குப் படுக்கப் போனான். போனதற்கு சூடுமட்டும் காரணம் இல்லை.

விளக்கை நெல்லுயரத்துக்குத் தாழ்த்தி வைத்துவிட்டுப் படுத்தால் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்கள். பயம். இது ஒட்டுவாரொட்டி. தனக்கும் வரக்கூடும். வந்தால் பத்துப் பதினைந்து நாட்கள் இதே அவஸ்தை. வேலைக்குப் போகமுடியாது. சம்பளம் கிடையாது. இதைச் சாக்கிட்டு வேலையை விட்டு நீக்கிவிட மாட்டார்களா? அப்படிச் செய்வார்களா என்ன? வருவது வரட்டும். தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். சிக்கன் பாக்ஸுக்கு தடுப்பூசி உண்டா?

கன்னிய கொடுக்காரம் பழம்போல் கொப்பபுளங்கள் சுருங்க ஆரம்பித்தன. காய்ந்தன. பொருக்குகள் உதிர்ந்தன. இரவு முக்காடு போட்டுக் கொண்டு கால் கழுவப் போய் வந்தான். அதிக தூரம் நடக்கக்கூடாதுதான். என்ன செய்ய?

வீடு தூத்து வாரி, சாம்பிராணி புகைத்து, எங்கும் லோஷன் தெளித்து முடிக்கையில் முத்து குளித்துவிட்டு வந்தான். அன்று ஞாயிறாக இருந்தது. காமாட்சி நிதானமாக சமையல் செய்தான். அதிகம் எரிப்புப் போடாமல் - உ.பி.காரப் பையா பாணியில் பூண்டு, உள்ளி, தக்காளி, இஞ்சி, கொத்துமல்லிக் கீரை, உருளைக்கிழங்கு போட்டு பருப்பு. தொட்டுக் கொள்ள பச்சை வெங்காயம். சாப்பிடும்போது ஒரு ஆறுதல் மீண்டிருந்தது. பின்புல ரீங்கரிப்பாய் செண்பகம் பற்றிய தகவல் இல்லாத தவிப்பு.

காணாமற்போன இருபத்தோராம் நாள் செண்பகம் வந்தான். ஆள் ஒன்றுக்குப் பாதியாகி, கன்னத்து எலும்புகள் தூக்கி, தாடி வளர்ந்து, முடி அடர்ந்து, பேன் பிடித்து...

அன்று ஒரு வேலை நாள். எல்லோரும் சமையலுக்கு ஆயத்தமாகும் முன்னிரவில் வாசலில் நிழலாடியபோது நம்பக்கூட முடியவில்லை.

கண்களில் மட்டும் உயிர் இருந்தது.

காமாட்சி ஓடிப்போய்க் கையைப் பிடித்துக் கொண்டான். முதல் அதிர்ச்சி நீங்கியதும் எல்லோரும் பேச முனைந்தனர்.

மூன்று ரூபாய் வாங்கிக் கொண்டுபோய் முடி வெட்டி வந்தான்.

குளித்துவிட்டு வந்து ஊதுபத்திக் கொளுத்தி முருகன் படத்துக்கு வைத்தான்.

அரிசி வாங்கித் திரும்புகையில் ஸ்பெஷல் ஸ்குவாட் பிடித்தது. இரண்டு நாள் ரிமான்டில் வைத்துவிட்டுப் பின்பு மகாத்மா காந்தி இருந்த எரவாடா சிறையில் அடைத்தது. ரத்த தானம் செய்ததால் ஒரு மாதத்தை இருபது நாட்களாய்க் குறைத்தது...

சண்முகம் கடைக்குப் போய் முட்டை வாங்கி வந்தான். கறிக்கு அரைக்க செண்பகம் முனைந்தபோது இன்றொருநாள் சும்மா இரு என்றான் காமாட்சி.

வளைவில் உள்ள எல்லோரும் வந்து விசாரித்துப் போனார்கள். பிராம்மணத்தி அக்காள் கிளாசில் சாயா கொண்டு வந்து கொடுத்தாள். "யக்கோவ்... எங்களுக்குக் கெடையாதா?" என்று காமாட்சி பரிகாசம் செய்தான். அம்மாவுக்குப்பின் ஒளிந்து அன்னம்மை வந்து பார்த்தாள். ரகசியமாய் சண்முகத்தைப் பார்த்து வலிச்சம் காட்டினாள்.

வீட்டில் ஒளியின் விகாசம் சற்றே அதிகரித்தாற்போன்று தோன்றியது.

சாப்பிட்டுப் படுக்க யத்தனிக்கையில் செண்பகம் சண்முகத்திடம் கேட்டான்– "அண்ணாச்சி நூறு ரூவா பெரட்டித் தருவேளா?"

மீண்டும் அரிசி வியாபாரத்துக்கே போக வேண்டிய நிர்ப்பந்தம் உறைத்தது. சம்பளத்துக்கு இன்னும் நாட்கள் இருந்தன. கையில் முப்பது ரூபாய் இருக்கும். அதை எடுத்தாலும் மீதிப்பணம்? மீதி மாதத்துக்குச் செலவு? ஆபீசில் யாரையும் கேட்கலாமா? யார் தருவார்கள்? தந்தாலும் சம்பளத்தில் திருப்ப வேண்டும்.

பி.ஏ. பாசானாவுடன் அப்பா வாங்கித்தந்த ஹென்றி சான்டோஸ் வாட்ச் நினைவு வந்தது.

நாளை மாலை தருகிறேன் என்றான் சண்முகம்.

O

மழை சரியாக வெளுத்து வாங்கியது. முதல் மழை. சாலையின், கூரையின், இலைகளின் அழுக்குகளைக் கழுவி...

எங்கும் சொத சொதத்துக் கிடந்தது. ஆலமரத்தின் நீரோரச் சல்லிவேர்க் கொத்துக்கள் போல் எங்கும் மண்புழுக்கள். ஆங்காங்கே அபாயம் என போர்டு மாட்டி ரோடுகளின் ஓட்டைகளைத் திறந்து வைத்திருந்தனர். கலங்கல் வெள்ளம் சுழித்தது.

இலைகள், பாலிதீன் தாள்கள், ரப்பர் ஸ்லிப்பர்கள், பழந் தோல்கள் எனப் புரண்டு மறிந்து உள்ளே பாய்ந்தது. சற்று வெறிப்பதும் மீண்டும் பெய்வதுமாய் மழை. ரயிலின் உள்ளே புழுங்கல் வாடையும் ஈரநயப்பும் சொல்லத்தரமன்று. தண்ணீர் சொட்டும் குடைகள், மழைக் கோட்டுகள், உதறிய தலைமுடியில் இருந்து தெறிக்கும் திவலைகள், உடம்பில் ஒட்டிய டெரிலின் சட்டைகள், காற்று சுமந்துவரும் துமிகள்.

குடிசைக்குள் சொட்டுகள் விழுந்தன. வெறித்த ஒரு நாளில் பாலிதீன் பேப்பர் ஷீட் வாங்கி வந்து கூரைமேல் பொதிந்து கட்டிக் கயிறு வரிந்தான் செண்பகம். வீட்டுக்குள் ஒரு மழை வாடை– கொவர்ந்த சாக்குப் படுதாவிலா, கூரையிலா, சுவர்த்தடுப்பிலா? பாச்சைப் புழுக்கம் போல் ஒரு நிரந்தர நெடி.

வீடு வந்து சேர்ந்தால் வெளியே இறங்க மனமில்லை. முற்றத்தில் கறண்டை முங்கும் சேறு. வாசலில் நின்று காலைத் தண்ணீர் விட்டுக் கழுவி, சாக்குத்துண்டில் துடைத்த பின்பே வீட்டினுள் நுழைவது. குடிசைகளின் பின்புறம் வரை வந்த குட்டை நிறைந்து துளும்பிற்று. எந்த நேரமும் ரயில் பட்டை நிரப்புக்கு வரலாம் போல. ரயில்பட்டைத் தளத்தைவிடக் குடிசையின் தளம் உயரம் என்று சொன்னார்கள். என்றாலும் பகலில் சுவர்த்தட்டியின் இடைவெளி வழியாகப் பின்புறம் பார்க்கும்போது தண்ணீரின் சலசலப்பு திகில் ஊட்டும். இருக்கும் கோளாறில் பின்புறம் மண் அணைப்புச் சரிந்தால் வீட்டின் பின் எல்லை குட்டைத் தண்ணீராக இருக்கும். போக மாற்றிடம் கிடையாது.

பகலில் தவளைச் சந்தடி, பாச்சைப்புழுக்கம் என்றால் இரவில் மூட்டைக்கடி. மற்றவர்கள் சண்முகத்தைக் கட்டிலில் படுக்கக் கேட்டுக் கொண்டார்கள் ஆரம்பத்தில். இரண்டு நாட்கள் படுத்தும் பார்த்தான். எக்கச்சக்கமான மூட்டைக்கடி, அடையடையாக மசுக்குட்டி ஊர்ந்தது போல் உடம்பு தடித்துவிட்டது. இரா முழுக்கத் தூக்கமில்லை. கையில் பட்டு நசுங்கும் மூட்டைகளின் கெட்ட நாற்றம். மூன்றாவது நாள் சண்முகம் தரைக்கு மாற்றிக் கொண்டான். முத்து கட்டிலுக்குமாறினான். அவனை மூட்டை கடித்த தடயமே இல்லை. சில குறிப்பான ஆள்வாடைக்குத்தான் மூட்டை கடிக்குமோ என்னவோ? ஸ்டேஷன் பெஞ்சுகளில், சினிமா நாற்காலிகளில், ரயில் இருக்கைகளில் சண்முகம் உட்கார்ந்த உடனேயே தொடைகளை நெளிக்க ஆரம்பிப்பான். சிலரை ஒன்றுமே செய்வதில்லை போலும்.

தரையில், கட்டிலை அடுத்து செண்பகம். அடுத்தது காமாட்சி. கடைசியில் கதவோரம் சண்முகம். காமாட்சியிடம் ஒரு கெட்ட பழக்கம்,

தூங்கும்போது காலைக் கையை டமார் டமார் என்று தூக்கி மேலே போடுவான். திடுக்கிடத் திடுக்கிட எழ வேண்டியதிருக்கும். "ஏம்பா உறக்கத்திலே குஸ்தி போடுகே?" என்பான் காலையில்.

ஒரு நாள் விடியுமுன் காலை ஒட்டி ஏதோ சுருணைபோல் கிடந்தது. எழுந்து தீக்குச்சி கிழித்ததில்– அது எப்போதும் தலை மாட்டில் இருக்கும் – குட்டிப்பருவம் தாண்டிய, குமருப்பருவம் ஆகாத நாய் ஒன்று தலை தூக்கி விழித்தது. கதவைத் திறந்து தூக்கி வாசலில் விட்டான். கதவின் கீழ் பலகை பெயர்ந்து கொஞ்ச நாட்கள் ஆகியிருக்கும். காய்கறி வெட்டும் பலகைளை எடுத்து ஓட்டையை மறைத்துவிட்டுப் படுத்தான். அடுத்த நாள். சாமத்தில் முட்டருகே மறுபடியும் அது. மழை தூறிக் கொண்டிருக்கையில் சனியனை எடுத்து வீசுவும் மனதுக்குச் சிரமமாக இருந்தது. ஆனால் அது அருகில் கிடக்கும் போது அருவருப்பாகவும் இருந்தது. அடுத்த நாள் செண்பகத்திடம் சொலலிப் பலகைத்துண்டு அறைய வேண்டும் என்று நினைத்தான். மறந்து மறந்து போனது.

பகலில் அதைக் காணமுடியவில்லை. பார்த்தால் கூட அடையாளம் காண முடியுமோ என்னவோ? பருவம் மட்டும் தான் கொன்ற அந்தக் குட்டி நாயை ஞாபகப்படுத்தியது.

நாலைந்து ஆண்டுகள் முன்பு, ஊரில் சண்முகமும் மாடு மேய்க்கும் ஏசுவடியனுமாக சிறு நாய் ஒன்றைக் கொன்றனர். வீட்டை அடுத்த களமும் தொழுவும். ஒரு காவலுக்காக இருக்கட்டும் என்று குட்டி நாய் ஒன்றைக் கொண்டு வந்து, அது சில நாட்கள் முகம் வீங்கித் திரிந்து, முனகி, பிறகு தெளிந்து... கழுத்துப் பட்டியும் சங்கலியும் பால்குடிக்க, மோர்ச் சோறு தின்ன அலுமினியத் தட்டும் வாங்கி...

குட்டியில் எல்லாம் அழகே போலும். பருவம் மாறத் தொடங்கியதும் இயல்பான வெள்ளை முடி மாறி செம்பட்டை பாய்ந்தது. உருண்டிருந்த முகம் நீண்டது. வாள் வாள் என்று எரிச்சலில் குரைத்தது. கண்ட கண்ட இடங்களில் மலம் கழித்தது. காலொன்றைத் தூக்கி ஆட்டு உரல் குழவி மேல் மூத்திரம் செய்தது. அடுக்களைக்குள் ஆளற்ற நேரத்தில் புகுந்து கறிச்சட்டியை உருட்டியது. நம் வீட்டில் என்றாலும் கம்பெடுத்து இரண்டு சாத்தி சமாதானம் கொள்ளலாம். பக்கத்து வீடுகளில் நுழைந்து திருடியது. இரண்டு சிறுவரைக் கடித்தது.

இதென்ன பெரிய உபத்திரவமாகப் போயிற்று? பொறுக்கிச் சனியனால் ஊரில் பேச்சுக் கேட்க முடியுமா? என்று அப்பாவும் அம்மாவும், இதற்கெல்லாம் சண்முகமே பொறுப்பு என்ற ரீதியில் ஏசத்

துவங்கினார்கள். சிறை பொறுக்க மாட்டாமல் மலைக்கு கிழங்குக்குப் போகும் வேலாண்டியிடம் குட்டிச் சாக்கில் பிடித்து அடைத்துக் கொடுத்து விட்டான். அன்றோடு சள்ளை ஒழிந்தது என்று ஆசுவாசப் பெருமூச்சு சரியாக விடுமுன்பு, இரண்டாவது நாள் மாலை, மேலெல்லாம் புழுதியுமாய் வாலை ஆட்டி முகத்தை நக்க வந்தது. மகா எரிச்சல். உபத்திரவம் இல்லாமல் இருந்தால் கிடந்து விட்டுப் போகட்டும் எனலாம். ஆனால் அது ஆளைக் கிடக்க விடவில்லை.

சண்முகம் வீட்டுக்கு நான்கு வீடுகள் தள்ளி கிருஷ்ணக்கோனார் வீடு. அவர்கள் வீட்டுக்கும் சண்முகத்தின் வீட்டுக்கும் எந்தக் காலத்திலும் ஆகி வந்ததில்லை. செத்த துட்டி கூடக் கேட்கப் போவதில்லை. தெருவில் எதிர்ப்பட்டால் ஒதுங்கிப் போனால், கிருஷ்ணக் கோனார் மகன் பலராமன் காறித் துப்பிவிட்டுப் போவான்.

பலராமனுக்கு சண்முகத்தை விட ஏழெட்டு வயது அதிகம் இருக்கும். இவன் படிக்கும்போதே அவன் ஆடு மேய்க்கப் போய்விட்டான். மாடு கறந்தான். மலை, காடு, விளை, தோப்பு என்று ஏறி இறங்கினான். நல்ல முறுக்கிய துடைக்கயிறு போன்ற உடம்பு. வாட்டமான கை கால்கள். உருண்ட உறுதியான நீண்ட கைக் கம்பும் அன்டர்வேர் தெரியும்படி தூக்கிக் கட்டிய வேட்டியில் கொழுவிய கொடுக்கரிவாளும் தலையில்வட்டக் கெட்டும் பெரு விரலையும் ஆட்காட்டி விரலையும் கொண்டு தடவித் தடவி ஒரு தோட்டம் போல் பராமரித்த மீசையும்....

பகையின் மூலவேர் தோண்டி ஆராய்ந்தால் அற்பம் என்றாலும் பலராமன் தலையெடுத்த பிறகு சச்சரவுகள் அடிக்கடி நேர்ந்தன. தெருவில் நின்று பலராமன் வாய்க்கு வந்தபடி அறுத்துக் கிழிக்கும் போது, ராமசாமிக் கோனார் வீட்டில் கதவை அடைத்து ரேடியோவில் தெலுங்கு ஸ்டேஷனை சத்தமாக வைப்பார்கள்.

“கதவைத் திறந்துக்கிட்டு வெளீல வாலே ஆம்பிளைண்ணா... தாயோளி உனக்கு குடலை வகுந்து உன் சந்துக்கறியிலே ஒரு துண்டாவது திண்ணாத்தான் எனக்குச் சமானம் ஆகும்ல.காலேஜிலே படிக்கான் பெரிய மயிரு... ” என்று இந்த நாய்க்குட்டி பலராமனைப் பார்த்துக் குரைத்த அன்று சண்முகத்தைத் திட்டினான்.

சண்முகத்துக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நாயைக் கட்டிப் போட்டால் உருவிக்கொண்டு போய்விடுகிறது. அல்லது ஊளைபோட்டு ஊரைக் கூட்டியது. வாசரிக்கு மறுநாளும் அது பலராமனைப் பார்த்துக் குரைத்தது. அதற்கு பலராமனைப் பிடிக்க

வில்லையோ அல்லது அவன் வாயிலிருந்து வீசும் மாம்பட்டை செவுரு முட்டி அரிஷ்டவாடை பிடிக்கவில்லையா என்று அறிய முடியவில்லை. அன்றும் அவன் வீட்டுக்கு முன்பு நின்று திங்கு திங்கு என்று ஆடிப் பூவெடுத்தான்.

இந்த நாயைத் தீர்த்து விடுவது என்று சண்முகம் தீர்மானித்தது அன்றுதான். வீட்டில் பயிருக்கு அடித்துவிட்டு மீதி வைத்த பாலிடால் கொஞ்சம் இருந்தது. அலுமினியத் தட்டில் சோறு எடுத்து, பாலிடால் ஊற்றி, மேலே கணிசமாய் மீன் குழம்பும் ஒரு தலையும் போட்டுமிக உருத்தோடு நாய்க்கு முன் வைத்தான். அது மேலீடாக எடுத்து மீன் தலையை மட்டும் தின்றது. சோற்றைச் சீந்தவும் இல்லை. சண்முகத்துக்கு ஆத்திரமாக வந்தது. கம்பெடுத்து நாலு சாத்தியதில் நாய் பீய்ச்சியதுதான் மிச்சம்.

அடுத்த நாள் ஞாயிறு. ஏசுவடியானைக் கலந்து ஆலோசித்து, கொச்சக்கயிறு கொண்டு சுருக்குப் போட்டு நாயைக்களத்துக்குக் கொண்டு போனான். களத்துக்கதவை அடைத்துவிட்டு, கயிற்றை இழுக்க இழுக்க, சங்கு நெரிய நெரிய, அது போட்ட சத்தம் குடலைப் புண்ணாக்கியது. அது கால் நான்கையும் பரத்தி மண்ணோடு ஊன்றி இழுப்பை எதிர்த்தது. களத்தின் மூலையென்றில் காய்க்காமல் நின்ற கட்டைத் தென்னம்பிள்ளை மூட்டில் ஏசுவடியான் ஏற்கனவே தோண்டியிருந்த குழியை நோக்கி இருவருமாய் ஒரே இழுப்பாக இழுத்துத் தள்ளி, அவசர அவசரமாய் மண்ணை அணைத்து – மண் தள்ளும் போது நாய் இறந்திருக்குமோ, தோண்டி எடுத்து விடுவோமா என்ற சந்தேகம் தோன்றியது.

நாலைந்து நாட்கள் சாப்பிடப் பிடிக்கவில்லை. களத்துப் பக்கம் போகப்பிடிக்கவில்லை. தன் மீதே ஒரு அருவருப்பு. கோழிகள் தென்னம்பிள்ளை மூட்டைப் பறித்தபோது அடையடையாக நாய்மயிர் மண்ணோடு புரண்டு வந்தது.

கொஞ்ச நாட்கள் பொறுத்து தெங்கு சரியாகக் காய்பிடித்த போதும் நாயின் நினைப்பில் ஒரு குறுகுறுப்பு.

இந்தக் குட்டியும் தினமும் அதை நள்ளிரவில் நினைவில் இழுத்து வந்து நிறுத்தியது.

* * *

## பத்து

காமாட்சி தம்பி கல்யாணத்துக்கு ஊருக்குப் பயணப்பட்டான். அவனை வழியனுப்ப தாதருக்குப் போன போதே நாமெப்போது போவோம் என்றொரு ஆவலாதி கிடந்து அடித்தது. அடுத்த நாள் சென்னைக்குப் போய் அங்கிருந்து நெல்லை எக்ஸ்பிரஸ் பிடித்து அதற்கும் மறுநாள் பாவநாசத்தில் ஆற்றுக்குளியல் என்ற காமாட்சியின் நினைப்பின் கூடேயே தடம்பிடிக்கையில் சண்முகத்துக்கு வெப்பம் நெஞ்செங்கும் படர்ந்தது.

தானிருக்க தம்பிக்குத் திருமணமாகும் கதியின்மை பற்றிய யோசிப்பெல்லாம் அற்று காமாட்சி வளவள என்று பேசிக் கொண்டிருந்தான்.

ஊரிலிருந்து வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நினைப்பு குறுக்கு வெட்டுகையில் சண்முகத்துக்கு மலைப்பாக இருந்தது. இங்கிருந்து எப்போது தப்பித்துப் போவோம் என்பது புலப்படவேயில்லை.

வேலை சமீபத்தில் நிரந்தரமாவதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. இதே ரீதியில், எல்லா மாதக் கடைசியிலும் இருபது அல்லது முப்பது ரூபாய் கடன் வாங்கி, சம்பளத்தில் திருப்பி நாள் கழிக்கையில், எந்த சின்ன வெள்ளிக் கிழமை யன்று ஆயிரம் ரூபாய் முழுதாகச் சேர்த்து புறப்படப் போகிறோம்?

ஐந்நூறு ரூபாய்க்காவது, மாதம் இருபத்தைந்து ரூபாய்த் தவணையில் ஒரு சீட்டு சேர்ந்திருந்தால் இந்தத் தவிப்பு இருக்காதோ? வாங்கும் சம்பளத்திலேயே இருபத்தி ஆறு ரூபாய் பி.எஃப்பும் பதினொன்றே முக்கால் ரூபாய் ஈ.எஸ்.ஐ. யும் புதிதாக வெட்ட ஆரம்பத்திருக்கும் போது மாதம் இருபத்தைந்து ரூபாயைத் திரட்டுவது எங்கே?

ரூபென் ஜோசப் சொன்னான் – எங்காவது மாலையில் இரண்டு

ட்யூஷன் எடு. அல்லது பகுதி வேலையாக தட்டெழுத்தோ, கணக்கெழுத்தோ செய் என்று. நிறையப் பேர் செய்யவும் செய்தனர்.

இரண்டு மூன்று இடங்களில் கேட்டுப் பார்த்தான். ஒன்றும் அமையவில்லை. தெரிந்தவர் மூலமாக என்றால் எளிதில் அமையக்கூடும். மறுபடியும் ஐயர் சிபாரிசில் ஒரு குஜராத்தி சேட்டைப் போய்ப் பார்த்தான் கிங்சர்கிளில். ஒன்பது படிக்கும் பையனுக்கும் ஏழுபடிக்கும் பெண்ணுக்கும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் என சகல துறைகளையும் கற்பிக்க மாதம் அறுபது ரூபாய் எனத் தீர்மானம் ஆயிற்று.

ஆறு மணியிலிருந்து ஏழரை மணிவரை பிடுங்கும் பசியினூடே மாலையில் கற்பிக்க வேண்டும். சில சமயம் ஒரு சாயா தருவார்கள். சுமாராகப் படிக்கும் பிள்ளைகள். முயற்சி செய்தால் ஒப்பேற்றிவிட முடியும்.

சில நாட்களில் வீடு பூட்டி இருக்கும். எங்காவது பஜாருக்குப் போயிருப்பார்கள் என்று காத்திருந்தால் அரைமணியாகியும் வரமாட்டார்கள். சினிமாவுக்குப் போயிருந்த விபரம் மறுநாள் தெரியும். சில நாட்கள் பத்து நிமிடங்கள் பார்த்துவிட்டுத் திரும்பினால் பதினைந்தாவது நிமிடத்தில் வந்ததாகச் சொல்வார்கள். சில நாட்கள் வீட்டில் விருந்தினர் வந்திருந்தாலோ, டி.வியில் நல்ல புரோக்ராம் இருந்தாலோ அன்று ட்யூஷன் வேண்டாம் என்பார்கள்.

சில நாட்களில் சேட்டு சற்று நேரம் இருக்கச் சொல்வார். பாடம் முடிந்ததும் கடிதங்கள் எழுதவோ பில்கள் தயாரிக்கவோ சொல்வார். வீட்டிலும் போர்ட்டபிள் டைப்ரைட்டர் இருந்தது. சில சமயம் புறப்படுகையில் முழுக்கோதுமை நிறைந்த அலுமினிய டப்பாவைக் கையில் கொடுத்து சக்கியில் கொடுத்து விட்டுப் போகச் சொல்வார்கள். மறக்காமல் மறுநாள் அரைத்த மாவை வாங்கியும் வரவேண்டிய திருக்கும். பத்து கிலோவுக்கு அரைப்புக்கூலி ஒன்றரை ரூபாயை அவர்களாகத் தராவிட்டால் கேட்டு வாங்கக் கூச்சமாக இருந்தது.

இரவு வீட்டுக்குப் போய்ச்சேர எட்டரை ஒன்பது ஆகியது. சமையல் வேலைகளில் பங்கெடுப்பு முடியாமற் போனது. மற்றவர்கள் ஏதும் சொல்லாமற் போனாலும் உள்மனத்தில் ஒரு குற்றக் குறுகுறுப்பு. பாத்திரங்களை தான் கழுவுவதாகச் சொன்னதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை.

சேட்டின் தம்பியின் உடலளவும் சண்முகத்தின் அளவும் ஒன்றாக இருந்ததால், இரண்டு பழைய பேன்ட் சட்டைகளைப் பாலிதீன் பையில்

போட்டுத் தந்தனர். வாங்கக் கூச்சமாக இருந்தது. மறுக்கவும் திராணி இல்லை. தன் உடைகளைப் பார்த்து இரக்கம் கொண்டே தரத் தோன்றி யிருக்கும் என்றாலும் ஒரு அவமதிப்புக்கு ஆட்பட்டது போல...

வீட்டுக்கு வந்தபின் பிரித்துப் பார்த்தபோது தன்னுடைய உடைகளை விடவும் பழசானவை அல்ல என்று தெரிந்தது. மனதைத் தேற்றிக் கொண்டு போட்டுப் பார்த்தான். தனக்கெனவே தைத்தது போல் சரியாக இருந்தது. இடுப்புப் பக்கம் கொஞ்சம் லூஸ் போலத் தோன்றியது. கயிறோ பெல்ட்டோ கட்டிக் கொள்ளலாம்.

மறுநாள் அதையே போட்டுக் கொண்டு வேலைக்குப் போனான். ஆச்சாரியா கள்ளமாகச் சிரித்தது அவன் உதட்டிலோ தன் மனத்திலா? எல்லோரும் தன்னையே பார்ப்பதாக ஒரு தோன்றல். ரூபென் மெதுவாகக் கேட்டான்– சேட்டு தந்தாரா என்று. சிரிக்க மட்டுமே முடிந்தது.

மாதா மாதம் ட்யூஷன் பணத்தை வாங்கினால் செலவாகிப் போகும் என்ற கருத்தில், ஊருக்குப் போகும்போது வாங்கிக் கொள்வதாகச் சொல்லி சேட்டிடம் நிறுத்தி வைத்திருந்தான். ஏப்ரல் மாதம் தேர்வுகள் முடிந்ததும் நானூற்று இருபது ரூபாய்க்குப் பதிலாக நானூறு ரூபாய்தான் தந்தார் சேட்டு. ஏனென்று கேட்கத் தோன்றியது. முடியவில்லை.

இருபத்தோரு நாட்கள் எனச் சேர்ந்திருந்த பி.எல்.க்கு விண்ணப்பம் செய்தான் சண்முகம்.

அன்று சனிக்கிழமை, அரைநாள் வேலை. பன்னிரண்டு மணிக்கே அனுமதி கேட்டு வீட்டுக்கு வரும்போது பன்னிரண்டே முக்கால். செண்பகம் அன்று அரிசிக்குப் போகவில்லை. காமாட்சி லீவு எடுத்திருந்தான். முத்து கடையில் கேட்டுவிட்டு வந்திருந்தான்.

பெட்டி எல்லாம் ஏற்கனவே கட்டி வைத்திருந்தது. செண்பகம் சாப்பாடு கட்டினான். முதல் நாள் ராத்திரிக்கு தயிர் விட்டுத் தாளித்த சோறு. மறுநாள் காலைக்கு சப்பாத்தி, சுக்கா பாஜி. மத்தியானத்துக்கு புளித்தண்ணி தாளித்துக் கட்டிய சோறு. இரண்டாவது நாள் இரவுச் சாப்பாட்டுக்கு செங்கல்பட்டில் பொட்டலங்கள் வாங்கிக் கொள்ளலாம். மறுநாள் காலை திருநெல்வேலி போய்ச் சேர்ந்துவிட்டால் த.மு.கட்டிடத்தில் இருக்கும் சென்ட்ரல் கஃபேயில் சூடாக இட்டிலி சாப்பிடலாம்.

திருநெல்வேலி தாண்டிப் போவோரில் நிறையப்பேர் தாமிரபரணியில் குளித்து, ரயில் அழுக்குப் போக்கி, உடை மாற்றித்

தான் மறுபடி பஸ்பிடிப்பது. நாங்குநேரி, களக்காடு, பணகுடி, வள்ளியூர், ஏர்வாடி, வடக்கன்குளம் எனச் செல்வோர் நிறையப்பேர் சொல்லி இருந்தார்கள். அதில் ஓர் அரை நாள் வீண் செய்ய சண்முகத்துக்கு விருப்பமில்லை. எட்டு எட்டரைக்குள் ரயில் திருநெல் வேலி போனால், அங்கிருந்து ஒன்பதுக்குப் பஸ்பிடித்தால், பதினொன்றுக்கு நாகர்கோயில், பதினொன்று முப்பதுக்கு உண்டான பஸ் கிடைக்கும். இல்லையென்றால் சற்று கம்பீரமாக டாக்ஸியில் போகலாம். எப்படியும் பன்னிரண்டுக்கு வீடு, குளியல், சாப்பாடு, உறக்கம்....

முதலில் வீட்டுக்கு எழுத வேண்டாம் என்றுதான் நினைத்தான் சண்முகம். திடீரெனப் போய் நின்று அம்மாவின் முகத்தில் திகைப்பு, வியப்பு, மகிழ்ச்சி எனக் கலவை காணலாம். பிறகு தோன்றியது. பம்பாய் வந்த இந்த இரண்டரை ஆண்டுகள் ஆகிய நிலையில் வரும் எல்லாக் கடிதத்திலும் எப்போது ஊருக்கு வருவாய் என்ற வாசகம் இருக்கையில், நாளெண்ணும் சந்தோஷம் தனக்கு இருப்பது போல வீட்டிலும் இருக்கும்தானே! அதையேன் கெடுக்க வேண்டும்?

பணம் சேர்ப்பது தான் பாடாக இருந்தது. சேட்டு தந்த நானூறு ரூபாயில் என்ன செய்ய ஆகும்? குறைத்துக் குறைத்துக் கணக்குப் போட்டாலும் ஆயிரத்துக்கு மேலேயே நின்றது.

கடன் வாங்குவதன்றி வேறென்ன மார்க்கம்? கடன்வாங்கி ஊருக்குப் போகக்கூடாது என்றொரு சட்டம் வந்தால் இங்கிருந்து நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வந்தவர் வெளிக்கிளம்பவே முடியாது. திருநெல்வேலி, சேலம் போகும் தமிழனாகவோ, கௌடில்யாகாட்டில் இறங்கி பதினைந்து நாட்கள் தலைச்சுமட்டோடு நடந்து சொந்தக் கிராமத்தைச் சேரும் நேப்பாள கூர்க்காவாகவோ, ஸவாய் மாதவ்பூரில் வண்டிமாறி ஜெய்ப்பூர் போகும் மார்வாடி சமையற்காரனாகவோ, கான்பூரில் இறங்கி சாண்டிலா, பாராபங்கி போகும் பால்கார பையாவாகவோ அல்லது சத்தாரா, மால்வான், சிப்லுன் போகும் மராத்தி காட்டியாகவோ ராமாவாகவோ இருக்கட்டும். ஊருக்குப் போவது கடன் வாங்கித்தான்.

கம்பனியில் ஒரு தீபாவளி பண்டு நடந்தது. மாதம் பத்து ரூபாய் தவணை. அதில் யாவருக்கும் பங்குகள் இருந்தன. அவசர சமயத்துக்கு நூறு, இருநூறு அல்லது ஐந்நூறு வரை, பண்டில் நிதி இருப்பதைப் பொறுத்து தேவைப்படுபவரின் எண்ணிக்கை பொறுத்து கடன் அளித்தார்கள். ஐந்து வட்டி. கடன் தரும்போதே முதல்மாத வட்டி கழிந்து விடும். சண்முகத்துக்கு அதில் பங்கு இல்லை. ரூபென் பெயரில்

இருநூறு ரூபாய் வாங்கித்தந்தான்.

செண்பகம் முன்பு வாங்கிய கடனைத் திரும்பத் தந்தான். காமாட்சி நூறு ரூபாய் கடன் தந்தான். முத்து வேலை செய்த பலசரக்குக் கடைக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க்கார டெய்லர் இருந்தார். தையல் வேலை தவிர கொஞ்சம் துணிகளும் வாங்கி வைத்திருந்தார். துணியும் தையல் கூலியும் மூன்று தவணைகளாகத் தருவதாய்ச் சொல்லி இரண்டு பேன்ட் இரண்டு அரைக்கைச் சட்டை தைத்துக் கொண்டான் சண்முகம். அவனுக்கு முழுக்கைச் சட்டைதான் பிடிக்கும். ஆனால் அரைக்கைச் சட்டைக்கு கால் மீட்டர் துணி குறைவாகப் போதும்

இரண்டு ஜோடி பனியன், அன்டர்வேர், கர்ச்சீப், கிரான்ட் ரோட்டுக்கு ரூபெனைக் கூட்டிக்கொண்டு போய் நடைபாதையில் முப்பத்தைந்து ரூபாயில் ஷூ, பத்து ரூபாய்க்கு இரண்டு ஜோடி ஸாக்ஸ் வாங்கினான். ஒரு லுங்கி, துண்டு, பெட்டி பழையதே போதும். இருபது ரூபாயில் ஒரு ஏர்பேக், ஷேவிங் கிரீம், பிரஷ், பிளேடு, டூத் பிரஷ், பேஸ்ட், தலைக்கு சின்ன பாட்டில் கிரீம், சின்ன டப்பா பான்ட்ஸ் பௌடர், டிக்கட் எல்லாமாக இருநூறு ரூபாய் ஆகிவிட்டது.

போகையில் வழிச் செலவு, வரும்போது டிக்கட் வழிச்செலவு; அப்பா, அம்மா, தம்பி, தங்கைகளுக்கு காந்தி மார்க்கெட்டுக்கு காமாட்சியைக் கூட்டிப் போய் பேரம் பேசி துணிகள் வாங்கினான்.

எல்லாம் போக மீதி கையில் இருநூறு ரூபாய் இருந்தது. வீட்டுக்கு ஏதும் பண்டம் வாங்கிப் போக வேண்டும். சொந்தக்காரர் வீடுகளுக்குப் போகும் போது வெறுங்கையோடு போக முடியாது. ஊரில் தங்கும்போது சொந்தச் செலவுக்குப் பணம் தேவைப்படும். எல்லாம் ஒப்பேறுமா என்று தோன்றியது. திடீரென அப்பாவோ அம்மாவோ ஏதும் கருத்தில் ஐம்பதோ நூறோ கேட்டால் திரும்பிவரப் பணத்துக்கு என்ன செய்வது?

மறுபடி பம்பாயில் கால் வைக்கும்போது தான் ஐந்நூறு ரூபாய் கடனாளியாக இருப்போம் என்று தோன்றியது. இந்தக் கடன் தீர ஓராண்டு ஆகலாம்.

வண்டி புறப்படுவது வரை மனதில் இருந்த திகில் மாறி நூதனமானதோர் விடுதலை உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. சரியாக இரண்டரை மணிக்கு மெட்ராஸ் எக்ஸ்பிரஸ் நகர ஆரம்பித்ததும் கையசைப்புகளில் புதியதுடிப்புகள் தெரிந்தன. ஸ்டேஷனுக்கு வந்திருந்த செண்பகத்திடம் முத்துவிடம் காமாட்சியிடம் ஏற்கனவே விடை பெற்றுக் கொண்டிருந்தாலும் ஜன்னல் வழியாக விழிகளை வெளிச் செலுத்தி

புன்னகைத்து கையசைத்து...

தாதரை விட்டு மாதுங்கா வரை மெதுவாக நகர்ந்து, சயான் தாண்டியதும் வண்டி வேகம் எடுத்தது. இருக்கையில் வந்து அமர்ந்து, சாமான்களைக் கடைசியாக ஒரு முறை சரிபார்த்து, தாராளமாகக் கால்களை நீட்டியதும் ஒரு நிம்மதியும் மகிழ்ச்சியும் ஆர்வமும் தோன்றின.

***

## Nanjil Nadan's DRIFT WOOD

Drift Wood is Nanjil Nadan's latest novel. As the writer's pen name indicates, his fictional world pictures a certain region in Tamil Nadu which his earlier novels effectively fulfill this purpose. His fiction may be described mainly as realistic. The novels effective though they are, suffer from a certain laxity in form to a certain extent. One finds in them a certain propogandist slant. Certain situations do not ring true. But this cannot be said of his latest novel. It is a well constructed work which has added to his artistic effectiveness, the accent of felt - experience.

The novel may be briefly summarised. The novel depicts the carrier of the central character - young Shanmugam, typical of the vast unemployed, who swarm this country. His efforts to secure employment in his own district do not come off. And he moves on to Bombay where he succeeds after some efforts in securing a job of sorts, in a small industrial concern, thanks to the help of his father's brahmin landlord. But even this job offers him the means only for his bare survival in a crowded city like Bombay. After a stay of two years there he borrows some money, returns to his native place only to go back to his job, one among the vast annonymous crowd who earn their keep in that industrialised city.

It may be noticed that though Nanjil Nadan is not concerned with complexity in the fictional form, distinctive feature of modernity, his novel does not pay in its effectivness. Even the bald summary given here shows the emphasis is not on the plot, which we associate with the conventional novel. One may even say the catagorisation of fiction as realistic, naturalistic and what not does not yet reveal the secret of art. It is the extension of experience brought of by an imaginative and sensitive mind that in this final analysis accounts for the secret of art. It is a critical

common place to describe the novel as primarily the portayal of man in his relations with Society. In the novel as students of literature know, we have a world and a vision, even apparently irrelevent elements depict the creative mind at work. All these elements ought to be seen in Nanjil Nadan's latest effort in the fictional form.

The novel moves between two poles - a sleepy village in the South and the industrialised city of Bombay. The point is quite unobtrusively and quite effectively made that in the post - independent India politics has lost its idealistic fervour, found in pre-independent India. Every political party - be it the Congress or the DMK is corrupt. Most M.L.A's have thier quota of jobs and seats in professional colleges which they farm out for a consideration and falten themselves in the process. Disillusioned with all this Shanmugam moves on to Bombay. Here we get a different picture. Here corruption assumes a more sophisticated form. True, Shanmugam gets a job- though the salary is not much to think of in a city like Bombay. The officer incharge is interested only in promoting the business of the Company. The running of the Office is in the hands of one Acharya, an efficient employee who owes his position thanks to the force of nepotism. He is efficient in his own way though he cheats the company on the sly. He buys their spare parts needed in this company from the agents and not from those who conduct wholesale business in them. This is found by Shanmugam and this results in a sizable saving for the company, yet when his turn comes Shanmugam is not confirmed. Apart from this, if one may put it so, Bombay emerges as a machinery nightmarish symbol in the novel. One example will do. The gigantic erections in the industrial establishments that spit out smoke are described as phallic symbols that pierce the very heavens. We have also a very effective description of the topography of Bombay and the landmarks that dot it - - as the Tata Institute of Fundamental Research, the naval quarters and the slum areas like the Shell colony. In the last we find the submerged classes mainly the Tamils carrying on a sort of community living held together by the force of a sad experience and a sad culture, however superficial it my be. Here we find that men and women ease themselves at day breaks, a distance away from the

railway track. Here we find people who deal in the black market in rice, meanial servants and clerks. One unforgetable picture is the daily death rate of four or five among the commuters by the local trains who hang on to the footboard. Over and above all these, we smell the faint excremental odour over the whole city. The problem of accomodation is also effectively picturised.

In the novel we have also effective characters -- the 'chota' political leaders like Shanmugam's uncle, Shanmugam's own father a loyal tenant who owns some land and takes on lease another two acres and yet cannot make both ends meet as he has a large family. His dream is that his educated son will get a fat dowry. In the Shell colony we have endearing characters like Eswarapandy with his innate affability driven by his affection to keep his mother and sister in some comfort, taking to the practice of trading rice in the black market. In the office we have Ruben the assistant fitter, - a Jew who effects some reforms which bring about some improvement in the condition of the staff there through his humour and gentle persuation. And the man also knows his job. And we have Acharya the undergraduate who has a photographic memory, is efficient in his own way, is affluent and yet his jealousy of Shanmugam acts as an irritant to him. So the list goes on.

Another element in the novel is his style and sensitive approach to the question of values. Shanmugam knows the failings of the DMK party and yet he can see the petty mindedness of the brahmin member of the staff in the Tamil Sangam who will not grant membership to him because, as he puts it, people like Shanmugam read only Chandilyan. One word from one who looks like a leader of the DMK party puts him in his place. So to the brahmin landlord, despite his large heartedness, is particular that people like Shanmugam's father should keep their distance. Shanmugam himself whose reading stops with the popular magazines like Kumudham, Anandha Vikatan and the novels of Chandilyan cannot fit into a group different from what he thinks his is ( the brahmins). And yet he asks himself whether the fault lies in himself or in them. Again it is a sort of the feel of togetherness that drives him to live with the people in the Shell

colony. It is not only the need for a job; the sexual need is also there - much before the quest for employment is completed. Thus in the Shell colony when a young woman makes her advances to him a few days later we find him with a sense of guilt, buying a contraceptive. Still his idealistic impulses do not die out, with poverty still dogging his heels he does not fail to send to his parents a monthly remittance of Rs. 50.00 . All this shows that there is something of the artist in Shanmugam..

Nanjil Nadan's style has a peculiar flavour, that shows his mind steeped in the Sangam and the latter Tamil classics. It has its nuances. The local DMK party members quote from the Sidhas and the Thirumanthiram. Even the very title reminds us of a Sangam poem that shows how man is caught in the drift of destiny that will take him to his destination, though he himself might not be aware of it. The very descriptive style in which the novel is written accounts for its element of relativity upborne by the idealistic thought. It has a certain complexity. One may also add that a passage in the novel on the killing of a dog has a surrealistic tinge. Altogether an enjoyable novel, indeed.

Thiruvananthapuram **Nakulan**

2-4-1987.